இரண்டாம் பதிப்பு

# உதயன்

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

விலை - 30
பக்கங்கள் - 56+IV

சுடர் 32 | கதிர் 134 | வள்ளுவர் ஆண்டு 2048 | பங்குனி 27 ஞாயிற்றுக்கிழமை 09.04.2017

## இலங்கையின் இறைமையை சீனா காக்கும்

கொழும்பு வந்துள்ள ஆலோசகர் தெரிவிப்பு

கொழும்பு, ஏப். 9
இலங்கையின் பொருளாதார அபிவிருத்திக்கு உதவவும், அதன் சுதந்திரம் மற்றும் இறைமையைப் பாதுகாக்கவும் சீனா கடமைப்பட்டுள்ளது >> 52

## இந்தியக் கலைஞர்களது நிகழ்ச்சிக்கு ரூ.45 லட்சம் செலவிட்ட கல்வி அமைச்சர்

### உள்ளூர்க் கலைஞர்களுக்கு உதவிகள் ஏதும் கிடையாது என்று அவர்கள் கொதிப்பு, விசனம்

யாழ்ப்பாணம், ஏப். 9
கடந்த 5 வருடங்களில் இந்தியாவில் இருந்து இந்தியக் கலைஞர்களை அழைத்து வந்து வடக்கில் இசை நிகழ்ச்சிகளை நடத்துவதற்காக 71 லட்சம் ரூபா செலவிடப்பட்டுள்ளது. மாகாண சபை அமைக்கப்பட்ட பின்னர் மாத்திரம் 45 லட்சம் ரூபாவை வடக்கு மாகாணக் கல்வி, பண்பாட்டு, விளையாட்டுத்துறை அமைச்சர் த.குருகுலராஜா இதற்கெனச் செலவிட்டுள்ளார். மாகாண அமைச்சின் பணத்தில் இருந்தே அத்தனையும் செலவிடப்பட்டிருக்கின்றன. உள்ளூர்க் கலைஞர்களை ஊக்குவிப்பதற்கோ வளர்ப்பதற்கோ மாகாண அமைச்சு, போதிய நடவடிக்கைகளை >> 52

## அரச நிர்வாகம்: கூட்டமைப்பு ஒரு குழந்தை

கூறுகிறார் கிழக்கு விவசாய அமைச்சர்



நாவற்குடா, ஏப். 9
அரச நிர்வாகத்தில் நாங்கள் இப்போது குழந்தைப் பருவத்தில் இருக்கின்றோம். அதனைப் பலர் மறந்துவிட்டுமாகாண சபையில் தமிழ்த் >> 06

## மணல் விநியோகிக்கத் தடை போட்ட அரச திணைக்களம்

நாளை முதல் மாற்று இடத்தில் மணல் அகழ்வுக்குத் தீர்மானம்

யாழ்ப்பாணம், ஏப். 9
வனஜீவராசிகள் திணைக்களத்தால் யாழ்ப்பாண மாவட்டத்தில், மணல் விநியோகத்துக்கு முட்டுகட்டை ஏற்படுத்தப்பட்டுள்ள நிலையில், நாளை திங்கட்கிழமை தொடக்கம் மாற்று இடத்தில் மணல் அகழ்வு மேற்கொள்வதற்கு உடனடி ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. 'மணல் விநியோகம் தொடர்பான கலந்துரையாடல் நடைபெற்றது. மாற்று >> 52

# கூட்டு அரசை கவிழ்ப்பதற்கு முயற்சிக்காது கூட்டமைப்பு

### பன்னாட்டுச் சமூகத்தின் இராஜதந்திரத்தை எதிர்க்க விரும்பவில்லை என்கிறார் மாவை



யாழ்ப்பாணம், ஏப்ரல் 9
பன்னாட்டுச் சமூகத்தின் இராஜதந்திரத்துக்கு எதிராகச் செயற்படக் கூட்டமைப்பு விரும்பவில்லை. போர்க்குற்றங்களுக்குக் கலப்பு நீதிமன்றப் பொறிமுறையை உருவாக்க முடியாது என்று அரசு சொல்வதற்காக அரசைக் கவிழ்த்துவிடக் கூட்டமைப்பு முயற்சிக்காது. இவ்வாறு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் மாவை.சேனாதிராசா தெரிவித்தார்.
'சுடர்ஒளி' பத்திரிகைக்கு வழங்கிய பிரத்தியேக நேர்காணலிலேயே அவர் மேற்கண்டவாறு கூறியுள்ளார். >> 52

## சிறுவர்கள் மீதான பாலியல் வன்முறை வடக்கில் உயர்வு

சிறுவர் நன்னடத்தைத் திணைக்கள தகவல்கள் தெரிவிப்பு

யாழ்ப்பாணம், ஏப். 9
வடக்கு மாகாணத்தில் சிறுவர்கள் மீதான பாலியல் வன்முறைச் சம்பவங்கள் குறைவடையவில்லை. 2015 ஆம் ஆண்டை விட, 2016ஆம் ஆண்டு சிறுவர் >> 06

## 2016 இல் 771 சிறுவரை வடக்கில் காணவில்லை

யாழ்ப்பாணம், ஏப். 9
வடக்கு மாகாணத்தில் கடந்த 2016ஆம் ஆண்டு 771 சிறுவர்கள் காணாமற்போயுள்ளனர் எனப்பதிவுசெய்யப்பட்டுள்ளதாக, வடக்கு மாகாண சிறுவர் நன்னடத்தைத் திணைக்களம் வழங்கியுள்ள பதிலில் >> 52

## மின்சாரம் தாக்கி தம்பதியர் சாவு

நேற்று முன்தினம் இரவு சுன்னாகத்தில் பரிதாபம்

யாழ்ப்பாணம், ஏப். 9
வீட்டில் மின்சாரம் தாக்கியதாகக் கூறப்படும் சம்ப வத்தில் கணவன், மனைவி இருவரும் பரிதாப கரமாக உயிரிழந்துள்ளனர் என்று பொலிஸார் தெரிவித்தனர்.
இந்தச் சம்பவம் யாழ்ப்பாணம், சுன்னாகம் மத்தி ஜே/198 கிராம அலுவலர் பிரிவில் நேற்றுமுன்தினமிரவு இடம்பெற்றது.
சம்பவத்தில் அதே இடத்தைச் சேர்ந்த குணதாசன்கிறிஸ்ரி யோசப் (வயது42), அவரது மனைவி கி.சுகந்தினி (வயது - 37) ஆகியோரே உயிரிழந்தனர்.
அங்குள்ள கத்தோலிக்க ஆலயம் ஒன்றின் திருச்சொரூபப் பவனி வீடுகள் தோறும் எடுத்துச்செல்லப்படுவது வழமை. இதன்படி குறித்த குடும்பத்தின் வீட்டுக்கும் சொரூபம் >> 52

## தகவல் உரிமைச் சட்டத்தை மீறும் அரச திணைக்களங்கள்

வடக்கிலேயே இந்த நிலமை

யாழ்ப்பாணம், ஏப். 9
வடக்கிலுள்ள அரச திணைக்களங்களில், தகவல் அலுவலர், குறித்தளிக்கப்பட்ட அலுவலர் தொடர்பான விவரங்கள் இன்னமும் காட்சிப் படுத்தப்படவில்லை. தகவல் அறியும் >> 52

முச்சந்தி முரளி



இந்தியக் கலைஞர்களிட்ட அப்படி என்ன தான் இருக்கு...

## முள்ளிவாய்க்காலில் மண்டியிட்டு மன்னிப்புக் கோரிய சிங்கள மக்கள்

### இனிமேல் ஒரு போர் வேண்டாம் என்றும் பிரார்த்தனை

முல்லைத்தீவு, ஏப். 9
முள்ளிவாய்க்காலில் மண்டியிட்டு மன்னிப்புக் கோரிய சிங்கள மக்கள். இனிமேல் இவ்வாறான போர் நடைபெறக் கூடாது எனவும், நாட்டில் நல்லிணக்கம் ஏற்படவேண்டும் எனவும் கோரிப் பிரார்த்தனை மேற்கொண்டனர்.
தென்னிலங்கையிலிருந்து வருகை தந்த சிங்கள மக்கள் வட்டுவாகல் பாலத்திலிருந்து பேரணியாக >> 06

## வெல்வோம் எனத் தெரிந்தால் மட்டுமே பொதுவாக்கெடுப்பு

அமைச்சர் ராஜித தெரிவிப்பு



கொழும்பு, ஏப். 9
தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு, குறிப்பாக நாடாளுமன்ற உறுப்பினர் எம்.ஏ.சுமந்திரன் பொதுவாக்கெடுப்புக்குச் செல்லவேண்டும் என்று கூறி வருகின்றார். பொதுவாக் கெடுப்புக்குச் செல்லவேண்டிய கட்டாயச் சூழல் >> 52

## வடக்கு முதலமைச்சரை சாடும் அமைச்சர் ரிசாத்

தான் அனுப்பிய கடிதத்துக்கு இதுவரை பதில் தரவில்லையாம்

யாழ்ப்பாணம், ஏப். 9
வடக்கு மாகாணத்தில் உள்ள கைத்தொழில் நிலையங்களை மீள நிர்மாணிப்பதற்கும், புதிதாகக் கைத்தொழில் நிலையங்களை >> 52

## ஒரே நாளில் 40 தடவைகள் நடுங்கியது பிலிப்பைன்ஸ்

மணிலா, ஏப். 9
பிலிப்பைன்ஸின் லுசான் என்ற மிகப் பெரிய தீவில் நேற்று மதியம் (இலங்கை நேரப்படி) நில அதிர்வு ஏற்பட்டது.
முதலாவது நில அதிர்வு ரிச்டர் அளவு கோலில் 5.9 அலகுகளாகப் >> 06



## சூரியன் மீன ராசியிலிருந்து மேட ராசிக்குள் சஞ்சரிக்கின்றது

### உங்கள் ராசிபலன் எப்படி ?

பக்கம் 17ஐ பார்க்கவும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Facebook : UTHAYAN.PRINT
Twitter : UTHAYANPRINT






காரைநகர் ஈழத்துச் சிதம்பரத்தின் தேர்த் திருவிழா நேற்றுச் சனிக்கிழமை இடம்பெற்றது. சோமஸ்கந்தப் பெருமான் பஞ்சமூர்த்திகளுடன் பஞ்சரதங்களில் பவனி வந்து அடியார்களுக்கு அருட்காட்சி வழங்கினார். (த-250)

# சாதனை பயணத்தை ஆரம்பித்தார் பிரதாபன்

வவுனியா, ஏப். 9

இலங்கையில் வாழும் 60 வயதுக்கு மேற்பட்ட அனைத்து பொது மக்களுக்கும் 'அரச ஓய்வூதியம் வழங்கவேண்டும் எனக் கோரிக்கை முன்வைத்து, இலங்கையைச் சைக்கிளில் சுற்றிவரும் சாதனைப் பயணத்தை வவுனியாவைச் சேர்ந்த த.பிரதாபன் நேற்றுச் சனிக்கிழமை காலை 8 மணிக்கு வவுனியா கந்தசுவாமி ஆலய முன்றிலில் ஆரம்பித்துள்ளார்.

சுமார் 11 நாள்கள் பயணிக்கவுள்ள இவர் ஆயிரத்து 515 கிலோமீற்றர் தூரம் துவிச்சக்கர வண்டியில் பயணம் செய்யவுள்ளார். (த-5)



# அமைதியை ஏற்படுத்தல்; ஐ.நா.-கொழும்பு பேச்சு

கொழும்பு, ஏப். 9

அமைதியைக் கட்டியெழுப்புதல் தொடர்பாக ஐ.நா.வுக்கும் கொழும்பு அரசுக்கும் இடையிலான ஐந்தாவது கூட்டம் நேற்று முன்தினம் முடிவுக்கு வந்தது.

கொழும்பு அரசின் சார்பில் அயலுறவுத்துறை அமைச்சர் மங்கள சமரவீரவும், ஐ.நா தரப்பில் இலங்கைக்கான ஐ.நாவின் நிரந்தர வதிவிடப் பிரதிநிதி உனா மக்கோலியும் இந்தக் கூட்டத்துக்குத் தலைமை தாங்கியிருந்தனர்.

இலங்கையில் அமைதியைக் கட்டியெழுப்பும் நிகழ்ச்சித் திட்டத்தை இலங்கை அரசுடன் இணைந்து ஐ.நா நடைமுறைப் படுத்தி வருகிறது. இந்த அமைதியைக் கட்டியெழுப்பும் திட்டம் தொடர்பான மீளாய்வுகளை மேற்கொள்ளும் வகையிலேயே இந்தக் கூட்டம் இடம்பெற்றது.

கூட்டத்தில் சமர்ப்பிக்கப்பட்ட திட்ட ஆவணங்கள் அனைத்தும் அங்கீகரிக்கப்பட்டதாக, இலங்கைக்கான ஐ.நாவின் நிரந்தர வதிவிடப் பிரதிநிதி உனா மக்கோலி தெரிவித்துள்ளார். (த5)

# கஞ்சா வைத்திருந்தாரென பரந்தனில் ஒருவர் கைது

கொழும்பு, ஏப். 9

பரந்தன் சிவபுரம் உண்டியல் சந்திக்கு அருகில் கஞ்சா வைத்திருந்த குற்றச்சாட்டில் ஒருவரைக் கைது செய்ததாகவும் அவரிடமிருந்து சுமார் 4 கிலோகிராம் கஞ்சா மீட்டதாகவும் கிளிநொச்சிப் பொலிஸார் தெரிவித்தனர்.

கிடைத்த இரகசியத் தகவலுக்கு அமைவாகக் குறித்த பகுதியில் சிறப்பு அதிரடிப் படையினர் நின்றிருந்தனர். குறித்த சந்தேகநபர் கறுப்புநிறப் பை ஒன்றுடன் பயணித்தபோது சிறப்பு அதிரடிப்படையினர் அவரைக் கண்டுகொண்டனர். அந்த இளைஞன் வயல்வெளி ஊடாக ஓடுவதற்கு முற்பட்டவேளை அதிரடிப்படையினரால் மடக்கிப் பிடிக்கப்பட்டார் என்று தெரிவிக்கப்பட்டது.

இதேவேளை, இந்தச் சம்பவத்தின் போது வெடிச் சத்தம் கேட்டதாகப் பொதுமக்கள் தெரிவித்தனர். ஒருவர் மட்டும் கைது செய்யப்பட்டதாகவும், வானை நோக்கித் தாம் துப்பாக்கிச் சூடு நடத்தவில்லை என்றும் சிறப்பு அதிரடிப் படையினரால் தெரிவிக்கப் பட்டது. (த-4-35)

# காலம் கலி காலமாகிப் போச்சு...



**அம்பலத்தாடி அப்புச்சி**

"காலம் கலிகாலம் ஆகிப்போச்சடா கொம்பியூட்டர் கடவுளாக மாறிப்போச் சடா.." பேரப்பெடியன் குசியில பாடிக் கொண்டு அங்கையும் இங்கையும் குறுக்க மறுக்க ஓடிக் கும்மாளம் அடிச்சுக் கொண்டிருந்தான். அந்த நேரம் பார்த்துப் பக்கத்து வீட்டு சுப்பிரமணியத்தார் வீட்டுக்குள்ள வந்தவர், "சின்னப்பெடியன் சரியாத்தான் பாடுறான். காலம் கலிகால மாத்தான் கிடக்கு. உந்தக் கொம்பியூட்டர்கள் வந்தாப் பிறகு எங்களுக்கு உதுகளைப் பற்றி ஒன்றும் தெரியாதுதானே! இப்ப இளசுகள் எல்லாம் கைபேசியை கட்டிப்பிடிச்சு சாகுதுகள். வேறு சிலதுகள் கொம்பியூட்டரோட கிடக்குதுகள்" என்று புலம்பினார்.

"உந்த வெக்கையைத் தாங்கேலாமல் கிடக்கு. தலையைச் சுத்திக் கொண்டு வருகுது ஒரு நாளும் இல்லாத மாதிரிக் கலி காலம் வந்து அழியத்தான் போகுது போல. செவ்விளநீர் வாங்கிக் குடிப்பமென்றால் அதிண்ட விலை கிடுகிடுவென்று தலைக்கு மேல ஏறிக் கொண்டுபோகுது. இப்ப திருநெல்வேலிசந்தியில நூறு தாண்டி ஓடுது. எங்களால எட்டிப்பிடிக்கேலாமல் கிடக்குது. ஏதோ கிணத்துத் தண்ணி இருக்கிறபடியா செம்புக்க எடுத்து வைச்சு அடிக்கடி குடிக்கிற படியா ஏதோ நடமாடக் கூடியதாக் கிடக்கு" என்று நான் என்ர பங்குக்கு கலிகாலத்துக்கு விளக்கம் கொடுத்தன்.

"அப்புச்சி நீயும் பல்லுக்கட்டியிருக்கிறியல்லே?" மனுசன் திடீரென்று இப்பிடி ஒரு கேள்வியைத் தூக்கிப் போட்டிட்டிது. "ஓ... ஓ... ஓட்டப் பல்லோட திரிய விடுகிறாங்களில்லை, அதுதான். இப்ப ஏன் அதை?": என்றுநான் பதிலுக்குக் கேட்க. "இல்லை! பல்லையும் கட்டிப் போட்டு செம்பில தண்ணி அள்ளிவைச்சுக் குடிக்கிறன் என்றுறாய். அதுதான் கேட்டனான்" என்றான். "அதுக்குள்ள ஏதோ சொல்லவாறாய், அதைவடிவாச் சொல்லன்" என்றன்.

"அது போன கிழமை நடந்தது. உன்னப் போலத்தான் இடையில ரெண்டு பல்லைக் கட்டிவச்சிருந்தவர் என்ர தூரத்துச் சொந்தக்காரர் ஒருத்தர். அன்றைக்கு கிளினிக்குக்குப் போயிட்டு திரும்பி பஸ்ஸில வந்தவரை வீட்டுக்குகிட்ட இறக்காமல் மினி பஸ்காரர் கொஞ்சம் தள்ளி இறக்கிட்டுப்போயிட்டான். அங்கையிருந்து வேர்த்து விறுவிறுக்க வந்தவர் தாகம் தாங்காமல் மனிசியிட்ட செம்பில தண்ணி கொண்டுவா என்று போட்டு அண்ணாந்து மடக்கு மடக்கு என்று தண்ணியைக் குடிச்சிருக்கிறார். இவர் குடிச்ச வேகத்தில கட்டுப்பல்லு கழன்று தொண்டேக்க போக அதை விழுங்கிப் போட்டார். பிறகு என்ன ஆசுப்பத்திரிக்குக் கொண்டுபோனவையாம். அங்க ஒரு மாதிரி கட்டுப்பல்லை தட்டிக்கிட்டி வயித்துப் பக்கம் அனுப்பிப் போட்டாங்களாம். இனி ஒப்பிரேசன் செய்துதான் கட்டுப்பல்லை எடுக்கவேணுமாம். ஒப்பிரேசன் செய்ய நேரம் இல்லையென்று ஒப்பிரேசனுக்குப் பார்த்துக்கொண்டிருக்கினம்."

"இந்த வெக்கையிண்ட வேகத்தில பல்லுக்கில்லெல்லாம் சேர்ந்துபோகுதென்றாப் பார்த்துக் கொள்ளுங்கோவன். நானும் இனிக் கவனமாத்தான் இருக்க வேணும். என்று பலதும் பத்துமாக் கதைச்சுக்கொண்டிருந்தம். இடைக்கிட செம்பும் தண்ணியுமாத்தான் நேரம் போச்சுது. கொஞ்ச நேரத்தால அவனும் எழும்பிப் போயிட்டான்.

வீட்டைவிட்டு வெளிக்கிட ஏலாமல் இருக்கு. ஆனால் பக்கங்களில எல்லாம் கோயில் கொடியேறி ஒரே அமர்க்களம். அங்க னேக்க பின்னேரத்தில வெளிக்கிட்டு அதில ஒரு கோயில் பக்கம் நடந்து போயிட்டு வாறதோட சரி. பின்னேரக்கையா பழைய பழுத்த பேராசிரியர் கனநாளுக்குப் பிறகு ரெலிபோன் எடுத்தார். "அப்புச்சி பேப்பரில போட்டிருக்கு யாழ்ப்பாணக் கம்பசுக்கு புதுத் துணைவேந்தரைப் போட்டிருக்காமென்று. முதலாவதாத் தெரிவானருக்குக் குடுத்திருக்கிறாங்கள். இதுகளில அரசியல் கலப்பு இல்லையென்று காட்டத்தான் இப்படி செய்யிறாங்கள் போல!" என்று கொஞ்சம் சந்தோசமாக் கதைச்சார்.

நான் கேட்டன், "கடந்த மூன்று தடவைக்கு மேல கடைசியா தெரிவானவரைத் தானே வீ.சியாப் போட்டவங்கள். இந்த முறை தான் முதலாவதா வந்தாளப் போட்டிருக்கிறாங்கள் போல. இருபது வருசமா இருந்த உள்ளூர் அமைச்சர் செய்த சாதனைகளில்ல இதுவும் ஒன்று. கடைநிலையை முதல் நிலையாக்கி எல்லாத்தையும் குழப்பினதில அவருக்கு நிகர் அவரே தான். போனமுறை இப்படித்தான் அடுத்த எலக்சனுக்கு ஒரு கொஞ்சக் காலம் இருக்கேக்க அமைச்சர் சொன்னதையெல்லாம் செய்துதானே அம்மா இரண்டாம் முறையும் வந்தவ வென்று ஒரு கதை உலாவுது. கட்சிக்குக் கொடிபிடிச்ச தகுதியில்லாத எல்லாத்துக்கும் வேலைகுடென்றவுடனும் எல்லாத்தையும் அள்ளிக் குடுத்துத்தானே. இரண்டாவது தவணை நீடிப்பு நடந்ததென்று பரவலாக் கதைச்சவை. அந்தக் குழறுபடிகளை இப்பவரைக்கும் சரிசெய்யேலாமல் போச்சுது. இப்பவும் அப்படி ஏதும் போறதுக்கிடையில தனக்கும் தன்ர பரிவாரங்களுக்கும்; அள்ளிக் குடுத்திட்டுத் தான் போறாவோ?"

"அவவும் என்ன செய்யிறது? அமைச்சரிட்டப் போனாத்தான் காரியம் ஆகுமென்றா போகத்தானேவேணும். அவ போகாட்டி வேற யாரும் போய் அலுவல் பார்ப்பாங்கள்தானே!" என்று பேராசிரியர் அசடு வழிஞ்சார். "எல்லாத்துக்கும் ஓர் அளவு கணக்கிருக்கெல்லே பதவி இல்லாமல் இருக்கேலாதே தடவித் தடவிப் பதவிக்கு வாறவை தன்னையும் யாரும் தடவவேணுமென்று தானே எதிர்பார்ப்பினம். அதை விடுங்கோ கம்பசின்ர இருண்டகாலமொன்று இந்த முறையோடயாவது முடிவுக்கு வரவேணும். இதுவும் தவிட்டு ராசா கதைபோலத் தான் வருமோ என்னமோ பொறுத்திருந்து தான் பார்க்கவேணும். அது சரி உந்தப் பெடியளின்ர உணவொறுப்புப் போராட்டம் என்னென்று முடிவுக்கு வந்தது. குழப்படிகாரப் பெடியளெல்லாத்துக்கும் பொதுமன்னிப்புக் கொடுத்திட்டுத்தான் போறாவோ! உண்மையோ" என்றன்.

"பதவிக்கு வரேக்க குழப்படிகாரரிண்ட கூட்டோட வந்தா. போகேக்க குழப்படிகாரருக்குப் பொதுமன்னிப்பு குடுத்திட்டுப் போறா. கொண்டகொள்கையில தெளிவாத்தான் இருக்கிறா போல" என்றன். பேராசிரியர் சொன்னார் "உணவொறுப்புப் போராட்டம் எதுக்கெதுக்கெல்லாம் இருக்கிறதென்று ஒரு விவஸ்தையில்லாமல் போயிட்டுது. அங்கால தங்கட உறவுகளைக் காணேல்ல, அதைத் தேடித்தா என்றும் நிலத்தை விடுங்கோவென்றும் உணவொறுத்துச் சனம் இருக்க, இங்க என்னவென்றா குழப்படிகாரருக்குப் பொதுமன்னிப்புக் குடென்று போராட்டம் நடத்திறாங்கள். காலம் கலிகாகலம் ஆகிப்போச்சு" என்றிட்டு அவர் ரெலிபோன வைச்சிட்டார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# யாழ். முஸ்லிம்களை மீள்குடியமர்த்துவதற்கு 400 குடும்பங்கள் வசிக்கக்கூடிய தொடர்மாடி

## ஆராய்ந்து அறிக்கை தருமாறு அமைச்சர் ரிசாத் பணிப்பு

யாழ்ப்பாணம், ஏப்.9

யாழ்ப்பாண மாவட்டத்தில் சொந்தக் காணிகள் இல்லாத முஸ்லிம் மக்களை மீள்குடியேற்ற 400 குடும்பங்கள் வசிக்கக்கூடிய தொடர்மாடிக் குடியிருப்பை அமைப்பது தொடர்பில் ஆராய்ந்து அறிக்கை தருமாறு யாழ்ப்பாண மாவட்டச் செயலக அதிகாரிகளையும், யாழ்ப்பாண மாநகர சபை ஆணையாளரையும் கோரியுள்ளார் கைத்தொழில் அமைச்சர் ரிசாத் பதியுதீன் .

யாழ்ப்பாண மாவட்டச் செயலகத்தில் மாவட்டச் செயலர் நா.வேதநாயகன் தலைமையில் நடைபெற்ற முஸ்லிம் மக்களின் மீள்குடியேற்றம் தொடர்பான கலந்துரையாடலில் கலந்துகொண்டு உரையாற்றும்போதே அவர் இதனைத் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

யாழ்ப்பாண மாவட்டத்தைப் பொறுத்த வரை ஆரம்பத்தில் 2 ஆயிரத்து 252 முஸ்லிம் மக்கள் சொந்தக் காணி இல்லாதவர்கள் என இனம்காணப்பட்டனர். பின்னர் ஆரம்ப காலத்தில் இருந்தவர்கள் என்ற அடிப்படையில் மீளாய்வு செய்து தற்போது ஆயிரத்து 614 முஸ்லிம் மக்கள் சொந்தக் காணிகள், வீடுகள் இல்லாதவர்கள் என இனம் காணப்பட்டுள்ளனர். ஆகவே அவர்களில் ஆரம்பக் கட்டமாக 400 குடும்பங்களைத் தொடர்மாடிக் குடியிருப்புக்களில் குடியேற்றுவதற்கு தீர்மானித்துள்ளேன். இந்தத் திட்டம் யாழ்ப்பாண மாவட்டத்துக்கு சாத்தியமாகுமா?எனச் சம்பந்தப்பட்ட அதிகாரிகள் ஆராய்ந்து அறிக்கை தரவேண்டும் என்றார்.

இந்தக் கூட்டத்தில் கலந்து கொண்ட முஸ்லிம் மக்களின் பிரதிநிதிகள், எமது மக்களில் மீள்குடியேற்றப் படவேண்டிய மக்களின் தொகையை வடக்கு மாகாண முதலமைச்சர் சி.வி.விக்னேஸ்வரன் பிழையாகக் கூறிவருகின்றார். இதன் மூலம் வடக்கில் முஸ்லிம்களுக்கு ஒன்றும் பிரச்சினை இல்லை. அவர்களை மீள்குடியேற்றத் தேவையில்லை என்ற மாதிரியான நிலைப்பாட்டை பன்னாடுகளுக்குக் காட்டவே அவர் இவ்வாறான கருத்துக்களைக் கூறி வருகின்றார். எனவே இந்த விடயத்தை அமைச்சர் கவனத்தில் எடுக்கவேண்டும்என்றனர். (த-8)




# 50ஆவது நாளை எட்டும் காணாமற்போனோரின் உறவுகளது போராட்டம்

## எந்தவொரு தீர்வையும் அரசு இதுவரை வழங்கவேயில்லை

யாழ்ப்பாணம், ஏப். 9

காணாமற்போனோரின் உறவினர்கள் நடத்தும் போராட்டம் 50ஆவது நாளை எட்டவுள்ள நிலையில், கூட்டு அரசால் இதுவரை எந்தவொரு தீர்வும் வழங்கப்படவில்லை.

காணாமற்போனோரின் உறவினர்கள் வடக்கில் 4 மாவட்டங்களில் தொடர் போராட்டத்தில் ஈடுபட்டுள்ளனர். முதலாவது போராட்டம் கிளிநொச்சி மாவட்டத்திலேயே ஆரம்பமானது. கடந்த பெப்ரவரி மாதம் 20ஆம் திகதி, கிளிநொச்சி கந்தசுவாமி கோயிலுக்கு முன்பாக ஆரம்பமான போராட்டம் நேற்றுடன் 48ஆவது நாளை எட்டியது.

வவுனியா மாவட்டத்தில் காணாமற்போனோரின் உறவுகள் மேற்கொண்டுவரும் போராட்டம் 44 ஆவது நாளாகவும் நேற்றுத் தொடர்ந்தது. முல்லைத்தீவு மாவட்டத்தில் நேற்று 32 ஆவது நாளாகவும், யாழ்ப்பாணம் வடமராட்சி கிழக்கில் முன்னெடுக்கப்படும் போராட்டம் நேற்று 25 ஆவது நாளாகவும் தொடர்ந்தது.

போராட்டங்களை மக்கள் உறுதியாக முன்னெடுத்துள்ள போதும், கூட்டு அரசு இந்தப் போராட்டத்தில் ஈடுபட்டுள்ளவர்களுக்கு திடமான பதிலை இதுவரை வழங்கவில்லை என்பது குறிப்பிடத்தக்கது. (த-5-6-7)

# தமிழ் அரசியல் கைதிகளுக்கு நிவாரணம் வேண்டும்

## கோருகிறார் மனோ கணேசன்

கொழும்பு, ஏப். 9

நீண்டகாலமாகச் சிறைகளில் தடுத்து வைக்கப்பட்டிருக்கும் தமிழ் அரசியல் கைதிகள் தமக்குப் பிணை அல்லது புனர்வாழ்வு அல்லது விடுதலை ஆகிய தெரிவுகளில் ஏதாவது ஒன்றைப் பெற்றுத் தரும்படி கோருகிறார்கள். இவர்களுக்குத் தகுந்த நிவாரணம் வழங்கவேண்டும் எனத் தேசிய சகவாழ்வு கலந்துரையாடல் மற்றும் அரசகரும மொழிகள் அமைச்சரும், தமிழ் முற்போக்கு கூட்டணித் தலைவருமான மனோ கணேசன் தெரிவித்தார்.

தமிழ் அரசியல் கைதிகள் தொடர்பாக அரச தலைவர் மைத்திரிபால சிறி சேனவுக்கு மனோ கணேசன் எழுத்து மூலக் கோரிக்கையை அனுப்பியுள்ளார். அதிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார் என ஜனநாயக மக்கள் முன்னணியால் அனுப்பப்பட்ட ஊடக அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அதில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:

பொது எதிரணி நாடாளுமன்ற உறுப்பினர் விமல் வீரவன்சவுக்கு பிணை வழங்கல், சட்டமா அதிபர் தரப்பு ஆட்சேபனை தெரிவிக்காததையடுத்துச் சாத்தியமாகியது. இந்த நிலையில் பல வருடங்களாக நீண்டகாலத்தடுப்பில்உள்ளதமிழ்க் கைதிகளுக்கு நிவாரணம் வழங்கவேண்டும் என்ற எதிர்பார்ப்பு, கடந்த காலங்களை விட இன்று தமிழ் மக்களால் அதிகமாக உணரப்படுகிறது. தமிழ் மக்கள் மட்டுமல்ல, பல்வேறு ஆளும் தரப்பு, எதிர்தரப்பு அரசியல் கட்சிகளும் இந்த நிலைப்பாட்டை ஆதரிக்கின்றன.

அடுத்த மாதம் பன்னாட்டு விசாகப் பண்டிகையை, ஐ.நா. சபையின் ஆதரவுடன் அரசு இலங்கையில் முதன் முறையாகக் கொண்டாடவுள்ளது. இவற்றைக் கணக்கில் கொண்டு, நீண்டகாலத் தமிழ்த் தடுப்புக் காவல் கைதிகளைப் பிணை அல்லது புனர் வாழ்வு அல்லது விடுதலை ஆகிய தெரிவு அடிப்படைகளில் விடுவிக்க ஆவன செய்ய வேண்டும். (த-10)

# வறட்சி பாதித்த விவசாயிகளுக்கு ரூ. 7 ஆயிரம் மில்லியன் ஒதுக்கீடு

## புத்தாண்டுக்கு முன்னர் கிடைக்குமென அரச தலைவர் மைத்திரிபால அறிவிப்பு

வறட்சியினால் பாதிக்கப்பட்ட விவசாயிகளுக்கு 10 ஆயிரம் ரூபா வைப்பிலிடுவதற்காக 7 ஆயிரம் மில்லியன் ரூபா ஒதுக்கப்பட்டுள்ளதாகவும், புத்தாண்டுக்கு முன்னர் விவசாயிகளின் வங்கிக் கணக்கில் பணம் வைப்பிலிடப்படும் என்றும், அரச தலைவர் மைத்திரிபால சிறிசேன தெரிவித்தார்.

தேசிய புத்தரிசி விழா அரச தலைவர் மைத்திரி தலைமையில் நேற்று மு.ப. அனுராதபுரம் ஜய சிறி மகா போதி வளாகத்தில் நடைபெற்றது.



இந்த நிகழ்வில் உரையாற்றிய மைத்திரிபால,

விவசாயியை அரச தலைவர் பதவிக்கு நியமித்த இந்த நாட்டு மக்களின் எதிர்பார்ப்புக்களை நிறைவேற்றுவதற்கு மிக அர்ப்பணிப்புடன் செயற்படுவேன். அதற்கான பலன்களை நாட்டின் விவசாயப் பெருமக்கள் எதிர்காலத்தில் அனுபவிப்பார்கள்.

நாட்டின் விவசாயத் துறையைக் கட்டியெழுப்புவதற்கும்,விவசாயிகளின் பொருளாதாரத்தைப் பலப்படுத்தவும் தற்போதைய அரசால் மேற்கொள்ளப்பட்டுள்ள பணிகள் வேறு எந்த அரசாலும் நிறைவேற் றப்பட முடியாத செயற்பணிகளாகும்.

வறட்சியினால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு நிவாரணமளிப் பதற்கான தற்போதைய அரசின் முயற்சியானது முன்னொருபோதும் செயற்படுத்தப்படாத விடயமாகும். அந்த மக்களுக்கு நிவாரணம் வழங்குவதற்காகச் சிங்கள தமிழ் புத்தாண்டுக்கு முன்னர் அவர்களது வங்கிக் கணக்குகளில் வைப்பிலிடுவதற்காகத் தற்போது அரசினால் 7 ஆயிரம் மில்லியன் ரூபா நிதி ஒதுக்கப்பட்டுள்ளது என்றார். (த-5)

# ராஜிதவும் எஸ்.பியும் பைத்தியப் பூனைகள்

கொழும்பு, ஏப். 9

மிருக வைத்தியர்கள் பணிப்புறக்கணிப்பில் ஈடுபடும்போது அமைச்சர்கள் எவரும் நோய் வாய்ப்படாதிருக்கவேண்டும் என்று மக்கள் விடுதலை முன்னணியின் தொழிற்சங்க ஊழியர்கள் அமைப்பின் தலைவர் லால்காந்த தெரிவித்தார்.

அமைச்சர்களான ராஜிதவும் எஸ்.பி. திஸா நாயக்கவும் பைத்தியக்காரப் பூனைகள் என்றும் அவர் குற்றஞ்சாட்டினார்.

கொழும்பில் நேற்றுமுன்தினம் நடைபெற்ற பொதுக் கூட்டமொன்றில் கலந்து கொண்டு கருத்துத் தெரிவிக்கையில் லால்காந்த இவ்வாறு தெரிவித்தார்.

இலங்கை அரசியலில் பைத்தியக்காரப் பூனைகள் சில உருவாகியுள்ளன. அதில் ஒருவர் அமைச்சர் ராஜித சேனாரத்ன, மற்றையவர் எஸ்.பி. திஸாநாயக்க. புதிதாக ஒரு பூனை உருவாகியுள்ளது. அவரும் மியா, மியா என சத்தமிடுகின்றார். நாம் நேற்று முன்தினம் அமைச்சர்களுக்கு ஒரு முக்கிய அறிவித்தலைக் கூறினோம். நேற்றுமுன்தினம் சகல மிருக வைத்தியர்களும் தொழிற்சங்கப் போராட்டத்தில் ஈடுபட்டனர். எனவே, அமைச்சர்கள் யாரும் நோய் வாய்ப்படாது இருந்துகொள்ளுங்கள் - என்றார். (த-4)

# கும்பிட்டுக் கேட்டிருந்தாலும் நாடாளுமன்றம் போயிரேன்

## கூறுகின்றார் ஆனந்தசங்கரி

யாழ்ப்பாணம், ஏப். 9

நான் நாடாளுமன்றம் செல்லவில்லை என்ற அங்கலாய்ப்பில் பேசவில்லை. என்னைக் கும்பிட்டுக் கேட்டிருந்தாலும் நான் அங்கு போயிருக்கமாட்டேன். எனது மக்களுக்கு என்னால் உதவிகள் வழங்க முடியாமல் போனமைதான் எனக்குப்பெரும்கவலையாகஇருக்கின்றது. இவ்வாறு தமிழர் விடுதலைக் கூட்டணியின் செயலாளர் நாயகம் ஆனந்த சங்கரி தெரிவித்தார்.

அரசியலுக்கு அப்பால் நமது சமூகத்தைப் பற்றியும் பேசுவோம் என்ற தொனிப் பொருளிலான கலந்துரையாடல், யாழ்ப்பாணம் நாச்சிமார் கோயிலுக்கு அண்மையில் உள்ள தமிழர் விடுதலைக் கூட்டணியின் அலுவலகத்தில் நேற்று நடைபெற்றது. இதன்போது உரையாற்றிய [illegible] ஆனந்தசங்கரி [illegible] தெரிவித்ததாவது:

அன்று எமது மக்களுக்குப் பிரச்சினை நடந்தபோது யாருமே அதைத் தடுக்க நினைக்கவில்லை. சம்பந்தனோ, பிரபாகரனோ நினைத்திருந்தால் பிரச்சினையை நிறுத்தியிருக்கலாம். இப்பொழுது பல்வேறுபட்ட போராட்டங்களை நடத்த வேண்டிய தேவை இல்லை. பிள்ளையைக் காணவில்லை, மனைவியைக் காணவில்லை என்றெல்லாம் புலம்பித் திரியவேண்டிய அவசியமில்லை.

நாங்கள் அழியப் போகின்றோம், தயவு செய்து எங்களைக் காப்பாற்றுங்கள் என்று 'பெரியகுட்டி' சம்பந்தனிடமும் 'சின்னக்குட்டி' சேனாதிராசாவிடமும் மக்கள் கேட்டபொழுது அவர்களின் தொலைபேசி வேலை செய்யவில்லையாம் என்றும் கேள்விப்பட்டேன்.

ஆனாலும் என்ன நடந்தது? எமது மக்கள் இறுதியில் தவறான முடிவு [illegible]கள். தம்மைப் பாதுகாக்கத் [illegible]வர்களையே நாடாளுமன்றம் அனுப்பினார்கள். அன்று இந்தத் தலைமைகள் எல்லாம் எங்கு போயிருந்தன. மக்கள் கதறும்போது எங்கு போயிருந்தார்கள். இறுதியில் என்ன நடந்தது? அப்பாவி மக்கள் இறந்தது தான் மிச்சம். இனி எமது மக்களுக்கு விடுதலைத் தீர்வு எப்பொழுதும் கிடைக்கப் போவது இல்லை. ஏனென்றால் அதைப்பெற்றுக் கொடுக்கக் கூடிய தலைவர்கள் யாரும் இல்லை. அனைவரும் பேரம் பேசுகின்ற தலைமைகளே தவிர மக்களுக்காக யாரும் இல்லை.

இப்பொழுது மக்கள் நன்றாக உணருவார்கள். தாம் செய்தது எவ்வளவு பிழை என்பதை உணரவேண்டும். இனியொரு முறை இவ்வாறான பிழையை மக்கள் செய்யமாட்டார்கள் என்பது எனக்குத் தெரியும். தமிழ் மக்களுக்கு ஒரு பாதகச் செயலைச் செய்கிறது சம்பந்தன் சேனாதிராசாவின் கூட்டு என்பதை நான் பகிரங்கமாகச் சொல்லுவேன். எனவே எமது மக்கள் இனி தமக்குரிய நல்ல தலைமைகளைத் தெரிவு செய்ய வேண்டும் என்றார். (த-5-12)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## அக்கறையினைவெளிப்படுத்துவதற்கான கோரிக்கை

**பெருநகரமற்றும் மேல் மாகாண அபிவிருத்தி அமைச்சு**
**உலகவங்கியால் நிதியளிப்பு**
**செய்யப்பட்ட மூலோபாயநகரங்கள் அபிவிருத்திக் கருத்திட்டம்.**

**யாழ் நகரப் பிரதேசத்தில் வெள்ளநீர் வடிகால் முறையை அமைப்பதற்கான பெருந்திட்டத்திற்கும் அவைதொடர்பில் முன்னுரிமை அடிப்படையில் முதலீடு செய்வதற்குமான ஆலோசனைச் சேவை.**

**ஒப்பந்த இல.SCDP/WB/JF/CS/06**

1.0 இலங்கை அரசாங்கம் உலகவங்கியிடம் இருந்துபெருநகரமற்றும் மேல்மாகாண அபிவிருத்தி அமைச்சின் கீழ் மூலோபாய நகரங்கள் அபிவிருத்தி கருத்திட்டங்களை நடைமுறைப்படுத்த நிதியினை பெற்றுள்ளது. இந்நிதியில் குறித்த தொகையை யாழ் மாநகரசபையின் ஏற்கனவே உள்ளதெரிவு செய்யப்பட்ட உட்கட்டமைப்பு மற்றும் சேவை களை முன்னேற்றுவதற்கு பயன்படுத்தவுள்ளது. இவ் அபிவிருத்திநிகழ்ச்சித்திட்டத்தின் முதற் செயற்பாடாகயாழ் நகரப் பிரதேசத்தில் வெள்ளநீர் வடிகால் முறையை அமைப்பதற்கான பெருந்திட்டத்திற்கும் முன்னுரிமை அடிப்படையிலான முதலீட்டுதிட்டங்களை தயாரிப்பதற்கும் ஆலோசனைச் சேவையை பெறஉள்ளது. (ஒப்பந்த இல. SCDP/WB/JF/CS/06)

2.0 இவ் ஆலோசனைச் சேவையின் குறிக்கோளானது 2040 ஆம் ஆண்டு வரையாழ் மாநகரசபை எதிர்நோக்கும் வெள்ளநீர் வடிகால்அமைப்புத் தேவையின் இயலளவினை கொண்டிருக்கும் வெள்ளநீர் வடிகால் அமைப்பின் ஒருவிபரமான பெருந்திட்டத்தை உருவாக்குவதும் எதிர்கால உட்கட்டமைப்பு அபிவிருத்திக்கும் அவை தொடர்பான வடிகாலமைப்பு வசதிக்கும் அதைஒருவடிவமைப்பு வழிகாட்டியாக பயன்படுத்தல் ஆகும்.

3.0 இவ் ஆலோசனைச் சேவையின் நோக்கெல்லை பின்வருமாறு. ஆனால் இவற்றுடன் மட்டும் வரையறுக்கப்பட்டதுஅல்ல.

(I) யாழ் மாநகரசபையின் ஏற்கனவேஉள்ளவடிகாலமைப்பு வசதியின் இயலளவை அடையாளம் கண்டு.ஆய்வு செய்து மதிப்பிடல். நகருக்குள்ளேயான வடிகாலமைப்பில் செல்வாக்கு செலுத்தும் மாநகரசபைக்கு வெளியேயான வடிகாலமைப்பு வடிநிலங்களை அடையாளம் காணுதலும் வடிகாலமைப்பின் இயலளவின் குறைபாடுகளை அறிந்து கொள்வதற்கு ஏற்கனவே இருக்கும் அனைத்து வடிகால்களின் இயலாற்றலை மதிப்பிடுதலும்

(II) 2040 ஆம் ஆண்டுவரைநகரத்தின்வெள்ளநீர் வடிகாலமைப்பு தேவையை எதிர்நோக்குவதற்கு தொடர்புடைய முதலீட்டுதிட்டங்களுடன் நடைமுறைசாத்தியமான செலவுகுறைந்த மேம்பாடானவடிகால் அபிவிருத்தி மற்றும் அடையாளம் காணப்பட்ட முன்னுரிமை அடிப்படையிலான முதலீட்டிற்கான வடிவமைப்பு விபரங்களையும் உரிய கேள்விப்பத்திரங்களையும் சமர்ப்பித்தல்.

(III) வடிகாலமைப்பு முறைமையில் விளைவுகளை ஏற்படுத்தும் நிறுவன ரீதியானமற்றும் விதிமுறைசார்பான காரணிகளின் தாக்கங்களை அடையாளம் காணுதலும். வடிகாலமைப்பு முறையின் செயற்படுத்தல் மற்றும் பராமரிப்பிற்காக நிறுவனம்சார் கட்டமைப்பினை முன்னேற்றுவதற்கு மேம்படுத்தல்களை சிபாரிசு செய்தலும் வழிகாட்டல்களை வழங்குதலும்.

(IV) எதிர்காலத்தில் அபிவிருத்தி செய்ய அடையாளம் காணப்பட்ட யாழ்மாநகர சபையை அண்மித்த இடங்களில் வெள்ளநீர் முகாமைத்துவத்திற்காக அடிப்படைகளை வடிவமைத்தலும் வழிகாட்டல்களை வழங்குதலும்.

4.0 பெருநகர மற்றும் மேல்மாகாண அபிவிருத்தி அமைச்சு பின்வரும் துறைகளில் நிருபிக்கப்பட்ட அனுபவங்களை கொண்ட தகைமையுடைய உள்ளூர் மற்றும் சர்வதேசஆலோசகர்களின் சேவையை பெறுவதற்கு விரும்புகிறது.

(i) நகர்ப்புற வடிகாலமைப்பு பெருந்திட்டம்.
(ii) வெள்ள ஆபத்து முன்னறிவிப்பு மற்றும் ஆபத்தினை தன்னலையறிதலுக்காக நிரியக்கவிசை சார்ந்த மாதிரியினை அமைத்தல்.
(iii) கேள்விப்பத்திரங்கள் விரிவாக வடிவமைத்து தயாரித்தல்.

கடந்த 10வருடங்களினுள் தென் கிழக்காசிய பிராந்தியத்தில் இதனை யொத்த பணி அனுபவம் பெற்றிருப்பின் அதுமேலதிக சந்தர்ப்பம் ஏற்படுத்த வல்லது.

5.0 இப் பணிதொ டர்பில் ஆர்வமுள்ள ஆலோசகர்கள் இப் பணியை செய்வதற்கு தமது தராதரங்களை நிரூபிக்கும் ஆவணங்கள், குறித்த நிறுவனவிபரம் அதன் தரம், அந்த நிறுவன உரிமையாளரின் அனுபவம், அந்நிறுவன முகாமைத்துவ உத்தியோகத்தர்கள், அந் நிறுவனகையேடு, அந் நிறுவனத்தின் பணிதொடர்பான விபரம், அந் நிறுவனத்தின் வாடிக்கையாளரின் தொலைபேசி இலக்கம், அதன் கடந்த மூன்றாண்டு நிதியறிக்கை, கணக்காய்வறிக்கை, கிடைக்கக்கூடிய வளங்கள், புதியதொழில்நுட்பங்கள் என்பனவுடன் தொடர்புகொள்ளவும்.

6.0 உலகவங்கி சேவைவழங்குனர் பதிப்பு2011 இன்படியான ஆலோசகர்களை தெரிவுசெய்தலும் பணிக்கமர்த்தலும் என்றவெளியீட்டில் உள்ளவாறான நடைமுறைக்கமைவாகதரம் மற்றும் கிரயஅடிப்படையிலான தெரிவு (QCBS) முறையில் தெரிவுசெய்யப்படுவர்.

7.0 ஆர்வமுள்ளஆலோசகர்கள் மேலதிகதகவல்களினை பிரதிதிட்டப்பணிப்பாளர் (தொழில்நுட்பம்) தந்திரோபாய நகரஅபிவிருத்திதிட்டம் (கைத்தொலைபேசி இல -0094-71-8078336, தொலைபேசி இல –0094-11-2887320-22, தொலைநகல் - 0094-11-2868188, இ-மெயில் : modscdp@gmail.com) அலுவலகநாட்களில் மட்டும் காலை9.00 மணியிலிருந்து மாலை3.30மணி வரை தொடர்பு கொண்டு பெற்றுக்கொள்ளலாம்.

8.0 2016 ஆம் ஆண்டுமேமாதம் பிரசுரிக்கப்பட்டவிளம்பரம் தொடர்பில் தமது அக்கறைக்கான வெளிப்படுத்தல்களை சமர்ப்பித்தவர்கள் மீண்டும் தமது புதியவிண்ணப்பத்தை சமர்ப்பிக்கலாம். அல்லது ஏற்கனவே சமர்ப்பிக்கப்பட்ட அக்கறைக்கான வெளிப்படுத்தல்களை பரிசீலிக்குமாறு குறிப்பிடலாம்.

9.0 அக்கறைக்கான வெளிப்படுத்தல்கள் இரு பிரதிகளில்பின்வரும் விலாசத்தில் 08.05.2017 அன்று உள்ளூர் நேரம் பி.ப4.00 மணிக்கு முன்புசமர்ப்பிக்கவேண்டும்

**கருத்திட்டபணிப்பாளர்,**
**மூலோபாயநகரங்கள் அபிவிருத்திகருத்திட்டம்,**
**பெருநகரங்கள் மற்றும் மேல் மாகாணஅபிவிருத்திஅமைச்சு,**
**4ம் மாடி,செத்சிறிபாயகட்டம்- I**
**பத்தரமுல்ல,**
**இலங்கை.**

**வாடகைக்கு**

3 அறை வீடு அனைத்து வசதிகளுடன் (நீர்த்தாங்கி, நன்னீர்) யாழ் நகர் பாண்டியன்தாழ்வில் சுண்டுக்குளி, பரியோவான், கச்சேரி பகுதிகளுக்கு அண்மையில் 3 பரப்பு வாகனவசதி, வியாபார நோக்கத்திற்கும் பயன்படுத்தலாம்.

071 776 3564, 077 280 4411

**சேவிஸ் ஸ்டேசன் வாடகைக்கு**

பருத்தித்துறை வீதி, கோப்பாய் தெற்கில் புதிய இயந்திரத்தொகுதியுடன் சேவிஸ் ஸ்டேசன் வாடகைக்குண்டு.

075 942 6609

**பெண் உதவியாளர் தேவை**

கந்தரோடை, சுன்னாகத்திலே வதியும் வயோதிபத் தம்பதியினருடன் தங்கியிருந்து பணிபுரிய பெண் உதவியாளர் தேவை. 35 வயதுக்கு மேற்பட்டவர் விரும்பத்தக்கது.
கவர்ச்சியான சம்பளம் வழங்கப்படும்.

077 754 2174, 021 224 0393

**மணமகள் தேவை**

யாழ். இந்து கௌரவகுடும்பம், 1988 இல் பிறந்த ரேவதி நட்சத்திரம் உடைய அரசதொழில். பார்க்கும் மணமகனுக்கு தகுந்த மணமகளை பெற்றோர் எதிர்பார்க்கின்றனர்.
(ஆசிரியர் தொழில்விரும்பத்தக்கது)

T.P. 072 128 2672

## அக்கறையினைவெளிப்படுத்துவதற்கான கோரிக்கை

**பெருநகரமற்றும் மேல்மாகாண அபிவிருத்திஅமைச்சு**
**உலகவங்கிநிதி உதவியுடன் செயற்படுத்தப்படும்**
**மூலோபாயநகரங்கள் அபிவிருத்திகருத்திட்டம்**
**(கடன்இல 5800lk)**

**யாழ்ப்பாணப் பழையகச்சேரி கட்டடவளாகத்தை பேணுவதும் அதனை ஏற்றவாறு மீளபயன்படுத்துவதற்கான வர்த்தகதிட்டமிடல் அபிவிருத்திக்கான அக்கறையை வெளிப்படுத்துவதற்கான வேண்டுகோள்**

(ஒப்பந்த இல –SCDP/WB/JF/CS/12)

1.0 இலங்கை அரசாங்கம் மூலோபாயநகரங்கள் அபிவிருத்தி கருத்திட்டத்திற்கான செலவினை நோக்காக கொண்டு சர்வதேச அபிவிருத்தி முகவர் அமைப்பிடமிருந்து (உலகவங்கி) நிதியினை பெற்றுள்ளது. யாழப்பாணத்தின் தெரிவு செய்யப்பட்ட அபிவிருத்தி திட்டங்களின் தேவைகளுக்கமைவாக, பெருநகரமற்றும் மேல்மாகாண அபிவிருத்தி அமைச்சு யாழ்ப்பாணப் பழையகச்சேரி கட்டடவளாகத்தை பேணுவதும் அதனை ஏற்றவாறு மீளபயன்படுத்துவதற்கான வர்த்தக திட்டமிடல் அபிவிருத்திக்கான ஆலோசனை சேவைகளினை பெற்றுக்கொள்ள எண்ணியுள்ளது.

2.0 யாழ்ப்பாணத்தின் முழுமையான நகர்புற அங்கமாக பின்வருவன உள்ளடங்கும்:(i) பழைய கச்சேரி போன்ற தெரிவு செய்யப்பட்ட கலாசார பாரம்பரிய சொத்துக்களை மறு சீரமைத்தலும் ஏற்றவாறு மீளப்பயன்படுத்தலும், (ii)நகரமையத்திலுள்ள பிரதான வீதிகளை மேம்படுத்தல், (iii)தெரிவு செய்யப்பட்ட (வீதியோர நடைபாதை, சைக்கிளோட்டும் பாதை) வீதிகளில் நகர்திறன் தொழில்நுட்பமேம்பாடு, (iv) நகர பொழுது போக்கு இடங்களை புனரமைத்தல், உதாரணமாக கோட்டைபூங்கா. அருகிலுள்ள தெரிவு செய்யப்பட்ட பூங்காக்கள் மற்றும் குளங்களை சுற்றியுள்ள பொது இடங்கள். (v) பொது வசதிகளுக்கான கட்டுமானங்களும் சனசமுக நிலையங்களை புனரமைத்தலும் மற்றும் (vi) நகரமையத்தின் தெரிவுசெய்யப்பட்ட இடங்களில் முழுமையான நகரவடி வமைப்பினை மேம்படுத்தல்.

3.0 முன்மொழியப்பட்ட ஆலோசனைசேவைகள் ஆனது பழையகச்சேரி கட்டடத்தினை மறுசீரமைத்து பாதுகாத்துபேணி நிறைவுறுத்தும் ஒருவர்த்தக திட்டத்தின் மேம்பாட்டிற்காக கோரப்படுகின்றன.

4.0 ஆலோசனைசேவைகள் பின்வருவனவற்றினை நோக்காக கொண்டது.
இருநாள் பயிற்சிப்பட்டறை நடத்துவதற்கும் உள்ளூர் மற்றும் நாட்டுமக்களின் கருத்துக்களினை அறிந்து கொள்வதற்கு முக்கிய பங்குதாரர்களுடன் நேர்காணலும் அவர்களுடன் ஈடுபாட்டினைஏற்படுத்துதல்,உள்ளூர் செயற்பாட்டாளர்கள் மற்றும் உள்ளூர் வளர்ந்துவரும் பொருளாதாரத்தினை புரிந்துகொள்ளல், பயன்பாடுகள் மற்றும் பயனர்களின் சாத்தியமான எதிர்காலம் குறித்து கலந்துரையாடல். இவ் வேலைப்பட்டறைகள் மூலம் தொடர்புடைய வர்த்தகம் மற்றும் உல்லாச பயணத் துறை நிபுணர்களிடம் இருந்துகருத்துக்களினை பெறுவதற்கு எதிர்பார்க்கப்படுகின்றது. இத்தகவல்கள் பழையகச்சேரி கட்டடத்தினை பேணிப் பாதுகாத்து மறுசீரமைப்பு செய்து நிறைவுறுத்தும் ஒருதொழிற் திட்டத்தினை உருவாக்குவதற்கு ஆலோசகர்களால் பயன்படுத்தப்படும்.

5.0 பெருநகரமற்றும் மேல்மாகாண அபிவிருத்தி அமைச்சுதற்போது தகுதிவாய்ந்த உள்ளூர் ஆலோசகர்களை மேற்குறிப்பட்ட வேலைகளின் அனைத்து அம்சங்களிலும் அவர்களின் வர்த்தகதிட்டமிடல் சேவையின் அனுபவத்திற்கான நிருபணங்களுடன் அழைக்கின்றது.

6.0 அப்பணிக்கு விண்ணப்பிக்க விரும்பும் ஆலோசகர்கள் இச்சேவையினை ஆற்றுவதற்கு தாம் தகைமை உடையவர்கள் என்பது குறித்தான பின்வரும் முக்கியதகவல்களை வழங்க வேண்டும்.

- கடந்த ஐந்துவருடத்தில் செய்துமுடிக்கப்பட்ட இதை ஒத்ததிட்டங்களின் பட்டியல், தொடர்புடைய ஆலோசனை ஒப்பந்தங்களின் அளவு மனித மாதத்தில் மற்றும் அதன் பெறுமதி அமெரிக்கடொலருக்கு (US Dollar) சமனான பெறுமதியில்.
- வர்த்தகதிட்டமிடலில் புலமைசார் பிரதானஅலுவலர்களின் எண்ணிக்கை, அபிவிருத்தி மற்றும் நிலப்பயன்பாட்டு பொருளாதாரம் (கலாசாரபாரம்பரிய சின்னங்களை புதுப்பித்தல் தொடர்பானது) , சுற்றுலாத்துறை திட்டமிடல், நகரபுத்துயிராக்கம் /மீள் உருவாக்கம் மற்றும் பங்குதாரர்களின் ஆலோசனைகள்.

7.0 குறித்த அமைப்பு/நிறுவனம் மேற்கூறியதனி யொருதிட்டம் தொடர்பில் மட்டும் தனிஆலோசகராக அல்லது கூட்டுமுயற்சிபங்காளராக அல்லது உப ஆலோசகராக பங்குற்ற அனுமதிக்கப்படுவர் என்பதனை தயவு செய்து கருத்திற்கொள்ளவும்.

8.0 உலகவங்கி சேவை வழங்குனர் பதிப்பு 2011 இன்படியான ஆலோசகர்களை தெரிவு செய்தலும் பணிக்கமர்த்தலும் என்றவெளியீட்டில் உள்ளவாறான நடைமுறைக்கமைவாக தரம் மற்றும் கிரய அடிப்படையிலான தெரிவு (QCBS) முறையில் தெரிவுசெய்யப்படுவர்.

9.0 ஆர்வமுள்ளஆலாசகர்கள் மேலதிக தகவல்களினை திட்டஒருங்கிணைப்பாளர், தந்திரோபாயநகர அபிவிருத்திதிட்டம் (தொலைபேசி இல –077-3548347,தொலைநகல் - 0094-11-2868188, இ-மெயில்: modscdp@gmail.com) அலுவலகநாட்களில் மட்டும் காலை 9.00 மணியிலிருந்து மாலை3.30 மணி வரை தொடர்பு கொண்டு பெற்றுக் கொள்ளலாம்.

10.0 அக்கறைக்கான வெளிப்படுத்தல்கள் மூன்று பிரதிகளில் பின்வரும் முகவரிக்கு எதிர்வரும் 09.05.2017 ஆந் திகதிமாலை 4.00மணிக்கு முன்பதாக சமர்ப்பிக்கமுடியும்.

**திட்டப்பணிப்பாளர்,**
**தந்திரோபாயநகர அபிவிருத்திதிட்டம்,**
**பெருநகரமற்றும் மேல்மாகாண அபிவிருத்திஅமைச்சு.**
**4ஆம் மாடி,செத்சிறிபாயகட்டம்-I**
**பத்தரமுல்ல**
**இலங்கை**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ABI Fashion World

# அபி பஷன் வேல்ட்இன்
## புத்தாண்டு சிறப்புத் தள்ளுபடி
## ரெடிமெற் ஆடைகளின் சங்கமம்

தமிழ்ப் புத்தாண்டை
மகிழ்ச்சியுடன்
கொண்டாடிட குடும்பத்தில்
உள்ள அனைவரும்
விரும்பும் ஆடைகள்
ஒரே இடத்தில்...



## சித்திரை தள்ளுபடி
**10% to 60%**

- சல்வார் 1500/= முதல்
- சல்வார் துணிகள் 800/= முதல் (றொப் 01 இலவசம்)
- சேட் 600/= முதல் (01 வாங்கினால் 01 இலவசம்)
- ஹொட்டன் சாறி 800/= முதல்
- பட்டுப்புடைவை 2000/= முதல்
- பான்சி சாறி 1000/= முதல் (01 வாங்கினால் 02 இலவசம்)
- ரீசேட் 500/= முதல் (01 வாங்கினால் 01 இலவசம்)

இச்சலுகை
**23.03.2017**
**13.04.2017வரை**

அபியின் வாடிக்கையாளர் அட்டைக்கு 5% விசேட விலைக்கழிவு. (விலைக்கழிவுகள் நிபந்தனைகளுக்கு உட்பட்டது)

112, கே.கே.எஸ் வீதி, யாழ்ப்பாணம்.
(சத்திரச் சந்திக்கும் பிரதம தபாலகத்திற்கும் இடையில்)

021 222 3738
077 324 6503
abifashionworld

---

சித்திரைப் புத்தாண்டை முன்னிட்டு

# மாபெரும் மலிவு விற்பனை..

நாவலர் வீதியில் அமைந்துள்ள....

# JAMUNA FURNITURE




## தம்ரோ, பியெஸ்ரா

ஏக விநியோகஸ்தராகிய
எங்களிடம்.....

- நீங்கள் வாங்கும்ஒவ்வொரு SoFa செற்றிகளுடனும் 7500/= பெறுமதியான Glass Coffee Table இலவசம்.
- நீங்கள் வாங்கும் ஒவ்வொரு மெத்தைகளுடனும் ஒரு தலையணை இலவசம்.
- Panasonic, Innovex Tv மற்றும் Preethi Mixi, Stand fan, Damro Washing Machine, Rice Cookers ஐ அதிகூடிய விலைக் கழிவுடனும் Damro உத்தரவாதத்துடனும் பெற்றுக் கொள்ளலாம்.
- 25000/= இற்கு மேற்பட்ட பெறுமதியான பொருள்களை கொள்வனவு செய்தால் இலவசமாக விநியோக சேவை (Home Delivery) செய்யப்படும்.
- Damro, Pyestra,Nilkamal, Phonix, Airpico ஆகியவற்றின் உற்பத்திப் பொருள்களையும் பெற்றுக் கொள்ளலாம்.

**JAMUNA FURNITURE**
181, Navalar Road, Jaffna.
021 222 1092, 077 757 4776

விடுமுறை நாள்களிலும் (ஞாயிற்றுக்கிழமை)எமது நிலையம் திறந்திருக்கும் என்பதை மகிழ்ச்சியுடன் அறியத்தருகின்றோம்.

---

# வடமராட்சி மக்களின் நலன் கருதி
# P.P.T Express இன் மகத்தான சேவை

கொழும்பு - யாழ்ப்பாணம் பேருந்து சேவையில் முன்னணி வகிக்கும் P.P.T எக்ஸ்பிரஸ் நிறுவனம் புத்தம் புதிய அதி சொகுசு பஸ்களை (விமானத்தில் இருப்பது போன்றது) சேவையில் ஈடுபடுத்தியுள்ளது.

யாழ்ப்பாணம் கொழும்பு மக்களுக்காக அதி உன்னத சேவை நடாத்தும் P.P.T நிறுவனம் பிரயாணிகளின்நலன் கருதி தனது சேவையை மேம்படுத்தியுள்ளது.

**யாழ் - கொழும்பு**
**கொழும்பு - யாழ்**
**12 மணித்தியால பொதிகள் சேவை**

முதலாவது பேருந்து: யாழ்ப்பாணத்திலிருந்து இரவு 8.00 மணிக்கு கொழும்பு நோக்கி புறப்படும்.

இரண்டாவது பேருந்து: **பருத்தித்துறையிலிருந்து இரவு 8.00 மணிக்கு** புறப்பட்டு நெல்லியடி, அச்சுவேலி, கோப்பாய், இருபாலை, நல்லூர் ஊடாக யாழ்ப்பாணம் வந்து யாழ்ப்பாணத்திலிருந்து இரவு 9.00 மணிக்கு கொழும்பை நோக்கிப் புறப்படும்.

அதேபோல் - முதலாவத பேருந்து வெள்ளவத்தையில் இருந்து இரவு 8.00 மணிக்கு புறப்பட்டு யாழ்ப்பாணம் வந்து காங்கேசன்துறை வீதி வழியாக காங்கேசன்துறையைச் சென்றடையும்.

இரண்டாவது பேருந்து - வெள்ளவத்தையில் இருந்து இரவு 9.00 மணிக்கு புறப்பட்டு யாழ்ப்பாணம் வந்து பருத்தித்துறை வீதி வழியாக பருத்தித்துறையை சென்றடையும்.




**ஆசனப் பதிவுகளை இங்கே மேற்கொள்ளலாம்.**

யாழ்ப்பாணம்: 0775731318
183,கே.கே.எஸ் வீதி, 021 492 3240

பருத்தித்துறை: 0775736003
அரசடி லேன் பருத்தித்துறை, 021 492 3724

கொழும்பு: 0775755175
182,சென்றல் றோட், கொழும்பு -12
0112 320336

வெள்ளவத்தை: 0766036204
296, A1, காலி வீதி, கொழும்பு -06
0112364999

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# அவசியம் ஏற்படின் தாக்குதல் தொடரும்

## ஐ.நா. பாதுகாப்புச் சபையில் அமெ. அழுத்தம் திருத்தம்

வொஷிங்டன், ஏப். 9
சிரியா மீது தாக்குதல் நடத்த வேண்டிய அவசியம் நேர்ந்தால் நாம் மீண்டும் தாக்குதல் நடத்துவோம் என்று ஐக்கிய நாடுகள் சபைக்கான அமெரிக்கத் தூதர் நிக்கி ஹாலே தெரிவித்தார்.

சிரியாவின் இட்லிப் மாகாணத்தில் சேகுன் நகரில் சிரிய அரசு, அல்லது சிரிய அரசின் ஆதரவு பெற்ற நாடு எனச் சந்தேகிக்கப்படும் தரப்பால் நடத்தப்பட்ட வான் வழி இரசாயனத் தாக்குதலில் 86 மக்கள் சாவடைந்தனர். இந்த இரசாயனத் தாக்குதல் போர்க் குற்றம் என்று ஐக்கிய நாடுகள் சபை அறிவித்தது. அமெரிக்க அதிபர் ட்ரம்ப் தாக்குதலுக்கு கடும் கண்டனம் தெரிவித்ததுடன் பொதுமக்களின் உயிரிழப்புக்கு சிரிய அரசு கடும் விளைவுகளைச் சந்திக்க வேண்டிவரும் என்று எச்சரித்தார். இதன் அடிப்படையில் அவர் சிரியா மீது போர் அறிவித்தல் விடுத்தார்.

சிரிய இராணுவத்துக்கு சொந்தமான சாய்ரத் படைத்தளம் அமெரிக்கா நேற்றுமுன்தினம் அதிகாலை நடத்திய தாக்குதலில் நிர்மூலமானது. சிப்பாய்கள் சிலரும் சாவடைந்தனர். இதனையடுத்து ஐக்கிய நாடுகள் சபையின் பாதுகாப்புச் சபைக் கூட்டத்துக்கு அழைப்பு விடுத்தது ரஷ்யா.

நேற்று மதியம் (இலங்கை நேரப்படி) கூட்டம் கூடியது. ரஷ்யாவும் அமெரிக்காவும் கடும் வாக்குவாதத்தில் ஈடுபட்டன. சிரியா மீது அமெரிக்கா நடத்திய தாக்குதல் சிரிய அரசின் இறையாண்மையை மீறும் செயல் என்று ரஷ்யா விமர்சித்தது. இதற்குப் பதிலடியாக நிக்கி ஹாலே பல்வேறு கருத்துக்களைப் பதிவு செய்தார்.

சிரிய அதிபர் அல் அசாத்தின் அட்டூழிய ஆட்சிக்குப் பக்கபலமாக ரஷ்யா நிற்கக்கூடாது. அவரது கொடுமையான ஆட்சிக்கு நியாயம் கற்பிக்கக்கூடாது. சிரியாவுடன் இனி நாம் வார்த்தைகளால் பேசமாட்டோம். தேவை ஏற்படின் இனியும் பல்வேறு தாக்குதல்களை அங்கு நடத்துவோம். ஆனால் அதற்கு அவசியம் ஏற்படாது என்று கருதுகிறோம் என நிக்கி ஹாலே தெரிவித்தார்.



முன்னதாக அமெரிக்க அதிபர் ட்ரம்ப், சிரியா மீது போர் அறிவிப்பு விடுத்ததைக் கண்டித்து அமெரிக்காவின் சில இடங்களில் அவருக்கு எதிராக ஆர்ப்பாட்டங்கள் நடத்தப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (ம)

# வில்பத்து வர்த்தமானி கூட்டு அரசின் துரோகம்

## அமைச்சர் ரிசாத் சாடல்

யாழ்ப்பாணம், ஏப். 9
மக்களின் விவசாயக் காணிகளை வனாந்தரப் பகுதியாக வர்த்தமானி அறிவித்தலை வெளியிட்டதன் மூலம் கூட்டாட்சி அரசு மக்களுக்குப் பெரும் துரோகத்தை இழைத்துள்ளது என வர்த்தகக் கைத்தொழில் அமைச்சர் ரிசாத் பதியுதீன் குற்றம் சாட்டினார்.

அரசின் வர்த்தமானி அறிவித்தல் தொடர்பாக அமைச்சரிடம் ஊடகவியலாளர்கள் எழுப்பிய கேள்விக்குப் பதிலளிக்கும்போதே அவர் இதனைத் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

மன்னார் முசலிப் பிரதேசத்தின் நீண்ட வரலாறு கொண்ட கிராமங்களில் உள்ள காணிகளில் மக்கள் விவசாயம் செய்து வாழ்ந்து வந்தனர். உள்நாட்டுப் போரின் காரணமாக மக்கள் அந்த இடங்களை விட்டுச் சென்றமையால் விவசாயக் காணிகள் பராமரிப்பு இன்றி மரங்கள் வளர்ந்து வனாந்தரமாகக் காட்சியளிக்கின்றன.

அந்த இடங்களைவிட்டு வெளியேறிய மக்கள் 22 வருடங்களுக்கு மேலாக வேறு இடங்களில் வாழ்ந்து வரும் நிலையில் கடந்த 2012 ஆம் ஆண்டு 15 ஆயிரம் ஏக்கர் காணிகளைக் காட்டுப் பகுதி என வர்த்தமானி அறிவித்தல் வெளியிட்டனர். விளாத்திக்குளம்,வேப்பங்காடு 50 ஆயிரம் ஏக்கர் காணிகளை வனாந்தரப் பகுதிகளாக அறிவித்தனர். விவசாய நடவடிக்கைக்கும் மேட்டு நிலப் பயிச்செயகைக்கும் பயன்படுத்திய நிலங்களைக் காட்டுப் பகுதிகள் என அறிவித்தனர்.

கொழும்பில் இருந்து கொண்டு ஜி.பி.எஸ். மூலம் காட்டுப் பகுதி என வர்த்தமானி அறிவித்தலை உருவாக்கினார்கள். அவ்வாறு உருவாக்கிய வர்த்தமானியை இரண்டு வருடமாக வெளியிடாது இரகசியமாக வைத்திருந்தார்கள். பின்னர் 2014 ஆம் ஆண்டு அந்த வர்த்தமானி அறிவித்தலை வெளியிட்டனர். அதனை நீக்குமாறு கோரிக்கைகள் விடுக்கப்பட்டதுடன் நீதிமன்றிலும் வழக்குத் தாக்கல் செய்யுப்பட்டது. இவ்வாறு நீதிமன்றில் வழக்கு நிலுவையில் உள்ள நிலையில் மக்கள் பிரதிநிதியான எனக்கும் தெரியாமல் மக்கள் காணிகளையும் ஏற்கனவே வாதமானியில் இருந்த காணிகளையும் சேர்த்து 1 இலட்சத்துக்கு மேற்பட்ட ஏக்கர் காணிகளைப் புதிய வர்த்தமானி மூலம் கூட்டு அரசு அபகரித்துள்ளது. இதன ஊடாகக் கூட்டு அரசு துரோகம் செய்து விட்டது. இது நியாயமான செயல் அல்ல. சில இனாவாதிகள் மீண்டும் இனக்கலவரங்கள் ஏற்பட வேண்டும் என்ற நோக்கத்துடன் செயற்படுகின்றனர். இதனை நான் முழுமையாக எதிர்க்கின்றேன் - என்றார். (த-8)

---

**முதலாம் பக்கத் தொடர்ச்சிகள் ...**

### முள்ளிவாய்க்காலில்...

முள்ளி வாய்க்கால் சென்றனர். அங்கு வைத்தே தமது மத நிகழ்வுகளுடன், முள்ளிவாய்க்காலில் கொல்லப்பட்ட மக்களுக்காக நேற்று முன்தினம் அஞ்சலியும் செலுத்தினர். கிறிஸ்தவர்களின் தவக் காலமாகையால், தமது வழிபாடுகளை முள்ளிவாய்க்காலில் மேற்கொள்ளவேண்டும் என்றும், அங்கு வைத்து மன்னிப்புக் கோரவேண்டும் என்று விரும்பிய சிங்கள மக்களே இவ்வாறு தமது அஞ்சலியைச் செலுத்தியுள்ளனர்.

இந்த நிகழ்வுகளை ஒழுங்கமைத்த தென்னிலங்கையைச் சேர்ந்த மதகுரு ஒருவர் கருத்துத் தெரிவிக்கையில், நாட்டில் நீண்ட காலம் இடம்பெற்ற இன முரண்பாட்டால் நடைபெற்ற அத்தனை துன்பகரமான நிகழ்வுகளுக்கும் மன்னிப்புக் கோருகின்றோம்.

2009 ஆம் ஆண்டு அப்போதைய அரசின் அடக்குமுறைக்குள் இந்த இடத்தில் பொதுமக்கள் அகப்பட்டுள்ளனர். மக்கள் வாழ்விடங்களை இலக்கு வைத்துக் கொத்துக் கொத்தாகக் குண்டுகள் வீசப்பட்டன. அப்பாவிப் பொதுமக்களின் உடல்கள் சிதைக்கப்பட்டு இரத்தம் ஆறாக ஓடிக்கொண்டிருந்தது.

அந்தக் காலத்தில் போர் நடைபெறாத பகுதியில் இருந்த மக்களாகிய நாம் பால்சோறு உண்டு சந்தோசக் களிப்பில் இருந்துள்ளோம். அவ்வாறன நிகழ்வுக்காகத் தற்பொழுது முள்ளிவாய்க்காலில் மண்டியிட்டு நாங்கள் மன்னிப்புக் கோருகின்றோம்.

விழுந்துள்ள சமூகத்தை மீண்டும் கட்டி எழுப்பவேண்டும். அதற்காக எழுந்து நிற்கும் சமூகம் குனிய வேண்டியது தவிர்க்க முடியாதது. அவ்வாறு குனிந்தால் மட்டுமே விழுந்த சமூகத்தை மீண்டும் எழுப்ப முடியும். இவ்வாறு எழுந்து நிற்கும் நாம் குனியும்போது எங்களுடைய வசதிகள் அனைத்தையும் விடுக்க வேண்டி வரலாம். அல்லது நாங்கள் தேசத்துரோகியாகக் கூடக் கருதப்படலாம். எவ்வாறாயினும் நாம் குனிந்தால் மட்டுமே வீழ்ந்தவர்களை எழுப்ப முடியும். அவ்வாறு வீழ்ந்த சமூகத்தை மீண்டும் கட்டியெழுப்புவதற்காக எங்களை நாங்கள் அர்ப்பணிப்போம் என்று கூறினார்.

முள்ளிவாய்க்காலில் சிறப்பு வழிபாட்டை மேற்கொள்வதற்கு என்ன காரணம் என்று பத்திரிகையாளர் எழுப்பிய கேள்விக்குப் பதிலளிக்கையில், கிறிஸ்தவ வழிபாட்டை இறுதிப் போர் நடைபெற்ற முள்ளிவாய்க்கால் பகுதியில் நிகழ்த்தி அங்குள்ள பாதிக்கப்பட்ட பொதுமக்கள் முன்னிலையில் பொதுமன்னிப்பு கோரவேண்டும் என்று பெரும்பாலான கிறிஸ்தவ சிங்கள மக்கள் விருப்பம் தெரிவித்துள்ளனர். அதற்கமைய இந்தச் சிறப்பு வழிபாடு இடம்பெற்றுள்ளது என்றார். (த-5,7)

### ஒரே நாளில்....

பதிவானது. அதைத் தொடர்ந்து சொல்லிக் கொள்ளும் படியானதும் சிறிய அளவிலானதுமான அதிர்வுகள் 40 தடவைகள் உணரப்பட்டன என்று பிலிப்பைன்ஸ் ஊடகங்கள் குறிப்பிட்டன.

சீரான இடைவெளியில் 40 தடவைகள் நில அதிர்வு உணரப்பட்டதால் அங்கு பெரும் பதற்றம் ஏற்பட்டது. எனினும் சுனாமி எச்சரிக்கை விடுக்கப்படவில்லை. சேத விபரங்கள் தொடர்பில் எந்தத் தகவலும் நேற்று இரவுவரை வெளியாகவில்லை. (ம)

### சிறுவர்கள்...

துர்நடத்தைகள் அதிகரித்துள்ளதாக, வடக்கு மாகாணச் சிறுவர் நன்னடத்தைத் திணைக்களத்தின் பதிவுகளிலிருந்து தெரியவருகின்றது.

2010 ஆம் ஆண்டு 79 சிறுவர் துர்நடத்தைகள் வடக்கு மாகாணத்தில் பதிவாகியுள்ளன. 2012 ஆம் ஆண்டு 232 சம்பவங்கள் பதிவாகின. இதுவே இதுவரைல் அதிகூடிய சம்பவங்கள் பதிவாகிய ஆண்டாகக் காணப்படுகின்றது. 2014 ஆம் ஆண்டு 192 ஆகக் காணப்பட்ட நிலையில், 2015 ஆம் ஆண்டு 170 ஆகக் குறைவடைந்தது. 2016 ஆம் ஆண்டு மீண்டும் அதிகரித்து 180 ஆகக் காணப்படுகின்றது.

2016 ஆம் ஆண்டு யாழ்ப்பாண மாவட்டத்தில் 61 சிறுவர் துர்நடத்தைகளும், முல்லைத்தீவு மாவட்டத்தில் 22 சம்பவங்களும், மன்னார் மாவட்டத்தில் 16 சம்பவங்களும், வவுனியா மாவ்ட்டத்தில் 46 சம்பவங்களும், கிளிநொச்சி மாவட்டத்தில் 35 சம்பவங்களுமாக வடக்கில் 180 சிறுவர் துர்நடத்தைகள் பதிவாகியுள்ளன.

2015 ஆம் ஆண்டில், யாழ்ப்பாணத்தில் 71, கிளிநொச்சியில் 24, முல்லைத்தீவில் 30, மன்னாரில் 14, வவுனியாவில் 31 ஆக 170 சிறுவர் துர்நடத்தைச் சம்பவங்கள் பதிவு செய்யப்பட்டுள்ளன.

2014 ஆம் ஆண்டில், யாழ்ப்பாணத்தில் 99, கிளிநொச்சியில் 21, முல்லைத்தீவில் 19, மன்னாரில் 22, வவுனியாவில் 31 ஆக 192 சிறுவர் துர்நடத்தைச் சம்பவங்கள் பதிவு செய்யப்பட்டுள்ளன.

2012 ஆம் ஆண்டில், யாழ்ப்பாணத்தில் 74, கிளிநொச்சியில் 23, முல்லைத்தீவில் 62, மன்னாரில் 29, வவுனியாவில் 44 ஆக 232 சிறுவர் துர்நடத்தைச் சம்பவங்கள் பதிவு செய்யப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (த-5)

### அரச நிர்வாகம்...

தேசியக் கூட்டமைப்பு பொறுப்பை எடுத்துவிட்டது என்றதுமே
பிள்ளை தவழவும் தேவையில்லை, வளரவும் தேவையில்லை. உடனே மீசை முளைத்து விடவேண்டும் என நினைக்கின்றார்கள்.

இவ்வாறு கிழக்கு மாகாண விவசாய அமைச்சரும் இலங்கைத் தமிழரசுக் கட்சியின் பொதுச்செயலாளருமாகிய கிருஸ்ணபிள்ளை துரைராசசிங்கம் தெரிவித்தார்.

கிழக்கு மாகாண மீன்பிடி அமைச்சின் ஒதுக்கீட்டில் நாவற்குடா வாவி மீனவர் கூட்டுறவுச் சங்கத்துக்கு மீன்பிடி உபகரணங்கள் வழங்கும் நிகழ்வில் கலந்து கொண்டு உரையாற்றும்போதே அவர் இதனைத் தெரிவித்தார்.

அவர் மேலும் கூறியதாவது:

எமது உரிமைகளைக் கேட்டதன் காரணமாக நாங்கள் துன்பங்களுக்கு முகம் கொடுக்கவேண்டி வந்தது. கடந்த 30 ஆண்டு காலத்துக்குள் மிகவும் பெரிய துன்ப துயரத்துக்கு நாங்கள் ஆளாகிவிட்டோம். நாம் துன்பப்பட்டுக்கொண்டிருந்த அதே நேரத்தில் எமது சகோதரர்கள் வளர்ந்துவிட்டார்கள். அதனைப் பலர் மறந்துவிட்டு தற்போது மாகாண சபையில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு பொறுப்பை எடுத்து விட்டது என்றதுமே பிள்ளை தவழவும் தேவை பில்லை வளரவும் தேவையில்லை உடனே மீசை முளைத்து விடவேண்டும் என நினைக்கின்றார்கள்.

அரச நிர்வாகத்தில் நாங்கள் இப்போது குழந்தைப் பருவத்தில் இருக்கின்றோம். எமது சகோதரர்கள் முப்பது வருடம் பெற்றிட்ட விடயங்களை நாங்கள் இந்த இரண்டு வருடத்தில் எடுப்பதென்பது மிகவும் இயலாத காரியம்.

போர் முடிவுற்றதும் போரினால் பாதிக்கப்பட்ட இனங்களின் அபிவிருத்திக்காக உலக நாடுகள் ஏராளமான நிதியைக் கொடுத்தன. அந்த நிதிகளையெல்லாம் அன்றைய அரசு உரிய நோக்கத்துக்காகப் பயன்படுத்தாமல் வெவ்வேறு விதமாகப் பயன்படுத்திக் கொண்டு அவர்களுடைய செல்லப் பிள்ளைகளாக இருந்தவர்களும் அந்தச் சொத்துகள் சுதந்திரங்களையெல்லாம் எவ்வாறு பயன்படுத்திக் கொண்டிருந்தார்கள் என்று அனைவருக்கும் தெரியும்.

அப்போது பெரிய மழை பெய்த காலம். இப்போது மழையெல்லாம் விட்டுத் தூவானம் அடிக்கின்ற காலத்தில் தான் நாங்கள் பொறுப்பேற்றிருக்கின்றோம். எங்களுக்குரிய நிதி ஒதுக்கீடுகள் எல்லாம் மிகக் குறைவு.

முன்பெல்லாம் இலங்கைத் தமிழரசுக் கட்சியில் முஸ்லிம் நாடாளுமன்ற உறுப்பினர்களும் இருந்தார்கள்.

அவர்கள் தேர்தலில் வெற்றி பெற்று நாடாளுமன்றம் சென்றதும் அரசுடன் சேர்ந்து விடுவார்கள். எமது தலைவர் மிகவும் நுணுக்கமாகச் சொன்னார். அது அவர்களின் பிழை அல்ல. நமக்குக் கூட்டாட்சி கிடைத்திருந்தால் முஸ்லிம்கள் நம்மை விட்டுப் பிரிந்திருக்க மாட்டார்கள். ஏனெனில் அதிகாரம் ஒன்று வருகின்றபோது அவர்கள் எங்களோடு கட்டாயம் நிற்பார்கள்.

இனிமேல் வருகின்ற அரசமைப்பு விடயங்களில் அதிகாரத்தை நாங்கள் பெறக் கூடிய நிலைமை வருகின்றபோது முஸ்லிம் சகோதரர்களும் எங்களோடு சேர்ந்து இருந்து தங்களுடைய விடயங்களைக் கையாளுவதற்கு முயற்சிப்பார்கள்.

அவ்வாறு சேர்ந்து ஒரு இணக்கப்பாட்டுக்குள் வருகின்றபோது வன்மம் எல்லாம் போய்விடும். நாங்கள் பழைய விடயங்களை மாத்திரம் வைத்துக் கொண்டிருந்தால் அதற்கு அப்பால் செல்ல முடியாமல் இருக்கும் என்றார். (த-5101)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# திறப்பு விழாவுக்காக காத்திருக்கும் அச்சுவேலி உழவர் சந்தை கட்டடம்

அச்சுவேலி, ஏப்.9
அச்சுவேலியில் பல லட்சம் ரூபா செலவில் நிர்மாணிக்கப்பட்ட உழவர் சந்தை கட்டடம் நீண்டாலமாக மக்கள் பாவனைக்குக் கையளிக்கப்படவில்லை என்று தெரிவிக்கப்பட்டது.
அச்சுவேலி பொதுச் சந்தை வளாகத்தில் முன்னோடி அமைப்பாக உழவர் சந்தைக்கான கட்டடம் அமைக்கப்பட்டுள்ளது. விவசாயிகள் தாங்கள் உற்பத்தி செய்த பொருள்களை எந்தவிதமான வரிகள் மற்றும் அறவீடுகளைச் செலுத்தாமல் உழவர் சந்தையில் வைத்து விற்பனை செய்ய முடியும் என்று தெரிவிக்கப்பட்டது.
உழவர் சந்தைக்கான கட்டுமானப் பணிகள் பூர்த்தியடைந்து பல மாதங்கள் கடந்த போதிலும் உத்தியோகபூர்வமாகத் திறந்து வைக்கப்படவில்லை.
"அச்சுவேலியில் உள்ள உழவர் சந்தைக் கட்டடம் இன்னும் உத்தியோகபூர்வமாக திறக்கப்படவில்லை. விவசாயிகள் தமது விளைபொருள்களை விற்பனை செய்வதற்கு எந்தவிதமான தடைகளும் மேற்கொள்ளவில்லை. விவசாயிகள் என்பதை வலி. கிழக்கு பிரதேச சபையின் உப அலுவலகத்தில் உறுதிப்படுத்திய பின் அவர்கள் பொருள்களை விற்பனை செய்யலாம்.
இந்தக் கட்டடம் இன்னும் ஓரிரு வாரங்களில் உத்தியோகபூர்வமாகத் திறக்கப்படும்" என வலி.கிழக்கு பிரதேசசபைச் செயலர் ஜெ.ஜெலீபன் தெரிவித்தார். (ற-10,11)

## மகா கும்பாபிசேகம்

அச்சுவேலி,ஏப்.9
யாழ்ப்பாணம் நீராவியடி ஸ்ரீ ஜெயநீராவி வீரகத்தி விநாயகர் ஆலயத்தின் மகா கும்பாபிசேகப் பெருவிழா இன்று ஞாயிற்றுக்கிழமை காலை 8.17 தொடக்கம் 10.08 வரையுள்ள சுப முகூர்த்த வேளையில் நடைபெறும். (ஜ-11)

## பெருந்திருவிழா

சாவகச்சேரி,ஏப்.9
சாவகச்சேரி நுணாவில் மத்தி பைரவசுவாமி என அழைக்கப்படும் கந்தசுவாமி ஆலயத்தின் வருடாந்தப் பெருந் திருவிழாவின் தேர்த் திருவிழா இன்று ஞாயிற்றுக்கிழமை காலை 9 மணிக்கு இடம்பெறும். நாளை திங்கட்கிழமை முற்பகல் 10 மணிக்குத் தீர்த்தத் திருவிழா இடம்பெறும். (ஜ-9)

## அலங்கார உற்சவம்

யாழ்ப்பாணம்,ஏப்.9
வட்டுக்கோட்டை தெக்கணப்பாய் கண்ணகியம்மன் ஆலயத்தின் அலங்கார உற்சவம் கடந்த முதலாம் திகதி ஆரம்பமாகி இடம்பெற்று வருகிறது. இன்று ஞாயிற்றுக்கிழமை மாலை 4 மணிக்குத் தேர்த்திருவிழாவும், நாளை திங்கட்கிழமை மாலை 5 மணிக்குத் தீர்த்தத் திருவிழாவும் இடம்பெறும். (ஜ)

## கட்டடத் திறப்பு விழா

தென்மராட்சி ஏப். 9
புதிதாக நிர்மாணிக்கப்பட்ட சரசாலை வடக்கு சனசமூக நிலையத்தின் கட்டடத் திறப்பு விழா இன்று பிற்பகல் 2.30 மணிக்கு இடம்பெறும். நிலையத் தலைவர் பே.கந்தசாமி தலைமையில் நடைபெறும் நிகழ்வில் தலைமை விருந்தினராக யாழ்.மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் அங்கயன் இராமநாதனின் பிரத்தியேகச் செயலாளர் சதாசிவம் இராமநாதன் கலந்து கொள்வார். நிகழ்வில் சிறப்பு விருந்தினர்களாக தென்மராட்சி பிரதேச சனசமூக அபிவிருத்தி அலுவலர் திருமதி செ.ஜெகதீஸன், ஓய்வு நிலை பணிப்பாளர் மாகாண தேசிய இளைஞர் சேவைகள் மன்றம் திருமதி விமலேஸ்வரி ஸ்ரீகாந்தரூபன் ஆகியோரும் கலந்து கொள்வர். (ஜ-9)

## நினைவு நிகழ்வும் நூல் வெளியீடும்

யாழ்ப்பாணம்,ஏப்.9
நீர்வேலி கந்தசுவாமி ஆலயத்தின் பிரதம குரு சுவாமிநாத இராசேந்திரக் குருக்களின் 17 ஆண்டு நினைவு நிகழ்வும், கந்தபுராணம் "சூரபன்மன் வதைப் படலம்" ஞாபகார்த்த நூல் வெளியீடும் நாளை திங்கட்கிழமை பிற்பகல் 3 மணிக்கு ஆலய மண்டபத்தில் பரிபாலனசபைத் தலைவர் த.நடராசா தலைமையில் நடைபெறவுள்ளது. (ஜ-9)

## இசைமாலை

யாழ்ப்பாணம்,ஏப்.9
"சங்கீதபூஷணம்" சி.ஆறுமுகம்பிள்ளை ஞாபகார்த்த இசைமாலை நாளை திங்கட்கிழமை பிற்பகல் 2.30 மணிக்கு கொக்குவில் வளர்மதி முன்னேற்றக் கழக வேலாயுதம்பிள்ளை மண்டபத்தில் உளசமூகசீராளன் செ.யோசப்பாலா தலைமையில் நடைபெறவுள்ளது. இந்த நிகழ்வில் முதன்மை விருந்தினராக யாழ். மாவட்டச் செயலர் நா.வேதநாயகம் கலந்து கொள்வார். (ஜ)

## அலங்காரத்திருவிழா

அளவெட்டி,ஏப்.9
அளவெட்டி தெற்கு நரசிங்க வைரவர் ஆலயத்தின் வருடாந்த அலங்காரத் திருவிழா கடந்த முதலாம் திகதி சனிக்கிழமை ஆரம்பமாகி இடம்பெற்று வருகிறது.
கும்பாபிசேக தினமான எதிர்வரும் 12ஆம் திகதி புதன்கிழமை காலை 9 மணிக்குச் சிறப்பு பூசைகள் இடம்பெற்று சுவாமி உள்வீதி வலம் வரும். தொடர்ந்து மாலை 5 மணிக்குப் சிறப்பு வழிபாடுகளுடன். திருவூஞ்சல் இடம்பெற்று சுவாமி உள்வீதியுலா வலம் வந்ததைத் தொடர்ந்து , அலங்கார ஊர்த்தியில் மாலை 7 மணிக்கு எழுந்தருளி பிரதான வீதி. மலைவேம்படி. டச்சுவீதி ஊடாகச் சென்று சந்நிதானத்தைச் சென்றடையும். (ஜ-36)

## தரம் 5 மாணவர்களுக்கு முதலாவது பயிற்சிப்பரீட்சை

தென்மராட்சி, ஏப். 9
தென்மராட்சி கல்வி வலயப் பாடசாலைகளில் எதிர்வரும் ஓகஸ்ட் மாதம் நடைபெறவுள்ள ஐந்தாம் தரப் புலமைப் பரிசில் பரீட்சைக்குத் தோற்றவுள்ள மாணவர்களுக்கான முதலாவது பயிற்சிப் பரீட்சை எதிர்வரும் 17 ஆம் திகதி திங்கட்கிழமை முற்பகல் 9 மணிக்கு நடைபெறவுள்ளது. பொக்கிஷம் கல்விப் பிரிவின் அனுசரணையுடன் இலங்கை முதலுதவிச் சங்கத்தினால் இந்தப் பரீட்சை நடாத்தப்படவுள்ளது. பரீட்சை நடைபெறும் தினத்தன்று காலை 7.30 மணிக்கு வலய ஆரம்பக் கல்விப் பிரிவில் வினாத்தாள்களைப் பெற்றுக் கொள்ளுமாறு பாடசாலைகளின் அதிபர்களுக்கு வலயக் கல்விப் பணிப்பாளர் சு.கிருஷ்ணகுமார் அறிவித்துள்ளார். (ஜ-9)

## காணிப் பிரச்சினைகளைத் தீர்க்க வவுனியாவில் நடமாடும் சேவை

வவுனியா, ஏப்.9
வவுனியா நகர் மற்றும் வவுனியா தெற்கு பிரதேச செயலாளர் பிரிவு மக்களுக்கான காணிக் கச்சேரி நேற்றுப் பிரதேச செயலகங்களின் காணி ஆணையாளர் நாயகத்தின் தலைமையில் நடைபெற்றது.
வவுனியா மாவட்டத்தில் நீண்ட காலமாக வசிக்கும் பல ஆயிரம் குடும்பங்களுக்கு இதுவரை காணி அனுமதிப் பத்திரங்கள் வழங்கப்படவில்லை. அதனால் அவர்களுக்கு வீட்டுத் திட்டம் உள்ளிட்ட பல்வேறு உதவித் திட்டங்களைப் பெற்றுக் கொள்ள முடியாதுள்ளது. இந்த விடயம் மாவட்ட செயலரின் கவனத்துக்குக் கொண்டு செல்லப்பட்டதை அடுத்து நடமாடும் சேவை ஏற்பாடு செய்யப்பட்டது.
வவுனியா நகர பிரதேச செயலாளர் பிரிவுக்குட்பட்ட 3 ஆயிரத்து 200 பேரும், வவுனியா தெற்கைச் சேர்ந்த ஆயிரத்து 100 பேரும் நடமாடும் சேவையில் கலந்து கொண்டு பயன்பெற்றனர் என்று தெரிவிக்கப்பட்டது.
வவுனியா மாவட்டத்தின் சீ/218 கிராமசேவையாளர் பிரிவின் கீழ் உள்ள மரக்காரம் கிராமத்தில் ஆயிரத்து 200 குடும்பங்கள் வசிக்கும் பிரதேசத்தை வனவளத் திணைக்களத்தினர் உரிமைகோரி வந்தனர்.. இது தொடர்பாக ஆராய்ந்த காணி ஆணையாளர் நாயகம் அந்தப் பகுதியை விடுவித்துத் தர வேண்டும் என்று வனவளத் திணைக்கள ஆணையாளர் ஊடாக விண்ணப்பித்திருந்த போதும் பதில் கிடைக்கவில்லை. அது தொடர்பில் விரைவாக நடவடிக்கை எடுத்து அந்தப் பகுதியில் வசிக்கும் மக்களுக்கு அனுமதிப் பத்திரங்கள் வழங்கப்படும் என்று தெரிவிக்கப்பட்டது.
தாண்டிக்குளம் சீ/214 கிராம சேவகர் பிரிவின் கீழ் திருநாவற்குளம் பகுதியில் 700 குடும்பங்களுக்கு அனுமதிப்பத்திரம் வழங்கும் விடயத்தில், முதல்கட்டமாக கையேற்கும் நடவடிக்கையை மேற்கொள்ளப்படும் என்று உறுதியளிக்கப்பட்டது.
நடமாடும் சேவையில் மாவட்ட செயலாளர், காணி ஆணையாளர் நாயகம், மேலதிக மாவட்ட செயலாளர், பிரதேச செயலாளர் என சம்பந்தப்பட்ட அனைவரும் கலந்துகொண்டனர். (ற-101)

## கட்டடத் திறப்பு விழா

யாழ்ப்பாணம், ஏப்.9
வதிரி டைமன்ஸ் விளையாட்டு கழகம் நடத்தும் உதைபந்தாட்ட ஆசான் அமரர் இரத்தினசிங்கம் ஞாபகார்த்த விளையாட்டு பயிற்சி நிலையத் திறப்பு விழாவும் உதைபந்தாட்ட வீரர்கள் விருது வழங்கும் நிகழ்வும் இன்று ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 4 மணிக்கு வதிரி டைமன்ஸ் விளையாட்டுகழகமைதானத்தில் நடைபெறவுள்ளது.
வதிரி தமிழ் மன்றத் தலைவர் சி.பத்மராஜன் தலைமையில் நடைபெறும் நிகழ்வுக்கு முதன்மை விருந்தினராக சிறுவர், மகளிர் விவகார ராஜாங்க அமைச்சர் விஜயகலா மகேஸ்வரனும், சிறப்பு விருந்தினர்களாக வடமாகாண சபை உறுப்பினர் வே. சிவயோகனும், கரவெட்டி பிரதேச செயலர் ச.சிவஸ்ரீயும், கௌரவ விருந்தினராக ஹரி பொறியியலாளர் கட்டட ஒப்பந்த காரர் சேவை முகாமைத்துவ பணிப்பாளர் சோ.ஆதவனும் கலந்து கொள்ளவுள்ளனர்.(ற-422)

## நல்லிணக்கத்தை உருவாக்க விளையாட்டுப் போட்டிகள்

### பொலிஸாரும், மக்களும் இணைந்து ஏற்பாடு



யாழ்ப்பாணம், ஏப்.9
காங்கேசன்துறைப் பொலிஸாரும், பொது மக்களும் இணைந்து ஏற்பாடு செய்த புதுவருட விளையாட்டுப் போட்டி நேற்றுக் காலை ஆரம்பமானது. நல்லிணக்கத்தை ஏற்படுத்தும் வகையில் இது ஏற்பாடு செய்யப்பட்டது.
ஆரம்ப நிகழ்வில் யாழ்ப்பாண மாவட்டச் செயலர் நா.வேதநாயகன், வட மாகாண மூத்த பொலிஸ்மா அதிபர் சரத் புஸ்பகுமார, மூத்த பொலிஸ் அத்தியட்சகர் மாசிங்க [illegible] றைக்கு [illegible] பொலிஸ் அத்தியட்சகர்களான சாலிந்த பெரேரா ,பிரியந்த உள்ளிட்ட சிவில் சமூக அதிகா[illegible] கலந்து கொண்டனர்.
போட்டிகள் மு.ப. 9 மணி முதல் மாலை 4 மணி வரை நடைபெற்றன. 100 மீற்றர் ஓட்ட போட்டியை வட மாகாண சிரேஸ்ட பொலிஸ் மா அதிபர் ஆரம்பித்து வைத்தார்.(ற26)

## ரணிலுடன் யூ செங் ஷெங் சந்திப்பு

கொழும்பு, ஏப். 9
இலங்கைக்குப் பயணம் மேற்கொண்டுள்ள சீன மக்கள் அரசியல் ஆலோசனை சபைக்கான தேசிய குழுவின் தலைவர் யூ செங் ஷெங், தலைமை அமைச்சர் ரணில் விக்கிரமசிங்கவைச் சந்தித்துப் பேச்சு நடத்தினார்.
அலரி மாளிகையில் நேற்று முன்தினம் இந்தச் சந்திப்பு இடம்பெற்றது.
சீன அரசியல் உயர் மட்ட அரசியல் ஆலோசகரான யூ செங் ஷெங்குடன் வந்திருந்த உயர் அதிகாரிகள் குழுவும் இந்தப் பேச்சில் பங்கேற்றது.
தலைமை அமைச்சர் ரணில் விக்கிரமசிங்கவுடன், அமைச்சர்கள் ரவி கருணாநாயக்க, மலிக் சமரவிக்கிரம, சாகல ரத்நாயக்க, டி.எம்.சுவாமிநாதன், ஏரான் விக்கிரமரத்ன, அனோமா கமகே உள்ளிட்ட அமைச்சர்கள் மற்றும் அதிகாரிகளும் பேச்சில் கலந்து கொண்டனர். (ற-10)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தீர்வின்றித் தொடர்கின்றது கேப்பாபிலவு போராட்டம்

## தகரக் கொட்டகையிலா புத்தாண்டு என போராடும் மக்கள் வேதனையுடன் கேள்வி

முல்லைத்தீவு, ஏப்.9



கடற்படையினர் கையகப்படுத்தியுள்ள தமது பூர்வீகக்காணிகளை விடுவிக்கவேண்டும்என்று வற்புறுத்தி கேப்பாபிலவு மக்கள் நடத்தி வரும் தொடர் அறவழிப் போராட்டம் நேற்று 39 ஆவது நாளாகத் தொடர்ந்தது. "எங்கள் கோரிக்கைகள் தொடர்பாகஎந்தமுன்னேற்றமும்இல்லை. தகரக் கொட்டகையிலா எமக்கு புத்தாண்டு பிறக்கவுள்ளது?"என்றுவேதனையுடன்கேள்விஎழுப்பினர் போராட்டம் நடத்தி வரும் மக்கள்.

கேப்பாபிலவில் கடற்படையினர் கையகப்படுத்தியுள்ள 138 குடும்பங்களுக்குச் சொந்தமான 482 ஏக்கர் காணிகளை விடுவிக்க வேண்டும் என்று வலியுறுத்தி மக்களால்தொடர்அறவழிப்போராட்டம்நடத்தப்படுகின்றது. "விரைவில்காணிகள்விடுவிக்கப்படும்எனபொறுப்புவாய்ந்த அமைச்சர்கள் தெரிவித்த கருத்துக்களை நாம் ஊடகங்கள் வாயிலாகஅறிந்தோம். அதிகாரிகளோ, அமைச்சர்களோ உத்தியோகபூர்வமானதகவல்கள்எதனையும்தெரிவிக்கவில்லை. பெரும் உடல், உள நெருக்கடிக்கு மத்தியிலேயே நாம் போராட்டம்நடத்துகின்றோம். எம்மைப்பூர்வீகநிலங்களில் வாழ விடாது இந்த அரசு வஞ்சனை செய்கின்றது." என்று அந்த மக்கள் வேதனையுடன் கூறினார்கள். (ற-7)




## மாட்சிமிகு மன்னன் இயேசு மீட்சி தர பவனி வந்தார்

இன்றையகுருத்துஞாயிறுதிருப்பலியுடன்தவக்காலத்தின் உச்சக்கட்டமாகிய புனித வாரத்தினுள் நுளைகின்றோம். கலிலேயாவிலிருந்து பெத்தானியா வரையிலும்90மைல்கள்நடந்துவந்த இயேசுஅங்கிருந்துவெறும் இரண்டுமைல்கள் தூரமுள்ள இயேசுஜெருசலேமுக்கு வெற்றி ஆர்ப்பரிப்புடன் கழுதையில் பவனியாக அழைத்து வரப்படுகின்றார். போருக்குச்சென்ற அரசர்கள்தங்கள்நகருக்குள்வெற்றிவாகையுடன்நுளையும் போது இராணுவ அணிவகுப்போடு குதிரைகள் பூட்டப்பட்ட ரதங்களில் பவனியாக வருவது வழக்கம். இவ்வாறு இயேசு தம்மை தம்பட்டம் அடிப்பவராக வரவில்லை. மாறாக அமைதியை ஏற்படுத்துபவராக எளிமையான கழுதையிலே மக்களின் ஓசானா ஆர்ப்பரிப்பைத் தாழ்ச்சியோடு ஏற்றுக் கொண்டு ஜெருசலேமுக்குள் நுழைகிறார். ஓசானா என்றால் எங்களை மீட்டருளும் என்பது பொருள்.

இதன்பொருளைஉணர்ந்துஇயேசுவைஎம்வாழ்வில் வரவேற்று அவருடைய பாடுகள், இறப்பு மற்றும் உயிர்ப்பிலே பங்கேற்க எமக்கு இந்தநாள் அழைப்பு விடுகிறது. அத்தோடு ஆண்டவர் முன்னெடுத்த விடுதலைச்செயற்பாடுகளையும், இயேசுவிக்நற்கொடையையும் நன்றியோடு நினைவுகூர களம் அமைக்கின்றது.




ஓசானாகீதத்தை முழங்கியவர்களாக நாமும் எம்மில் இழையோடும் வாழ்வைச் சீரழிக்கும் எண்ணங்கள் அநீதிகள், அடிமைத்தனங்களில்இருந்துவிடுவிக்கவும், எம்மோடுபயணிக்கவும் இயேசுவை அழைப்போம்.

நாம் நடந்து வந்த வாழ்வுப் பயணத்தில் திரும்பவும் தடம்பதித்த தவறான தருணங்களை நினைத்துப் பார்த்து திருந்தி வாழ முற்படுவோம். இயேசுவை சுமந்து சென்ற கழுதையைப் போல் தாழ்மையுடன் இயேசுவைஎம்செயல்களில்தாங்கிஅவருக்குச்சான்று பகர்வோம். ஓசன்னாபாடிவரவேற்றுவிட்டுக்கட்சிமாறி இயேசுவின் மரண தண்டணைக்கு ஆதரவாகக் கூச்சலிட்ட கும்பலில் புரையோடிய இரட்டை மனநிலை எமக்குள்ளும் இருக்கிறதா? இயேசுவேஎமது அரசரும் மீட்பரும்என்பதைஏற்றுக்கொள்வதோடுஅவரது குருதியால் நாம் கழுவித் தூய்மையாக்கப்பட்டோம்" என்பதை ஏற்றுக் கொண்டு தூய உள்ளத்துடன் இயேசுவினதும்பிறரதும்சிலுவையைச்சுமக்கும்பங்காளிகளாகப் புனித வாரத்தை எதிர்கொள்வோம்.

எஸ்.யேசுதாஸ், கொழும்புத்துறை

## மயக்கத்தில்விழுந்தவரின் பணத்தைஒப்படைத்தநபர்

திருமலை, ஏப்.09

அதிக வெப்பத்தால் வீதியில் மயங்கிவிழுந்த நபரொருவரின் பயணப் பையிலிருந்த சுமார்3லட்சத்துஎழுபதாயிரம் ரூபா பணம் பத்திரமாக அவரது குடும்பத்தினரிடம் ஒப்படைக்கப்பட்டசம்பவம்ஹொறவப்பொத்தான்பகுதியில்இடம் பெற்றது.

திருகோணமலை உட்துறைமுக வீதியைச் சேர்ந்த முத்துத்தம்பி விக்னராசா (வயது49) என்பவர்வவுனியாவிலிருந்து திருகோணமலை நோக்கி மோட்டார்சைக்கிளில்வந்துள்ளார்.

இவர் ஹொறவப்பொத்தான ரத்மலை பகுதியில் பயணித்துக்கொண்டிருந்தபோதுஅதிக வெயில் காரணமாக மயக்கமுற்று வீதியில் வீடொன்றுக்கு முன்னால் மயங்கி விழுந்து படுகாயமடைந்தார்.

அதைஅவதானித்தவீட்டுக்காரர்கள் உடனடியாக அவரை வைத்தியசாலைக்குகொண்டு சென்றதுடன்அவரதுபயணப் பையில் இருந்த பணத்தையும், தங்கநகைகளையும் பத்திரமாக எடுத்து வைத்துள்ளனர்.

சம்பவத்தில் படுகாயமடைந்தவர் மஹதிவுல்வெவ பிரதேச வைத்தியசாலையில்சேர்க்கப்பட்டு, மேலதிக சிகிச்சைக்காக திருகோணமலை பொது வைத்தியசாலைக்குகொண்டு செல்லப்பட்டார்.

வைத்தியசாலையில்வைத்து அவரது உறவினர்களிடம் பணமும்நகையும்பத்திரமாக ஒப்படைக்கப்பட்டன.

ஹொறவப்பொத்தான ரத்மலைபகுதியைச்சேர்ந்தஎம். சாரிப் என்பவரே இவ்வாறு பணத்தை ஒப்படைத்துள்ளார். (ற-ய-45)

## பெருந்திருவிழா

யாழ்ப்பாணம், ஏப்.9

வண்ணைகலட்டிஸ்ரீகற்பகவிநாயகர்ஆலயத்தின்பெருந்திருவிழா கடந்த6ஆம்திகதி வியாழக்கிழமைகொடியேற்றத்துடன்ஆரம்பமாகியது. தொடர்ந்து பத்துத் தினங்கள் நடைபெறும் இந்தத் திருவிழாவில்எதிர்வரும்14ஆம்திகதிவெள்ளிக்கிழமைதேர்த்திருவிழாவும், மறுநாள் சனிக்கிழமை தீர்த்தோற்சவமும் இடம்பெறும். (ஐ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



திருகோணமலை பத்திரகாளி அம்பாள் ஆலய வருடாந்த பிரமோற்சவத்தின் இரதோற்சவம் நேற்று காலை 8 மணிக்கு ஆரம்பமானது. அம்பாளுக்கு விசேட பூசை இடம்பெற்று, பிள்ளையார், முருகனுடைய தேர்கள் முன்னே செல்ல அம்பாள் ரதமேறி பக்தர்களுக்கு அருள் கொடுத்தார். (ற-40)

## டெங்குக் கட்டுப்பாட்டு வாரத்தில் 41 பேர் மீது வழக்குத் தாக்கல்

### முல்லைத்தீவு மாவட்டத்தில்

முல்லைத்தீவு, ஏப்.9

முல்லைத்தீவு மாவட்டத்தில் முன்னெடுக்கப்பட்ட டெங்குக் கட்டுப்பாட்டு வாரத்தில் 8 ஆயிரத்து 147 தரிசிப்புக்கள் நடைபெற்றன. 41 பேருக்கு எதிராக வழக்குகள் பதிவு செய்யப்பட்டன. இவ்வாறு மாவட்ட சுகாதார வைத்திய அதிகாரி பூங்கோதை தெரிவித்தார்.

அவர் தெரிவித்ததாவது

முல்லைத்தீவு மாவட்டத்தில் உள்ள 6 பிராந்திய வைத்திய அதிகாரிகள் பிரிவிலும் டெங்குக் கட்டுப்பாட்டுச் செயற்றிட்டங்கள் முன்னெடுக்கப்பட்டன. தரிசிப்புகளின்போது நுளம்பு பெருகும் ஏது நிலையுடன் கூடிய 2 ஆயிரத்து 912 இடங்கள் இனங்காணப்பட்டன. அவற்றில் 90 இடங்கள் அதிகளவு நுளம்பு உற்பத்தியாகக் கூடிய இடங்களாக இருந்தன. 2 ஆயிரத்து 300 இடங்கள் உடனடியாகச் சீர் செய்யப்பட்டன.

நுளம்பு பெருகும் சூழலைக் கொண்டிருந்த 91 பேருக்கு எச்சரிக்கை அறிவித்தல் வழங்கப்பட்டது. 41 பேருக்கு எதிராக வழக்குப் பதிவு செய்யப்பட்டது- என்றார். (ற-101)

## கட்டாக்காலி கால்நடைகளை கட்டுப்படுத்த அறிவுறுத்தல்

யாழ்ப்பாணம், ஏப்.9

பொது இடங்கள், பொது வழிகளில் கட்டாக்காலியாகத் திரியும் கால்நடைகளைக் கட்டுப்படுத்த வடக்கு மாகாணத்தின் அனைத்து உள்ளூராட்சி சபைகளும் உடன் நடவடிக்கை எடுக்கவேண்டும். இவ்வாறு வடமாகாண உள்ளூராட்சி அமைச்சு சகல உள்ளூராட்சி சபைகளுக்கும் கடிதம் மூலம் அறிவித்தது.

வடக்கின் பல்வேறு இடங்களிலும் கட்டாக்காலியாகத்திரியும் கால்நடைகள் பொது இடங்கள் மற்றும் பொது வழிகளில் பல்வேறு இடர்களை மேற்கொண்டு வருகிறதாக வடமாகண சபை உறுப்பினர்களால் முறைப்பாடு முன் வைக்கப்பட்டது. அதையடுத்து வடக்கில் உள்ள 34 உள்ளூராட்சி சபைகளுக்கும் கட்டாக்காலி மாடுகளை மாநகர, நகர, பிரதேச சபை சட்ட ஏற்பாடுகளின் கீழ் கட்டுப்படுத்துமாறு கோரிக்கை விடப்பட்டது. (ற-50)

# அசமந்தப் போக்கே பிரச்சினை தொடர முக்கிய காரணம்

### நீராவிப்பிட்டியில் போராட்டம் நடத்தும் மக்கள் குற்றச்சாட்டு



முல்லைத்தீவு, ஏப். 9

முஸ்லிம் மக்களை பிரதிநிதித்துவம் செய்யும் நாடாளுமன்ற உறுப்பினர்கள் 21 பேருக்கு மேல் உள்ளனர். பலர் பொறுப்பு வாய்ந்த அமைச்சர்களாகவும் உள்ளனர். எனினும் முல்லைத்தீவு மாவட்ட முஸ்லிம் மக்கள் காணி பிரச்சனை தொடர்காதையாகவே உள்ளது. அதை நினைக்கும் போது வேதனையாகவும், விரக்தியாகவும் உள்ளது.

இவ்வாறு முள்ளியவளை நிராவிப்பிட்டியில் தொடர் அமைதிவழிப் போராட்டத்தை முன்னெடுத்துள்ள தமிழ் பேசும் முஸ்லிம் மக்கள் தெரிவித்தனர்.

முல்லைத்தீவு மாவட்டத்தில் மீள் குடியேறிய தமிழ் பேசும் முஸ்லிம் மக்கள் நீண்டகாலமாக காணிகள் தொடர்பாகப் பிரச்சினைகளை எதிர்கொண்டுள்ளனர். அவற்றைத் தீர்த்து வைக்கக் கோரிப் பல தரப்பினரையும் தொடர்பு கொண்டபோதும் பயன் ஏதும் இல்லை என்று அவர்கள் தெரிவித்தனர். தமது பிரச்சினைக்குத் தீர்வு வழங்கக் கோரிக் கடந்த 31ஆம் திகதி முதல் தொடர் போராட்டத்தில் ஈடுபட்டு வருகின்றனர்.

"முல்லைத்தீவில் வாழ்ந்து வரும் நாங்கள் முன்னால் நாடாளுமன்ற உறுப்பினர்களான சுந்தரலிங்கம், சிவசிதம்பரம் இருவரும் தான் முல்லைதீவில் முஸ்லிம் மக்களுக்கு காணிகளை அவர்கள் காலத்தில் வழங்கினார்கள். நாங்கள் இன்றும் அவர்களுக்கு நன்றியுடையவாகளாக உள்ளோம். இலகுவாக தீர்த்து வைக்க வேண்டிய பிரச்சினை அதிகாரிகளின் அசமந்தமே இத்தனைக்கும் காரணம். அரசில் அங்கம் வகிக்கும் எங்கள் தலைவர்கள் இந்த பிரச்சனைக்கு முன்வந்து விரைவாக தீர்க்க வேண்டும்." என்று போரா்ட்டத்தில் ஈடுபடும் மக்கள் தெரிவித்தனர். (ற-7)



## கடற்கரையோரக் கழிவுகளை அகற்றுவதில் பங்களிப்பில்லை

### பொதுமக்கள் ஒத்துழைக்க வேண்டும் என மாவட்ட மேலதிக செயலர் கோரிக்கை

யாழ்ப்பாணம், ஏப்.9

யாழ்ப்பாண மாவட்டத்தின் கடற் கரையோரங்களில் உள்ள கழிவுகளை அகற்றுவதில் கடற் கரையோர மக்கள் பங்களிப்பதில்லை என்று தெரிவித்தார் யாழ். மாவட்ட மேலதி செயலாளர்.

அவர் தெரிவித்ததாவது

யாழ்ப்பாணத்தின் கடற்கரையோரங்களான குருநகர், பாசையூர் போன்ற கடற்கரைப் பிரதேசங்களில் தேங்கிக் கிடக்கும் பிளாஸ்டிக், பொலித்தீன் குப்பைகளை அகற்றுவதற்கு அங்குள்ள மக்கள் முன்வருவதில்லை. யாழ்ப்பாண பிரதேச செயலகம் ஊடாக குப்பைகளை அகற்றுவதற்கு ஒத்துழைக்க வேண்டும் என்று அண்மையில் மக்களை அழைத்திருந்தோம். அது தொடர்பான கூட்டத்துக்கும் எவரும் வரவில்லை.

அந்தப் பகுதியில் தேங்கிக் கிடக்கும் குப்பைகளால் ஆபத்தான நோய்கள் ஏற்படும் அபாயம் உள்ளது. கடற்கரைகளில் ஏராளமான குப்பைகள் தேங்கிக் கிடப்பதால் மீன்கள் மூலமும் நோய் ஏற்படும் சாத்தியம் காணப்படுகின்றது. பாதிப்புகளை உணர்ந்து மக்கள் கடற்கரையோரங்களைச் சுத்தப்படுத்த முன்வர வேண்டும்- என்றார். (ற-8)

## திகுவி பன்னாட்டு கல்வி நிறுவனம் யாழ்ப்பாணத்தில் ஆரம்பமானது

யாழ்ப்பாணம், ஏப்.9

'திகுவி' பன்னாட்டு கல்வி நிறுவனம் யாழ்ப்பாணத்தில் ஆரம்பிக்கப்பட்டது. யாழ்.நகரில் அமைந்துள்ள ஜெற்விங் விருந்தினர் விடுதியில் நேற்று முன்தினம் வெள்ளிக்கிழமை ஆரம்ப நிகழ்வு நடைபெற்றது.

நிகழ்வில் தலைமை விருந்தினராக புளொட் அமைப்பின் தலைவரும், தமிழ் தேசிய கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினருமான தர்மலிங்கம் சித்தார்த்தன் கலந்து கொண்டார். சிறப்பு விருந்தினர்களாக வடக்கு மாகாண ஆளுநரின் செயலாளர் இ.இளங்கோவன் மற்றும் வடமாகாண சபை உறுப்பினர் பாலசிங்கம் கஜதீபன் ஆகியோர் கலந்துகொண்டனர்.

கனடா நாட்டின் உயர்கல்வியை இலங்கையில் வடமாகாணத்தில் உட்புகுத்தும் நோக்கிலும், வடமாகாணத்தில் உள்ள இளைஞர் யுவதிகள் மற்றும் உயர்கல்வியை நிறைவு செய்த மாணவர்கள் புலமைப் பரிசிலின் ஊடாக கனடா நாட்டில் உயர்கல்வியை தொடர்வதற்கான வாய்ப்பாகவும் இந்தக் கல்வி நிறுவனம் ஆரம்பிக்கப்பட்டுள்ளது என்று தெரிவிக்கப்பட்டது. (ற-106)




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org






வண்ணார்பண்ணை வைத்தீஸ்வரன் ஆலயத்தின் வருடாந்தப் பெருந்திருவிழாவின் தேர்த் திருவிழா பெருந்தொகையான பக்தர்களின் ஆரோகரா கோஷத்துடன் நேற்று இடம்பெற்றது. ஆலயத்தின் பெருந்திருவிழா கடந்த மாதம் கடந்த 22 ஆம் திகதி ஆரம்பமானது. இன்று ஞாயிற்றுக்கிழமை தீர்த்தத்திருவிழா இடம் பெறும். (ஐ – 8)







Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பறாளை

# ஸ்ரீ சிவசுப்பிரமணிய சுவாமி தேவஸ்தானம்

## கும்பாபிஷேகச் சிறப்பிதழ் - 09.04.2017






### பறளாய் ஸ்ரீசிவசுப்பிரமணிய சுவாமி தேவஸ்தான "குரு முதல்வர்" பிரம்மஸ்ரீ. மு. பாலகுருசாமி சர்மா வழங்கும் ஆசிச் செய்தி

ஈழ நாட்டின் வடபால் அமைந்துள்ளயாழ்ப்பாணத்தின் மேற்கே உள்ள எழில் கொஞ்சும் வயலும் வயல்சார்ந்தசுழிபுரம் பகுதியிலேஅண்ணல் விநாயகர் துணைநிற்க "வேண்டுவோர் வேண்டுவதைவழங்கும் வள்ளல் "பிரானாகிய ஸ்ரீமுரகப் பெருமான், வள்ளி, தெய்வானை சமிதமாக அடியார்களுக்கு அருள் வழங்கிகாத்தருள் புரியும் புராதனச் சிறப்பு மிக்க பறாளாம் பதியிலே உள்ள ஸ்ரீசிவசுப்பிரமணிய சுவாமி தேவஸ்தானத்தில் "மகாகும்பாபி ஷேகம்" துர்முகி வருஷம் பங்குனித் திங்கள் 27ஆம் நாள் 09-04-2017 ஞாயிற்றுக்கிழமை நடைபெறுவதனை முன்னிட்டு ஆலயத்தின் திருப்பணிவேலைகள் கடந்தவருடம் ஆகஸ்ட் மாதம் ஆரம்பிக்கப்பட்டு தற்போது பூர்த்தியடைந்து மகா கும்பாபிஷேகம் இடம்பெற உள்ளது. மூர்த்தி,தலம் போன்றசிறப்புக்களுடன் சமுத்திர தீர்த்த சிறப்பைக் கொண்டுள்ள இத் தலம் தெற்குவாசல் சந்நிதியில் அழகியதிருவாளங்கினையும் பன்னிரு திருக் கரங்களையும் புன்முறுவல் தவழும் உதடுகளையும் கொண்டுஅருள் மழை பொழியும் ஸ்ரீ ஷண்முகப் பெருமான் புகழ் சிறப்புமிக்கது. கந்தசஷ்டி காலத்தில் கந்த புராணப்படிப்பு புராதனகாலந் தொட்டு இடம்பெற்று வருகின்றது. பலஅடியார்கள் ஆசாரசீலராக வந்து விரதமிருந்து முருகன் அருளைப் பெற்றுசிறப்புடன் வாழ்வது கண்கூடு. இத்தகைய சிறப்பினைக் கொண்ட இவ்வாலய மகா கும்பாபிஷேகம் இன்று 09-04-2017 பங்குனி உத்தரதிரு நாளன்று இடம்பெறுவதுசிறப்புமிக்கதாகும். கந்தபுராண கலாசார சிறப்புமிக்க இவ் ஆலயத்தின் கும்பாபிஷேக நாளன்று அனைத்து முருகன் அடியார்களும் வந்து வணங்கி எம்பெருமான் திருவருள் பெற்றுஉய்யும் வண்ணம் வாழ்த்திவணங்கு கின்றேன்.

**குருபூஜை ப்ரகீர்த்தி**
**பிரம்மஸ்ரீ -மு.பாலகுருசாமிசர்மா**



### தலைவர் ஆசியுரை

இந்துசமுத்திரத்தின் முத்தென இயற்கை அன்னையின் எழிலே உருவான இலங்காபுரியின் வடபுலத்தேயாழ் வலிமேற்குப் பகுதியில் அருள்மிகுகிராமமாம் சுழிபுரம். பல புண்ணிய தலங்களான பறாளாம்பதி, வழுக்கம்பரை, பொன்னாலை, திருவடி நிலை எனப் பலதலங் களையும் தன்னகத்தே கொண்ட ஓர் பெரும் கிராமமாகும்.

ஞானவடிவாம் விநாயகனும், அறிவேயுருவாம் வேலவனும் மருதநிலத்தை இயல்பாகக் கொண்டிருக்கும் பறாளயம்பதிஎனும் புண்ணிய ஸ்தலத்தில் இயல்பேஉருவாகக் கொண்டெழுந்தருள் பாலிக்கின்றனர்.

இங்கு அறிவேயுருவான வேலவனாம் ஸ்ரீ சிவசுப்பிரமணியசுவாமி வள்ளி தெய்வானை சமேதராய் எழுந்தருளி பக்தகோடிகளைக் காத்தருளுகின்றார்.

இவர் எழுந்தருளியுள்ள கோயிலானது மிகைப் பழைமையும், மிகப் புதுமை வாய்ந்ததுமாகும். இதன் காலமானது போர்த்துக்கேயர் வருகைக்குப் பல வருடங்கள் முற்பட்டகாலமாகும். போர்த்துக்கேயர் ஆட்சியின் போது எமது பறளாய் விநாயகர், முருகன் கோயில்களை இடித்தழிக்கமுயன்றபோது விநாயகர்காகஉருவில் போரவீரர்களின் கண்களை குத்தி கலைத்து கோயில்களைக் காப்பாற்றியமை ஓர் புதுமையான வரலாறாகும்.

சோழவள நாட்டிலிருந்து ஈழவள மண் வந்து சோழியபுரம் எனப் பெயர் வரக் காரணமாக அமைந்திட்ட உறுளிகாவல முதலியார் வழித்தோன்றல் மகனாம் சேதுகாவலமுதலியாரும் இவரதுமைத்துனர் முத்தம்பல வாண முதலியாரும் இணைந்து 1768 இல் இப் பழம் பதியினைஉருவாக்கினர்.

இவ்வாலயமானது அரச, சமூகக் கட்டுக்கோப்புக்குள் உள்வாங்கப்பெறும் நோக்கில் 1984ம் ஆண்டு ஆனி மாதம் 23ம் திகதி சனிக்கிழமையன்று யாழ்மாவட்ட நீதிமன்றப் பதிவாளரால் ஊர்மக்கள் அனைவரும் அழைக்கப்பட்டு மேற்படி ஆலயத்தினை ஓர் தர்மகர்த்தா சபை நடவடிக்கைக்குட்படும் படியான அமைப்பினை ஏற்படுத்தியிருந்தார். அன்றிலிருந்து இவ்வாலயம் இன்றுவரை தர்மகத்தா சபை நிர்வாகத்தினைக் கொண்டு இயங்குகிறது.

மேற்கண்ட வரலாற்றுப்பெருமைகள் கொண்ட இத் திருத்தலம் பக்தகோடிகள் ஆற்றும் பணியால் மென்மேலும் சிறப்புற்றுப் பறாளையம்பதி சிவசுப்பிரமணியசுவாமி திருவருள் பெற்றுதிக்கெட்டும் பணிவோம் என இச்சந்தர்ப்பத்தில் தெளிவு படுத்துவதோடு ஒவ்வொரு பன்னிரண்டு ஆண்டுக்கொரு முறைகும்பாபிஷேகம் நடைபெறவும் பக்தர்கள் அன்பர்கள் எல்லோருக்கும் எமது ஆசிகள் கிடைத்து உய்தெழ எல்லாம் வல்ல வேலவனை வேண்டுகிறேன்.

**வே.இரட்ணசபாபதி**
**தலைவர் -தர்மகர்த்தா சபை**



### கோயில் கட்டுமானப் பொறுப்பாளர்

எனதுபிறப்பின் பயன் அவமாகிவிடக்கூடாதுஎன்பதுஎனதுஅஞ்சுதல். எனவேமுதல் வணக்கத்துக் குரியவனாம் ஐந்துதலை விநாயகனிடம் முறையிட்டேன். அவன் அதற்குப் பயனுக்காகசுகத்தை ஆறு தலைகொண்ட முரகப் பெருமானூடாக எனக்களித்தான். அதுவே எனது பிற்கால வாழ்வில் உன்பணி செய்து கிடப்பதேயாகும். தற்போது எனது அப்பன் பறாளை முருகனின் கும்பாபிஷேகத்துக்கானஆலயத்திருப்பணிகளில் முழுமையாக அனுப விக்கிறேன். அதுமட்டுமல்லாதுஎம் பெருமான் முருகன் எனது வழித்தோன்றலில் முன்னோரான மநுநீதி வல்லபமுதலியாரின் பணியினைத் தொடரும் முகமாகமன முவந்து அருள்பாலித்துள்ளான்.

1820ம் ஆண்டிலிருந்துதொடர்புற்றமநுநீதிவல்லபமுதலியார் 1827ம் ஆண்டில் முரகப் பெருமானின் கர்ப்பக்கிரகத்தினைவைரக்கல்லால் கட்டியெழுப்பினார். இதன்போதுஅவர் தனது உடல், பொருள், ஆவி என்பவற்றை அர்ப்பணித்தார்.

அவர் வழித்தோன்றலில் உதித்த எனது தந்தையார் அப்புத்துரை விதானையார் 1970 களில் இருந்து 1990கள் வரை தனது உடல், ஆவி என்பவற்றை சண்முகனுக்கு அர்ப்பணம் செய்திருந்தார். அப்போதெல்லாம் ஓமானில் சேவையாற்றியயான் தற்போது அவர் வழிகாட்டலில் 2004ம் ஆண்டு கும்பாபி ஷேகத் திருப்பணிகளிலும் 2016/2017ம் ஆண்டுகளில் கும்பாபிஷேகத்தின் போது எமது அன்பர்கள் அடியார்களது பொருளுதவியுடனும் கோயில் தர்மகத்தாசபையின் விருப்பத்தின் நிமித்தமும் முழு அளவில் ஆலயக் கட்டுமானத் திருப்பணிகளில் எனது பணியினை முருகப் பெருமானுக்கு அர்ப்பணித்துள்ளேன். இவ் அர்ப்பணிப்பானது எனக்கு ஆன்ம திருப்தியளித்துள்து

பல சிரமங்களின் மத்தியிலும் இத் திருப்பணிகளுக்காக வெளிநாடுகள் சென்று நிதிவளம் பெருக்கிய முருகபக்தன் டாக்டர் க.சிவராசா அவர்களையும், செயற்பாடுகளுக்கு பக்கபலமாக இருந்த செயலாளர் திரு.சி.பூபாலசிங்கம், பொருளாளர் திரு.க. கந்தசாமி, மற்றும் தர்மகர்த்தா சபை உறுப்பினர்களை யும் முகநூல் பிரயோகத்தினூடாகபல இலட்சம் ரூபாக்களை உள்வாங்கக் காரணமாக விளங்கிய திரு. கனக வைத்திலிங்கம் அவர்களையும் இத்தருணத்தில் வாழ்த்துவது மிகையாகாது. முக்கியமாக இக்காலகட்டத்தில் "முகநூல்" இனை ஆக்குபூர்வமானவிடயங்களுக்கும் பயன்படுத்தமுடியும் என்பதைத் தத்ரூபமாக வெளிப் படுத்தியமையையிட்டுப் பெருமைகொள்கின்றேன். மேலும் கட்டுமானப்பணியின் போது ஆகமப் புலமை நுட்பங்களையும் உடனுக்குடன் தந்துதவிய இக்கோயில் அர்ச்சகர் பிரம்மஸ்ரீ.பா.ஜெகநாதசர்மா அவர்களை யும் தொண்டர் சபையினரையும் பாராட்டுவதில் மகிழ்வடைகிறேன்.

**கோயில் கட்டுமானப் பொறுப்பினன்**
**அ.நித்தியானந்தமநுநீதி**



### ப்ரதிஷ்டா பிரதம குருவின் ஆசிச்செய்தி

பிரபஞ்சம் எங்கும் பிரகாசமாய்,ஆனந்த மூர்த்தியாய் அருளொடு நிறைந்து விளங்கும் பரம்பொருள் ஆன்மாக்களின் உணர்வுகளுக்கு புலப்படும் நிலையில் மண், நீர், நெருப்பு, காற்று, ஆகாயம், சூரியன், சந்திரன், ஆத்மா என எட்டு வடிவங்களாகத் தன்னை உணர்த்துகிறார்.

எண்குணவடிவம் தாங்கிய இறைவியைஞானிகள் திருவுள்ளத்திலும், திருக் கோவில் திருவுருவங்களிலும் காணும் வழிமுறையை வேத சிவாகம தொன்னூல்கள் நெறிப்படுத்தி உள்ளன. பரந்துவிரிந்து இருக்கும் இறைவனை சிவாச்சார்யார்கள் தமது தீக்ஷாசமார்த்தியத் தாலும், மந்திரசக்தியினாலும். மந்த்ரமயமான யாகசாலையில் நிலைநிறுத்தி ஆவாஹன அர்ச்சனை ஆகுதியால் ஆராதித்து, இறைதிருவுருவத்தில் மந்த்ரதீர்த்தத்தால் அபிஷேகிப்பதுபிரதிஷ்ட கும்பாபிஷேகம் எனப்பெயர் பெறும். பேரருள் நிறைந்ததும் வரலாற்றுத் தொன்மையும், சிறப்பும் பொலிந்துவிளங்கும் பறாளாய் பகுதியில் கோவில் கொண்டுகொலுவிருக்கும் கந்தவேள் பெருமானுக்கு பங்குனி உத்தரத் திருநாளில் திருக்குடத் திருமஞ்சனம் நிகழ்வது அவனருளாகும். இந்திரலோகமோ எனவியக்கும் வகையில் எழில்மிகு சிற்பங்களும்,மனதைக்கவரும் கோபுரவிமானங்களும், ஆறபடைத் தத்துவங்களும் அழகொளிர் வஸந்த மண்டபமும் வர்ணவேலைகளுடன் காட்சியளிப்பது ஸ்தலச் சிறப்பாகும்.

மேலும் திருக்கோவில் குகதத்தர்கள் குடும்பத்தார் பாரம்பரியமிகு வழிபாட்டு முறைகளை நெறிவழுவாது ஆற்றி வருவதோடு முதன்மை குருவாக விளங்கும் வணக்கத்துக்குரிய ப்ரம்மஸ்ரீ பாலகுருசாமிசர்மா அவர்கள் குரு முதல்வராகவும், கும்பாபிஷேக போதனாச்சாரியாராகவும், விளங்குவது மகிழ்ச்சியையும் பெருமையையும் தருவதாகும். அது போல உயர் திருப்பணிகளையும்,பெருஞ் சாந்தியை யும் நிகழ்த்துவிக்கும் சர்மகர்த்தா சபை திருப்பணிவேந்தர்கள் பூரண அர்ப்பணிப்போடு திருப்பணிகளை நிகழ்த்துவதும் போற்றுதலுக்கும் பெருமைக்குரியதும் ஆகும். மேலும் தொண்டர் சபையாரின் பணிகளும் பாராட்டுக்குரியது. அர்ப்பணிப்போடு நிதிசேகரித்தவர்கள், பெருநி தியை வாரிவழங்கிய குஹ பக்தர்கள் அனைவரும் சீரொடுபொலிவாய் சந்ததிதழைத்தோங்க கும்பாபிஷேகத் திருநாளில் ஆசிகளைக் கூறிமகிழ்கிறோம். பெருஞ்சாந்திப்பேறுகிடைப்பதாகும்.

**"ஸர்வ ஸாதகப்ரயோகரத்னா"**
**சிவஸ்ரீ.ந. பிரசாந்தக்குருக்கள். வட்டுக்கோட்டை**



### கலியுக வரதன் கண்கண்ட தெய்வமாய் காட்சி அளிப்பது பறாளையிலே

இந்து மஹா சமுத்திரத்தின் மத்தியில் மணிமுத்தாகத் திகழ்வதும், ஸ்ரீவிராட்புருஷனது சரீரமாகிய பிரமாண்டத்தின் இடைநாடி ஸ்தானம் என சாந்தோக்கிய உபநிடத்தத்தில் கூறப்பட்டதும் ஸ்ரீமத்க்ஷின கைலாசம் எனும் மாண்மியப் பெருமைக்குரியதும் ஆகிய ஸ்ரீ இலங்காபுரியில் யாழ்ப்பாணத்தின் வடமேற்குப் புறமாக விளங்குவது சுழிபுரம். இதன் கண்களாக விளங்குவது ஆனைமுகன் ஆறுமுகன் ஆலயங்களும் புனித தீர்த்த ஸ்தலமாக விளங்கும் திருவடி நிலையும் சிறப்பாக அமைந்துள்ளது.

நாலுபக்கங்களும் வயலும் வயல் சார்ந்த இடமும் மருத நிலம் எனப் போற்றப்படும் இடம் பறாளயம் பதி. இங்கே ஆறுமுக ஆலயம் இற்றைக்கு பல நூற்றாண்டுகளுக்கு முன்னர் இப் பறாலாயம் பதியில் கடப்ப மரத்தின் கீழ் வேல் வைத்து கந்தப் புராணப் படிப்புடன் ஆரம்பமானது என்று சரித்திரங்கள் கூறுகின்றன. நாளடைவில் இவ் ஆலயம் சிறிது சிறிதாக சுண்ணாம்புக் கற்களாலும் முருகக் கற்களாலும் கட்டப்பெற்று பின்பு வைரக் கற்கலால் சகல மண்டபங்களும் அமைக்கப் பெற்றன. இவ் ஆலயத்தின் மூன்று வீதிகள் அமையப் பெற்றுள்ளன. இவ் ஆயைத்தின் நான்கு புறமும் கோவில்கள் சிறப்பாக அமையப் பெற்றது. இவ் ஆலயத்தில் மூர்த்தி தலம் தீர்த்தம் சிறப்பாக அமையப்பெற்றது. மூர்த்தியாக கந்தவேல் பெருமானும் தலமாகக் கடப்ப மரமும் தீர்த்தமாக அழகிய தாமரைத் தடாகமும் அமைந்துள்ளது. இவ் ஆலயத்தில் நித்திய நைமித்திய பூசைகள், கும்பாபிஷேகம், மஹோற்சவங்கள் பெரு விழாக்கள் சிறப்பாக அந்தண சிவாச்சாரியார்களால் நடத்தி வரப்படுகிறது. இவ் ஆலயத்தை இந்தியாவிலிருந்து சோழியூர் புறத்தில் இருந்து வந்த அந்தணப் பெருமக்களால் பூசைகள் நடத்தப்படுகின்றது. குறிப்பாக வருடாந்த மஹோற்சவம் வைகாசி விசாகத்தைத் தேர்த்திருவிழாவாகக் கொண்டு நடைபெற்று வருகிறது. பங்குனியில் லட்சர்ச்சனை விழாவும், கந்த சஷ்டி விழாவும் ஏனைய பெருவிழாக்களும் சிறப்பாக நடைபெறுகின்றன. இவ் ஆலய மஹோற்சவ காலங்களில் பன்னிரண்டு தினங்களும் ஆலயத்தில் அங்கப் பிரதிஷ்டை செய்யும் அடியார்களும் அடியளிக்கும் அடியார்களும் கண்கொள்ளாகக் காட்சியாக அமைந்துள்ளது. இவ் ஆலயத்தின் தேர் மிகவும் பழைமை வாய்ந்ததும் அழகிய சிற்ப வேலைப்பாடுகளுடன் அமைந்துள்ளது.

ஆலயத்தின் கிழக்குப் பகுதியில் சிறப்பான பூந்தோட்டம் அமைந்துள்ளது. இவ் ஆலயத்தில் அடியார்களுக்கு அன்னதானம் வழங்குவதற்காக இரு பெரிய அன்னதான மண்டபங்கள் அமைக்கப்பட்டுள்ளன. எம் பெருமான் வருடத்தில் மூன்று தடவைகள் அடியார்களுக்குத் தீர்த்தம் அளிப்பதற்காக திருவடி நிலை தீர்த்தத் ஸ்தலத்திற்கு எழுந்தருளி அருள் பாலித்து வருவார். இங்கு முருகனின் வாகனம் ஆகிய மயில் கூவியும் ஆடியும் பக்தர்களை ஆனந்த வெள்ளத்தில் மூழ்க வைப்பது சிறப்புக் காட்சியாகும். இப்படி பல சிறப்புகள் அமைந்த கந்தவேல் பெருமானுடைய ஆலயத்தின் மஹா கும்பாபிஷேக சாந்திப் பெருவிழாவைக் கண்டு களித்து அவன் அருள் பெற்று சீரும் சிறப்புடன் வாழ வேண்டும் என வாழ்த்தி நிற்கின்றோம்.

அருள் எல்லாம் முருகனே, அழகெல்லாம் முருகனே, கலியுகவரதன் கண் கண்ட தெய்வமாய் காட்சி அளிப்பது பறாளாயிலே.

**டாக்டர்.க.சிவராஜா**
**(முருக அடியான் வாகை)**

### எம் கடன் உன் பணி செய்வதே

சுழிபுரம் பறாளையம் பதியில் எழுந்தருளி அருள்பாலித்துக் கொண்டிருக்கும் ஆலயங்களில் ஒன்றான ஸ்ரீ சிவசுப்பிரமணிய சுவாமி கோவில் மகா கும்பாபிஷேகம் சிறப்புற இடம்பெற அவனருளையே வேண்டி நிற்கும் **விநாயகர் முருகன் ஆலயங்களின் தொண்டர் சபையினர்.**
**பறாளையம்பதி - சுழிபுரம்.**

### மேற்கொள்ளப்பட்ட திருப்பணி வேலைகள்

மூலஸ்தானத்திருத்தம்,உள்வீதிரெறாசோ இடல்,வசந்தமண்டபம் முழுமையாகபுதுப்பித்தமை, கூரைவேலைகள் திருத்தியமைத்தல்,மடப்பள்ளிமறுசீரமைத்தல் போன்றனமீள்சீர்திருத்தம் தீர்த்தக்கேணிமுன் சுற்றுவட்டாரபுனரமைத்தலின் போதுதண்டாயுதபாணி (10 அடிஉயரம்) அருணகிரிநாதர்,ஔவையார் சிலைகளும் அவற்றுக்கானசுற்றுப்பிரகாரமும்,சந்தானகோபாலர் கருங்கல் விக்கிரகமும் புதிதாகஅமைக்கப்பெற்றுள்ளதுடன் கோபுரமும் ஆலயமும் முழுமையாக வர்ணம் பூசி அழகுப்படுத்தப்பட்டன.

| | | | |
|---|---|---|---|
| **V.R.V TRADE CENTER**<br>கட்டட பொருள் வியாபாரம்<br>பிரதான வீதி, சுழிபுரம் மத்தி, சுழிபுரம். | **குமார் ஸ்ரோர்ஸ்**<br>பல்பொருள் வானிபம்<br>சுழிபுரம் மத்தி, சுழிபுரம். | **ஏரம்பு பல்பொருள் வாணிபம்**<br>பறாளாய் வீதி, சுழிபுரம் மத்தி,<br>சுழிபுரம். | **சபா தச்சுத்தொழிலகம்**<br>சுழிபுரம் மேற்கு, சுழிபுரம்.<br>உரிமையாளர். N.சபாரத்தினம் |
| **தம்பு கடை**<br>பல்பொருள் வானிபம்<br>பிரதான வீதி, சுழிபுரம். | **அரிகரன் வர்ண வேலைத்தொழிலகம்**<br>ஐயனார் கோயிலடி, சுழிபுரம் மேற்கு, சுழிபுரம்<br>உரிமையாளர். அ.சிறீதரன் | **பாபு ஸ்ரோர்ஸ்**<br>பல்பொருள் வானிபம்<br>சுழிபுரம் மேற்கு, சுழிபுரம். | **P.C Point**<br>Computer seles & Repaird<br>No. 132, Main Street, Chankanai. |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### தேவை

யாழ்.நகரில் ஸ்ரூடியோ ஒன்றுக்கு வேலையாள்கள் தேவை.
1) Photoshop Album Designer
2) Video Editor
03) சிற்றூழியர்
அனுபவமுள்ளவர்கள் இருபாலாரும் நேரில் வரவும்.
309, நாவலர் வீதி, ஆனைப்பந்தி, யாழ்ப்பாணம். 077 716 2339

### விற்பனைக்கு

புதிய I phone 5s, சம்சுங்ப், பாவித்த மடிக்கணினிவிற்பனைக்கு உண்டு. தொடர்புகளுக்கு. 0768016448

### காணி விற்பனைக்கு

கோண்டாவில் புகையிரத நிலையத்திற்கு அருகில் 2 பரப்பும் 5 குளியும் கொண்ட காணி விற்பனைக்கு உண்டு. தொடர்புகளுக்கு. 0777736077

### வேலையாள்கள் தேவை

யாழ் நகரில் இயங்கும் வர்த்தக நிலையத்திற்கு ஆண் வேலையாள்கள் தேவை.
077 188 2518

அனுபவம் வாய்ந்த பொறியியல்லாளர் வழி நடத்தலில் பின்வரும் வேலைகள் செய்து தரப்படும்.
கட்டடங்கள், வீடுகள் வடிவமைத்து கட்டிக் கொடுக்கப்படும். கட்டடங்கள், வீடுகளுக்கான, Electrical wiring, Cctv Camera என்பன பொருத்தித்தரப்படும்.
VS Engineers and Contractors
077 612 0859, 076 903 7423

### வாடகைத்தாய் தேவை

வாடகைத்தாய் ஒருவர் தேவை. 30 வயதிற்கு குறைவான பெண் IVF மூலம் செய்வதற்கு வாடகைத்தாயாகத் தேவை. இரகசியம் கண்டிப்பாக பேணப்படும். சன்மானம் வழங்கப்படும்.
077 906 1406

### வாடகைக்குண்டு

ஆஸ்பத்திரி வீதி.யு.எஸ் கொட்டலுக்கு அருகில் அமைந்துள்ள வீடு 03 அங்கத்தவர்கள் கொண்ட குடும்பத்திற்கு வாடகைக்குண்டு.
தொடர்புகளுக்கு.
0779235993

## PROJECT OFFICER - 1 POSITION (MALE / FEMALE)

**Base station : Mullaitivu**

Contract period: Immediate to November, 2017 (may be extended)

PARCIC is looking for a suitable person as a Project Officer in Mullaitivu.

**Essential Qualifications & Experience**

- Age below 35.
- Degree holder or with 3 passes in GCE A/L.
- 3-4 years experience in similar capacity with particular focus on workshops/training sessions.
- Good analytical skills and computer literacy in Microsoft Office.
- Strong interpersonal and liaison skills with the ability to network with diverse stakeholders.
- Good command of written and spoken English with fluency in Tamil.
- Ability to work independently using own initiative within the scope of responsibilities.
- Ability and willingness to travel to all parts of the country.

Please note:

- Closing date for applications will be 18th April 2016
- The contract may be renewed depending on the project budget allo cation as well as the applicant's work performance.
- Please send in your application together with the names of two non-related referees to;

Regional Director,
PARCIC
No28, Temple Road,
Jaffna.
021 222 7897 or slproject1@parcic.org

Only applicants selected for the interview will be contacted.




**inverter**

9000 Btu - 85,000/=
12000 Btu - 94,000/=
18000 Btu - 129000/=
24000 Btu - 155000/=

Durable & Quality Product
Affordable price
5 Years Warranty
FREE
Inspecetion
Installation (Up to 5 miteres
Three Services

புதுவருடத்தை முன்னிட்டு 8% விலை கழிவு
தொடர்பு: 076 316 2175 (யாழ்ப்பாணம்)

Scle Agent Sri Lanka
**Rovel Lanka (Pvt) Ltd**
Web : www.rovel.lk

## அராலி இந்துக்கல்லூரி



**பாராட்டி வாழ்த்துகிறோம்**

யா/அராலி இந்துக் கல்லூரியில்
2016 ஆம் ஆண்டு நடைபெற்ற க.பொ.த. (சா/த)
பரீட்சையில் முதல் தடவையாக
8A,B பெறுபேறு பெற்று சாதனை படைத்த

செல்வி **இராசேந்திரம் எழில்வதனா**

அவர்களை மனதார பாராட்டுவதோடு
மேலும் கல்வியில் உயர்வடைய
வாழ்த்துகின்றோம்.

இச்சந்தர்ப்பத்தில் சித்தியடைந்த
ஏனைய மாணவர்களையும்
வாழ்த்துவதோடு.

Best Wishes

சகல வழிகளிலும் நெறிப்படுத்திய
**அதிபர் திரு. பா. பாலகுமார்**
அவர்களையும் ஏனைய ஆசிரியர்களையும்
குறிப்பாக மேலதிக வகுப்புக்களுக்கான நிதியுதவியை வழங்கி
பழைய மாணவர்களூடாக நெறிப்படுத்திய **பழைய மாணவர்**
Dr. S. சூரியகுமார் ஆகியோரையும் நன்றியோடு பாராட்டுகிறோம்.

**கல்லூரிச் சமூகம்**

## இதோ ஓர் அரிய சந்தர்ப்பம்

உம்முடைய சத்தியத்தினாலே அவர்களைப் பரிசுத்தமாக்கும்.
உம்முடைய வசனமே சத்தியம்.
**Sanctify them through thy truth: thy word is truth** (யோவான் 17:17)

### யாழ் வாழ் கிறிஸ்தவ சகோதர சகோதரிகளே !

நில்லுங்கள் நீங்கள் செல்லும் சபை வேதாகமத்திற்குரியதா ?
பரிசுத்த வேதாகமம் திருச்சபையைக் குறித்து என்ன சொல்கிறது?
உங்கள் சபையை எதின் மேல் கட்டுகிறீர்கள் ?
பாரம்பரியகளா அல்லது தேவனுடைய வார்த்தைகளிலா ?
சபையைக் குறித்த அப்போஸ்தவ உபதேசகள் புதிய ஏற்பாட்டு காலத்திற்கு மாத்திரம் உரியவைகளா ?
அல்லது இக்காலத்திற்கும் உரியவைகளா ?
சபை ஸ்தாபனங்கள், சபை பிரிவுகள் தேவனுடைய அநாதி பரிபூரண சித்தமா ?
பரிசுத்த ஆவியானவர் இன்று மறுபடியும் சபைக்கு நிருபனங்களை எழுதினால் முன்பு எழுதியவைகளை மாற்றி நவீன விஞ்ஞான காலத்திற்கேற்ப எழுதுவாரோ ?
அப்போஸ்தலனாகிய பவுல் இன்று வந்து ஓர் சபையை ஆரம்பித்தால் என்ன சபையை, எந்தப் பிரிவுள்ள சபையை ஆரம்பிப்பார் ?
நாம் சபையில் எப்படியும் ஆராதிக்கலாமா?
அல்லது இப்படித்தான் ஆராதிக்க வேண்டுமா ?

**பரிசுத்த ஆவியானவரின் துணையோடு பரிசுத்த வேதாகமத்தின் அடிப்படையில் மாத்திரம் பதில் காண்போம்.**
**சத்தியத்தை நேசிக்கும் அனைவரும் வாருங்கள்.**
**செய்திகள் தமிழிலும் ஆங்கிலத்திலிருந்து தமிழிலும் வழங்கப்படும்.**
**கர்த்தருக்கு சித்தமானால்.**

**காலம் :** ஏப்ரல் (April) 11, 12, 13 (செவ்வாய், புதன், வியாழன்)
**நேரம் :** காலை 9.00 - மாலை 4.30 வரை
பிரவேசம் இலவசம் (தேநீர், மதிய உணவு வழங்கப்படும்)
**இடம் :** 131, கச்சேரி நல்லூர் வீதி, (நாவலர் வீதி சந்திக்கு அருகில் கச்சேரியிலிருந்து 1கி.மீ ) யாழ்ப்பாணம்.

**தொடர்பு : 077 150 6190 / 077 208 1384 / 075 220 2516 077 310 1405/ 078 325 6173**

வானமும் பூமியும் ஒழிந்து போம் என் வார்த்தைகளோ ஒழிந்து போவதில்லை.
**Heaven and earth shall pass away, but my words Shall not pass away.**
(மத் 24:35)

" தாமதிப்பேனாகில் தேவனுடைய வீட்டிலே நடக்க வேண்டிய வகைகளை நீ அறியும் படி இவைகளை உனக்கு எழுதுகிறேன். அந்த வீடு ஜீவனுள்ள தேவனுடைய சபைபாய் சத்தியத்திற்கு தூணும் ஆதாரமுமாய் இருக்கிறது."

"But if tarry long that thoy mayest know how thou oughtest to be have thyself in the house of god, which is the church of the living God, the pillar and ground of the truth"
தீமத் 3:15

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மரண அறிவித்தல்கள்



### சந்தியோ எட்வேட் (காந்தி)

யாழ்.நாவாந்துறையைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட சந்தியோ எட்வேட் (காந்தி) 06.04.2017 வியாழக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான துரையப்பா சந்தியோ - பிரான்ஸிஸ்கம்மா தம்பதிகளின் அன்பு மகனும், காலஞ்சென்றவர்களான தொம்மை அந்தோனிப்பிள்ளை (9797) - அந்தோனியாப்பிள்ளை தம்பதிகளின் பாசமிகு மருமகனும், செசிலியம்மா (மலர்) வின் அன்புக் கணவரும், விஜயகுமார் சுபா (நோர்வே), அருட்சகோதரன் மோகன்ராஜ் (நிசான் - லண்டன்), ஜோகேஸ்வரா தீபா (மன்னார்), கிங்ஸ்லி மேனகா (நாவாந்துறை), யக்சன் நிமாலினி (மன்னார்), எஸ்தாக்கி மனுவெலா (பிரான்ஸ்), ஜேராஜ் ஆகியோரின் அன்பு தந்தையும், மாசில்லா, ராசம் ஆகியோரின் அன்புத் தம்பியும், வீரக்கோன், கற்பகலங்காரி, காலஞ்சென்ற காந்திமதி மற்றும் ராஜசூரியர் (லண்டன்) ஆகியோரின் அன்பு அண்ணனும், அமிர்தநாதர் (பிரான்ஸ்), அருட்தந்தை ஸ்ரீபன் (செபமாலைதாசர் சபை), அமுதம் (பிரான்ஸ்), காலஞ்சென்றவர்களான குணம், பாலு மற்றும் அருட்சகோதரி பற்றிமா (நல்லாயன் சபை), யூலியஸ் நிமல் (நோர்வே), றகுணா (நோர்வே), றெக்ஸி (பிரான்ஸ்) ஆகியோரின் அன்பு மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதி நல்லடக்கத் திருப்பலி நாளை (10.04.2017) திங்கட்கிழமை நாவாந்துறை புனித பரலோக அன்னை ஆலயத்தில் ஒப்புக்கொடுக்கப்பட்டு பின்னர் நாவாந்துறை சேமக்காலையில் நல்லடக்கம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

07.03 ஆம் குறுக்கு வீதி,
நாவாந்துறை வடக்கு, யாழ்ப்பாணம்.

தகவல்:
**குடும்பத்தினர்.**

021 222 3688, 077 965 5890, 077 201 1021, 077 907 0465



### திருமதி சிவபாய்க்கியம் தெய்வேந்திரம்

பருத்தித்துறை தும்பளையைப் பிறப்பிடமாகவும் இந்தியா திருச்சியை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி சிவபாய்க்கியம் தெய்வேந்திரம் 08.04.2017 சனிக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற தெய்வேந்திரத்தின் அன்பு மனைவியும் தர்மகுலேந்திரன் (ஸ்ரீ சுசிலா ஆபரணமாளிகை), காஞ்சனா, மேனகா(சுசிலா ஆபரணமாளிகை), மகேந்திரன்(இந்தியா), குலேந்திரன்(இந்தியா), புலேந்திரன்(கனடா), புவீந்திரன் (இந்தியா), சுசீலா(இந்தியா), ரவீந்திரன்(இந்தியா) ஆகியோரின் அன்புத் தாயாரும் யசோதராதேவி காலஞ்சென்ற யோகராசா மற்றும் சற்குணராசா, வாசுகி, நாகஜோதி, சுமத்திராதேவி, விஜயலதா, காலஞ்சென்ற பாலேந்திரா மற்றும் பத்மினிதேவி ஆகியோர்ரின் அன்பு மாமியாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (09.04.2017) ஞாயிற்றுக்கிழமை பி.ப 4.30 மணியளவில் இந்தியா திருச்சியிலுள்ள அவரது இல்லத்தில் நடைபெறும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்:
**மகன்: தர்மகுலேந்திரன்**
**ஸ்ரீ சுசிலா ஆபரணமாளிகை**
**பருத்தித்துறை.**

## முதலாம் ஆண்டு நினைவஞ்சலி



அமரர்
**சவரிமுத்து அன்ரனி**

தோற்றம் 04.02.1936 — மறைவு 09.04.2016

நீங்கள் எம்மை விட்டுப்பிரிந்து
ஆண்டொன்று ஆனாலும்
ஆறவில்லை எம் துயரம்.
உங்கள் நினைவுகள் எம்
இதயங்களில் என்றும்
- நிலைத்திருக்கும்.

மனைவி, பிள்ளைகள்
மற்றும் சகோதரி வேவி.
நாரந்தனை, ஊர்காவற்றுறை.

## 10ஆம் ஆண்டு நினைவஞ்சலி

**நாகராசா**
**பாக்கியராசா**

திதி: பூர்வபக்க திரயோதசி



அன்னைமடி
16.12.1963

அரன்அடி
31.03.2007

ஆண்டுகள் பத்து ஆயினவே நீர்
பறந்தோடி எமை விட்டு
மீண்டு வரா உலகு தான் ஏகிடினும்
மாள்கிறோம் உங்கள் நினைவில் நாம்

7 ஆம் வட்டாரம்,
ஊரைதீவு, புங்குடுதீவு.

பிரிவால் துயருறும்
குடும்பத்தினர்.

## 31ஆம் நாள் நினைவஞ்சலியும் அந்தியேட்டி வீட்டுக்கிருத்திய அழைப்பும்

எமது குடும்ப தீபம்
**லயன் பூமாதேவி**
**மகாதேவா**



அவர்களின் 31 ஆம் நாள் அந்தியேட்டி வீட்டுக்கிருத்திய நிகழ்வு நாளை (10.04.2017) திங்கட்கிழமை முற்பகல் 11 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் நடைபெறும். இந்த நிகழ்வில் தாங்கள் குடும்ப சகிதம் வருகை தந்து அன்னாரின் ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் அதனைத் தொடர்ந்து நடைபெறும் மதியபோசன நிகழ்விலும் இதனைத் தனிப்பட்ட அழைப்பாக ஏற்று கலந்து கொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

கல்லூரி வீதி, கந்தரோடை,
சுன்னாகம்.

குடும்பத்தினர்.

## நீங்காத நினைவுகளுடன் சிவதர்ம அஞ்சலி

**19ஆம் ஆண்டு**

மண்மகிழ
05.10.1938



மண்நெகிழ
10.10.1997

அமரர் **மயிலு சிவநாதன்** (J.P)
நாடாளுமன்ற உரைபெயர்ப்பாளர்
கொல்லங்கலட்டி

**24ஆம் ஆண்டு**

மண்மகிழ
27.05.1969



மண்நெகிழ
18.03.1992

அமரர் **சிவநாதன் தர்மவாணி** (அமுதா)
யாழ்.பல்கலைக்கழகம்

மண்ணின் மருக்கொழுந்துகள் மடிந்தன என்னவனே என் துணையே அறிவொளியே ஐயாவே
பன்மொழி பயின்று பாராளுமன்றம் சென்றீரே பலமொழி பிரிக்கும் பகுத்தறிவாளனே
உற்றார், ஊரார் உவக்கும் குணவாளனே ! என் செல்வமகளே அமுதாவே !
நித்தம் கண்ணீர் கலங்க வைத்து சென்றீர்களே ! அம்மாவைத் தெய்வமென அமுத மழை பொழிந்தீரே
உடன்பிறப்புகளுக்கு திசைகாட்டும் கலங்கரையாய் இருந்தீரே என் திரவியமே சொந்த வீடு பற்றிவிட்டாய்
ஒளி சோதி வாணி ஆகிவிட்டாய் என் உயிர் உள்ள வரை உங்கள் நினைவுகள் தான்
ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

V.C லேன், கொல்லங்கலட்டி,
தெல்லிப்பழை.

திருமதி. கண்மலர் சிவநாதன்
குடும்பத்தினர்.

## பங்குனி உத்திரப் பெருவிழா

அச்சுவேலி.ஏப்.9 வளலாய் பெரிய நாகதம்பிரான் ஆலயப் பங்குனி உத்திரப் பெருவிழா இன்று ஞாயிற்றுக் கிழமை நடைபெறும். பங்குனி உத்தி ரத்தை முன்னிட்டு நன்னீராட்டு அபி சேகம், கரும்பாம்பு செம்பாம்பு பால்வார் தல், சிறப்புப் பூசை, கூட்டுப்பிரார்த்தனை மகேஸ்வரபூசை என்பன நடை பெறும். (ஐ-11)

## பங்குனித் திங்கள் உற்சவம்

யாழ்ப்பாணம், ஏப். 9 சித்தங்கேணி ஸ்ரீநாக கன்னியம்பாள் ஆலயத்தின் வருடாந்த பங்குனித்திங்கள் உற்சவம், நாளை திங்கட்கிழமை காலை 8 மணிக்கு இடம்பெறும். உற்சவத்தின் ஆரம்ப கிரியைகளைத் தொடர்ந்து முற்பகல் 11 மணிக்கு சங்காபி சேகம் இடம்பெறும். சங்காபிசேகத்தைத் தொடர்ந்து அம்பாள் மணவாளக் கோலத் தில் திருவூஞ்சல் ஆடி நாகத்தில் வீதியுலா இடம்பெறும். நிகழ் வில் "அம்பிகையின் திருவருளும் குருவரு ளும் " எனும் தொனிப்பொருளில் சைவப்புலவர் க.நித்திய தசீதரனும், "அருள் வழங்கும் நாயகி " எனும் தொனிப்பொருளில் சைவப்புலவர் கந்த. சத்தியதாசனும் சொற்பொழி வாற்றவுள்ளனர். (ஐ-10)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# விசேட விலைக்கழிவு !!!

நீர் சுத்திகரிப்புத் துறையில் அதி சிறந்த தொழில்நுட்பவியலாளர்களை தன்னகத்தே கொண்டு யாழ் மண்ணில் இயங்கிவரும் தன்னிகரற்ற Everpure Hi-Tec (Pvt) Ltd. நிறுவனமான நாங்கள் பிறக்கவிருக்கும் புதுவருடம் உங்கள் அனைவருக்கும் அமைதியையும், சுபீட்சத்தையும் அள்ளித்தரும் ஆண்டாக அமைய வாழ்த்துகின்றோம்.

இப்பண்டிகைக் காலத்தை முன்னிட்டு விசேட விலைக்கழிவுகளைப் பெற்றுக்கொள்ள இன்றே முந்துங்கள்!

Discount 5,000/= to 50,000/=

Valid untill 30.04.2017

**சுத்தமான குடிநீருக்கான எல்லா அளவிலுமான RO நீர் சுத்திகரிப்பு இயந்திரங்கள்**




உங்கள் கிணற்று நீரில் அடங்கியுள்ள மாசுக்கள், கிருமிகளை முற்றாக அழித்து பருகுவதற்கேற்ப சுத்தமான நீரை வீட்டிலேயே பெற்றுக் கொள்ளலாம்.

**Water Softener System**




Water Softener System

Tiles, Bathroom Fittings, Washing Machine களில் படியும் கல்சியம், மக்னீசியப் படிவுகளிலிருந்து நிரந்தர விடுதலை!



**Swimming Pool**

உங்கள் தேவைக்கேற்ற வகையில் வடிவமைத்து, நிறுவி, பராமரித்துத் தரப்படும்.



**Waste Water Treatment**

வீடு, தொழிற்சாலை, உல்லாச விடுதிகளின் கழிவுநீர் சுத்திகரிப்பு முறைமையை நிறுவியும் பராமரித்தும் தரப்படும்.

WE ACCEPT VISA MasterCard

100% GUARANTEED PURITY

WARRANTY

**Everpure Hi-Tec (Pvt) Ltd.**
#341, K.K.S. Road, Jaffna.
021 222 6888, 021 567 7567, 077 362 6230



## சாவகச்சேரி கைத்தொழில் வணிகர் மன்றத்தின் 38 ஆவது வருட பொதுக்கூட்டம்

**இடம்** :- சாவகச்சேரி டிறிபேக் கல்லூரி
**காலம் :-** 23.04.2017 ஞாயிற்றுக்கிழமை
**நேரம் :-** மு.ப 9 மணிக்கு

எமதுமன்றத்தின் விடயமாக பிரேரணைகள் இருப்பின் 15.04.2017 முன் எழுத்து மூலம் மன்ற செயலாளர் அவர்களுக்கு அனுப்பிவைக்கவும்.

01. அமரர் ச. நமசிவாயம் புலமைப்பரிசு நிதியம்
02. அமரர் கு. தவராஜசிங்கம் விதவை நிதியம்
03. சன்றைஸ் ஊனமற்றோர் நிதியம்
04. அமரர் ச. இராசரத்தினம் வறிய மாணவர் நிதியம்
05. பொ.தாமோதரம் வறிய மாணவர்களின் கல்வி வளர்ச்சிக்கான நிதியம்
06. சாவகச்சேரி கைத்தொழில் வணிகர் மன்றம் மாணவர் நிதியம்
07. பேராசிரியர் வசந்தி அரசரட்ணம் கௌரவிப்பு விழா ஏற்பாட்டுக் குழு மாணவர் நிதியம்
08. அமரர் செ.சபாரத்தினம் மாணவர் நிதியம்
09. அமரர்களான சுப்பிரமணியம் -நேசரத்தினம் மாணவர் நிதியம்
10. முத்துமாரியம்மன் மாரிமைந்தன் திருப்பணியாளர் வைத்திலிங்கம் சிவராசா மாணவர் நிதியம்
11. ஓய்வுநிலை இலங்கை வங்கி முகாமையாளர் ச. சந்திரகுமார் மாணவர் நிதியம்
12. கலாநிதி முருகப்பா பஞ்சாபிகேசன் மாணவர் நிதியம்
13. அமரர் ச.சண்முகானந்தம் மாணவர் நிதியம்
14. கணபதிப்பிள்ளைமுரளிமாணவர் நிதியம
15. பொ. தாமோதரம் பல்கலைக்கழக மருத்துவபீட மாணவர்களின் கல்வி வளர்ச்சிக்கான நிதியம்
16. சாவகச்சேரி Hunt Family மாணவர் நிதியம்
17. அமரர் ஆ.பரமநாதன் நிதியம்
18. சாவகச்சேரி குகன் ஸ்ரூடியோ உரிமையாளர் அமரர் அ.சித்திரவடிவேலுமாணவர் நிதியம்
19. அமரர்.செ.மகேஸ்வரன் மாணவர் நிதியம்
20. வைத்திய வள்ளல் டாக்டர் ச.அம்பிகைபாகன் மாணவர் நிதியம்
21. அமரர் க.பொன்னம்பலம் மாணவர் நிதியம்
22. தெய்வேந்திரம் கமலாம்பிகை மாணவர் நிதியம்
23. அமரர் சி.சிதம்பரநாதக் குருக்கள் மாணவர் நிதியம்
24. குபேர கணபதி மருத்துவ நிதியம்
25. அமரர்களான இராசைய, இராசம்மா மாணவர் நிதியம்
26. அமரர் சி.ஜெகநாதன் மாணவர் நிதியம்

மாதாந்தம் எமது உறுப்பினர்களின் பங்களிப்புடன் வழங்கப்படும் மாணவர்களுக்கான கொடுப்பனவு.

போன்றநிதியங்கள் வழங்கப்படவுள்ளன.

2017 ஆம் ஆண்டிற்கான புதிய நிர்வாகசபைக்கான தெரிவு நடைபெறவுள்ளது. மேற்படி கூட்டத்திற்கு மன்றத்தின் அனைத்து உறுப்பினர்களையும் தவறாது கலந்து சிறப்பிக்குமாறு அன்பாகக் கேட்டுக் கொள்கின்றோம்.

**செயலாளர்,**
**சாவகச்சேரி கைத்தொழில் வணிகர் மன்றம்.**



சித்திரைப் புதுவருடத்தை முன்னிட்டு

# இந்தியன் செலக்ஷனின் மாபெரும் மெகா சேல்

## அனைத்து வாடிக்கையாளர்களுக்கும் இனிய சித்திரைப் புத்தாண்டு வாழ்த்துக்கள்



அதிரடி விலைக்கழிவில் சகல விதமான சாறிவகைகள், சல்வார், சல்வார்த்துணிகள் மற்றும் ஆண், பெண், சிறுவர், சிறுமியர்களுக்கான ஆடைத் தெரிவுகளுக்கு இன்றே விஜயம் செய்யுங்கள்.

**இந்தியன் செலக்ஷனின்**

**இந்தியன் பஜாருக்கு**

**25/03/2017 முதல்**
**14/04/2017 வரை**

**ஞாயிற்றுக்கிழமைகளிலும் திறந்திருக்கும்.**

கூடுதலாக கொள்முதல் செய்பவர்களுக்கு விஷேட பரிசில் உடன் வழங்கப்படும்.

இடம்
**வீரசிங்கம் மண்டபம்**
**யாழ்ப்பாணம்**

கஸ்தூரியார் வீதியில் உள்ள
**இந்தியன் செலக்ஷனில்**
அனைத்து விதமான ஆடைத் தெரிவுகளையும் செய்திட விரையுங்கள்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org







Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# லக்கின அதிர்ஷ்டம் உங்களுக்கு தரும் புத்தாண்டு பலன்கள்

வளமான வாழ்விற்கு
சுபிரிநுத்தி லொத்தர்
நிதி அமைச்சு




மேடராசியில் உதயமானோருக்கு ஆவணி 27-ம் திகதி வரை குரு பகவான் ஆறாம் வீட்டில் சஞ்சரிப்பதால் அதுவரை நற்பலன் குறைந்தே காணப்படும். அதன்மேல் படிப்படியாக சுப பலன்கள் கிடைக்கும். ஆரம்பிக்குங் கருமங்கள் ஆக்கபூர்வமான முன்னேற்றத்தைத் தரும். உடல்நிலை உற்சாகத்தை தோற்றுவிக்கும். குடும்பத்தில் புரிந்துணர்வு ஏற்படலாகும். பொருளாதாரம் வளர்ச்சியடையும். உத்தியோகத்தர்களுக்கு உயர்வான பலன்கள் கிட்டும். வர்த்தகத் துறையினருக்கு வருமானம் அதிகரிக்கும். ஆவணி மாதத்தின் பின் திருமணப் பேச்சுக்கள் சாத்தியமாகும். பிறநாட்டுப் பிரயாண முயற்சிகள் விரைவில் வெற்றியளிக்கும். மாணவர்களுக்கு கல்வித்துறையில் முயற்சிக்கேற்ற பிரதிபலன் கிடைக்கப்பெறும்.

அசுவினி, பரணி.
கார்த்திகை 1-ம் கால்




இவ்ராசியில் பிறந்தவர்களுக்கு அட்டமத்துச் சனி தொடர்கின்றது. குருபகவான் 5-ம் வீட்டில் இருப்பதால் நன்மை, தீமை கலந்த பலன்கள் உண்டாகும். ஆவணி மாதத்திற்கு முன் இல்லத்தில் இனிய வைபவங்கள் இடம்பெறலாகும். குடும்பநிலை ஓரளவு அனுகூலம் தரும். குடும்பத்தில் புரிந்துணர்வு ஏற்படும். உடல் ஆரோக்கியம் பாதிப்படையாது. உத்தியோகத் துறையைச் சார்ந்தவர்களுக்கு உரிய முன்னேற்றம் கிடைக்கும். வர்த்தகத்துறையில் தொடர்புடை யோருக்கு வருமானம் ஓரளவு கிட்டும். அந்நிய நாட்டுப் பிரயாண முயற்சிகள் ஆபத்தைத் தோற்றுவிக்கும். திருமணமாகாதோருக்கு மங்கல வாழ்வு வருட முற்பகுதியில் அனுகூலமாகும். மாணவர்களுக்கு மத்திம நற்பலன்கள் ஏற்படும்.

கார்த்திகை 2, 3.4-ம் கால்கள்
ரோகிணி, மிருகசீரிடம் 1, 2




மிதுனராசியில் ஜனித்தோருக்கு குரு பகவான் ஆவணி 27 இல் 5ம் வீட்டுக்கு மாற்றமடைவதால் அதன்மேல் சுபபலன்கள் ஏற்படலாகும். நினைத்த எண்ணங்கள் விரைவில் செயலுருவம் பெறும். உடல் நிலையில் உற்சாகம் தோன்றும். குடும்ப அங்கத்தினரிடையே குதூகலம் உண்டாகும். பொருளாதாரம் திருப்தியாக இருக்கும். உத்தியோகத்தர்களுக்கு உயர்வான பலன்கள் காணப்படும். உகந்த இடமாற்றம், ஊதிய உயர்வு கிடைக்கும். வர்த்தகத்துறையினர் வாடிக்கையாளரின் ஆதரவால் நிகரலாபம் பெறுவர். அந்நிய நாட்டுப் பயணங்கள் ஆக்கபூர்வ முறையில் முன்னெடுக்கப்படும். திருமணமாகாதோருக்கு மங்கல கருமம் இனிது நிறைவேறும். மாணவர்கள் கல்வியில் சிறந்த நற்பலன்களைப் பெறுவர்.

மிருகசீரிடம் 3, 4-ம் கால்கள்
திருவாதிரை, புனர்பூசம் 1, 2, 3




இவ்ராசியினருக்கு சனி பகவான் ஆறாம் வீட்டிலும் குருபகவான் 3-ம், 4-ம் இராசிகளிலும் சஞ்சரிப்பதால் நற்பலன்களை எதிர்பார்ப்பது கடினம். எண்ணிய திட்டங்கள் ஏமாற்றத்தையே தோற்றுவிக்கும். உடல் நிலையில் தளர்வுகள் காணப்படும். பொருளாதாரம் நலிவடைந்திருக்கும். கொடுக்கல், வாங்கல் விடயங்களில் அவதானம் தேவை. குடும்பத்தில் புரிந்துணர்வு குன்றும். உத்தியோகத்துறையினருக்கு உரிய கௌரவம் கிடைப்பது கஷ்டம். வர்த்தகத் துறையினருக்கு வருமானம் வீழ்ச்சியைத்தரும். பிறநாட்டுப் பிரயாண முயற்சிகள் பின்தள்ளிச் செல்லும். திருமண முயற்சிகள் காலதாமதத்தைத் தரும். மாணவர்களுக்கு கல்வியிலும் பார்க்க பொழுது போக்குத்துறையிலேயே நாட்டம் மிகுந்திருக்கும்.

புனர்பூசம் 4-ம் கால்
பூசம், ஆயிலியம்




சிங்கராசியினருக்கு ஆவணி 27 வரை குரு பகவான் 2-ம் வீட்டில் இருப்பது நற்பலன்களைக் கொடுக்கும். எனினும் பின் குரு 3 ஆம் வீட்டிலும் பஞ்சம ஸ்தானத்தில் சனியும் மனதில் யோசனை, சஞ்சலம் என்பவற்றைக் கொடுக்கும். உடல் நிலையிலும் சிறுசிறு நோய்கள் வந்து போகும். எவ்விடயத்தையும் பொறுமையுடன் கையாளுதல் வேண்டும். குடும்பச் சூழலை அனுசரித்து நடந்து கொள்ள முயற்சிக்கவும். உத்தியோகத்தர்களுக்கு தொழில் அலைச்சலும், நிம்மதிக்குறைவும் ஏற்படக்கூடும். வர்த்தகத் துறையினர் வாடிக்கையாளரை அனுசரித்து நடந்து கொள்ளுதல் வேண்டும். திருமணமாகாதோருக்கு ஆவணி மாதத்துக்கு முன் நற்கருமம் கைகூடும். மாணவர்கள் கல்வித்துறையில் ஊக்கமுடன் செயற்பட்டால் உரிய முன்னேற்றம் கிட்டும்.

மகம், பூரம்,
உத்தரம் 1-ம் கால்




கன்னிராசியில் பிறந்தோருக்கு ஜன்மராசியில் குருவும் 4-ம் வீட்டில் சனியும் சஞ்சாரம் செய்கின்றன. வருட முற்பகுதியில் யோசனை அலைச்சல் போன்ற பலன்கள் இருப்பினும் ஆவணி 27-இல் குரு 2 ஆம் வீட்டுக்கு மாற்றமடைந்ததும் நற்பலன்கள் கிடைக்கும். பொருளாதாரம் உயர்வடையும் உடல் ஆரோக்கியம் உறுதியுடன் பேணப்படும். குடும்பச் சூழ்நிலையில் புரிந்துணர்வு உண்டாகும். கொடுக்கல், வாங்கல் விடயங்கள் சீரடையும். உத்தியோகத்தினருக்கு தொழில் உயர்ச்சி, வருமான அதிகரிப்பு என்பன கிட்டும். வர்த்தகத் துறையினர் வியாபார முன்னேற்றத்தை அடைவர். பிறநாட்டு பிரயாணம் பலிதமாகும். திருமணத்தை எதிர்பார்த்திருப்போருக்கு மாங்கல்ய பாக்கியம் கிடைக்கும். மாணவர்களுக்கு கல்வியில் ஆர்வமும் அதற்கேற்ப முன்னேற்றமும் உண்டாகும்.

உத்தரம் 2, 3, 4-ம் கால்கள்
அத்தம், சித்திரை 1,2




துலாராசியில் ஜனனமானோருக்கு ஏழரைச் சனி நிறைவு பெற்றமை மனதுக்கு உற்சாகத்தைக் கொடுப்பினும் குரு 12 இலும் ஆவணி 27 இன் மேல் ஜன்மராசியிலும் சஞ்சாரம் செய்ய இருப்பதால் நற்பலன்கள் குறைந்தே காணப்படும். நினைத்த எண்ணங்கள் தாமதமாகவே அனுகூலமாகும். உடல் நிலையில் சிறுசிறு ரோகங்கள் தோன்றி மறையும். பொருளாதாரம் தேவைகளைப பூர்த்தி செய்யப் போதுமானதாக இருக்கும். குடும்ப நிலையில் புரிந்துணர்வு ஓரளவு காணப்படும். உத்தியோகத்தர்களுக்கு சுமாரான முன்னேற்றமே உண்டாகும். வர்த்தக நடவடிக்கைகளில் வருமானம் குறைவாக இருக்கும். பிறதேசப் பயணங்கள் பின்தள்ளிச் செல்லும். திருமண வாய்ப்புக்கள் இழுபறிநிலையில் இருக்கும். மாணவர்களுக்கு மத்திம முன்னேற்றமே கிட்டும்.

சித்திரை 3, 4-ம் கால்கள்
சுவாதி, விசாகம் 1, 2, 3




இந்த ராசியில் பிறந்தவர்களுக்கு ஏழரைச்சனி கடைக்கூறு நிகழ்கின்றது. ஆவணி 27 வரை குருபகவான் 11-ம் இராசியில் சஞ்சரிப்பதனால் அதுவரை முன்னேற்றமான பலன்கள் உண்டாகும். குரு 12-ம் வீட்டுக்கு மாறிய பின்னர் சுபபலன்கள் குறைந்தே காணப்படும். உடல்நிலை சிறிது பாதிக்கப்படக்கூடும். குடும்பத்தில் அமைதி குறைவாகவே இருக்கும். கொடுக்கல், வாங்கல் விடயங்களில் சுமுகநிலை உண்டாகும். பொருளாதாரம் சமநிலையில் பேணப்படும். உத்தியோகத்தர்களுக்கு முயற்சிக்கேற்ற முன்னேற்றம் கிட்டும். வர்த்தக நடவடிக்கைகளில் இழுபறிநிலை தோன்றும். பிறநாட்டுப் பயணங்கள் பின்தள்ளிச் செல்லும். திருமணமாகாதோருக்கு மங்கல வாழ்வு தாமதமடையும். மாணவர்களுக்கு கல்வித்துறையிலும் பார்க்க பொழுது போக்குத்துறைகளிலேயே நாட்டம் அதிகரித்துக் காணப்படும்.

விசாகம் 4-ம் கால்
அனுஷம், கேட்டை




தனுசு இராசியிற் பிறந்தோருக்கு ஆவணி 27-ந் திகதிவரை குருபகவான் 10 ஆம் இராசியில் சஞ்சாரம் செய்வார். அத்துடன் ஏழரைச்சனி நடுக்கூறும் நிகழ்கின்றது. ஆவணி 27-ந் திகதி குருபகவான் 11 ஆம் வீட்டுக்கு மாற்றமடைகின்றரர். அதன் மேல் நன்மையான பலன்கள் நிகழ இடமுண்டு. நினைத்த எண்ணங்கள் இலகுவில் ஈடேறும். உடற்சுகம் உறுதியுடன் பேணப்படும். கொடுக்கல், வாங்கல் விடயங்கள் சுமுகநிலையை அடையும். உத்தியோகத்தர்களுக்கு உகந்த இடமாற்றங்கள் கிடைக்கும். பிற நாட்டுப் பயணங்கள் பிசகின்றி நிகழும். திருமணமாகா தோருக்கு மாங்கல்ய பாக்கியம் மனம்போல் கிட்டும். மாணவர்களுக்கு தேர்வுகளில் சித்தி போட்டிகளில் வெற்றி, பாராட்டு என்பன கிடைக்கும்.

மூலம், பூராடம்,
உத்தராடம் 1-ம் கால்




இவ்விராசியில் பிறந்தோருக்கு குருபகவான் 11- ல் சஞ்சரிக்க, ஏழரைச்சனியும் நடைபெறுகின்றது. வருட முற்பகுதியில் நற்பலன்கள் காணப்படினும் ஆவணி 27-இன் மேல் குரு 12-ம் வீட்டுக்கு மாற்றமடைந்தபின் துர்ப்பலன்கள் ஏற்படக்கூடும். நினைத்த கருமங்கள் தாமதடையும். உடல்நிலை அவ்வப்போது பாதிப்புக்குள்ளாகும். குடும்பச் சூழ்நிலையில் தொந்தரவுகள் உண்டாகும். பொருளாதாரம் சமநிலையில் பேணப்படும். உத்தியோகத்தர்களுக்கு தொழில்துறையில் சிற்சில கஷ்டங்களைச் சமாளிக்க நேரிடும். வர்த்தக்த்துறையினருக்கு வருமானம் பலவீனமடையும். பிறதேசப் பயணங்கள் பின்தள்ளிச் செல்லும். திருமணமாகாதோருக்கு வருடமுற்பகுதி அனுகூலமானதாக இருக்கும். மாணவர்களுக்கு கல்வித்துறையில் ஆர்வம் குறைந்து களியாட்டங்களில் நாட்டம் கூடுதலாகும்.

உத்தராடம் 2, 3, 4-ம் கால்கள்
திருவோணம், அவிட்டம் 1, 2




கும்பராசியில் பிறந்தோருக்கு அட்டமத்து வியாழன் ஆவணி 27-ந் திகதி வரை நடைபெற்றுக் கொண்டிருக்கின்றது. அதன்மேல் 9-ம் வீட்டுக்கு மாற்றமடைய சனீஸ்வரனும் 11- ம் வீட்டில் சஞ்சாரம் செய்கின்றார். எனவே நற்பலன்களை எதிர்பார்க்கக்கூடியதாக இருக்கும். நினைத்த எண்ணங்கள் விரைவில் அனுகூலமாகும். உடல் ஆரோக்கியம் உற்சாகத்தை ஏற்படுத்தும். பொருளாதார சிறப்படையும். உத்தியோகத்தர்கட்கு பதவியில் உயர்வு. உகந்த இடமாற்றம் என்பன கிடைக்கப்பெறும். வர்த்தக நடவடிக்கைகளில் வருமானம் ஈட்ட சந்தர்ப்பம் கிட்டும். பிறநாட்டுப் பிரயாண வாய்ப்புக்கள் அதிகமாகும். திருமணமாகாதோருக்கு மாங்கல்ய வாழ்வு மனம்போல் கிட்டும். மாணவர்களுக்கு கல்வியில் உயர்ச்சி உண்டாகும்.

அவிட்டம் 3, 4-ம் கால்கள்
சதயம், பூரட்டாதி 1, 2, 3




மீனாராசியினருக்கு வருடாரம்பத்தில் குரு, சனி சஞ்சாரங்கள் நன்றாக இருக்கும். ஆவணி 27-ந் திகதி அட்டமத்து வியாழன் ஆரம்பமாவதன் மேல் அசுபபலன்களே ஏற்படும். உடல்நிலையில் ரோகங்கள் கிட்டும். குடும்பத்தில் குழப்பங்கள் உருவாக்கக்கூடும். பொருளாதார நிலை பலவீனமடைந்து காணப்படும். எண்ணிய கருமங்கள் கைகூடுவதில் இடையூறுகள் தோன்றும். கொடுக்கல், வாங்கல் விடயங்களில் இழுபறி ஏற்படும். உத்தியோகத்தினருக்கு தொழில் துறையில் அலைச்சலும் நிம்மதிக்குறைவு ஏற்படலாகும். வர்த்தகத் துறையினருக்கு வருமானம் குன்றும். பிறதேசப் பயணங்கள் பின்தள்ளிச் செல்லும். திருமணமாகாதோருக்கு நற்கருமங்கள் காலதாமதத்தை ஏற்படுத்தும். மாணவர்கள் கல்வித்துறையில் ஆர்வம் குறைந்து பொழுதுபோக்குகளில் நாட்டம் அதிகமாகும்.

புரட்டாதி 4-ம் கால்
உத்தரட்டாதி, ரேவதி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதயன்
மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்
தலைமையகம்: 361, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்
செய்தி : 021 493 0000
விளம்பரம் : 021-493 1111
விநியோகம் : 021-493 2222, 021 - 492 7450
செய்தி : uthayanprint@gmail.com கருத்து: comments@uthayan.com
விளம்பரம்: advt@uthayan.com

# தடம் மாறும் அறங்கள்

போருக்குப் பின்னரான காலத்தில் தமிழ்ச் சமூகத்தின் ஆன்மா எவ்வளவு சிதைந்து சின்னாபின்னமாகிப் போயுள்ளது என்பதை வெளிச்சம் போட்டுக் காட்டியுள்ளது யாழ்ப்பாணத்தின் மூத்த பொலிஸ் அத்தியட்சகர் ஸ்ரனிஸ்லஸின் பேச்சு. இந்தச் சிதைவுக்குக்கான அக, புற காரணங்களைக் கண்டறிந்து அவற்றுக்குத் தீர்வு காணப்படவேண்டியது அவசியம். இல்லையேல் ஒரு புற்று நோய் மாதிரி இது பரவி ஒட்டுமொத்தச் சமூகத்தினதும் கூட்டு ஆன்மாவையும் அரித்து அழித்துவிடும்.

யாழ்ப்பாணத்தில் பொலிஸார் கேட்காமலேயே வாகனச் சார திகள் லஞ்சம் கொடுக்க முற்படுகிறார்கள் என்பதே பொலிஸ் அத்தியட்சகர் ஸ்ரனிஸ்லஸ் தெரிவித்த கருத்து. தவறு செய்யும் மக்கள் எவ்வளவு தூரம் முறைகேடுகளுக்குள் மூழ்கிப்போகத் தயாராக இருக்கிறார்கள் என்பதை இது தெள்ளத் தெளிவாக எடுத்துக்காட்டுகிறது.

வாகனச் சாரதிகளிடம் மட்டும் இல்லை, சமூகத்தின் எல்லாக் கூறுகளிலும் இதுவேதான் நிலமை. நேர்மை, வாய்மை, அறம் என்பவற்றுக்கு வாழ்க்கையில் இருந்த மதிப்பும் மரியாதையும் தேய்ந்துகொண்டே செல்கிறது. மேற்குலகையும் கிழக்கையும் தெளிவாகப் பிரித்துக்காட்டி வந்ததே இந்த அறக்கோட்பாடுதான். அறத்தின் பாற்பட்டுத்தான் நாம் வளர்க்கப்பட்டோம். அதிகம் சம்பாதித்தபோது அதிகம் செலவழித்து அனுபவிப்பதைவிட கோயில்களிலும் அறக்காரியங்களிலும் அவற்றைச் செலவிட வேண்டும் என்றுதான் பழக்கப்படுத்திப் பயிற்றுவிக்கப்பட்ட ஒரு சமூகமாகத்தான் நாம் இருந்தோம். தலைமுறைக்கு முன்னர் வரைக்கும்கூட நாம் பழி, பாவங்களுக்கு அஞ்சியவர்களாக இருந்தோம்.

போருக்குப் பின்னரான காலத்தில் தமிழர்களை ஆக்கிரமித்திருக்கும் வேகமான உலகமயமாக்கலும் நுகர்வுக் கலாசாரமும் இந்த அறச்சிந்தனைகள் எல்லாவற்றையும் ஒரு புறமாகத் தூக்கிப் போட்டுவிட்டு மேற்குலகினரைப் போன்றே இருக்கிற காசுக்கு உச்சப் பயனை அனுபவிப்பவர்களாக மாற்றிக்கொண்டு வந்துவிட்டன. இதனாலேயே ஊழலும் லஞ்சமும் சாதாரணவையாகிவிட்டன. தவறுகள் இயல்பாகிவிட்டன. முறைகேடுகளே விதிகள் என்றாகிவிட்டன.

சமூகம் கெட்டுப்போய்விட்டது, நாம் என்ன செய்ய முடியும் என்று கேட்டுக்கொண்டே எல்லாவற்றையும் கடந்து செல்வதற்குப் பழகிக்கொண்டுவிட்டோம். நாம் பாதிக்கப்படாதவரைக்கும் தவறுகள் தண்டிக்கப்பட வேண்டியவை இல்லை என்பதாக ஒதுங்கிப் போகத் தொடங்கிவிட்டோம். அதனாலேயே குற்றங்களும் முறைகேடுகளும் மலிந்துவிட்டன.

இதன் ஒருபக்க விளைவுதான், போரின் போது அதி உச்ச ஒழுக்க நியமத்தை - பயத்தின் நிமித்தமேயானாலும்கூட -கடைப்பிடித்து வந்த ஒரு சமூகம் இப்படிச் சீரழிந்து கேட்காமலேயே லஞ்சம் கொடுக்கும் நிலைமைக்குச் சென்று சேர்ந்திருப்பதும். களவு, பொய், கொலை என்று பஞ்சமா பாதகங்களும் செய்திகளாகவும் நிகழ்ச்சிகளாகவும் எம்மைக் கடந்துபோகத் தொடங்கிவிட்டன. அவை எம்மை நேரடியாகத் தாக்கும்போதுகூட உணர்வோடு அவற்றை எதிர்க்க முடியாத பக்கவாதத்துக்குள் நாம் வீழ்ந்துபோய்க் கிடக்கிறோம்.

பொலிஸாரிடம் அகப்பட்டுக்கொண்டால் குறுக்குவழியில் எப்படித் தப்பித்துக்கொள்ளலாம் என்கிற சிந்தனையே முதலில் எழுகிறது. எல்லாவற்றுக்கும் லஞ்சத்தைக் கொடுத்து காரியத்தைச் சாதித்துக்கொள்ளலாம் என்கிற போக்கு அதிகரித்துவிட்டது.

பொலிஸ் அதிகாரியின் பேச்சு இந்தச் சமூகத்தின் பரிதாப நிலையையே சுட்டிக்காட்டி நிற்கிறது. இது உடனடியாகத் தடுத்து நிறுத்தப்பட வேண்டும். மீண்டும் அறச் சிந்தனை நோக்கி மக்கள் திருப்பப்பட வேண்டும். இன்று கோடிகளைக் கொட்டிக் கோயில்கள் எழுப்பப்பட்டாலும் அவற்றை நாடி வருவோர் எண்ணிக்கை குறைந்துவிட்டது. அறத்தின் மீது இருந்த மதிப்பும் பழி பாவங்கள் மீது இருந்த அச்சமும் குறைந்துவிட்டன. வாழ்வதற்கான போராட்டம் என்று வசதிகளுக்கும் வாய்ப்புகளுக்கும் பின்னால் அலைக்கழியும் ஒரு சமூகமாக மாறிவிட்டோம். கேட்டால், இதுதான் உலகப்போக்கு, ஊரோடு ஒத்தோட வேண்டும் என்கிற விளக்கம் வேறு சொல்லப்படுகிறது. இந்த நிலமை மாற வேண்டும். அதுவே காலத் தேவை.

# வடமாகாண சுற்றுலாத்துறை அபிவிருத்தியில் எதிர்நோக்கும் சவால்கள்

பி.எஸ்.வி. தினேஸ்

வடமாகாண சுற்றுலாத்துறையை கரையோரம், கலாசாரம், வரலாறு என மூன்று பிரதான வகைப்பாடுகளின் கீழ் அபிவிருத்தி செய்தால், குறித்த துறை துரித விருத்தியடையும் என்பதில் எவ்வித மான ஐயப்பாடுமில்லை.
இதன் வாயிலாக பிரதேச ரீதியான அபிவிருத்தி, நேரடியான மற்றும் மறைமுகமாக அதிகமானோருக்கு வேலை வாய்ப்புக்கள், அந்நியச் செலாவணி ஈட்டிக் கொள்ளும் வாய்ப்பு எனப் பலவிதமான சாதகமான வாய்ப்புக்கள் ஏற்படலாம். ஆனாலும், அந்தந்தத் துறைகள் ரீதியாக அபிவிருத்தி செய்யும் போது, பல்வேறுபட்ட சவால்களுக்கு முகம் கொடுக்க வேண்டிய நிலையும் ஏற்படுகின்றது.
எனவே, சுற்றுலா விருத்திக்கென அடையாளம் காணப்பட்டுள்ள பகுதிகளில் தங்குமிடவசதிகள், போக்குவரத்து வலையமைப்புக்கள், பயணிகளைக் கவரக்கூடிய செயற்பாடுகள் மற்றும் துணைச் சேவைகள் என்பவற்றை மேற்கொள்ள வேண்டிய தேவை ஏற்படுகிறது.

**சுற்றுலாத்துறை அபிவிருத்தியில் எதிர்நோக்கும் சவால்கள்**

வட மாகாணத்தில் சுற்றுலாத்துறையை விருத்தி செய்வதற்குப் பல தரப்பட்ட வழிவகைகள் இருப்பினும், இங்குள்ள உல்லாசப்பயணத் தளங்களில் கரையோரம் சார்ந்தவை, கலாசாரம் சார்ந்தவை மற்றும் வரலாற்று ரீதியான மையங்கள் என்ற வகைப்படுத்தல்கள் காணப்படவில்லை. அதேவேளை, அவ்வப் பிரிவுகளின்கீழ் உள்ளடக்கப்பட்டுள்ள சுற்றுலா மையங்கள் தொடர்பான விவரங்கள், அவற்றின் இடஅமைவுப் பிரதேசங்கள், மாவட்டங்கள் தொடர்பாக எவ்விதமான வளத்திரட்டுக்களும் பேணப்படவில்லை. அத்துடன் பிற மாவட்டங்களிலிருந்தும், வெளிநாடுகளிலிருந்தும் வருகின்ற பயணிகள் பார்வையிடுவதற்கு ஏற்றவகையில் முனைப்பான உல்லாச மையங்கள் அடங்கிய வடக்கு மாகாண வரைபடமோ, தேர்ச்சிபெற்ற வழிகாட்டிகளோ இல்லாமையும் முக்கிய பிரச்சினைகளாகவே உள்ளன.
எனவே வடமாகாணத்திலுள்ள பிரதான சுற்றுலா மையங்கள் உள்ளடங்கிய வரைபடம் ஓர் அவசியத் தேவையாகவுள்ளது. அதேவேளை, அதனை பிரதான விடுதிகள், விமான நிலையங்கள், போன்ற இடங்களில் காட்சிப்படுத்தி, தேர்ச்சி பெற்றவர்களைப் பயன்படுத்தி வழிப்படுத்தல்களை முன்னெடுத்தல் வேண்டும்.
கிளிநொச்சி மாவட்டத்தில் கௌதாரி முனை ஈரநிலம் மற்றும் கடலகப் பகுதிகள், மன்னாரில் தொங்குபாலம் மற்றும் பேசாலைக் கடற்கரை, வவுனியாவில் கல்வாரிப்பகுதி, குடாநாட்டில் நெடுந்தீவு மற்றும் நயினாதீவு உள்ளிட்ட சுற்றுலா மையங்களுக்குப் பயணிகள் இலகுவில் பயணிக்க ஏற்ற வகையில் சீரான நெடுஞ்சாலைப் போக்குவரத்து வசதி போதாதுள்ளது. இவை கிரவல் தூசிகள் நிறைந்தும், போக்குவரத்து மேற்கொள்ள முடியாதவாறு மணல்மண் செறிந்தும் உள்ளதுடன், மற்றும் சில பகுதிகள் குன்றும் குழியுமாகக் காணப்



“வடமாகாணத்திலுள்ள சில முக்கியத்துவம் வாய்ந்த வரலாற்று மையங்கள் அழிக்கப்பட்டு வந்ததுடன், சில பகுதிகளில் வரலாற்றையே மாற்றியமைக்கும் நிகழ்வுகளும் திட்டமிட்டு நடைபெற்றுவந்துள்ளன.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



படுகின்றன. அதேபோன்று தீவகப் பிரதேசங்களுக்குச் செல்ல படகுப் பயணத்தையே மேற்கொள்ள வேண்டியுள்ளதால், நீண்ட நேரம் கடலில் பயணம் செய்ய வேண்டிய தேவை ஏற்படுகிறது. இதனால் மக்கள் அசௌகரியங்களைச் சந்திக்க வேண்டியும் ஏற்படுகின்றது. குறிப்பாக நெடுந்தீவிலுள்ள வரலாற்று மையங்களைப் பார்வையிடச் செல்பவர்கள், சராசரியாக 45 நிமிடங்கள் வரை படகில் பயணம் செய்ய வேண்டியுள்ளதால், மிகுந்த சிரமங்களின் மத்தியிலேயே பயணிக்கின்றார்கள். இதற்கு மாற்றீடாக உல்லாச மையம் அமைந்துள்ள இடங்களுக்கான போக்குவரத்துப் பாதைகளைச் செப்பனிடுவதன் மூலமும், வேகமாகப் பயணிக்கின்ற கடுகதிப்படகுச் சேவைகளை விரிவாக்குதவன் மூலமும் சுற்றுலாப் பயணிகளை ஈர்க்க முடியும்.

**தங்குமிட, உணவக வசதிகள் குறைவாக இருப்பது பின்னடைவே**

வடமாகாணத்துக்கு வரும் பயணிகள் எதிர்நோக்குகின்ற மற்றுமோர் சவாலாக, சுற்றுலா மையங்களை அடுத்துள்ள பகுதிகளில் தங்குமிடங்கள், உணவகங்கள் என்பவை குறைவாக இருப்பதைக் குறிப்பிட இயலும். இதனால் பயணிகள் முதலில் நகரப் பகுதிகளில் தங்கி பின்னர் வெகு தொலைவிலுள்ள சுற்றுலா மையம் நோக்கி நகர வேண்டிய நிலைமை காணப்படுகின்றது. குறிப்பாக குடாநாட்டில் கசூரினா கடற்கரைப் பகுதியில் இத்தகைய தங்குமிடங்களோ தரமான உணவகங்களோ காணப்படாமையினால் பயணிகள் சிரமங்களை எதிர் கொள்ளவேண்டிய நிலைமை ஏற்படுகின்றது. இத்தகைய பிரச்சினைகளால் யாழ்ப்பாண நகரிலிருந்தே உணவு வகைகளையும், குடிதண்ணீரையும் தம்மோடு எடுத்துக் கொண்டு செல்ல நேரிடுகிறது. அது போன்றே நெடுந்தீவின் வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த மையங்கள், மணற்காட்டுக் கடற்கரை போன்றவற்றிலும், கிளிநொச்சி மாவட்டத்தில் கௌதாரிமுனை கடற்பகுதிகள், முல்லைத்தீவில் கொக்கிளாய்க் கடலகம், செம்மலை கடற்கரை, நாயாறு கடல்நீரேரி உள்ளிட்ட பகுதிகளில் எவ்விதமான உணவகங்களோ அல்லது தங்குமிடங்களோ இல்லாமையால் பயணிகள் சிரமங்களைச் சந்திக்கின்றனர்.

நெடுந்தீவுக் கடற்கரை, செம்மலை, மணற்காட்டுக் கடற்கரை, பேசாலை போன்ற கடற்கரைப்பகுதிகளில் திண்மக் கழிவகற்றல் முறையாக மேற்கொள்ளப்படாததால், அந்தக் கரையோரங்கள் பொலித்தீன்கள், திண்மப் பதார்த்தங்கள் நிறைந்து மாசடைந்த நிலையில் காணப்படுகின்றன. அதேபோன்றே மன்னார், கட்டுக்கரைக்குளப் பகுதிக்குள் மக்கள் குப்பைகளை வீசுவதனால் அந்த அழகிய சூழலின் தன்மை இழக்கப் படுவதுடன், அங்குள்ள நன்னீரின் தரமும் குறைவடைந்து செல்லும் அபாய நிலை ஏற்படவுள்ளது.

எனவே பிரதான மையங்களை அடுத்துள்ள பகுதிகளில் தங்குமிடங்கள், உணவகங்கள் போன்ற வசதிகளை ஏற்படுத்தி வழங்குதல் வேண்டும்.

**திட்டமிட்டு வரலாற்றைத் திரிவுபடுத்தும் முயற்சிகள்**

வடமாகாணத்திலுள்ள சில முக்கியத்துவம் வாய்ந்த வரலாற்று மையங்கள் அழிக்கப்பட்டு வந்ததுடன், சில பகுதிகளில் வரலாற்றையே மாற்றியமைக்கும் நிகழ்வுகளும் திட்டமிட்டு நடைபெற்று வந்துள்ளன. குறிப்பாக முல்லைத்தீவு மாவட்டத்திலுள்ள பண்டார வன்னியன் நினைவுக்கல்லைச் சுற்றி அமைக்கப்பட்டிருந்த பாதுகாப்பு வேலிகள் பல முறை இடித்து அழிக்கப்பட்டன. நினைவுக்கல்லை அகற்றும் முயற்சி முறியடிக்கப்பட்டு, தற்போது அது பாதுகாக்கப்பட்டு வருகின்றது. அதே வேளை குடாநாட்டின் புவிச்சரிதவியலில் முக்கியத்துவம் வாய்ந்த நீரூற்றான நிலாவரைக் கிணற்றை அதன் சூழலில் நிலை கொண்டுள்ள இராணுவத்தினரும், அப்பகுதிகளில் நடைபாதைக் கடைகளை நடத்தி வரும் பெரும்பான்மை இனத்தைச் சார்ந்தவர்களும், அங்கு வருகின்ற வெளிமாவட்ட, வெளிநாட்டுப் பயணிகளுக்கு அந்த மையத்தில் "சிங்கள மன்னரொருவர் நீராடிவந்த புனித கிணறு" என விவரித்து வரலாற்றையே மாற்றி அமைக்கும் முயற்சியும் நடைபெற்று வருகின்றது. அதேபோன்று இறுதிப் போரின் பின்னர் அதிகளவான பயணிகள் சென்று பார்வையிட்டு வந்த மிகப் பெரும் தொழில்நுட்பவியலினூடாக கட்டமைக்கப்பட்டு வந்த தரைக்கீழ் வீடு, பாரிய நீச்சல் தடாகம், உள்ளிட்ட சங்கிலி வலையமைப்பில் அமைந்த வரலாற்று மையங்கள் அனைத்தும் இடித்து அழிக்கப்பட்டுள்ளன. இத்தகைய அனைத்து வரலாற்று ரீதியான மையங்களையும்மாகாண,கொழும்பு அரசுகள் இணைந்து பாதுகாப்பதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்ளல் வேண்டும்.

நெடுந்தீவுக் கடற்கரை, செம்மலை, மணற்காட்டுக் கடற்கரை, பேசாலை போன்ற கடற்கரைப்பகுதிகளில் திண்மக் கழிவகற்றல் முறையாக மேற்கொள்ளப் படாததால், அந்தக் கரையோரங்கள் பொலித்தீன்கள், திண்மப் பதார்த்தங்கள் நிறைந்து மாசடைந்த நிலையில் காணப்படுகின்றன. அதேபோன்றே மன்னார், கட்டுக்கரைக்குளப் பகுதிக்குள் மக்கள் குப்பைகளை வீசுவதனால் அந்த அழகிய சூழலின் தன்மை இழக்கப்படுவதுடன், அங்குள்ள நன்னீரின் தரமும் குறைவடைந்து செல்லும் அபாய நிலை ஏற்படவுள்ளது. தொங்குபாலத்தைச் சூழ்ந்துள்ள நிழற்குடைகளின் கீழ் அங்குவருகின்ற பயணிகள் உணவு தயாரித்து, உணவருந்திய பின்னர், எச்சங்களை அதே இடங்களில் விட்டுச் செல்வதனால், அந்தச் சுற்றுச்சூழல் மாசடைந்து செல்கின்றது. எனவே குறித்த சுற்றுலா மையங்கள் எந்தெந்த உள்ளூராட்சிச் சபைகளது ஆளுகைக்கு உட்பட்டவையோ, அந்தந்தப் பிரதேசசபை, நகர சபை, மாநகரசபை போன்றவை அப்பகுதிகளில் முறைமையான திண்மக் கழிவகற்றலை மேற்கொள்ளல் வேண்டும்.

*(43ஆம் பக்கம் பார்க்க)*





# வாசகர் திருமுகம்

## பளை முல்லையடி கிராம மக்களது முன்னுதாரணச் செயற்பாட்டை கவனத்தில் கொள்வோமா?

கிராம மட்டத்தில் வாழும் பொதுமக்கள் சமூகம் சார் பொதுநலத் திட்டங்களில் தம்மிடையே ஒன்றிணைந்து அன்னியோன்யமாகச் செயற்படும் போக்கு அண்மைக் காலமாக எம்மவர்கள் மத்தியில் உயர்ச்சி கண்டு வருகிறது.

அந்த வகையில், மேற்குறித்த கருத்துக்கு ஒரு முன்னுதாரணமாக கிளிநொச்சி மாவட்டம், பளை பிரதேச செயலர் பிரிவிலுள்ள முல்லையடி என்ற கிராமத்தில் வாழும் பொதுமக்கள், தம்மிடையே ஒனறிணைந்து 'நுளம்புகள் அற்ற கிராமம்' என்ற செயற்றிட்டத்தை நடைமுறைப்படுத்த முன்வந்துள்ளமை பாராட்டுக் குரியது; ஒரு வகையில் இன்றைய காலத்தின் முக்கிய தேவையொன்றாகக் கொள்ளத் தக்கது. கோயில்களது நிர்வாகம் உட்பட பல்வகை பொது அமைப்புக்களில் பொறுப்பான பதவிகளைக் கைப்பற்றித் தத்தமது பிரபல்யத்தை உயர்த்திக் கொள்ள முயலும் எம்மவர்கள் மத்தியில், நுளம்புகளது பெருக்கத்தால் சமூகத்தில் இன்றைய காலகட்டத்தில் ஏற்படத்தக்க பயங்கர தொற்றுநோய்களிலிருந்து தமது சமூகத்தையும் தங்களையும் பாதுகாக்கும் நோக்கில் வருமுன் காக்கும் எச்சரிக்கை உணர்வுடன் செயற்பட முன்வந்துள்ள முல்லையடிக் கிராம மக்கள் பாராட்டுக்குரியவர்கள்.

இவர்களது இந்த முன்னுதாரண நடவடிக்கை எம் எல்லோரையும் சிந்திக்க வைக்கட்டும்.

அ.அகிலேந்திரன்
சாவகச்சேரி

## காலத்தின் அவசிய தேவை

எதிர்பாராத கடும் வறட்சியின் பாதிப்பால் தமது விவசாய முயற்சிகளில் பெரும் நட்டத்தைச் சந்தித்த விவசாயிகளுக்கு சிறப்புநிவாரணக் கொடுப்பனவு வழங்குவதாக அரசு முடிவு செய்து இரு மாதங்கள் கடந்த நிலையிலும் அதற்கான அறிகுறி இதுவரை தென்படவில்லை.

இந்த நிலையில் வறட்சியால் பல்வேறு வகைகளிலும் பாதிக்கப்பட்ட விவசாயக் குடும்பங்களுக்கு பத்தாயிரம் ரூபா வீதம் சிறப்பு நிவாரணக் கொடுப்பனவொன்றைக் கூடிய விரைவில் வழங்க கொழும்பு அரசு உறுதியளித்திருக்கிறது. வெறும் வாக்குறுதியாக மட்டும் அமையாது இது செயலுருப்பெற வேண்டுமென்பது எனது எதிர்பார்ப்பு.

**து.கண்ணன், பரந்தன்.**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நீரிழிவும் இருதய நோய்களும்



மருத்துவர் பூ.லக்ஷ்மன்

அநேகமான நீரிழிவு நோயாளிகளை நோக்கின் அவர்கள் தமது பிற்காலத்தில் இருதய நோயாளிகளாக இருப்பதை நாம் அவதானித்துள்ளோம்.

நீரிழிவு நோயாளிகள் தமது குருதியின் குளுக்கோசின் அளவைக் கட்டுப்பாடாக வைத்திருப்பவர்களாயினும்கூட, அவர்களுக்கு இருதய நோய்களுக்கான சந்தர்ப்பம் சாதாரண ஒருவரிலும் பார்க்க இரண்டு தொடக்கம் நான்கு மடங்கு அதிகம் இருப்பதாக ஆய்வுகள் கூறுகின்றன.

> இருதயத்துக்குக் குருதியை வழங்கும் முடியுரு நாடிகளில் கொழுப்புப் படிவுகள் ஏற்படுவதாலும் இந்தக் கொழுப்புப் படிவுகள் உடைந்து குருதிக்கட்டிகள் உருவாவதாலும் இருதயத்தின் அந்தக் குறிப்பிட்ட பகுதிக்கான குருதியோட்டம் தடைப்படுகின்றது. இதனால் அந்தப் பகுதி இறப்படைவதுடன் இருதயத் தொழிற்பாடும் பலவீனம் அடைகின்றது. இது சாதாரணமான ஒருவரிலும் பார்க்க துரிதமாக நீரிழிவு நோயாளி ஒருவரில் ஏற்படும்.

**கட்டுப்பாடற்ற நீரிழிவு நோயானது பாரதூரமான விளைவுகளை ஏற்படுத்தக் கூடியது அவையாவன,**

1. குறைந்த வயதிலேயே இருதய நோய்கள் ஏற்படுதல்.
2. அதிகரித்த குருதி அழுத்தம்.
3. நரம்புகள் பாதிக்கப்படுதல்.
4. கண்கள் பாதிக்கப்படுதல்.
5. பாரிசவாதம்
6. சிறுநீரகப்பாதிப்பு இது நீரிழிவு நோயாளிகளில் ஏற்படும் இருதய நோய்களுக்கான சந்தர்ப்பத்தை மேலும் அதிகரிக்கும்.

**நீரிழிவால் ஏற்படும் இருதய நோய்கள்**

1. முடியுரு நாடிகளில் ஏற்படும் அடைப்பும் இருதயப் பலவீனமும்.
2. இருதயத் தசைகள் செயற்பாடிழத்தலும் இருதயப் பலவீனமும்.

**முடியுருநாடிகளில் ஏற்படும் அடைப்புக்களால் ஏற்படும் இருதய நோய்கள்**

நீரிழிவு நோயாளிகளில் ஏற்படும் பிரதானமான இருதய நோய்கள் முடியுரு நாடிகளில் அடைப்புகள் ஏற்படுவதாலேயே ஏற்படுகின்றன.

இருதயத்துக்குக் குருதியை வழங்கும் முடியுரு நாடிகளில் கொழுப்புப் படிவுகள் ஏற்படுவதாலும், இந்தக் கொழுப்புப் படிவுகள் உடைந்து குருதிக்கட்டிகள் உருவாவதாலும் இருதயத்தின் அந்தக் குறிப்பிட்ட பகுதிக்கான குருதியோட்டம் தடைப்படுகின்றது. இதனால் அந்தப் பகுதி இறப்படைவதுடன் இருதயத் தொழிற்பாடும் பலவீனம் அடைகின்றது. இது சாதாரணமான ஒருவரிலும் பார்க்க துரிதமாக நீரிழிவு நோயாளி ஒருவருக்கு ஏற்படும்.

இவர்களின் வாழ்க்கைமுறைக் கட்டுப்பாடும் குருதியில் குளுக்கோசின் அளவைத் தொடர்ந்து சீரான அளவில் கட்டுப்படுத்தலும், மீள இருதய நோய்கள் ஏற்படுத்துவதற்கான சந்தர்ப்பத்தைக் குறைக்கும் மருந்துகளில் முக்கியமானவை.

1. குருதி உறைவதைக் குறைக்கும் மருந்துகள்,
2. கொழுப்புப்படிவுகளைக் குறைக்கும் மருந்துகள்,
3. குருதி அழுத்தத்தைச் சீராக்கும் மருந்துகள்,
4. இருதயத்துடிப்பைக் குறைக்கும் மருந்துகள்,
5. நீரிழிவு நோய்க்கான மருந்துகள்,

என்பவை அடங்கும்.

நீரிழிவு நோயாளிகளில், சிறப்பாகக் குருதி உறைவதைக் குறைக்கும் மருந்துகளும், கொழுப்புப் படிவுகளைக் குறைக்கும் மருந்துகளும் குருதியின் கொலஸ்ரோலின் அளவு கட்டுப்பாடாக இருப்பினும்கூட வழங்கப்படுதல் அவர்களுக்கான இருதய நோய்க்கான வாய்ப்புக்களை குறைக்கும். 10 ஆண்டுகளில் 10 வீதத்துக்கும் அதிகமாக இருதயநோய் ஏற்படுத்துவதற்கான வாய்ப்புள்ள நீரிழிவு நோயாளிகளுக்கு வாழ்க்கை முறையில் மாற்றங்களுக்கு அஸ்பிரின் மருந்துகள் பரிந்துரைக்கப்படும்.

40 வயதுக்கு மேற்பட்ட நீரிழிவு நோயாளிகள் இருதயநோய்க்கான வாய்ப்பை அதிகரிக்கும் காரணிகளைக் கொண்டிருந்தாலும், கொண்டிருக்காவிடினும் மருந்துகளுக்கு பரிந்துரைக்கப்படுவார்கள்.

40 வயதுக்கு உட்பட்ட நீரிழிவு நோயாளிகள் இருதயநோய்க்கானமருந்துக்களுக்குப் பரிந்துரைக்கப்படுவார்கள்.

40 வயதுக்கு உட்பட்ட நீரிழிவு நோயாளிகளில் காரணங்கள் எதுவுமற்ற நோயாளிகள் ஆண்டு தோறும் பரிசோதனைக்கு உட்படுத்தப்படுவார்கள்.

**இருதயநோய் சிகிச்சை நிபுணர்,
யாழ்.போதனா வைத்தியசாலை.**

# உலக மங்கோலிஸ
## விழிப்புணர்வு தினம் மார்ச் 21

ச.சஸ்ரூபி

மங்கோலிஸ நிலைமையானது 21ஆம் பரம்பரை அலகில் ஏற்படும் பிறழ்வான சேர்க்கையால் பிறப்பின் போதே உடல், உள சார்பான அசாதாரண குணங்குறிகளைக் காட்டுவதைக் குறிப்பிடும். இந்த நிலைமையானது (JoHn Landon Down) இனால் விவரிக்கப்பட்டமையால் அவரின் பெயரால் "Down Syndrome" என அழைக்கப்படுகிறது. இந்த நிலையானது உடல் வினைத்திறன் மற்றும் மூளையின் வினைத்திறனைப் பின்னடைவான வளர்ச்சியிலேயே கொண்டு செல்லும் தாயின் கர்ப்பகால வயது 35 வருடங்களைத் தாண்டுகையில் பிறக்கும் பிள்ளைகள் இவ்வாறான குறைபாடுகளைக் கொண்டிருக்க சாத்தியப்பாடு உள்ளது. இந்த நிலைமையை அறிந்து கொள்வதற்காக கர்ப்ப காலத்திலேயே தாயின் வயிற்றை ஸ்கான் செய்து பார்த்தல், தாயின் வயிற்றினூடு ஊசியைச் செலுத்தி சிசுவைச் சுற்றியுள்ள சடைமுளை மற்றும் பாதுகாப்புக் கவசத்தினுள் உள்ள திரவம் மற்றும் சிசுவின் தொப்புள் கொடியின் குருதி மாதிரிகள் பெற்றுப் பரிசோதனை செய்வதுண்டு. இவ்வாறு சிசுவுக்கு மங்கோலிஸ நிலை காணப்படும் சாத்தியங்கள் காணப்பட்டால் சில நாடுகளில் அந்தச் சிசுவை அழிக்கக் கூடியவசதிகள் உண்டு.

இந்த நிலைமையுடன் பிறக்கும் பிள்ளையின் தலை பருமனில் சிறிதாகக் காணப்படுவதுடன் தலையின் பின்பகுதி தட்டையானதாகக் காணப்படும். கண்கள் மேல் நோக்கியதாகவும், கண்ணில் மேல் இமைகள் சாய்வானதாகவும், கண்ணின் கருவிழிக்கு அருகில் வெண்ணிறப் பொருள்களும் காணப்படும். காது சோணையானது சிறிதாகவும் சற்று இறக்கப்பட்டதாகவும் காணப்படும். மூக்குத் தட்டையானதாகக் காணப்படும். இவர்களின் நாக்கு வெளிநோக்கியதாகவும் காணப்படும். அதேவேளை பற்கள் ஒழுங்குவரிசையில் அமையாமல் மேல் கீழ் பற்கள் பொருந்தாமல் காணப்படும். கழுத்துப்பகுதியானது அகன்றதாக ஆனால் குட்டையானதாகக் காணப்படும். தலைமுடிகள் ஐதானதாகக் காணப்படும். கைரேகையானது தனித்ததாகவும் ஆழமானதாகவும் காணப்படும். அதேபோன்று பாதத்தின் உட்பக்கமாக நீண்டதான ஒருமடிப்புக் காணப்படும். கால் விரலைப் பொறுத்த வரையில் பாதத்தின் பெருவிரலுக்கும் இரண்டாவது பெருவிரலுக்கும் இடையில் பெரிய இடைவெளி காணப்படும் இவர்களின் தசை செயற்பாடானது வலிமை குன்றியதாகக் காணப்படும்.

இவர்களது முகம் சிரித்தபடி காணப்படுவதால் "Cheerful idiots" என அழைக்கப்படுவர். இவர்கள் இலகுவில் உணர்ச்சிவசப்படக்கூடியவராக இருப்பர். இவர்களின் விருத்திப்படிமுறைகள் மந்தமான கதியிலேயே இடம்பெறும். இவர்களின் வாழ்வின் ஆரம்பகட்ட விருத்திப்படிமுறையில் நடக்கஎத்தனித்தல், நடத்தல், இருத்தல், கதைத்தல் போன்ற செயற்பாடுகளை சிரமப்படி பழக்கவேண்டும். இவர்களின் விவேகத்திறன் 40-80 வரையில் இருக்கும். மேலும் பிறவியிலேயே இதயநோய்கள், கண்புரைநோய் , சுவாசநோய் பார்வைமற்றும் செவிப்புலன் குறைபாடு, தைரொயிட் சுரப்பிகுறைபாடு, வலிப்புநோய் போன்ற பிரச்சினைகளும் காணப்படும்.

இந்த நிலைமையுடன் தொடர்புபட்ட உடல் , உள சம்பந்தப்பட்ட நோய்களுக்குச் சிகிச்சையளிப்பது அவசியமாகிறது. மேலும் இவர்களின் உடலின் தசைவலிமையை பேண இயன் மருத்துவ சிகிச்சையும் தேவைப்படுகிறது. மேலும் பேச்சு வழிச்சிகிச்சை போன்ற பல சிகிச்சை முறைகளும் தேவைப்படுகின்றன.

இந்த நிலையால் பாதிப்புற்றோரின் மீது சிறப்பு கவனம் செலுத்தவேண்டும் என்பதை வலியுறுத்தும் முகமாக ஒவ்வொரு ஆண்டும் மார்ச் மாதம் 21ஆம் திகதி "மங்கோலிஸ விழிப்புணர்வு தினம்" ஆக பிரகடனப்படுத்தப்பட்டுள்ளது. 2017 ஆம் ஆண்டுக்குரிய தொனிப்பொருளாக அமைவது யாதெனில் " எனது குரல், எனது சமுதாயம்" என்பதாகும். அதாவது மங்கோலிஸ நிலை உடையவர்களை ஒரு குழுமமாக இணைத்து அவர்களின் குரலினாலே இந்த சமுதாயத்துக்குத் தம் கருத்துக்களை முன்வைக்கச் செய்தலாகும். "எமது சுகாதாரம், எமது கல்வி எமக்கொருதொழில் வாய்ப்பு, எமக்கு ஒரு வாழ்விடம் எம்மைச் சுற்றி நண்பர்கள் என்ற தேவைகள் எமக்கு வேண்டும் என்பதைத் தெரியப்படுத்தலாகும். மேலும் நாம் சொல்லும் விடயங்களை மற்றவர்கள் செவிமடுக்க வேண்டும் என்பதாகும். அதாவது எமது குடும்பம், நண்பர்கள், அயலவர்களுடன் கதைத்தல், நாம் சந்திக்கும் மனிதர்களுடன் கதைத்தல் நாம் படிக்கும் பாடசாலை கல்லூரியில் அல்லது வேலை செய்யும் இடத்திலுள்ள சகமனிதர்களுடன் கதைத்தல், தீர்வுகளை மேற்கொள்ளும் சமுதாயம் மற்றும் அரசுடன் கதைத்தல் போன்றவற்றுக்கு எமக்கு இடமளிக்கப்பட வேண்டும் என்பதாகும்.

மேற்குறிப்பிட்ட செயற்பாடுகள் மூலம் மங்கோலிஸ நிலைமை உள்ளயாவரையும் ஒற்றுமைப்படுத்தி அவர்களின் பலத்தை அறியச்செய்து இந்தச் சமுதாயத்தில் ஒரு பொருட்டாக மதித்து வழிநடத்த வேண்டும்.


BSc (Nursing> M.Phil (Reading)
நீரிழிவு சிகிச்சை நிலையம் யாழ்ப்பாணம்






Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

சூரியகாந்தி
உதயன்



# இட்லிப் என்பது இரண்டாவது முள்ளிவாய்க்கால்

■ யாதுமாகி

அந்தப்பயங்கரத்தாக்குதல் நாமிருந்த பகுதியில் நடந்தது. பழுப்பு நிறத்திலானபனிமூட்டம்போன்ற புகை எம்மைச் சுற்றிச் சூழ்ந்து கொண்டது. எனது கண்கள் எரிந்தன. பின்னர் சிறிது நேரத்தில் சுவாசிக்க மிகவும் சிரமப்பட்டேன். மூச்சுத் திணறியது. சோர்வும் மயக்கமும் ஏற்படமூக்கால்நீரும்வாயால்நுரையும் வந்தது. எனது குழந்தையும் மனைவியும் துடிதுடித்து இறந்து கொண்டிருப்பதை நான் மயக்கநிலையிலிருந்து பார்த்துக் கொண்டிருந்தேன்" இது, கடந்த செவ்வாய்க்கிழமை சிரிய அரச படைகளால் அல்லது சிரிய அரச ஆதரவுப் படைகளால் இட்லிப் நகரில் நடத்தப்பட்ட இரசாயனத் தாக்குதலில் சாவடைந்த நூற்றுக்கணக்கானோருக்குள் தனது இரட்டைக் குழந்தைகளையும் காவுகொடுத்த அப்துல் ஹமீட் யூசொப் என்ற தந்தையின் அழுகுரல்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



தமிழர் தாயகத்துக்கான போருக்கும் சிரியாவில் நடக்கும் போருக்கும் மிகப்பெரிய வேறுபாடொன்று உள்ளது. அது என்னவெனில் அங்கு ஆட்சியில் இருப்பவர் சிறுபான்மையினரின் தலைவர். அதாவது இலங்கைத் தீவில் தமிழர் ஒரு வர் அரச தலைவராக இருந்து, பெரும்பான்மையினரான சிங்கள மக்கள் தமது உரிமைக்காகப் போராடும் நிலவரத்தைக் கற்பனைசெய்து பாருங்கள்...! எது எப்படியோ இன்று சிரியாவின் இட்லிப் என்பது இரண்டாவது முள்ளிவாய்க்காலாக, மனித ஓலம் நிறைந்து வழிகின்றது.

இரட்டைக் குழந்தைகள் மட்டுமல்லாமல் இவருடைய குடும்பத்தில் 22பேர் வரை இந்தத் தாக்குதலில் கொல்லப்பட்டுள்ளனர்.

**மக்களைக் கொல்லும் சிரிய அரசு.**

சிரியாவில் சியா, சன்னி என்ற இரு பிரிவுடைய இஸ்லாமியர்கள் வாழ்ந்து வருகின்றார்கள். சன்னி பிரிவைச் சேர்ந்தவர்களே சிரியாவின் பெரும்பான்மையினர் சிரிய ஜனாதிபதி அல் அசாத், சியா பிரிவைச் சேர்ந்தவர். அவரைப் பதவியில் இருந்து இறக்கவேண்டும் என்ற கோரிக்கைகளுடன் தோற்றம்பெற்ற சன்னி பிரிவு அழுத்தக்குழுக்கள் படிப்படியாக அரசுக்கு எதிரான ஆயுதக் குழுக்களாக மாற்றம்பெற்றன. கடந்த 2011ஆம் ஆண்டு முதல் அங்கு உள்நாட்டுப் போர் நடைபெற்று வருகின்றது. அலெப்போ. இட்லிப் உள்ளிட்ட முக்கிய இடங்கள் கிளர்சியாளர்களின் பிடியிலேயே உள்ளன. அவற்றைமீட்கச்சிரிய அரசுக்குரஷ்யா ஆதரவாக உள்ளது. இலங்கையில் எமது இனத்துக்காகப் போராடியவர்களுக்கு எமது மக்கள் எவ்வாறான ஆதரவைக்கொடுத்தார்களோகிட்டத்தட்ட அவ்வாறான ஓர் நிலைப்பாடுதான் சிரியாவிலும். இதனால் கிளர்ச்சிக் குழுவுடன் சேர்ந்திருக்கும் மக்களை, சிரிய அரசும் அதன் ஆதரவுபெற்ற சக நாடுகளும் கிளர்ச் சியாளர்கள் என்றெ கருதுகின்றன. அப்படியே இங்குள்ள நிலைப்பாடைப் போல. இதனால்தான் கண்மூடித்தனமான தாக்குதல்கள் அங்கு அடிக்கடி நிகழ்கின்றன.

**மூச்சுவிட முடியாமல் இறந்தன குழந்தைகள்**

கடந்தசெவ்வாய்க்கிழமைவழக்கம்போலதுப்பாக்கிச் சன்னங்களுக்குள்ளும் பீரங்கி வேட்டுகளுக்குள்ளும் சிரிய மக்களதும் குழந்தைகளதும் பொழுதுகள் உருண்டோடிக் கொண்டிருந்தன. அன்றுதான் தமது இறுதி நாள். தாம் சுவாசிக்கச் சிரமப்பட்டுச் சாவடைவோம் என்று அவர்கள் அறிந்திருக்கவில்லை. விமானங்கள் மூலம் இரசாயனக்குண்டுத்தாக்குதல்கள்மேற்கொள்ளப்பட்டன. இந்தத் தாக்குதலுக்குப் பயன்படுத்தப்பட்ட மோசமான இரசாயனம் உடனடியாகவே காற்றுடன் கலந்து அந்தப் பகுதி முழுவதும் பரவியது. உடலின் நரம்புமண்டலத்தைத் தாக்கி உயிரிழப்பைஏற்படுத்தும்கொடூர இரசாயனமானஅது. அந்தச்சாத்தான்முதலில்பிஞ்சுக்குழந்தைகளின் உயிரைப் பறித்தது. தமது பிள்ளைகளின் உயிர் பிரியும்வலியைப்பெற்றோர்களால்நினைவாற்றல் குறைந்த நிலையிலிருந்து பார்க்கவே முடிந்தது. அதற்கடுத்து கொஞ்சம் கொஞ்சமாக அவர்களின் உயிரும்பிரியமுற்பட்டது. இரசாயனத்தால் பாதிக்கப்பட்ட அவர்களில் சிலர் நீர் விசிறிச் சுத்தம் செய்யப்பட்டு உடனடியாக வைத்தியசாலைக்குக்கொண்டுசெல்லப்பட்டுக்காப்பாற்றப்பட்டார்கள். அங்குதான் இந்தப்போர்க்குற்றத்தின் சாட்சியங்கள் வானதிர முழங்குகின்றன.



**குறிதவறிக் குழந்தைகளைக் கொன்றது!**

கிளர்ச்சியாளர்களைக் குறிவைத்து மேற்கொள்ளப்பட்ட குறித்த தாக்குதலின் இலக்குத் தவறிவிட்டதால்அப்பாவிப்பொது மக்கள்கொல்லப்பட்டதாகச்சிரியாவின் அரச ஊடகங்கள் செய்தி வெளியிடும் நிலையில், குறித்த பகுதியில் மேற்கொள்ளப்பட்ட சாதாரண குண்டுத் தாக்குதலில் கிளர்ச்சியாளர்கள்வசமிருந்தஇரசாயனக்குண்டுகள்வெடித்துவிட்டன என்று சிரியாவின் இராணுவத்தரப்பினர் கூறுகின்றனர்.



ஆனால் குறித்த தாக்குதல் நடந்த சில மணிநேரங்களிலேயேஅதன்பயங்கரஅழிவுவெளித்தெரிந்ததும் ஐக்கிய நாடுகள் சபை உடனடியாகத் தனது கண்டனத்தையும் இது போர்க்குற்றம் என்ற அறிவிப்பையும்வெளியிட்டது.

அத்துடன் குறித்த இரசாயனக்குண்டுகள் வான் வழியாக விமானம் மூலம் கொண்டு செல்லப்பட்டே மக்கள் மீது வீசப்பட்டன என்றும்தெரிவித்தது. ஐ.நா.சபை மட்டுமன்றி உலக நாடுகள் பலவும் இதைக் கண்டித்திருக்கின்றன. ஒருபுறம் இதை நிகழ்த்தியது ரஷ்யா என்றும் குற்றம் சுமத்தியிருந்தன. இந்த நிலையில்தான் அமெரிக்க ஜனாதிபதிட்ரம்பின்அவசரகட்டளைக்குஇணங்கச் சிரியாவில் குறித்த பகுதியில் இரசாயனக் குண்டுகளைக் கொண்டுசென்று வீசியிருந்த சிரிய அரசின் இராணுவத்தளம் தாக்குதலுக்கு உள்ளாகியிருக்கிறது. அதனால் ரஷ்யா - அமெரிக்கா இடையேஇப்போதுமுறுகல்நிலைதோன்றியுள்ளது. சிரியா மேற்கொண்ட இந்தக் கொடூரமான இரசாயனத்தாக்குதல் ஏராளமாகக் குழந்தைகளின் உயிர்களையே பறித்துச் சென்றிருக்கின்றது. அது சிரியாவில் மட்டுமன்றி உலக நாடுகள்முழுவதிலும்பெரும்சோகத்தைஏற்படுத்தியிருக்கின்றது.

**அடுத்தகட்ட அரசியல் நகர்வு**

உலக நாடுகளின் முழுப் பார்வையும் தற்போது சிரியாவிலயே குவிந்துள்ளது. மூன்றாம் உலகப்போருக்கானதொடக்கப்புள்ளிசிரியாஎன்றும் கருதப்படுகின்றது. ஏனெனில்இரசாயனத்தாக்குதலைக் கண்டித்து அமெரிக்கா கடந்த வியாழக்கிழமை சிரிய விமானப் படைத்தளத்தில் தாக்குதல்நடத்தியது. சிரிய உள்நாட்டுவிவகாரத்தில் அந்த நாட்டுக்கு ரஷ்யா பகிரங்கமாக ஆதரவுடன்செயற்பட்டுவருகிறது. இந்தநிலையில், அமெரிக்காவின் இந்தத் தாக்குதல் கிட்டத்தட்ட ரஷ்யா மீதும்அதன்இராணுவவலிமைத்தன்மைமீதும் நடத்தப்பட்ட தாக்குதலே என்று கருதப்படவதால் அமெரிக்காவுக்கும்ரஷ்யாவுக்கும்நேரடிமுறுகல்கள் ஏற்படலாம். இதற்கு அச்சாரமாக தாக்குதல் நடந்து சிலமணி நேரங்களில் அமெரிக்காவுக்குப் பகிரங்கமான கண்டனத்தைத் தெரிவித்துள்ளது ரஷ்யா. அமெரிக்காவுடன் நல்லுறவு தொடர்பில் மீண்டும் பரிசீலனை செய்யவேண்டிய தேவை ஏற்பட்டுள்ளது என்று புடின் தெரிவித்துள்ளார்.

அவ்வாறு அமெரிக்காவுக்கும், ரஷ்யாவுக்கும் இடையில்நேரடிமோதல்வெடித்தால்ரஷ்யாவுக்கு ஈரான்உடனடிஆதரவைக்கொடுக்கும். அமெரிக்காவுக்குத்துருக்கிஆதவைத்தெரிவிக்கும். சிரியாவில் நிகழும் அவலத்துக்கு ரஷ்யாவே காரணம் என்று ஜேர்மனி தாக்குதல் நடந்த அடுத்த நாளே நேரடியாகச்சுட்டிக்காட்டியது. இதனால்இந்த விவகாரத்தில்அமெரிக்காவுடன்ஜேர்மன்கைகோர்க்க வாய்ப்புஎன்பதைக்காட்டுகின்றது. அண்மையில் அமெரிக்கஜனாதிபதி ட்ரம்புக்கும், ஜேர்மன்அதிபர் மெர்கலுக்கும் இடையிலான சந்திப்பு நடைபெற்றது. இதனால் இந்தக் கூட்டணி சாத்தியமே. இந்த இரு பிரிவு ஆதரவுக் கூட்டணி இணைவு என்பது மீண்டும் ஓர் உலகப்போரைக் கொண்டுவந்தாலும் வியப்புக்கு ஒன்றுமில்லை. உலகின் சக்தி வாய்ந்த நாடுகளில் ஒன்றான சீனா எந்தப்பக்கம் சாயும்என்பதேதற்போதுள்ளகேள்வி. ஏனெனில் சீனாவுக்கும், அமெரிக்காவுக்கும்நீண்டகாலமாக ஆகாத நிலைப்பாடே உள்ளது. ஆனால் அமெரிக்காவின் அத்துமீறிய தாக்குதலுக்கு இதுவரைச் சீனா கண்டனம் தெரிவிக்கவில்லை. தவிர, ட்ரம்புக்கும் சீன ஜனாதிபதிக்கும் இடையிலான சந்திப்பும்இந்தவாரம்நடைபெற்றுள்ளது. எனவேசீனா எந்தக் கூட்டணி என்பதேதற்போதுள்ள கேள்வி.

எனினும், தமிழர் தாயகத்துக்கான போருக்கும் சிரியாவில்நடக்கும்போருக்கும்மிகப்பெரியவேறுபாடொன்று உள்ளது. அது என்னவெனில் அங்கு ஆட்சியில்இருப்பவர்சிறுபான்மையினரின்தலைவர். அதாவது இலங்கைத் தீவில் தமிழர் ஒருவர் அரச தலைவராக இருந்து, பெரும்பான்மையினரானசிங்களமக்கள்தமதுஉரிமைக்காகப்போராடும்நிலவரத்தைக்கற்பனைசெய்துபாருங்கள்...! எதுஎப்படியோஇன்றுசிரியாவின் இட்லிப்என்பது இரண்டாவது முள்ளிவாய்க்காலாக, மனித ஓலம் நிறைந்து வழிகின்றது. ■



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# நூல் அறிமுகம்

தொகுப்பு: மல்லிகா


வாழ்க்கையில் நலம் பெற்று
மகிழ்ச்சியாக வாழ வழிகாட்டும்
அவதார புருஷர்களின்
நாளொரு
அருள் வாக்குகள்
'அருள்நெறிச்செல்வர்' 'ஞானசித்தன்'
வீ. செல்வரத்தினம் J. P.

**நூல் : அருள் வாக்குகள்**
**(வாழ்க்கையில் நலம் பெற்று மகிழ்ச்சியாக வாழ வழிகாட்டும் அவதார புருஷர்களின் நாளொரு அருள் வாக்குகள்)**
**தொகுப்பு : அராலியூர் வி.செல்வரத்தினம் (ஜே.பி)**
**வெளியீடு : வி.செல்வரத்தினம்**
**விலை : 75 ரூபா**

**ஆன்மாவைத் தரிசிக்க வைக்கும் புத்தகம்**

ஆன்மிக நாட்டத்தையும் முயற்சியையும் மேற்கொள்கிறவர்களுக்குக்கைகொடுத்துநிற்கின்றது அருள்வாக்குகள் நூல். ஒரு மனிதனுடைய வாழ்க்கையில் ஞானம், கர்மா ஆகிய இரண்டும் முக்கிய இடம்பெறுகின்றன. ஆனால், பக்தி இல்லா விட்டால் இவை இரண்டும் பயன்தரமாட்டா. அத்தகைய பக்தி மனிதனுள் மலர்ந்து, அவன் தனது ஆன்மாவைத்தரிசிப்பதற்கு வழிகாட்டிநிற்கின்றது இந்நூல். ஆன்மாபற்றிய உண்மையான அறிவை நாம் பெற்றுவிட்டால், எந்தத் துன்பத்தாலும் எம்மை எதுவும்செய்துவிடமுடியாது. அதற்கு மகான்களும் அருளாளர்களும் அருளியவாக்குகள்மற்றும்நற்சிந்தனைகளைப்படிக்க வேண்டும். அத்தகைய சிந்தனைமுத்துக்கள் அடங்கிய இந்நூல், அனைவரும் படித்துப் பயன்பெற வேண்டிய ஒன்று.

அராலியூர் வி.செல்வரத்தினம், ஒருசிறந்த ஆன்மீகஎழுத்தாளர். கணித, விஞ்ஞான உயர்வகுப்பு மாணவர்களுக்கு உகந்த நூல்களை ஆக்கிப் பெரும் புகழ் பெற்றவர். எண்ணற்ற நூல்களின் சொந்தக்காரர். இன்றும்எழுத்துலகில் இயங்கிக்கொண்டிருக்கும் அயராத ஆளுமை. அவரது எழுத்துலகம் மலர்ந்து மணம்வீச, வாழ்த்துக்கள்.

**நூல் : கீறல் (சிறுகதைத் தொகுப்பு)**
**ஆசிரியர் : மலரன்னை**
**வெளியீடு : மலரன்னை வெளியீடு, மாங்குளம்.**
**விலை : 300 ரூபா**

**சமகாலத்தைப் பதிவாக்கியுள்ள சிறுகதைகள்**

போருக்குப் பின்னரான தமிழ்ச் சூழலில் நிலவும் பிரச்சினைகளைக் கலைநயத்துடன் பேசுகின்றது கீறல் (சிறுகதைத் தொகுப்பு) நூல்.

எழுத்தாளனுக்கும் அவன் வாழ்கின்ற சூழலுக்கும் நெருங்கிய தொடர்பு உண்டு. இதற்கு மலரன்னையும் விதிவிலக்கல்ல. கடந்த 30 ஆண்டு காலத்தில் எமது இனம் சந்தித்த நெருக்கீடுகள், சிறுவர்துஷ்பிரயோகம், போதைப்பொருள்பாவனை, பெண்தலைமைத்துவக்குடும்பங்களின் நெருக்கடி, மதுப்பாவனையின் விளைவுகள், காணாமல் ஆக்கப்பட்டோர் குடும்பங்களின் பிரச்சினைகள், மாற்றுத்திறனாளிகள் எதிர்கொள்ளும் பிரச்சினைகள் எனச் சமகாலத்தைக் கதைகளினூடு பதிவாக்கியுள்ளார் ஆசிரியர். விடியலின் சாயல் முதல் நிலை மாறும் உலகம் வரை 23 சிறுகதைகள் நூலை அலங்கரிக்கின்றன. கதைகள் யாவும் எளிய மொழிநடையில் பின்னப்பட்டுள்ளன.

ஈழத்துப் பெண் எழுத்தாளர் பட்டியலில், மலரன்னைக்கும் ஓர் இடம் உண்டு. "வேர் பதிக்கும் விழுதுகள்" (சிறுகதைத் தொகுப்பு) மற்றும் "மறையாத சூரியன்" (நாவல்) முதலான நூல்களை இவர் வெளியிட்டுள்ளார். போர்ச்சூழலில் இவரது நூற்றுக்கணக்கான சிறுகதைகள் அழிவடைந்து விட்டன. ஆயினும், தன் காலத்தை இலக்கியத்தில் பதிவாக்கும் முனைப்புடன் இயங்கிக்கொண்டிருக்கிறார்.






# வருவீர் உளரோ?

அராலியூர் நிலா

அன்பிலும் பண்பிலும் அறத்தை வளர்த்து, அகிலத்துக்கு எடுத்துக்காட்டாக வாழ்ந்த வர்கள் தமிழர்கள். வந்தாரை வரவேற்று உபசரிப்பதில், உலகத்தையே விஞ்சி நின்றவர்கள். அத்தகைய ஒரு இலக்கியச்சித்திரத்தைநறுந்தொகைஎனப்படும் குறுந்தொகை இலக்கியத்தில் காணலாம்.

வந்த விருந்தினரை உபசரித்த பின்னர் வரு விருந்தை (விருந்தினர்) எதிர்நோக்கிக் காத்திருக்கும் தலைவி, கூடிக் களித்த பின் பிரிந்து சென்றுவிடும் காதல் தலைவன் மாற்று வடிவிலேனும் ஓடிவரமாட்டானா... என்று ஏங்கி நிற்கின்றாள். வாசல் வந்து பார்ப்பதும், ஏமாற்றத்தில் திரும்பு வதும் என அவளது நேரம் கழிக்கிறது. நெஞ்சத்தில்பெரும்காதல்வளர்த்திருந்தாலும் அவள் தன் கடமை தவறியதில்லை. இதோ அந்தச் சொற்சித்திரம்...

*புள்ளும் மாவும் புலம்பொடு வதிய*
*நள்ளென வந்த நார்இல் மாலை*
*பலர்புகு வாயில் அடைப்பக் கடவுநர்*
*வருவீர் உளீரோ எனவும்*
*வாரார் தோழிநம் காத லோரே!*
*(குறுந்தொகை: 118–நன்னாகையார்)*

தோழி! மிக்க செறிவாக வந்த இரக்கமற்ற மாலைப்பொழுதில், பறவைகளும் விலங்குகளும் தத்தம் கூட்டில் தனிமையில் உறையும்.

இரவில் வீட்டின் கதவை அடைப்பதற்கு முன் திண்ணையில் எவரேனும் வழிப்போக்கர் உள்ளனரோ என்று பார்ப்பதற்காக, புதிதாய் (விருந்து) வீட்டுக்குள் வருவீர் எவரும் உளரோ? என்றுகேட்கும்போதெல்லாம் விருந்தாகவேனும் தலைவர் வருவாரோ என்று நெஞ்சம் ஏங்கும்! அந்தோ!! தலைவரும் வாரார் என்று தனது பரிதாப நிலையைத் தலைவி தோழியிடம் பகர்ந்து கொள்கின்றாள். இங்கு புதிதாய் வருவோர் வழிப்போக் கர்கள். இவர்கள் விருந்து எனப்பட்டனர். அறிமுகமில்லாதவர்களுக்கும் அடைக்கலம் அளிக்கும் சீரிய பண்பாடு, தமிழ்ப் பண்பாடு. காற்று உள்ள காலம் வரை நிலைத்திருக்கும், இந்தப் பண்பாடு.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# காத்திருக்கின்றேன்



என் கனவுக்கன்னி அவள்
தினமும் அதில் அவள்
எனக்குத் தரிசனமும் தருவாள்

காலையும் மாலையும்
தவறாமல் சந்திப்போம்
சில வேளைகளில் நள்ளிரவுகள்கூட
அவளுடன் கழியும்

அன்றும் அப்படித்தான்
அவளுடன் நெடுநேரம்
கழித்திருந்தேன்
அடுத்த நாளும் அதே
இடத்தில் சந்திப்பதற்கு
இருவருக்கும் சம்மதம்

அந்த இடம் நாங்கள் முதல் முத்தம்
சுவைத்த இடம்
அவளுடன் அண்மித்திருந்து
தினமும் அவளின் தேகச் சூட்டை
நுகர்வதும் அங்குதான்

காலிரண்டையும் கொக்கியிட்டு
அமர்ந்து நீண்டதாய்த்
தினமும் அரட்டையும் அடிப்போம்

இருவருக்கும் இடையில்
இடைவெளிகள் இல்லாமல்
கைகளைக்கூட என்னுள் அவளும்
அவளுள் நானும் புதைத்திருப்போம்
அங்கு வீசும் மெல்லிய காற்று
எம்மைக் கடப்பதாயின்
பிரிந்தே செல்லும்

இன்று நான் அவளின் வருகைக்காய்
நீண்டநேரம் காத்திருக்கின்றேன்
சிறிது தாமதமாகத்தான்
இன்று வருவாள் என
அவள் கூறியிருந்தாள்
அத்துடன் எமது காதலையும்
காமத்தையும் உயிருள்ளவரைக்கும்
நீடிக்கப் பெற்றோர்கள் சம்மதம்
என்றும் மகிழ்ந்திருந்தாள்
தூக்கம் கலைந்திடாமல்
பார்த்துக்கொண்டு
உவகையுடன் நான் காத்திருக்கின்றேன்

■ குலதீபன்




# ஊடகத்தில் உண்மை அவசியம்

ஊடகமாயின்அதுநடுநிலையையும்உண்மையையும் கடைப்பிடிக்க வேண்டும் எனும் கொள்கை கொண்ட இளைஞனுக்கும் அதற்கு முற்றிலும் மாறாகச் செயற்பட்டுக் கொள்ளும் அவன் வேலை செய்யும் ஊடகத்தின் உரிமையாளருக்கும் இடையில் தோன்றும் முரண்கள் தான் 'கவண்'. கோ படத்தை அடுத்து, கே.வி. ஆனந்த் ஊடகப் பின்னணியைச் சித்திரிப்பதாய் இயக்கியிருக்கும் இரண்டாவது படம் இது. கே.வி. ஆனந்த் ஒரு படத்தின் மையப்புள்ளியாக எதை எடுத்துக்கொள்கின்றாரோ, அதை முடிந்தவரை துல்லியமாகத் தர முயற்சிக்கும் ஓர் இயக்குநர்.

அவரது முந்தைய படங்களான கனா கண்டேன், அயன், கோ, அநேகன் ஆகிய படங்களில் வரும் அலுவலகங்கள் காட்சிப்படுத்தப்பட்டிருக்கும் விதம் இதற்கு ஒரு உதாரணம். இந்தப் படத்திலும் ஒருதொலைக்காட்சிஅலுவலகத்தைகண்முன்னேதுல்லியமாகக் கொண்டுவர முயல்கின்றார் கே.வி. ஆனந்த். படத்தின் ஆரம்பத்திலேயே, ஒரு தொலைக்காட்சி நிறுவனத்தின் தொழில்நுட்ப அம்சங்களை விளக்கி கதைக்குள் அழைத்துச் செல்வது நல்லதொரு முயற்சி.

தொலைக்காட்சி ஊடகமொன்றில் வேலைக்குச் சேரும் திலக் (விஜய் சேதுபதி) நடுநிலையாகச் செய்திகளை வழங்குகின்றார். ஆனால், அதன் உரிமையாளர் கல்யாண் (அகாஷ்தீப் சைகல்) அந்தச் செய்திகளைப் பலவாறாகத் திரித்து வெளியிடுகின்றார். அரசியல்வாதி தீரன் மணியரசுவின் (போஸ்வெங்கட்) தொழிற்சாலைக் கழிவால் ஏற்படும் பாதிப்புக்களுக்கு எதிரான இளைஞர்களின் போராட்டத்தையும் தொலைக்காட்சி தனக்குச் சாதகமாகப் பயன்படுத்திக்கொள்கின்றது. போஸ் வெங்கட்டின் மதிப்பைத் தொலைக்காட்சி மூலம் அதிகரிப்பதையும் அவருடன் கொண்ட உள்ளகத் தொடர்பால் குறித்த தொலைக்காட்சி செய்கின்றது.

இதையெல்லாம் எதிர்த்து அந்த ஊடகத்திலிருந்து வெளியேறும் விஜய் சேதுபதியும் அவரது நண்பர்களும் குறித்த ஊடகத்தைக் கட்டுக்குள் வைத்திருப்பவர்கள் உண்மைக்குப் புறம்பாகச்செயற்படுவதைவெளிக் கொணர என்னவெல்லாம் செய்கின்றார்கள் என்பதே கதை.



தொலைக்காட்சி ஊடகத்தின்பின்னனியில்இருக்கும் உள்ளகச் சதி, அரசியல்கூட்டுச்சதியை அழுத்தமாகக்காட்டியதற்காகக் கே.வி.ஆனந்தைப் பாராட்டலாம். நேரடி நிகழ்ச்சிகளில் நடைபெறும் மலினமான சில சம்பவங்களையும் அம்பலப்படுத்துகின்றார். அவசர(விரைவான) செய்திக்கான தவிப்பும், பரபரப்பும்தொலைக்காட்சிகளின் அணுகுமுறைகளைப்பாதிப்பதைத் தோலுரித்துக் காட்ட முனைந்திருக்கின்றார். அரசியல்வாதியையோ அவை சார்ந்த விடயங்களையோ மகிமைப்படுத்தவோ கொச்சைப்படுத்தவோ ஊடகங்களால் முடியும் என்பதையும் காட்டுகின்றார்.

ஆனந்த், கபிலன் வைரமுத்து, சுபா ஆகியோர் இணைந்து எழுதியுள்ள திரைக்கதையும்வசனங்களும் ஊடகங்களின் செயல்பாடுகளை நுட்பமாகக்காட்டுவதோடு அவற்றின் இருண்ட முகங்களையும் அம்பலப்படுத்துகின்றன. ஆனால், பலகாட்சிகள் மிகையான அழுத்தம்காரணமாகப்பலவீனமாக இருக்கின்றன. உதாரணமாக போஸ் வெங்கட்டின் நேர்காணல். மிகக் காத்திரமாக அமைந்திருக்க வேண்டிய இந்தக் காட்சி கேலிக் கூத்தாகிவிடுகின்றது. அத்துடன் அரசியல்வாதியின் புகழைக் கூட்டுவதற்காக ஏற்பாடு செய்யப்படும்நேர்காணலைநேரலையாகஒளிபரப்பும்முறையும் யதார்த்தமற்றது.


ஊடக அறத்தை வெளிப்படுத்தும் கதாபாத்திரத்தில் விஜய் சேதுபதி பிரகாசிக்கின்றார். கைவிட்டுப்போகும்காதலைமீண்டும்பெற முயற்சிப்பது, தார்மீக ஆவேசம் கொள்வது, ஆற்றாமையால் துடிப்பது, அலட்டிக்கொள்ளாமல் செயற்படுவது என எல்லா அம்சங்களிலும்நல்லநடிப்பைஅவர்தந்திருக்கின்றார். பாராமுகமாக இருக்கும் காதலியின் பாராட்டைப்பெற ஏங்குவதையும், அது கிடைக்கும்போது அடையும்நிறைவையும் மிக நுட்பமாக வெளிப்படுத்துகின்றார். இயல்பான பேச்சு, உடல்மொழி என அவரது நடிப்பு வழமை போலச் சிறப்பாயுள்ளது.

நாயகி மடோனா செபாஸ்ரியன் நிறைவான பங்களிப்பை வழங்கியிருக்கின்றார். கோபப்படும் போதும், நாயகனுக்கு அறிவுரை சொல்லும்போதும் அவரது நடிப்பு யதார்த்தம். நீண்ட நாள்களுக்குப் பிறகு திரையில் முகம் காட்டியிருக்கும் டி.ராஜேந்தர் வழக்கமான தன்னுடைய பாணியில் பேசி நடித்திருக்கின்றார். ஆகாஷ்தீப்பின் நடிப்பு கிட்டத்தட்ட எல்லாக் காட்சிகளிலும் ஒரே மாதிரி இருக்கின்றது. பாண்டியராஜன், ஜெகன், விக்ராந்த், போஸ் வெங்கட், பவர் ஸ்ரார் சீனிவாசன், நாசர், தர்ஷனா ராஜேந்திரன், கிருஷ்ணா ஆகியோர் அவரவர் பாத்திரங்களில் நன்கு பொருந்துகின்றார்கள்.

தொலைக்காட்சிநிறுவனத்தைஅபிநந்தன்ராமானுஜத்தின்கமரா அழகாகக் காட்சிப்படுத்துகின்றது. ஹிப் ஹாப் தமிழா இசையில், 'கண்ணம்மாராக்...'பாடல்மட்டும்கவர்கின்றது. கவணின் இலக்கு (ஊடகங்களின் தவறான போக்கை அம்பலப்படுத்துவது) தெளிவாகத்தான் இருக்கின்றது. ஆனால், ஏராளமான விடயங்களை தன்னுள் இழுத்துப் போட்டுக் கொண்டதால் அதன் குறி தவறிவிட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சிரிப்பு



**மனைவி** - என்னாங்க... முதல் முதலாய் நீங்கள் என்ர கையைப் பிடிச்சபோது எனக்கு எப்பிடி இருந்தது தெரியுமா...?

**கணவன்** -எப்பிடியிருந்தது...?

**மனைவி** - அப்பிடியே கடவுள் என் கண் முன்னாடி சொர்க்கத்தைக் காண்பிச்ச மாதிரி இருந்தது. உங்களுக்கு எப்படி இருந்தது...?

**கணவன்** - அடக் கடவுளே... ஒரே நேரத்தில ஒருத்தருக்குச் சொர்க்கத்தையும் ஒருத்தருக்கு நரகத்தையும் காட்டியிருக்கிறீர்களே...!!!



## கொட்டவே செய்யும்...

பள்ளி விட்டு வீடு வந்தால்
புத்தகப்பை பத்திரமாய்
மேசை மீது...

இன்றணிந்த வெள்ளுடுப்பே
நாளைக்கும் அணியவேண்டும்
அதுவும் கொடியில்
கசங்காமல்...

காலில் இடும்
பாதணிக்குள் நாற்றமெழும்
காலுறையைச் செருகி
அங்கே அது ஓரமாய்...

மறு நாள்
பள்ளிக்கு ஆயத்தம்...!

வெள்ளுடுப்பு அணிந்தாயிற்று
புத்தகப்பை எடுத்தாயிற்று
காலுறையும் சப்பாத்தும்
காலுக்குப் போட்டாயிற்று
சிறிது தூரம் நடந்தாயிற்று

பாதணியின் நாற்றத்தில்
நாட்டம் கொண்ட தேளுக்கு
உள்ளே இடம் போதாதாம்...!
எனக்கு மெல்லப் புரிகின்றது
ஆனால் 'அதுவோ'
தயக்கமின்றித் தொடர்கின்றது...!

பொன்.நகுலன்




# நயன்தாரா ரசிகர்களுக்கு மந்திரம்

வைரக்கண்ணு(தம்பி ராமையா)வும் மகள் பவளக்கொடியும் (நயன்தாரா) தனியாக தவசித்துவருகின்றனர். ஒரு சந்தர்ப்பத்தில் வாடகைக் கார் நிறுவன உரிமையாளராக இருக்கும் அவர்களது உறவினர் ஒருவர் இவர்களை அவமானப்படுத்திவிட, பவளக்கொடி தானும் ஒரு வாடகைக் கார் நிறுவனத்தை ஆரம்பிக்க நினைக்கின்றார்.

அதற்காக ஒரு பழைய காரை வாங்குகிறார்கள். ஆனால், அந்தக் காரை 'டோரா' என்ற ஒரு நாயின் ஆவி பிடித்திருக்கின்றது. மற்றொரு பக்கம், தனியாக இருக்கும் ஒரு பெண்ணிடம் கொள்ளையடிக்கும் மூவர், அந்தப் பெண்ணை வன்புணர்வு செய்து கொல்கின்றனர். இது தொடர்பாக விசாரணைகளை ஆரம்பிக்கின்றது பொலிஸ். அப்போது அந்தக் குற்றவாளி களில் ஒருவர் கொல்லப்படுகின்றார்.

இந்த இரண்டு கதைப் போக்குகளையும் இணைக்கும் புள்ளியாக இருக்கின்றனர் பவளக்கொடியும் டோராவும்.

நயன்தாரா நடித்து இதற்கு முன்னர் வெளிவந்த திகில் படமான மாயா வெற்றி பெற்றிருந்ததால், தயாரிப்பில் இருந்த காலகட்டத்திலேயே பெரும் எதிர்பார்ப்பை ஏற்படுத்திய படம்தான் இந்த டோரா.

சென்னையில் திட்டமிட்டுக் கொலை செய்து கொள்ளையடிக்கும் சில குற்றவாளிகளைப் பொலிஸ் தேடி வருகின்றது. அந்தத் தேடலுக்கும் இந்தக் காருக்கும் என்ன தொடர்பு? அமானுஷ்யம் நிறைந்த அந்தக் காரில் மறைந்திருக்கும் முன்கதை என்ன? பவளக்கொடியும் அவரது அப்பாவும் என்ன ஆகின்றார்கள்? இவை எல்லாவற்றுக்கும் பதில் சொல்கின்றது படம்.

ஆவியை மட்டுமே சித்திரிக்கும் அமானுஷ்யப் படங்கள் போல் இல்லாமல், புலன்விசாரணை, தந்தை – மகள் உறவு, விலங்குகளுக்கும் மனிதர்களுக்கும் இடையிலான உறவு, பழிவாங்கும் உணர்வு எனப் பலகோணங்களில் கதை சொல்வதில் கவனத்தை ஈர்க்கின்றார் இயக்குநர் தாஸ் ராமசாமி. முதல் பாதியில் கதையை இழுத்துச் சென்று , ஆவிக்குப் பதிலாகக் கொட்டாவியை வரவழைக்கின்றார். இரண்டாம் பாதி ஒப்பீட்டளவில் வேகமாகச் செல்கின்றது. அமானுஷ்ய சக்தியையும் அதன் பின்னணியையும்நயன்தாரா உணர்ந்து கொண்ட பிறகு படம் இன்னும் வேகமெடுக்கின்றது. தனித்து வாழ்பவர்கள் குற்றம் செய்பவர்களின் இலக்காக எப்படி மாறுகின்றார்கள் என்பதுபற்றிய விழிப்புணர்வையும் படம் ஏற்படுத்துகின்றது.

ஆவியின் பழிவாங்கும் கதையை மாறுபட்ட கோணத்தில் யோசித்ததற்காக இயக்குநரைப் பாராட்டலாம். அமானுஷ்யமான காட்சிகளை வெறும் பூச்சாண்டிக் காட்சிகளாக இல்லாமல் நாய், கார், நிழல், சாவி, படபடப்பு எனக் கற்பனை வளத்தோடும் பொருத்தமான காட்சிகளோடும் படைத்திருக்கின்றார். காரில் உள்ள ஆவியை நயன்தாரா தெளிவாக உணரும் தருணம் பர்வையாளரைச் சில்லிட வைக்கின்றது. இந்த இடத்தில் காட்சியமைப்பும் ஒளிப்பதிவும் இசையும் நடிப்பும் இசைவாக அமைந்து காட்சிக்கு வலுச் சேர்க்கின்றன. கார் செய்யும் கொலைகள் விறுவிறுப்பாகவுள்ளன.

வாடகைக் கார் ஓட்டும் தொழிலில் அதிகம் உழைக்க முடியாத சூழலில் தந்தையும் மகளும் வசதியாகவே வாழ்வது எப்படி? அவர்கள் வீட்டிலிருக்கும் தரைவழித் தொலைபேசி கடந்த நூற்றாண்டுக்குரியதாக இருக்கின்றது அது எப்படி? காரணம் ஏதும் இல்லாமல் நள்ளிரவில் ஒரு பெண்ணைப் பொலிஸ் நிலையத்துக்கு அழைத்து வருவதற்குச் சட்டத்தில் இடமில்லை. நயன்தாரா பொலிசாரைச் சமாளிக்கும் விதம் சுவாரஸ்யமாக இருந்தாலும் நம்பும்படி இல்லை. (அந்நியன் படத்தில் விக்ரமைப் போல, மாற்றி மாற்றிப் பேசி அசரவைப்பது)

எல்லாப் படங்களிலும் காதலைத் திணிக்கும் தமிழ் சினிமா இயக்குநர்கள், நாயகியை பிரதானப்படுத்தும் படங்களில் மட்டும் காதலை விலக்கிவைப்பது ஏன் என்று தெரியவில்லை.

தமிழகத்துக்கு வந்து பணிபுரியும் வடமாநில இளைஞர்கள் குறித்து ஏற்கனவே மோசமான பிம்பங்கள் உலவும் நிலையில், இந்தப் படத்திலும் குற்றவாளிகளாக வடமாநில இளைஞர்களைக் காட்டுவது நிலைமையை மேலும் மோசமாக்கவே உதவும். இதுபோன்ற சித்திரிப்புக்களில் கூடுதலான பொறுப்புணர்வு தேவை. சிறுமிக்கு எதிரான வன்கொடுமையைச் சித்திரிக்கும் காட்சியமைப்பிலும் மேலும் கவனம் இருந்திருக்க வேண்டும்.

துணிவும் துடிப்பும் மிக்க பெண்ணாக நயன்தாரா சிறந்த நடிப்பை வழங்கியிருக்கின்றார். தீவிரமான காட்சிகளில் மட்டுமல்லாமல் இலகுவான காட்சிகளிலும் இயல்பாக நடிக்கின்றார்.

தம்பி ராமையாவின் நகைச்சுவை அலுப்பூட்டவில்லை.

பி.தினேஷ் கிருஷ்ணனின் ஒளிப்பதிவு, ஹரிஹரசுதனின் மெய்நிகர் காட்சிகள், செங்கை ஏ.ராஜாவின் கலை இயக்கம் ஆகிய மூன்று அம்சங்களும் படத்துக்குப் பெரும் பலம். விவேக் சிவா, மெர்வின் சாலமன் ஆகியோரின் இசைக் கூட்டணியில் பின்னனி இசை, பாடல்கள் ஆகியவை நன்றாயுள்ளன.

ஆவியின் பிரவேசத்துக்கு முந்தைய காட்சிகளின் இழுவையைக் குறைத்திருந்தால் 'டோரா' இன்னும் தேறியிருக்கும். மாயாவைப் போல டோராவும் ஒரு திகில் படம் என்ற எதிர்பார்ப்புடன் சென்றால் ஏமாற்றமே மிஞ்சும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பன்றியுடன் சேர்ந்த பசுவும்...

■ ஜோதா.ந



மனிதர்களாகட்டும் விலங்குகளாகட்டும் எந்த உயிரினமாகவிருந்தாலும் அவை உணவுண்டாலே உயிர்வாழ முடியும். அவை அனைத்திலும் செமிபாட்டுத் தொகுதி எந்நேரமும் செயற்பாட்டிலிருக்கும். இதனால் இரப்பை நிறைவது மட்டுமன்றி அவற்றிலிருக்கும் 'மலப்பை'யும் எந்நேரமும் நிறைந்தேயிருக்கும். என்பு, தோல் போர்த்தியிருக்கும் எந்த உடலும் இதற்கு விதிவிலக்கல்ல. அனைத்து மனிதர்களிடத்தும் எந்த நேரமும் மலம் இருக்கும். மனிதர்கள் அவரவர் தம் உடலிலுள்ள 'மலப்பை'க்குள் சிறிதளவு மலத்தையாவது தேக்கி வைத்தவர்களாகவே எந்நேரமும் உலாவுவர். இவ்வாறாக மற்றையவருக்குத் தெரியாத வகையில் மனிதர்கள் அனைவரும் தமது மலத்தை எந்நேரமும் தாம் காவிக்கொள்வாது என்பது இயல்பானதாயுள்ளது. மலம் என்பதும் மலக்கழிப்பு என்பதும் மனிதர்கள் அனைவரதும் பொது விடயமாக இருந்தாலும் அவரவர் தமக்குள் வெட்கப்பட்டுக் கொண்டு வெளிப்படையாக ஒருவருடன் ஒருவர் பேசமுடியாத விடயமாகவே இன்றுவரை அது இருக்கின்றது. ஆகையால் மலம் கழிப்பதாகட்டும் அது சார்ந்த விடயங்களாகட்டும் அவை எம்மவர்களால் வெளியே பேசிக் கொள்ளும் வழிவகைகள் நேரடியாக அதனைச் சுட்டாதிருக்கும்.

### பழையன கழிந்து புதியன புகுந்தது...!

முன்னைய காலங்களில் கிராமங்களிடையேயும் ஒவ்வொரு மக்கள் குழுமங்களிடையேயும் மலம், மலங்கழிப்பது பற்றிய பேச்சாடல்களில் வேறுபாடுகள் தென்படும். இன்று வீட்டுக்கு வீடு காணப்படும் மலக் கூடங்கள் 1980, 90கள் காலப்பகுதியில் அரிது. அன்று பனங்காடுகள், பற்றைகள், ஒதுக்குகள், கடற்கரை ஓரங்கள் என்பனவே மலங்கழித்துக் கொள்ளும் இடங்கள். அங்கே ஒரு நபர் மலங்கழிக்கச் சென்றிருந்தால், அதனைக் 'வெளிக்குப் போய்விட்டார்' (பனங்கூடலுக்குள் மலம் கழிக்கச் சென்றவர்) 'கொல்லைக்குப் போய் விட்டார்' (வீட்டின் பின்புறத்திலுள்ள பற்றைப்பகுதிக்குள் மலங்கழிக்கச் செல்லுதல்) என்பர். கொல்லை என்பது வீட்டின் பின்புறம். அதவது கொல்லைப்புறத்தில் தான் மலங்கழித்தலை வைத்துக் கொள்வர். பிற்காலங்களில் மலக்கூடங்களைக்கூட அவ்விடம் சுட்டி அமைத்தல் என்பதும் இதனாலயே தோன்றிற்று. மலக்கூடங்களின் நிறுவுகைகளுக்குப் பிற்பாடு 'கால் கழுவப் போய் விட்டார்' என்றும் மலங்கழிக்கப் போய்விட்டதைச் சுட்டுவர்.

அது பின்னர் 'ரொய்லெற்றுக்குப்போய் விட்டார்' என்பதாகவும் இப்போது 'வோஷ் ரூம்போய்விட்டார்' என்பதாகவும் மருவி விட்டது. அத்துடன் நிலத்திலோ, வெறும் தரையிலோ குந்தியிருந்து மலங்கழித்த ஆரம்ப மலக்கழிப்பு முறை மெல்ல அதே பாணியில் மலக்கூடங்களில் குந்தி மலங்கழிப்பதாக மாறியது. அதுவே பின்னர்; இப்போது சற்றே அரைமண்டியில் அமர்ந்திருந்து கழிக்கும்வகையில் 'கொமோர்ட்' களாக மாறிவிட்டது. இதனால் இன்று இதனை எதிர்கொள்ளும் சில மூதாதையர்கள் தமது காலத்தில் தாம் வெளிப்புறங்களில் குந்தியிருந்து மலங்கழித்ததிலுள்ள சுவாத்தியம் நான்கு சுவர்களுக்குள் நிறுவப்பட்டிருக்கும் அரைமண்டியில் இருந்தவாறு மலங்கழிக்கும் வகையில் அமைக்கப்பட்டுள்ள இந்தக் 'கொமோர்ட்'களில் மலங்கழிப்பதில் கிடைப்பதில்லை என்றும் ஆதங்கப்பட்டுக் கொள்வர்.

### இலக்கிய இருட்டடிப்பு

தமிழ் இலக்கியகாரர்களால்கூட குறித்த விடயம் மருவியதாகிவிட்டது. "பன்றியுடன் சேர்ந்த பசுவும் பவ்விதிண்ணும்" எனும் சொல்லாடல் 'மலம்' என்பதைப் 'பவ்வி' என்று குறிக்கச்செய்கின்றது. அத்துடன் சபையில் சொல்லக்கூடாதவை என்று வரையறுக்கப்பட்டுச் சில சொற்களை 'இடக்கரடக்கல்' என்று குறித்துச் சுட்டும் மரபும் அவர்கள் மத்தியில் இருக்கின்றது. 'பவ்வி' என்று சுட்டப்படுவது 'பகரா(அ)' என்றும் சொல்லப்படுகின்றது. ஆக, 'மலம்' எனும் விடயத்தைப் புறத்தே வெளிப்படையாகப் பேசுவதில் தழிழ் இலக்கணகாரர்களும் தமிழர்களும் தயக்கம் கொள்கின்றார்கள். ஏன் கட்டுரை புணையும் நானும் இதுவரை பயன்படுத்திய மலம் என்பதுகூடத் தனது வேர்ச்சொல்லைத் தவிர்த்துப் பயன்பாட்டுக்கு வந்துவிட்ட ஒன்றும் நாகரிகமடைந்த சொல்லும் கூட. ஆக "பன்றியுடன் சேர்ந்த பசுவும் பீ திண்ணும்" என்று மலத்தைப் பீ என்றும் சிறுநீரை மூத்திரம் என்றுமே குறிப்பிட வேண்டும். ஆரம்ப இலக்கண, இலக்கியகாரர்கள் கையாண்டிருந்த வேர்ச் சொற்கள் இவை தாம். இவை பின்னர் தமிழிலேயே மருவிப் பல புதிய சொற்களைக் கண்டு இன்று தமக்குரிய ஆங்கிலச்சொற்களையும் தம்முள் புகுத்திவிட்டன. ■

மலம் என்பதும் மலக்கழிப்பு என்பதும் மனிதர்கள் அனைவரதும் பொது விடயமாக இருந்தாலும் அவரவர் தமக்குள் வெட்கப்பட்டுக் கொண்டு வெளிப்படையாக ஒருவருடன் ஒருவர் பேசமுடியாத விடயமாகவே இன்றுவரை அது இருக்கின்றது. ஆகையால் மலம் கழிப்ப தாகட்டும் அது சார்ந்த விடயங்களாகட்டும் அவை எம்மவர்களால் வெளியே பேசித் கொள்ளும் வழி வகைகள் நேரடியாக அதனைச் சுட்டாதிருக்கும்.

## நான் குப்பைகளின் அரசன்...

தாடி மயிர்களைத்
தடவுகையில்
தடித்த முட்கம்பி நடுவே.
நீடித்த என்வாழ்வின்
மழுங்கிய முனைகள்
இதயத்தை அழுத்துகின்றன
மரத்தையும் மலையையும்
இடறும் யானை நான்
சிறு கம்பிக்கு அஞ்சி
கனவுகளின்
கூர்முனைகளால்
தாக்குண்டு பழகிப்போன
தாழ்வுச்சிக்கலில் குழம்பி
வலியழிந்து
சுருண்டு கிடக்கின்றேன்.

எனது இதயத்தின்
நான்கு அறைகளும்
யாழ்ப்பாணக் கல்லுண்டாய்
வெளிக் குப்பைகள்போல
நிறைந்து வழிகின்றன.
அவற்றை வாரி
மீள மீள
நான் உள்ளே
கொட்டிக்கிடக்கின்றேன்

தயவுசெய்து என்னை
மீட்டெடுங்கள்
என நான் ஓலமிட்டு
அழுது அழைக்கையில்
மேலும் குப்பைகளை
என்மீது கொட்டுகின்றீர்

வழிந்த என் குப்பைகளையும்
பிறர் உமிழ்ந்த
குப்பைகளையும்
வாரிச் சுமந்தபடி
மெல்ல மெல்ல நான் ஒரு
குப்பைத்தொட்டியாக
சிலவேளை அவற்றைச்
சேதனப்பசளையாக்கி
மீளவும் விருட்சமாய்
முளைத்தெழுவேன்

■ நா.நவராஜ்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



நகைச்சுவைத் தொடர்

10

# ஓவசி...

மிருசுவில் தமிழ்தாசன்

கடைகளிலை மிச்சக் காசில்லையெண்டால் நெருப்பெட்டி, ரொபி ஏதேனும் குடுப்பங்கள். இவங்கள், கொண்டக்ரர்மார் இல்லையெண்டால் இல்லைத் தான். உந்தப் பத்து ரூபாவை உவனிட்டை வாங்காமல் விடக்கூடாது. அந்தப்பத்து ரூபாவுக்குத் தக்க தூரத்துக்குப் போய் என்றாலும் அதைக் கழிக்கத்தான் வேணும்.

ஓவசி மனத்துக்குள் திட்டம் போட்டான்.

"எங்கைவரைக்கும் உந்த பஸ்போகுது...?"

"யாழ்ப்பாணம் வரைக்கும்"

கொண்டக்ரர் சுருங்கச் சொன்னான். அடக்கடவுளே...! அப்ப அதுவும் சரிவராது. பத்து ரூபாவை அநியாயமாய் உவனிட்டை விட வேண்டியதுதான். மனம் ஏம்பலித்தது ஓவசிக்கு. இருந்தாலும் யாராவது பத்து ரூபா சில்லறை கொடுக்கின்றார்களா...? கொடுத்தால் அதை அவனிடமிருந்து லபக்கெனப் பறித்து கொள்ளலாமென்ற ஆசையில் கொண்டக்ரர் நடவடிக்கைகளை உன்னிப்பாகப் பார்த்துக் கொண்டிருந்தான். பஸ் யாழ்ப்பாணம் வந்து சேர்ந்து விட்டது. இனியென்ன செய்ய அந்தப்பத்து ரூபாவுக்குத்தக்க கோபத்தைக் காட்டி கொண்டக்ரர் மீது மிறாள்ப் பார்வையை வீசியபடி இறங்கினான் பஸ்சை விட்டு. வேறு வழி...?

நகுலனைப் பார்த்ததாகி விட்டது. உடல் முழுவதும் கட்டுக்களோடு பரிதாபமாகக் கிடந்தான் நகுலன். கைவசமிருந்த மூன்று தோடம்பழங்களையும் கொடுத்துவிட்டு வீடு திரும்புவதற்காக பஸ்நிலையத்தை நோக்கி நடந்தான். அருமையான உழுந்து வடை, வாய்ப்பன், சூசியம் என்று ஏராளமான சிற்றுண்டி வகைகள் அந்த உணவகத்துக் கண்ணாடிப் பெட்டியில் காட்சிப்படுத்தப்பட்டிருந்தன. பொக்கெற்றைத் தடவினான். நூறு ரூபாத் தாள் ஒன்று. பஸ்சுக்கு நாற்பது போனால் மிகுதி அறுபது தேறும். ஒரு வடையும் சாப்பிட்டுத் தேநீரும் அருந்தி விடுவோம் என்ற ஆசையில் வாயூறியது. எச்சிலை விழுங்கியபடி அந்த உணவகத்து இருக்கையிலே அமர்ந்து கொண்டான் ஓவசி. தட்டு நிறையப் பலகாரங்கள் கொண்டு வந்து வைத்தான் சிப்பந்தி. பார்க்கப் பார்க்க நாக்கில் எச்சில் ஊறியது. ஊறியென்ன நாறியென்ன கைவசம் இருந்தது நூறு ரூபா மட்டுமே. கட்டு மட்டாகச் செலவு செய்தால் தான் பஸ்சுக்கு நாற்பது ரூபாவை மிச்சம் பிடிக்கலாம். அது ஓவுசிக்கு விளங்காத சங்கதியல்ல.

ஒரு உழுந்துவடையையெடுத்து மெல்லப்பிய்த்து வாய்க்குள் தள்ளினான். மிதமான சூடு. சுள்ளென்ற காரம். இடையிடையே வாய்க்குள் கழபடும் வெங்காயம், பச்சை மிளகாய், கறிவேப்பிலையும்.

"ரீயொண்டு சாயம் கூட விட்டுத் தாருங்கோ" சொல்லி விட்டு மிகுதி வடையைக் கடிப்பதிலே கண்ணும் கருத்துமாயிருந்தான். சும்மா சொல்லக் கூடாது வடை என்றால் வடை தான். இன்னுமொன்றை எடுக்க ஆசைதான். அதற்கு அவனுடைய அப்போதைய பட்ஜெட் இடம் கொடுக்கவில்லை. அலைபாய்ந்த மனதுக்கு இறுக்கமான ஒரு கடிவாளம் போட்டாயிற்று. ரீயும் குடித்தாயிற்று. எல்லாம் சரி! போதுமென்ற மனமே பொன் செய்யும் மருந்து என எண்ணியபடி தன்னிடமிருந்த ஒரேயொரு நூறு ரூபா நோட்டை நீட்டினான்.

"எழுபது ரூபா" என்றான் சிப்பந்தி. போச்சடா! கணக்குப் பார்த்துச் சாப்பிட்டும் அது பிழைச்சுத்தான் போய்விட்டது. சரி! மிகுதி முப்பது வரவேண்டும். கடைக்காரன் இருபதைக் கொடுத்து இரண்டு சுவிங்கமும் கொடுத்தான். சில்லறை இல்லையாம் என்ன செய்யலாம். வாதாடிப்பார்த்தான், முடியவில்லை. வக்கீல் வைத்து வாதாடினாலும் அந்தப் பத்து ரூபா கிடைக்கப் போவதில்லை. மேசை மீது ஒரு குபேரன். குபேரனைச் சுற்றி ஏராளமான சில்லறைகள் குவிந்து போய்க்கிடந்தன. ஆனால் அதில் கைவைக்க மனமில்லை ஓவசிக்கு. சில்லறை இல்லையென்னும் உறுதியான முடிவுடன் இருபது ரூபாவும் இரண்டு சுவிங்கமும் கிடைத்தது. ஒரு வழியும் புரியவில்லை.

யாரிடம் கடன் கேட்பது...? தெரிந்தவர்கள் யார் வரப் போகின்றார்கள். பஸ்நிலையத்தில் பிச்சை எடுக்கலாமா? அதுவும் சரிவரப் போவதில்லை. உண்மையான பிச்சைக்காரர்களே கூவிக் கூவிக் கத்திக் குளறியும் யாருமே அவர்களைத் திரும்பிப் பார்ப்பதாயில்லை. இந்த நிலையில் நல்ல உடைகளை உடுத்திப்போய் பஸ்நிலையத்திலிருந்து பிச்சை கேட்டால் யார் தான் போடப் போகின்றார்கள். அதுவும் தெரியாமலில்லை. வேறு என்ன செய்யலாமென்று நெற்றியில் கை வைத்துத் தீவிரமாக யோசித்தான் ஓவசி. பொறி தட்டியது போல ஒரு ஐடியா! ஒண்டும் வேண்டாம். கடவுள் தந்த காலிருக்குது. இருபது ரூபாவுக்குப் போகத்தக்க தூரம் நடப்பம். நல்ல முன்நிலவு. வீட்டை போயும் தான் என்ன செய்யுறது!

பிள்ளையோ குட்டியோ! பிள்ளை பெத்தால் தன்ரை அழகு கெட்டுப் போயிடுமெண்டு ஏதோ எல்லாம் சொல்லுறாள் என்ர சுந்தரி! அது தான் சவுந்தரி! நெளிஞ்சுபோன சருவக் குடம் மாதிரி ஒரு அந்து சந்தில்லாத உடம்பை வச்சுக் கொண்டு தன்ரை அழகு கெட்டுப் போயிடுமாம். என்ன செய்ய? உதுகளை ஏனிப்ப? நடப்பம். நடந்துபோய் ஒரு கணக்கிலை பஸ் ஏறினால் கிடக்கிற இருபது காணும். மரியாதையாயும் போய்ச் சேரலாம். மெல்ல மெல்ல நடக்கத் தொடங்கினான் ஓவசி. கிட்டத்தட்ட ஒரு கிலோ மீற்றர் வரை நடந்து விட்டான். இன்னும் ஆகக் குறைந்தது ஏழெட்டுக் கிலோ மீற்றர்களாவது நடக்கத் தான் வேண்டும். "டேய் ஓவசி...! என்னடா இந்தப் பக்கம், எங்கை நடையிலை"

ஓவசிக்கு நன்கு பரிச்சயமான காந்தன்! ஒரே ஊரைச் சேர்ந்தவன். மோட்டார் சைக்கிளின் பின்புறம் ஏதேதோ? மூடைகளைக் கட்டிய நிலையில் ஓவசியை அண்மித்து வண்டியை நிறுத்தினான். "உதிலை கிட்டத்தான் காந்தன். ஓராளைச் சந்திக்க வேணும். பஸ்சிலை போகேலாது. அதுதான் நடந்து போறன். உந்தா... உதிலை கிட்டத்தான்" ஒரு பொய் மூட்டையை அவிழ்த்து விட்டு ஒன்றுமே நடவாதது போல நடந்து கொண்டிருந்தான்.


காந்தனிடம் உண்மையைச் சொல்லியிருந்தாலும் ஒன்றுமே ஆகியிருக்காது. அவனுடைய மோட்டார் சைக்கிளில் யாரையும் ஏற்ற முடியாதளவுக்கு பொருள்களிருந்தன. அதையும் விடத் தலைக்கவசம் ஒரு பிரச்சினை. இத்தனையும் சரியென்றாலும் காந்தன் இவனை ஏற்றிப் போகச் சம்மதித்திருக்கமாட்டான். ஏதாவது சாக்குப் போக்குகள் சொல்லிக் காய் வெட்டியிருப்பான். ஓவசியும் சும்மா லேசுப்பட்டவனல்ல. அத்தனையும் அவன் கண்ட அனுபவங்கள்.

நடை தளராது நடந்து கொண்டேயிருந்தான். வீதியோரமாக நாய் ஒன்று படுத்திருந்தது. நாய் என்றால் ஓவசிக்கு அளவற்ற பயம். அதைப் பார்க்க நித்திரையில் கிடப்பது போன்றிருந்தது. இருந்தாலும் சொல்ல முடியாது. அது டக்கென்று எழுந்து வள்ளென்று வாய் வைத்துவிடும். சற்று எச்சரிக்கையாக அதனை விலகி எட்டியே நடந்தான். நல்ல காலம் அவன் நினைத்தது போலில்லாமல் நாய் நல்ல நித்திரையாயிருந்தது. இனிப்பயமுமில்லை. நடந்தான்... நடந்தான் நடந்து கொண்டேயிருந்தான். நன்றாக இருட்டி விட்டது. வீதியில் எதிர்ப்புறமிருந்து வந்து கொண்டிருந்த வாகனங்களின் வெளிச்சம் ஓவசியின் கண்களைக் கூசச் செய்தது. இனியும் தொடர்ந்து நடக்க முடியவில்லை. பெரு மூச்சு விட்டபடி நின்றான். வீதியோரத்தில் சீமெந்தினால் கட்டப்பட்டிருந்த பழைய கால சுமைதாங்கி ஒன்று பார்வையில் பட்டது. பட்டென்று போய் அதில் ஏறி உட்கார்ந்தான். வலித்துக் கொண்டிருந்த கால்களுக்குச் சிறிது ஆறுதல் கிடைத்து விட்ட திருப்தி. மெல்ல அப்படியே முதுகை நிமிர்த்தலாமென்று அதிலே படுத்தவன் படுத்தது தான். நடந்த களைப்பில் தன்னை மறந்து உறங்கிப் போய்விட்டான். நேரம் இரவு பதினொன்றுக்கு மேல் வரும் ஜீப்பிலிருந்து குதித்து வந்த பொலிஸ்காரர்களிலில் இருந்த குண்டாந்தடியனின் அடி அகோரத்தை உணர்ந்தநிலையில் திடுக்கிட்டெழுந்தான். எங்கே பார்த்தாலும் காக்கிச்சட்டைகள். கைகளில் தடிகள். அவனுடைய போதாத காலமோ என்னவோ! ஓவசி படுத்திருந்த இடம் ஒரு குற்றப் பிரதேசம். வழிப்பறிகள், கொள்ளைகள் இடம்பெறும் ஒரு வில்லங்கமான இடம். பொலிஸாருக்கு இது போதாதா! ஓவசி இப்போது பொலிஸ் நிலையத்தில் தடுத்து வைக்கப்பட்டிருப்பதற்கு இதுவே காரணம்.

(தொடரும்)

பிள்ளையோ குட்டியோ! பிள்ளை பெத்தால் தன்ரை அழகு கெட்டுப் போயிடுமெண்டு ஏதோ எல்லாம் சொல்லுறாள் என்ர சுந்தரி! நெளிஞ்சுபோன சருவக் குடம் மாதிரி ஒரு அந்து சந்தில்லாத உடம்பை வச்சுக் கொண்டு தன்ரை அழகு கெட்டுப் போயிடுமாம்.





## சிரிப்பு

## போனை ஏண்டா உடைக்கிறாய்...!

நீண்ட நாள்களுக்குப் பின் நண்பனிடமிருந்து அலைபேசி அழைப்பு வந்தது....

"ஏண்டா மச்சி... எப்படி இருக்க? நிறைய நாளா போன் பண்ணவே இல்லையே" என்று கேட்டேன்.

"ஒண்ணும் இல்லைடா போனில் "பலன்ஸ் இல்லை"

அட கூறுகெட்டவனே.... பலன்ஸ் இல்லைன்னா என்னடா... தூணிலையோ இல்லை சுவரிலையே சாய்ஞ்சு கொண்டு பேச வேண்டியதுதானே...!"



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# என்று தணியும்

தருமு தவக்குறுச்சி

ஈழப்போர் ஓய்ந்துவிட்டதான வெளித்தோற்றங்களுடன் நகர்கின்றது காலம். அது 1980களில் ஆரம்பிக்கப்பட்ட ஒன்று. மூன்று தசாப்த காலங்களுக்கும் மேலாகத் தனது கொள்கைக்காக உறுதிகொண்டு போராடிவந்த அந்த வீரர்களின் இறுதி மூச்சு முள்ளிவாய்க்காலுடன் ஓய்ந்திருந்தது. தான் வரிந்துகொண்ட தனது மக்களுக்கான 'தனிநாடுதமிழீழம்' என்கின்ற தணியாத தாகத்துடன்.

தன்னிகரற்ற தலைவனைப் பெற்றிருந்தமையே அது தன்னைப் பலம்மிக்கதாகக் கட்டமைக்கக் காரணமாயிருந்தது. ஒரு நாட்டின் சிறுபான்மையினத்தவர்களால், மக்கள் பற்றும் மண் பற்றும் கொண்ட சில இளைஞர்களைக் கொண்டு பெரும்பான்மை, பன்னாட்டுப் பலத்துடன் தொடர்ந்தும் நிறுவப்பட்டு வரும் அரசகட்டமைப்பை எதிர்க்க முடிந்ததென்றால், அந்தத் தலைவனும் அவன் வழிபற்றிய வீரர்களுமே அதற்குக் காரணம்.

காலணியாதிக்கத்தின் பிடியிலிருந்து விடுபட்டதன் பின்னர் தோற்றுவிக்கப்பட்ட நாட்டின் ஜனநாயக நாடாளுமன்ற அமைப்பும் வழக்கிலிருந்துவரும் அரசமைப்பும் எந்த வகையிலும் பெரும்பான்மையினரின் ஆதிக்கத்தையே தன்பாற் கொண்டிருக்கின்றது. இதனால் சிறுபான்மையினர் மீது திணிப்புக் கள் ஏற்படுத்தப்பட்டன. அதிகார வர்க்கத்தினர் தமது மொழி(தனிச் சிங்களச் சட்டம்), மதம் (பௌத்தத்துக்குமுன்னுரிமை) போன்றவற்றுக்கு சிறப்புச் சலுகைகளை வழங்கினர். தொடர்ந்தும் அரியணை ஏறிய சிங்களத் தலைவர்கள் பல்லின மக்களைக் கொண்ட தேசத்தில் சமத்துவமாக ஆட்சியமைப்புக்களை நிறுவவேண்டும் என்பதில் அக்கறைகொள்ளாமல் பாகுபாடு காட்டியவர்களாகவே அரசமைப்பைக் கட்டமைத்தனர்.

இதனால் சிறுபான்மையினத்தவர்கள் அடக்குமுறைக்குட்படுத்தப்பட்டனர். தமிழ், முஸ்லிம் மக்கள் மீது பலவந்தமாகவே அடக்குமுறைகள் திணிக்கப்பட்டன. 1958இல் சிங்கள இனவெறியர்களால் தமிழர்கள் பலர் கொல்லப்பட்டனர். இனக்கலவரத்தின் முதல் தோற்றம் அப்போது ஏற்பட்டது. கொழும்பில் வாழ்ந்துவந்த தமிழர்கள் பலர் கொலைசெய்யப்பட்டனர். அவர்களின் சொத்துக்கள் சூறையாடப்பட்டன. உயிர் தப்பிய சிலரும் உடற்காயங்களுக்கு உட்படாமலில்லை. இளைஞர்கள், பெண்கள், முதியவர்களோடு இந்த வெறியாட்டம் நின்றுவிடவில்லை. தமிழர் என்ற ஒரே காரணத்தால் கைக்குழந்தைகளைக்கூட கொதிக்கும் தார்ப்பீப்பாவுக்குள் உயிருடன் அமிழ்த்திக் கொன்றனர் சிங்களவர்.

அதன் பின்னரும் ஆட்சி வர்க்கத்தினர் நாட்டிலுள்ள அனைத்து இனத்தவர்களும் சமத்துவத்துடன் வாழ வழி வகுக்கும் அரசமைப்பை ஏற்படுத்துவதற்கு முனையவில்லை. மாறாக சிறுபான்மையினத்த வர்கள் மீது மேலும் மேலும் அடக்குமுறைகளைத் திணிக்கவே வழிசெய்தனர். இதற்கு முற்றுப்புள்ளி வைக்கும் நோக்குடன் தமிழ் இளைஞர்கள் சிலர் 1970களின் ஆரம்பங்களில் புரட்சிவாதிகளாக அரசியலில் நுழைய முற்பட்டார்கள். ஆனாலும் அடுத்தடுத்துப் பதவியைத் தொடர்ந்தும் தமக்குள்ளேயே கட்டமைத்துக்கொண்டிருக்கும் பொரும்பான்மைப் பலத்தை இவர்களால் சிதறடிக்க முடியவில்லை. அதனால் அரசியல் மூலம் தமது மக்களுக்கான சுதந்திரத்தைப் பெற்றுக்கொள்வது சாத்தியமற்றது என்பதை உணர்ந்த அவர்கள், ஒடுக்குமுறை ஆட்சிக்கெதிராகப் போராட ஆரம்பித்தனர். அவ்வேளை அவர்கள் நிகழ்த்திய சாத்வீக, அகிம்சைப் போராட்டங்கள் எதனையும் சிங்கள அரசு கண்டுகொள்ளவில்லை. மாறாக அவர்களுக்கெதிரான அடக்குமுறைகளை மேலும் அதிகரித்து விட்டிருந்தது. நிராயுதபாணிகளான அவர்கள் மீது தமது ஆயுதவலிமையைப் பிரயோகித்து அடக்கிக் கொள்வதில் மாத்திரம் சிங்கள அரசு கரிசனை காட்டுவது தமிழ் இளைஞர்கள் மத்தியில் போராட்ட உத்வேகத்தை அதிகரிக்கச் செய்தது.

அவ்வேளை தனது மக்கள் மீதும் தாய் மண் மீதும் கொண்ட அளவற்ற பற்றின் காரணமாக அடிமைத்தனத்தை எதிர்த்தும் தமக்கான சுதந்திரத்தை வேண்டியும் தமிழ் இளைஞர்கள் போராட்டத்தில் குதித்தனர்.

எதற்கும் செவி சாய்க்காத சிங்கள அடக்குமுறையாளர்களுக்கு அவர்களது பாணியிலயே புரிதலை ஏற்படுத்த முடியும் என்பதை உணர்ந்த தமிழ் இளைஞர்களுள் ஒருவனான வேலுப்பிள்ளை பிரபாகரனால் 1980களில் புரட்சிகர இளைஞர்களின் துணையுடன் விடுதலைப்புலிகள் இயக்கம் ஆரம்பிக்கப்பட்டது. அது அகிம்சை வழியைத் தொடர்ந்து ஆயுதமேந்தியும் தமிழ் மக்கள் ஒடுக்கப்படுவதை எதிர்த்துப் போராடியது. சிறு போராட்டக் குழுவாக இருந்தாலும் மூன்று தசாப்த காலமாக அதை எதிர்த்து நிற்க முடியாமல் திண்டாடிய பெரும்பான்மைகளால் ஒருபோதும் தனித்து நின்று புலிகளை அழித்துவிட முடியாதிருந்தது.

ஒருவாறாக இன்று புலிகளைப் பலருமாக இணைந்து அழித்துவிட்டாலும் புலிகளை உருவாக்கும் உத்திகள் எவையும் சிங்களவர்கள் மத்தியிலிருந்து இன்னமும் ஓய்ந்து விடவில்லை. ஆக, சிங்களவன் திருந்தாத வரையில் ஒவ்வொரு தமிழனும் பாரதி பதுக்கி வைத்த அக்கினிக் குஞ்சே. பெரும் காட்டைக் கொழுந்து கொள்ளக் காத்திருக்கின்ற அபாயம் அதிலிருந்து இன்னமும் விலகவில்லை.

> "ஒருவாறாக இன்று புலிகளைப் பலருமாக இணைந்து அழித்துவிட்டாலும் புலிகளை உருவாக்கும் உத்திகள் எவையும் சிங்களவர்கள் மத்தியிலிருந்து இன்னமும் ஓய்ந்து விடவில்லை. ஆக சிங்களவன் திருந்தாத வரையில் ஒவ்வொரு தமிழனும் பாரதி பதுக்கி வைத்த அக்கினிக் குஞ்சே.

> 'அக்கினிக்
> குஞ்சொன்று கண்டேன்
> அதை அங்கொரு காட்டிலோர்
> பொந்திடை வைத்தேன்...'

## நீரின்றி அமையாது...

அனிருத்



மாரி மழை குளம் குட்டைகள்
தரை திட்டுக்களில்
தேங்கிக் கொள்ளப்
பூமி குளிர்ந்து கொள்கின்றது.

பின்னர் அதற்குள்
மீன்களும் தவளைகளுமாய்
உயிர்ப்புக் கொள்கின்றது
உயிரினச் சூழல் ஒன்று.
அட...!
சிறு நண்டுகளும்
அதற்குள் நீந்திக்
கொள்கின்றன.
இன்னும் பல உயிரிகளை
தன்னில் நீர் வள்ர்க்கின்றது.

பாசிகளும் தளிர்க்கும் கொடி
செடிகளும் அவ்விடத்தில்
நிறைகின்றன.
கொக்குகளும் நாரைகளும்
அதையொட்டியே
அலைகின்றன.

ஊர்வனவும் பறப்பனவும்
நீரில் அங்கு நிலைப்பனவும்
ஆகா...ஓகோவென்று ஆங்கே இப்போ
வாழ்கின்றன.
ஒரு பருவம் அந்நீர் மறையும் அப்போ
என்னவாகும் அனைத்தின் நிலை...?

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கடும்பும் குளம்பும்

ஜெ.காயா

எனக்கு நல்ல நித்திரை போய்க் கொண்டிருந்தது. சாமம் மூன்று மணியிருக்கும். வீட்டுக்குக்கோடியால ஒரே சல சலப்பு. திடீரென அந்தப் பக்கமாகப் பெரும் சத்தம்...! அம்மா, அம்மம்மா, அப்பம்மா, அக்காள் எனக் கோடிப் புறத்தில ஒரு கூட்டமே கூடிக் குசு குசுக்கிற சத்தம். அதோட வாசுகி அனுங்குறதும் முனங்குறதும்கூடக் கேட்கின்றது. கண் விழித்தாலும் எனக்கு நித்திரை மயக்கம் இன்னும் தெளியவில்லை.

பாயை விட்டெழும்பவிடாமல் அசதி என்னுள் அட்டணக் கால் போட்டு அமர்ந்திருந்தது. ஆனால் அதையும் தாண்டி என்னை உற்சாகங் கொள்ளச் செய்தது வாசுகியின் கதறல். ஆம் இதுவரை முனகிக் கொண்டிருந்த வாசுகி இப்போது வாய்விட்டு உரக்கக் கத்தினாள்.

வாசுகிக்கு இது இரண்டாவது கன்று...! சில நாள்களுக்கு முன்னர்தான் அவளுடைய 'மடி' இறங்கியிருப்பதாகவும் வருகிற அட்டமி, நவமிக்கிடையில அவள் கன்று போடக் கூடும் என்றும் அம்மாவும் அப்பம்மாவும் கதைச்சிருந்தவ. இந்த எண்ணங்கள் ஞாபகத்துக்கு வரவே எனது நித்திரை அயர்ச்சி எங்கோ பறந்து போனது. நான் பாயை விட்டு மெல்ல எழுந்து போர்வையால் முக்காடிட்டுக் கோடிப் பக்கமாக நடக்கின்றேன்.

வாசுகி கன்று போடப் போகின்றாள் என்ற விடயம் எனக்குப் புரிந்தது. போன முறையும் இதைப்போல ஒரு நடுச்சாமத்திலதான் வாசுகி தனது முதலாவது கன்றை ஈன்றிருந்தாள். அம்மம்மாவும் அப்பம்மாவும் தமக்குள் ஏதோ குசு குசுத்துக் கொண்டிருக்கின்றனர். "இந்தமுறை வாசுகி நாம்பன் கன்றுதான் ஈனுவாள்" என்று அவர்கள் அடிக்கடி கதைப்பதை நான் கேட்டிருக்கின்றேன். இப்போதும் அது பற்றித்தான் அவர்கள் கதைத்துக் கொண்டிருக்கின்றார்கள். லாம்பு வெளிச்சத்தைப் பிடித்தபடி வாசுகியின் அருகே அப்பம்மா நின்று கொண்டிருக்கின்றார். அக்கா அம்மாவின் மடியில் ஒட்டிக்கொண்டிருக்கின்றாள். அருகே அம்மம்மா இருக்கின்றார்.

அக்காவை நான் எப்போதுமே அம்மாவின் மடியில் படுக்க விடுவதில்லை. அவளை ஒதுக்கித் தள்ளி அம்மாவின் மடிக்குள் புகுந்துகொண்டேன் நான். இப்போது வாசுகி முனகுவது கொஞ்சம் அதிகமாகி விட்டது. "ஒன்டொண்டாய் ஒழும்பி வந்திற்றுதுகள்" என்று சலித்துக் கொண்டாள் அம்மா. பிள்ளைகளைக் கூட்டிக் கொண்டுபோகுமாறு அப்போது அம்மம்மாவும் அம்மாவுக்குச் சகபாடியானார். "வாங்கே போவம். வாசுகி கன்று போடப்போறாள். சின்ன ஆட்கள் பார்க்கக் கூடாது" அம்மா இரைந்து கொண்டு எங்களை முற்றத்துக்கு அழைத்துச் சென்றாள். முற்றம் வந்து சிறிது நேரம் மணல் விளையாடிக் கொண்டிருக்க அங்கு வேகமாக வந்த அப்பம்மா, "நாம்பன் கண்டு போட்டிருக்குக் கத்தியைத் தீட்டி எடுத்துக்கொண்டு வா புள்ள" என்று அம்மாவிடம் கூறி அட்டாளையிலிருந்து அகன்ற கிண்ணம் ஒன்றை எடுத்துக் கோடிக்கு விரைந்தார். கத்தியைக் கையிலேடுத்துக் கொண்ட அம்மாவுடன் பிறந்திருக்கும் கன்றுக் குட்டியைப் பார்க்க நானும் அக்காளும் கோடிப்பக்கம் போனோம்.

ஒரு புது உலகத்துக்கு வந்துவிட்ட அந்தக் கன்றுக்குட்டி தனது தாயின் காலடியில் சோர்ந்து கிடந்தது. அதன் உரோமங்கள் ஈரமாயிருந்தன. அதன் உடலில் ஆங்காங்கே ஏதெதோ ஒட்டிக் கொண்டிருந்தன. பற்றாக்குறைக்கு வாசுகியும் தனது பிள்ளையை நாக்கல் நக்கிச் சுத்தம் செய்து கொண்டிருந்தாள். மெல்ல எழுவதும் பின்னர் விழுவதுமாகவிருந்த அந்தக் கன்றுக் குட்டியை அப்பம்மா தூக்கிக்கொள்ள அம்மம்மா கத்தியுடன் வந்தார்...! ஆம், புதிதாய்ப் பிறந்த அந்தக் கன்றுக் குட்டியின் கால்களில் இருக்கும் குளம்புகளை வெட்டுவதற்குத்தான் அந்தக் கத்தி. கன்றின் நான்கு கால்களிலும் நுனிப்பகுதிகளில்தான் அவை காணப்படும். அவற்றை வெட்டினால்தான் கன்றுக்குட்டியால் நடக்கவும் துள்ளிக் குதித்து ஓடவும், முடியும். ஒருபக்கம் கன்றுக் குட்டியின் காலிலுள்ள குளம்புகளை வெட்டிக் கொண்டிருக்க மறுபக்கம் வாசுகியில் கடும்புப் பால் கறக்கத் தயாரகிக் கொண்டிருந்தாள் அம்மா. ஆம் கன்று ஈன்றதும் கறந்து கொள்ளும் முதல் பால் இது. அதைக் கன்று குடிக்க விடுவதில்லை. கன்று குடித்தால் அதற்கு வயிற்றுழைவு ஆக்கிவிடுமாம். அம்மம்மா சொல்லக் கேள்விப்பட்டிருக்கின்றேன். அதனால் அந்தப் பால் எங்களுக்கானது. சீனி சேர்த்துக் காய்ச்சியதும் அது கட்டியாகி விடும். அதன் சுவையும் அதிகம் அதைச் சுவைப்பதற்கே நானும் அக்காளும் இந்தச் சாமத்தில் எழும்பியிருப்பதற்குக் காரணம். "பொறு புள்ள இளங்கொடிருஞ்சுக் கொடி விழுந்த பிறகுதான் பால் கறக்கவேணும்" அப்பம்மா கூறிக் கொள்ள அம்மா காத்திருக்கின்றாள். நாங்களும் கூடவே காத்திருக்கின்றோம்.

> வாசுகி கன்று போடப் போகின்றாள் என்ற விடயம் எனக்குப் புரிந்தது. போன முறையும் இதைப்போல ஒரு நடுச்சாமத்திலதான் வாசுகி தனது முதலாவது கன்றை ஈன்றிருந்தாள். அம்மம்மாவும் அப்பம்மாவும் தமக்குள் ஏதோ குசு குசுத்துக் கொண்டிருக்கின்றனர். இந்தமுறை வாசுகி நாம்பன் கன்றுதான் ஈனுவாள் என்று அவர்கள் அடிக்கடி கதைப்பதை நான் கேட்டிருக்கின்றேன்.





## சிரிப்பு

நண்பர் 1 : நாக்கை
பிடுங்கிக்கொண்டு
சாகலாம்
என்று நினைத்தேன்.
நண்பர் 2 : செய்வதுதானே ஏன்
தயக்கம்.
நண்பர் 1 : கை எச்சிலாகிவிடுமே.
நண்பர் 2: !!!

## உதயன்க்கு எழுதுங்கள்...!

**சகல கலை, இலக்கியப் படைப்பாளிகளுக்கும்...**

உங்களுடைய சிறுகதைகள், கட்டுரைகள், கவிதைகள் மற்றும் இதர எழுத்துக்கள் பலவும் உதயனில் பிரசுரமாக வேண்டுமா...? **உதயன் பத்திரிகை, இல 361, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்** எனும் முகவரிக்கு இன்றே எழுதுங்கள். தயவு செய்து நீங்கள் அனுப்பும் சகல கலை, இலக்கியப் படைப்புக்களுடனும் உங்கள் தொலை பேசி இலக்கம், முகவரி போன்ற வற்றையும் தவறாது குறிப்பிட்டு அனுப்புங்கள். இத்தகைய விவரங்கள் இணைக்கப்படாத படைப்புக்கள் பிரசுரிக்கப்பட மாட்டாது என்பதையும் கவனத்தில் கொள்ளுங்கள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# குருதி குடிக்கும் பௌத்தம்

தவபாரதி




எந்நேரமும் சாந்தமாகவும் அமைதியாகவும் போதனை செய்துகொண்டிருக்கும் புத்தரால் தோற்றுவிக்கப்பட்ட பௌத்தம் இலங்கைக்கு அடுத்ததாக இப்போது மியன்மாரில் குருதி புசிக்கத் தொடங்கியுள்ளது. மியன்மாரிலும் இலங்கையைப் போன்று பௌத்தர்களே பெரும்பான்மையாக இருக்கின்றனர். ஆட்சியும் அவர்களின் கைகளிலயே உள்ளது.

இந்தியாவின் கிழக்குப் பகுதியில் வாழ்ந்திருந்த புத்தரால் தோற்றுவிக்கப்பட்ட பௌத்தம் அதிலிருந்து தென்கிழக்காசியாவுக்கும் (கம்போடியா, லாவோஸ், தாய்லாந்து, மியன்மார், இலங்கை) கிழக்காசியாவுக்கும் (சீனா, கொரியா, ஜப்பான், வியட்நாம், சிங்கப்பூர், தாய்வான் ) என ஏனைய ஆசிய நாடுகள் பலவுக்கும் பரவியிருக்கின்றது. தேரவாத பௌத்தம், மகாயான பௌத்தம், வச்சிராயன பௌத்தம் எனும் மூன்று வகைப்பாட்டுக்குள் இருக்கும் இந்த மதத்தைப் பின்பற்றும் மக்கள் உலகிலே கிட்டத்தட்ட 350தொடக்கம் 550 மில்லியன் வரைக்கும் இருப்பதாகக் கணிக்கப்பட்டுள்ளது. இந்தியாவில் தோன்றிய பௌத்தம் என்பது ஆசியாவிலயே தான் அதிகம் பின்பற்றவும்படுகின்றது.

**அமைதியும் சாந்தமும் அறியாத பௌத்தம்**

மனிதனாக வாழ்ந்து மடிந்த புத்தரின் போதனைகளின்படி தோற்றுவிக்கப்பட்டதே பௌத்தம். ஆகையால் புத்தர் என்பவர் கடவுள் இல்லை. அவர் ஒரு சாதாரண மனிதர். ஆனால் அனைத்துப் பற்றுக்களிலுமிருந்தும் விடுதலை பெற்ற மகத்துவம் அவருக்கு உண்டு. இதனால் பௌத்தர்கள் புத்தரை வழிபடுவதில்லை...! மாறாக அவருக்கு மரியாதை செலுத்துகின்றனர். அல்லது அவரது சமாதிகளில் அவரை நினைவுகூருகின்றனர். தாம் பரவியிருக்கும் ஆசிய நாடுகளில் அனேகமாகப் பௌத்த மதத்தினரே பெரும்பான்மையானவர்களாகக் காணப் படுகின்றனர். ஆட்சியும் அவர்களின் கைகளிலேயே காணப்படுகின்றது. ஆனாலும் நவீன பௌத்தர்கள் மத்தியில் புத்தர் போதித்த எந்தவொரு போதனை பற்றிய சிறிதளவு அறிவுகூட இருப்பதில்லை மாறாகப் புத்தபிரானின் போதனைகளுக்கு எதிரான நிலைப்பாட்டை உடையவர்களாகவே இவர்கள் காணப்படுகின்றனர். ஆசியாவில் இலங்கையும் பௌத்தர்கள் பெரும்பான்மையாகவுள்ள நாடே. பெரும்பான்மையாகவுள்ள அவர்களின் கைகளிலயே இந்த நாட்டின் ஆட்சி, அதிகாரமும் உள்ளது. ஆனால் இங்குள்ள பௌத்த ஆட்சியாளர்கள் இன்றுவரை நாட்டில் சமத்துவத்தையோ நடுநிலையான ஆட்சியையோ கடைப்பிடிக்க எத்தனிக்கக்கூட இல்லை. புத்தபிரானின் கோட்பாடுகளில் இருந்து முற்றிலும் மாறுபட்டு முரண்சிந்தனைகளுடன் வக்கிர புத்தியும் கொடூர எண்ணங்களும் கொண்டவர்களாகவே அவர்கள் தமது ஆட்சியைத் தொடர்கின்றனர். ஆட்சியாளர்கள் இவ்வாறிருக்க பௌத்தம் சார்ந்த சமயத்துறவிகள்(பிக்குகள்) அவர்களுக்கும் பல படிகள் மேலாகத் தமது குரூரத்தை இங்குள்ள சிறுபான்மையினர் மீது திணிக்கின்றனர். இத்தகைய பௌத்தர்களே இலங்கையில் இனப் பிரச்சினையைத் தோற்றுவித்ததிலும் அதை முன்னின்று நடத்திக் கொள்வதிலும் பெரும் ஈடுபாட்டுடன் இருக்கின்றார்கள். இவர்களாலே தான் இந்த நாட்டில் ஏராளமான உயிரழிவுகளும் இடம்பெற்று ஓய்ந்திருக்கின்றன. ஆனால் இன்றளவிலும் அதை அவர்கள் உணர்ந்ததாகவே, உணர்ந்து திருந்துவதாகவே இல்லை.

**பொதுப்புத்தியில் பௌத்தர்கள்**

எமது நாட்டில் மாத்திரம் பௌத்தர்கள் இவ்வாறு நடந்து கொள்ளவில்லை. தென்கிழக்காசிய நாடான மியன்மாரிலும் அவர்கள் இத்தகைய கொடூரமானவர்களாகவே ஆட்சி நடத்துகின்றனர். பொதுவாகவே பௌத்தர்கள் என்பவர்கள் பகுத்தறிவுபெற்ற மனிதர்கள் அல்ல. அந்த மதமும் அதனைப் பின்பற்றுபவைகளும் கொடூர விலங்குகள் என்பது இந்த இரண்டு நாடுகளிலும் பௌத்தர்கள் நடந்து கொள்வதன் மூலம் வெளிப்படுவதாயுள்ளது. எந்நேரமும் சாந்தமாகவும் அமைதியாகவும் போதனை செய்து கொண்டிருக்கும் புத்தரால் தோற்றுவிக்கப்பட்ட பௌத்தம் இலங்கைக்கு அடுத்ததாக இப்போது மியன்மாரில் குருதி புசிக்கத் தொடங்கியுள்ளது. மியன்மாரிலும் இலங்கையைப் போன்று பௌத்தர்களே பெரும்பான்மையாக இருக்கின்றனர். ஆட்சியும் அவர்களின் கைகளிலயே உள்ளது. இலங்கையில் இவர்கள் தமிழர்களை அதிகளவில் கொன்று குவித்ததைப்போன்று இன்று மியன்மாரில் சிறுபான்மையினராகவிருக்கும் முஸ்லிம் களைக் (ரொகிஞ்சா முஸ்லிம் மக்கள்) கொல்கின்றார்கள். குறித்த முஸ்லிம்களுக்கு அங்கு குடியுரிமை மறுக்கப்பட்டு நாட்டைவிட்டு விரட்டியடிக்கப்படுகின்றார்கள். வலிந்து அவர்களைஆயுதமெந்த வைத்து பெரும் பலம் கொண்டு அவர்களை அழிக்கும் இலங்கையில் தமிழர்களுக்கு நடந்ததைப்போன்ற உத்தியையும் இப்போது அந்த நாட்டு அரசு மிகவும் குறைந்தளவில் அங்குள்ள சிறுபான்மையினரான ரொகிஞ்ச முஸ்லிம் மக்களை அழிப்பதற்கு அங்கு கையாளுகின்றது.

**அப்பாவிகளை அமைதியாகக் கொல்லும் அரசு**

போர்க்காலத்திலும் இறுதிப்போரின்போதும் இங்கு நிகழ்ந்த இளைஞர்களைக் கடத்திக் காணாமலாக்கியமை, பெண்களை வன்புணர்ச்சிக்கு உட்படுத்திக் கொன்றமை, இரசாயன ஆயுதங்களை ஏவி ஏராளம் அப்பாவி மக்களைக் கொன்றமை உள்ளிட்ட பல கொடூரங்களை அங்கு அந்த நாட்டு அரசு நிகழ்த்தி வருகின்றது. குறித்த மக்களுக்கு எதிராக அந்த நாட்டு இராணுவம் செய்கின்ற இத்தனை கொடுமைகளையும் இங்கு, இறுதிப்போர் நிகழ்ந்த பகுதியை ஊடகங்களும் பன்னாட்டு நிறுவனங்களும் அணுகி உண்மையை வெளிக் கொண்டுவந்துவிடாமலிருக்க இராணுவம் இரும்புக்கவசம் கொண்டு தடுத்ததைப் போலவே அங்கும் அந்த மக்களுக்கு எதிராக நடத்தப்படும் அரச வன்முறைகள் வெளியே தெரியாமல் மறைக்கப்படுகின்றன. பன்னாட்டு ஊடகங்களும் அங்கு சென்று உண்மையை அறிய விடாமல் தடுக்கப்படுகின்றன. அந்த மக்களின் உயிர் பிரியும் முனகல்களை வெளித்தெரியாமல் மறைத்து, அமைதியாக அரசு அவர்களைக் கொல்கின்றது. இத்தனைக்கும் அந்த நாட்டு ஜனாதிபதி அமை தி்க்கான நோபல் பரிசு பெற்ற ஒருவர்...! அத்துடன் அவர் ஒரு பௌத்தர்!!!





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



சிறுகதை

# புது வசந்தம்

மலரன்னை

அந்த வீட்டுக்குள் காலடி எடுத்து வைத்த அன்றே அவள் தனது நிலைப்பாட்டை மாமியாருக்குத் தெளிவாகக் கூறிவிட்டாள். "எனக்கு நினைவு தெரிந்த காலத்திலிருந்து நான் அம்மாவின் முகத்தைப் பார்த்ததில்லை. அவரது அன்பையோ,அரவணைப்பையோ நான் அறிந்ததில்லை. உங்களை நான் தாயாக நினைத்து அம்மா என்றேகூப்பிடப் போறன்" அவளது வெளிப்படையான பேச்சு சரசுவுக்குப் பிடித்திருந்தது. சரசுவும் வாணியைத் தனது மகளாகக் கருதி அன்பு பாராட்டினாள்.

ஆனால் வாணியின் கணவன் சுரேன்தான் அங்கு பிரச்சினை. காலை வேளைகளில் அவன் ஒரு பண்பான கணவனாகவிருப்பான். வேலைத் தளத்திலும் கண்ணியமாகக் கடமை புரிகின்றான். மாறாக, மாலையில் வீடு திரும்பும்போது, அவன் குடிபோதையில் மூழ்கியிருப்பான். கணவனது இந்தப் போக்கு வாணிக்குச் சலிப்பை ஏற்படுத்தினாலும், காலப்போக்கில் அவனது பழக்கத்தைத் திருத்திவிடலாம் என்ற நம்பிக்கை அவளுக்கிருந்தது. அத்து டன் குடிகாரன் என்று தெரிந்தே வாணி அவனைத்திருமணம் செய்து கொண்டவள்...!

சுரேனது குடிப்பழக்கத்தால் எவரும் அவனுக்குப் பெண் கொடுக்க முன்வரவில்லை. இத்தனைக்கும் அவனுக்குப் பிரதேச செயலகத்தில் நல்ல வேலை. கை நிறையச் சம்பளம். ஆனால் சம்பளத்தில் கணிசமான பணத்தைக் குடிக்குச் செலவழித்து விடுவான்.

சரசு தனது மகனுக்குச் சீதனம் என்று எதையும் எதிர்பார்க்கவில்லை. ஆனால் தினமும் குடி போதையில் மூழ்கிக் கிடப்பவனுக்கு எவர்தான் தமது பிள்ளையைத் திருமணம் செய்து கொடுக்க முன்வருவார்கள்...?

வாணியின் அப்பாவோ தீராத நோயால் பீடிக்கப்பட்டு அவஸ்தைக்குள்ளாகியிருந்தார். பலாலி அவர்களது சொந்த ஊர். தாரத்தைப் பறிகொடுத்த அவர் தனது சொந்த நில புலங்களையும் இராணுவம் ஆக்கிரமித்துவிட்டதால், வேறொரு கிராமத்தில், வாடகை வீடொன்றில் தனது மகளுடன் வசித்து வருகின்றார். மரக்கறி வியாபாரம் செய்து அந்த வருமானத்தில் சீவியத்தையும் மகளது படிப்பையும் கவனித்து, வங்கியில் அவளது பெயரில் சிறுசேமிப்பும் அத்துடன் தாயின் நகைகளை மகளுக்காகப் பக்குவப்படுத்தியும் வைத்தார். இவற்றைக் கொண்டு மகளின் திருமணத்தை நடத்த நினைத்தவருக்கு அது முடியாத காரியமாக இருந்தது. மகளுக்கு வரன் தேடி அவர் தளர்ந்து போனார். எதுவும்கைகூடவில்லை. அவர் தேடும் வரன்களில் வீடு வளவு சீதனமாக வேண்டும் என மாப்பிள்ளை வீட்டார் முனைப்பாக இருந்தனர். வீடு வாசலைப் பறிகொடுத்து இருக்கும் அவர் மீது கருணை காட்ட எவருமில்லை. தனது வாழ்நாள்களை விரல்விட்டு எண்ணிக் கொண்டிருந்த அவருக்கு மகளின் எதிர்காலத்தை எண்ணிக் கலங்கினார்.

அந்தச் சமயத்தில்தான் சரசு அவரிடம் வந்து வாணியைப் பெண் கேட்டாள். தனதுமகனைப்பற்றியவிவரங்களைஒளிவு மறைவின்றி எடுத்துச் சொன்னாள். அவளது தாயுள்ளத்தை அவர் புரிந்ததை விட வாணி நன்கு புரிந்து கொண்டாள். தந்தையின் தயக்கத்தை வாணி உடைத்தெறிந்து அந்த வாழ்க்கையை ஏற்றுக் கொண்டாள்.

சில நாள்களில் இருவருக்கும் திருமணம் நடந்தேறியது. முதலிரவன்றே சுரேன் குடித்திருந்தான். அருவருப்புடன் தனது வாழ்க்கையைத் தொடங்கினாள் வாணி. போதை தலைக்கேறினால், சில சமயங்களில் வீட்டுக்குள்ளே வாந்தி எடுத்துவிடுவான். வாணியோ அவற்றைச் சுத்தப்படுத்துவாள். போதை கலைந்ததும் அவளிடம் மன்னிப்புக் கேட்பான்.

"சொறி வாணி. நேற்றைக்கு கொஞ்சம் கூடிப்போச்சு" வாணி புன்முறுவல் கொள்வாள்.

"இதைக் கொஞ்சம் கொஞ்சமாக் குறைச்சுக் கொள்ளுங்கோ எண்டு நான் கெஞ்சிறதைக் கேட்கிறீங்களில்லையே..."

சுரேன் பிடரியைச் சொறிந்து கொள்வான். சில மாதங்களில் வாணியின் தந்தை மகளுக்குத் துணைதேடிவிட்ட திருப்தியுடன் ஆயுளை முடித்துக்கொண்டார். திருமணத்தைச் செய்து தந்தைக்கு நிம்மதியைத் தேடிக்கொடுத்த திருப்தியில் வாணி மனம் தேறினாள்.

> சுரேனது குடிப்பழக்கத்தால் எவரும் அவனுக்குப் பெண் கொடுக்க முன்வரவில்லை. இத்தனைக்கும் அவனுக்குப் பிரதேச செயலகத்தில் நல்ல வேலை. கை நிறையச் சம்பளம். ஆனால் சம்பளத்தில் கணிசமான பணத்தைக் குடிக்குச் செலவழித்து விடுவான்.

சரசு தன் மருமகளுக்காக இரக்கப்படுவாள். அவளைத் தன் சொந்த மகளாகக் கருதி கண்ணும் கருத்துமாகப் பார்த்துக் கொண்டாள். மகன் போதையற்றிருக்கும்போது அவனுக்குச் சிலவற்றை எடுத்துச் சொல்வாள். சுரேன் பதிலேதும் சொல்ல மாட்டான். தாய் சொல்லுவது சரியென அவனது உள்ளுணர்வு சொல்லும். ஆனால்... வேலை முடிந்து வீடு வரும்போது சாராயக் கடையைக் கண்டதும் மனம் அங்கே போகச்சொல்லும். பிற கென்ன...! மீண்டும் பழைய கதை அரங்கேறும்.

காலம் கரைந்து போனது. அன்று ஞாயிற்றுக் கிழமை வாணிநேரத்தோடுஎழுந்து ஆகவேண்டிய அலுவல்களையெல்லாம் செய்து முடித்தாள். சுரேன் விடுமுறை நாள்களில் நீண்டநேரம் நித்திரை கொள்வான். வாணி அவனை எழுப்பித் தொந்தரவு செய்வதில்லை. அன்று தேநீரும் கையுமாக வாணி அறைக்குள் வந்தாள். அவனது காலைத் தொட்டு வணங்கினாள். வாணியின் செய்கையைப் பார்த்துத் திடுக்கிட்ட சுரேன்

"வாணி...! இதென்ன புதுப்பழக்கம்"

"இல்ல... இண்டைக்கு எங்களுக்குக் கலியாணம் நடந்து ஒரு வருசம். இந்த ஒரு வருசத்தையும் நாங்கள் சந்தோசமா வாழ்ந்தமாதிரி இனியும் இப்படியே சந்தோசமாய் வாழவேணும்" என்றாள்.

சுரேனுக்கு சுருக்என்றது. மனச்சாட்சி உறுத்தியது.

"குளிச்சிட்டு வாங்கோ நாங்கள் ரெண்டு பேரும் கோயிலுக்குப் போட்டு வருவம். உங்களுக்கு விருப்பமில்லாட்டி வேண்டாம்"

மகனும் மருமகளும் கோயிலுக்குப் புறப்பட்டுப் போவதைப் பார்த்த சரசுவின் மனம் குளிர்ந்தது. சுவாமி தரிசனத்தை இனிதே முடித்துக் கொண்டு இருவரும் ஒரு மரநிழலின் கீழ் அமர்ந்த னர். நீண்ட நாள்களாக மனதிலிருந்தசந்தேகத்தை அப்போது மெதுவாகக்கிளறத்தொடங்கினாள் வாணி.

"உங்களிட்டை... நான் ஒன்று... கேக்க வேணும். ஆனா... கேக்கப் பயமா இருக்குது"

"ஏன் பயப்பிடுறீர்...? எதுவாயிருந்தாலும் கேளும். நீர் ஆர்? என்ர மனிசிதானே" வாணிக்குச் சிறிது தென்பு வந்தது. நெஞ்சில் கையை வைத்துத் தன்னை ஆசுவாசப்படுத்திக் கொண்டாள்.

"நீங்கள் ஏன் இப்பிடிக் குடிக்கிறீங்கள்... இதுக்கு உங்கட பிரச்சினைதான் காரணமா?"

"சீச் சீ... நான் யாரோடும்சேர்ந்துகுடிப்பதில்லை"

எங்கோ வெறித்துப் பார்த்தவனாய் சிறிது நேரம் மௌனம் சாதித்தவன். பின்னர் தொடர்ந்தான்.

"வாணி... என்னுடைய மன துக்குள்ள ஓர் ஆறாத காயம் இருக்கு. அதை நான் இன்று வரைக்கும் எவரிடமும் சொன்னதில்லை" "என்னட்டச்சொல்லியிருக்கலாமே. உங்கட சுக, துக்கங்களில சரிசமமாகப் பங்கெடுக்கத்தானே மனைவியாய்வந்திருக்கிறன்"

அவனது வலியைப் போக்கும் ஒத்தடமாக அமைந்தன அவளது வார்த்தைகள். சுரேன் வாணியைப் பார்த்தான். அவளுடைய கைகள் இரண்டையும் பிடித்துக்கொண்டான்.

"வாணி! இறுதிக் கட்டப் போரிலை முள்ளி வாய்க்காலில நடந்த படுகொலைகள் ஏற்படுத்திய வடு இன்னும் எனக்குள்ள மாறாமக் கிடக்கு" ஒரு குழந்தையைப் போல அவன் விம்மினான்.

"என்ன...! என்ன சொல்லுறீங்கள்"

"வாணி... நான் கம்பஸில படிக்கேக்க என்னோட படிச்ச சங்கவியை விரும்பியிருந்தன். அவளும் என்னை நேசித்தாள். அவளுக்கு ரீச்சர் வேலை அவளுடைய சொந்த ஊரான வட்டக்கச்சியிலயே கிடைச்சிது. எங்கட காதலை வீட்டில சொல்லி கல்யாணத்தில ரெண்டு பேரும் ஒன்று சேருவம் எண்டு சொல்லிப் போனாள். போர் முடிஞ்சு கன நாளைக்குப்பிறகுதான் அறிஞ்சன். குடும்பத்தோட அவர்கள் கொத்துக்குண்டுக்குப் பலியாகி விட்டார்களாம்" விம்மி விம்மி அழுத கணவனைத் தன் மடிமீது சரித்துக்கொண்டவள் அவனுக்கு ஆறுதலளித்தாள். அவளது கண்களும் கலங்கியிருந்தன. "வாணி! வேலை நேரங்களில எனது கவனம் முழுவதும் வேலையிலயே இருக்கும். வேலை முடிஞ்சு புறப்பட்டதும் மனசில அவளுடைய நினைவுகள் நிறையும். கவலை அரித்துக் கொள்ளும். அதானால் தான் நான் குடிக்கிறன்"

அன்று வீடு திரும்பும்போது சுரேனது இதயம் இலேசாயிருந்தது. மாலையானதும் அவன் வெளியே புறப்பட எத்தனிக்கவில்லை. வாணியிடம் தேநீரை வாங்கிக் குடித்தான்.

காலச்சக்கரம் மெதுவாக நகர்ந்தது. சுரேனுடைய போக்கிலும் மாற்றங்கள் தென்பட்டன. சித்திரை வருடப் பிறப்புக்குச் சுரேன் அனைவருக்கும் புது ஆடைகள் வாங்கியிருந்தான். அன்றைய தினம் சுரேனும் வாணியும் கோயிலுக்குப் புறப்பட்டனர். இறைவன்தரிசனம் இனிதாய்முடிந்தது. இப்போது வாணிக்குத் தலை சுற்றுமாப் போலிருந்தது. கணவனை அழைத்துப்போய் ஒரு மரநிழலில் அமர்ந்து கொண்டாள். "வாணி! ஏன் உமக்கு இப்பிடி வேர்க்குது. இந்தாரும் துடைத்துக் கொள்ளும்" தனது கைக்குட்டையை எடுத்து நீட்டினான். வாணிக்கு வியர்த்துக் கொட்டியது. வயிற்றுக்குள் ஏதோ புரளுமாப்போல் ஓர் உணர்வு. அவளுக்குப் புரிந்து விட்டது. தயக்கத்துடன் மெதுவாக.... "உங்களுக்கு நான் ஒண்டு சொல்லப்போறன்' அவ்ளது முகம் வெட்கத்தால் சிவந்தது. "நீங்கள்... அப்பாவாகப் போறியள்" மகிழ்ச்சி பொங்கச் சுரேன் ஐஸ்கிறீம் வாங்க ஓடினான். இனியென்ன அவர்களது வாழ்க்கையில் இனிப் புதுவசந்தம் தவழப் போகின்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org





# சிந்தனைப் புதிர்கள்

01. ஆடு கத்தும் மாதம் எது? மே
02. பேசாத மை என்ன மை? ஊமை
03. வறுக்காத வறை என்ன வறை? ஏவறை
04. பசியுள்ள மாதம் எது? ஐப்பசி
05. வரி செலுத்தும் மாதங்கள் எவை? ஜனவரி, பெப்ரவரி
06. வாயில் மலரும் பூ எது? - சிரிப்பு

- முகிலினி



பு.சந்தோஸ்,
தரம் – 4,
யா/மல்லாகம் விசாலாட்சி வித்தியாலயம்.



பா.அகிலேஷன்,
தரம் – 3D
யா/புனித ஜோன்பொஸ்கோ வித்தியாலயம்.

# பிழையற எழுதுவோம்

| பிழை | | சரி |
|---|---|---|
| 01.ஆலையம் | - | ஆலயம் |
| 02.இறுவெட்டு | - | இறுவட்டு |
| 03.முதுசம் | - | முதுசொம் |
| 04.இராட்சியம் | - | இராச்சியம் |
| 05.ஆராச்சி | - | ஆராய்ச்சி |

பு.தமிழரசி,
அராலி வள்ளியம்மை ஞா.வி.



# ஆகாயத்தோட்டி

'தோட்டி' என்றால், 'சுத்தம் செய்பவர்' என்று பொருள். சுற்றுச் சூழலைச் சுத்தம் செய்யும் பறவை காகம் ஆதலால், இது 'ஆகாயத்தோட்டி' என்று அழைக்கப்படுகிறது. சுற்றுச் சூழலில் காணப்படும் இறந்த விலங்குகள் மற்றும் கழிவுப் பொருள்களை உட்கொண்டு, சூழலைச் சுத்தமாக்குகிறது காகம்.

பறவைகளில் தந்திரம்மிக்கது காகம். காகத்திடம் உள்ள சிறப்பான குணம், ஒற்றுமை. எங்கு இரை கிடைத்தாலும், தன் இனத்தைக் கூவி அழைத்துக் கூடி உண்ணும் பண்புள்ள காகத்திடம் இருந்து, நாமும் ஒற்றுமைப் பண்பைக் கற்றுக்கொள்வோம்.

த.ஓவியா

# அப்துல் கலாமிடம் இல்லை... இல்லை...

01. அப்துல்கலாம் பிறந்த இடமான இராமேஸ்வரத்தில் அவருக்குச் சொந்தமாக ஒரு வீடுகூட இல்லை.
02. கோபமான வார்த்தைகளை அவர் பயன்படுத்தியதே இல்லை.
03. யாரையும் அவர் ஒருமையில் அழைத்ததே இல்லை.
04. மத வேறுபாடு அவர் பார்த்ததே இல்லை.
05. ஊழல் குற்றச்சாட்டுக்கு அவர் ஆளானதே இல்லை.
06. காலை 6 மணிக்கு மேல் அவர் தூங்கியதே இல்லை.
07. இரவு 11 மணிக்கு முன் அவர் படுக்கைக்குச் சென்றதே இல்லை.
08. தொலைக்காட்சி அதிகம் பார்ப்பதே இல்லை.
09. சோம்பலாக அவர் இருந்ததே இல்லை.
10. ஆடம்பரத்தை அவர் விரும்பியதே இல்லை.
11. நவீனகாலக் கண்டுபிடிப்புகளுக்கு ஆதரவானவர் என்றாலும், கைபேசி போன்றனவற்றை அவர் அதிகமாகப் பயன்படுத்தியதே இல்லை.
12. மிகப்பெரிய ஆய்வுகளில் அவர் வெற்றிகரமாகச் செயற்பட்டிருந்தாலும், ஆராய்ச்சிப்படிப்பான பி.எச்.டி பட்டம் பெற்றதே இல்லை.
13. திருமணம் செய்து கொண்டதே இல்லை.
14. தனக்காக எந்தச் சொத்தும் சேர்த்ததே இல்லை.
15. சாவைத் தழுவும் வரை, பணியிலிருந்து அவர் ஓய்வு பெறவே இல்லை.



ஏ.நட்சத்திரா




# மிருகக் காட்சிச்சாலை

அப்பா என்னை
அழைத்துச் சென்றார்
அங்கு ஓரிடம்
அங்கிருந்த
குயிலும் மயிலும்
ஆடிப் பாடின
குள்ள நரியும்
புனுகுப் பூனையும்
எல்லாம் இருந்தன
குட்டி மான்கள்
ஒட்டகச்சிவிங்கி
கூட நின்றன
குரங்கு என்னைப்
பார்த்துப் பார்த்து
குறுகுறென்றது
யானை ஒன்று
காதைக் காதை
ஆட்டி நின்றது
முதலை தலையைத்
தூக்கிப் பார்த்து
மூச்சு விட்டது
கரடிகூட
உறுமிக் கொண்டே
காலைத் தூக்கிற்று
சிங்கம், புலி
எல்லாம் கண்டேன்
கண்டும் பயமில்லை
சூரனைப்போல்
நின்றிருந்தேன்
சிறிதும் அஞ்சவில்லை
சென்று வந்த
இடம் உனக்குத்
தெரியவில்லையா?
மிருகக் காட்சிச்
சாலைதானே
வேறொன்றுமில்லை.





**சிந்தனைக்கு**
பயணங்கள்தான் சிறந்த அனுபவங்களைப் பெற்றுத்தருகின்றன.
- ஓர் அறிஞர்

# புத்தாண்டுச் சுற்றுலா



அன்று வெள்ளிக்கிழமை. வகுப்பறையில் மிகுந்த அமைதியுடன் இருந்தாள் சாதுர்யா. அவள் தரம் ஐந்தில் கல்வி பயிலும் மாணவியாக இருந்தாலும், வயதை மீறிய புத்திசாலி. பிறர் மனதறிந்து நடக்கும் அறிவாளி. சிறந்த குணங்கள் அத்தனையும் நிரம்பப் பெற்றவள். கல்வியை உயிராக நேசிப்பவள். கல்விச் சுற்றுலாவுக்கு அவள் வரவில்லை என்பதை அறிந்து சகமாணவர்கள் அவளை நகையாடிக் கொண்டிருந்தனர். அந்தச் சமயம் பார்த்து, வகுப்பாசிரியர் வந்தார். அனைவரும் எழுந்து நின்று அவரை வரவேற்றனர். "உங்களுக்கும் இனிய நற்காலை வணக்கம். அமருங்கள் பிள்ளைகளே" என்றவாறு ஆசிரியர் மதுமிதா இருக்கையில் அமர்ந்தார்.

"ரீச்சர், சுற்றுலாவுக்கு வர விருப்பம் தெரிவித்த மாணவர்களின் பெயர் விவரம் எடுத்திட்டேன். இந்தாங்கோ" எனக் கூறியவாறு தன் கையில் வைத்திருந்த அந்தப் பெயர்ப்பட்டியல் காகிதத்தை வகுப்பாசிரியரிடம் கொடுத்தாள் சாதுர்யா. அதனைப் பெற்றுக்கொண்ட ஆசிரியர் அதிலுள்ள பெயர் விவரங்களைப் படித்து முடித்துவிட்டு, "சாதுர்யா, நீ இந்தச் சுற்றுலாவுக்கு வரலயாம்மா?" என்று கனிவுடன் கேட்டார். அவள் தலையைக் குனிந்தவாறு, இல்லை ரீச்சர்" என்று பதிலளித்தாள். "சாதுர்யா, மதியம் என்னைச் சந்திக்கவும்" எனக் கூறியவாறே ஆசிரியர் பாடம் நடத்தத் தொடங்கினார்.

சாதுர்யாவின் தந்தை குடிக்கு அடிமையானவர். அவளுடன் மூன்று பிள்ளைகளையும் தாயார்தான் உழைத்துக் காப்பாற்றுகிறார். தாயாரிடம் சுற்றுலா செல்வதற்குப் பணம் கேட்க சாதுர்யாவுக்கு மனம் கேட்கவில்லை. ஆதலால், சுற்றுலா போவதை அவள் விரும்பவில்லை. தன் வீட்டுச் சூழலை மனதில் சுமந்தவாறு, ஆசிரியரைச் சந்திக்கச் சென்றாள் சாதுர்யா. காற்றில் ஆடிய பூக்கள், அவளை ஆசீர்வதித்துக்கொண்டிருந்தன.

அவளது எண்ணங்களும் பாதங்களும் முன்னோக்கி நகர்ந்தன. மதுமிதா முன்னிலையில் நின்றாள் சாதுர்யா. "வாம்மா... நான் உங்க வீட்டுக்குப் போய், நீ சுற்றுலாவுக்கு ஏன் வரவில்லை என்ற காரணத்தை அறிந்துவிட்டேன். உனக்குரிய பணம் நான் தருகிறேன். நீ வாம்மா... சரியா?" என்று அவளது முதுகில் தட்டிக்கொடுத்தார் ஆசிரியர். "சரி ரீச்சர்... ரொம்ப நன்றி" என்றாள் சாதுர்யா. சித்திரைப் புத்தாண்டை முன்னிட்டு, அவர்கள் செல்லவுள்ள அந்தச் சுற்றுலா நினைவுகளை அசைபோட்டவாறு, வகுப்பறை நோக்கி நடக்கத் தொடங்கினாள் சாதுர்யா.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பெரீ...ய பிரித்தானியா...!





தவபாரதி

உலகை ஆண்டவர்கள்...! நாடோடிகள்...! பல தேசங்களையும் கைப்பற்றித் தமது ஆட்சிக்குட்படுத்தியவர்கள்...! இத்தகைய பெயரும் புகழும் ஆங்கிலேயர்களையே சாரும். அவர்களின் தாயகம்தான் இந்தப் பிரித்தானியா. உலகிலுள்ள ஏராளம் நாடுகளைத் தமது காலணியாதிக்கத்தின் கீழ் வைத்திருந்து, அவற்றுக்குத் தம்மிடமிருந்து சுதந்திரமளித்துச் சென்றவர்கள் இவர்கள். அத்துடன் அந்த நாடுகளை அடிமைப்படுத்தி ஆண்டிருந்தபோது அந்த நாட்டு வளங்களைச் சுரண்டி எடுத்துச்சென்று தமது நாட்டை வளங்கொளிக்கச் செய்தவர்களும்கூட அவர்களே. இதனாலேயே அவர்கள் உலகின் செல்வந்தர்களாகத் தொடர்ந்தனர்.

லண்டனைத் தலைநகரமாகக் கொண்ட பிரிட்டனை லண்டன் என்று அழைப்பதும் வழக்கம். அத்துடன் ஐக்கிய இராச்சியம், இங்கிலாந்து, பிரித்தானியா என்ற பல பெயர்கள் கொண்டும் அது அழைக்கப்படுகின்றது. அத்துடன் இந்தப் பிரித்தானியா, 'பெரிய பிரித்தானியா' என்றும் அழைக்கப்படுகின்றது. அதன் அர்த்தம் அந்த நாட்டின் நிலம் உலகம் முழுதும் பரந்துள்ளது என்பதே. அதாவது ஐரோப்பாவிலுள்ள ஒரு தீவான பிரிட்டன் ஏனைய சில நாடுகளில் இன்றும் தனக்குச் சொந்தமாகக் குறிப்பிட்டளவு நிலப்பரப்புக்களை வைத்திருக்கின்றது. அதாவது அதன் காலணியாதிக்கம் இன்றுமுள்ளது என்பதே அதன் உள்ளார்ந்தம். இதனால் பிரித்தானியா என்பது உலகெங்கும் பரந்துள்ள ஒரு தேசம் என்பதால் அது பெரிய பிரித்தானியா என்றும் கொள்ளப்பட்டது.




### சுரண்டியவைகளைச் சுரண்டல்!

பல நாடுகளையும் அடிமைப்படுத்தி அவற்றின் வளங்களைச் சுரண்டித் தனது நாட்டுக்குக் கொண்டு சென்று குவித்ததாலோ என்னவோ தன்னுள் ஏராளமான செல்வங்களைக் கொண்டதாகப் 18ஆம் நூற்றாண்டுகளில் கைத்தொழில் புரட்சி தொடங்கி இன்று வரையில் அது பெருமளவாகத் தன்னளவில் விருத்தியடைந்தும் விட்டது. ஐரோப்பாவின் செல்வக் களஞ்சியம் என்று வர்ணிக்கப்பட்ட இதனை மையப்படுத்தியே ஐரோப்பிய நாடுகள் பலவற்றின் வர்த்தகக் கொடுக்கல் வாங்கல்களும், ஏனைய பல பரிமாற்றங்களும் நிகழ்ந்தன. அதன் மூலம் பிரிட்டனின் வளங்களைச் சுரண்டி அவை வளர்ந்தன. இதற்குக் கிட்டத்தட்ட 40வருடங்களுக்கு மேலாகப் பிரிட்டனைப் பிரதானப்படுத்தி நிறுவப்பட்ட ஐரோப்பிய ஒன்றியத்தை உதாரணமாகக் கூறலாம். இதனால் பிரிட்டனின் வளங்கள் பலவும் அதன்பாலுள்ள நாடுகளுக்குப் பகிரப்பட்டன. அத்துடன் பிரிட்டனின் வளங்களைப் பயன்படுத்தி அந்த நாடுகள் விருத்தியடைந்தும் கொண்டன. இதன் மூலம் தன்னுடைய செல்வாக்கால் ஐரோப்பிய நாடுகள் பலவற்றையும் தன்னில் தங்க வைத்திருந்த பிரிட்டன், தன்னுடைய வளத்தை ஏனையவர்களுக்குப் பங்குபோடுவதைத் தடுக்கத் தற்போது குறித்த ஒன்றியத்திலிருந்து விலகியி ருக்கின்றது. இதனால் ஒருபுறம் பிரிட்டனுக்கு நன்மைகள் இருந்தாலும் மறுபுறம் தீமைகளும் இருக்கத்தான் செய்கின்றன.

### தூர நிலங்களை இழக்கும் நிலை

ஐரோப்பிய ஒன்றியத்திலிருந்து பிரிட்டன் விலகும் தருணம் நெருங்கிக் கொண்டிருக்கும் சூழலில் புதிய தொரு பிரச்சினையைப் பிரிட்டன் எதிர்கொள்ளவிருக்கின்றது. தனது நாட்டின் ஒரு பகுதியைப் பிரிட்டன் இழந்துவிடும் அபாயமே அது. அதாவது பிரிட்டன் என்பது தன்னைப் பிரதானப்படுத்தும் ஐரோப்பாவிலுள்ள குறித்த ஒரு தீவு மட்டுமல்ல. அது தனது நிலப்பரப்புடன் சேர்ந்திருக்கும் ஸ்கொட்லாந்திலும் தனது ஆதிக்கத்தைக் கொண்டுள்ளது. அத்துடன் கடல் கடந்து அதன் அயலில் இருக்கும் தீவான அயர்லாந்தின் நிலத்திலும் தனக்குரியதாக ஆறு மாகாணங்களைக் கைவசம் வைத்திருக்கின்றது. அதுமட்டுமன்றித் தன்னிலிருந்து நீண்டதூரத்தில் கடல் கடந்து அமைந்திருக்கும் மற்றொரு ஐரோப்பிய நாடான ஸ்பெயினில் குறித்த ஒரு பகுதியை இப்போதும் பிரித்தானியா தன்பால் வைத்திருக்கின்றது. ஆகையால் பிரிட்டன் இப்போது ஐரோப்பிய ஒன்றியத்திலிருந்து விலகிக் கொள்ளும்போது இந்த நிலப்பரப்புக்களை இழக்கும் நிலையையும் எதிர்கொள்ள நேரிடலாம்!

### ஜிப்ரால்டர் - ஸ்பெயின் - பிரிட்டன்

ஜிப்ரால்டர் என்பது பிரிட்டனின் ஒரு பகுதி. ஆனால் அது பிரிட்டனிலிருந்து கடல் கடந்து மிகவும் தள்ளியிருக்கும் ஒரு பகுதி. ஜிப்ரால்டரின் பரப்பளவு 6.7 சதுர கிலோ மீற்றர்கள். இங்கு 30,000 பேர் வசிக்கின்றார்கள். இதன் வட எல்லை ஸ்பெயினுடன் ஆனது. ஜிப்ரால்டரை அடுத்த ஸ்பெயின், பிரிட்டன் ஆகிய இரண்டுமே கடந்த காலங்களில் போட்டியிட்டன. 1704இல் நடைபெற்ற போரில் ஆங்கிலேய மற்றும் டச்சு இராணுவத்தின் வசமிருந்த ஜிப்ரால்டரை ஸ்பெயின் கைப்பற்றியது.

பிறகு 1713இல் ஏற்பட்ட ஒப்பந்தத்தின்படி அதைப் பிரிட்டனுக்கு அளித்தது. இரண்டாம் உலகப்போரின் போது 'றோயல் நெவி' எனப்படும் பிரிட்டன் கடற்படை ஜிப்ரால்டரை முக்கிய தளமாகக் கொண்டு இயங்கத் தொடங்கியது. இன்றுவரை அங்கு பிரிட்டனின் அந்தப் படை நிலைகொண்டேயுள்ளது.

### ஜிப்ரால்டரின் வருங்காலம் யாருடன்?

ஐரோப்பிய ஒன்றியத்தில் அங்கம் வகித்திருந்த பிரிட்டன், தான் அதிலிருந்து விலகிக் கொள்வதாகத் தீர்மானித்ததைத் தொடர்ந்து ஐரோப்பிய ஒன்றியத்தில் உள்ள நாடுகள் பலவிதமாகத் தங்களின் கருத்துக்களைத் தெரிவித்து வருகின்றன. இதைத் தொடர்ந்து பிரெக்சிட் (பிரிட்டனின் வெளியேற்றம்) தொடர்பான ஒப்பந்தங்களில் புதிதாக ஒரு விதியை ஐரோப்பிய ஒன்றியம் சேர்த்திருக்கின்றது.

இதன்படி ஜிப்ரால்டர் தொடர்பான எல்லைப் பிரச்சினையில் ஸ்பெயினுக்குத் திருப்தியில்லை என்றால் ஐரோப்பிய ஒன்றியம் வருங்காலத்தில் பிரிட்டனோடு கைக்கொள்ளும் ஒப்பந்தங்களில் ஸ்பெயினுக்கு விதிவிலக்கு அளிக்கப்படும்.

அதாவது ஐரோப்பிய ஒன்றியத்திலிருந்து பிரிட்டன் முழுவதுமாக விலகிய பிறகு இந்த இரண்டுக்குமிடையே உருவாகும் ஒப்பந்தங்கள் ஜிப்ரால்டரைக் கட்டுப்படுத்தாது. பிரிட்டனுக்கும், ஸ்பெயினுக்கும் இது தொடர்பாக ஒருமித்த கருத்து உருவானால் மட்டுமே அந்த ஒப்பந்தங்கள் ஜிப்ரால்டரைக் கட்டுப்படுத்தும் என்கின்றது.

இது ஜிப்ரால்டர் மக்களை மகிழ்ச்சிப்படுத்தி இருக்கின்றது. ஏனென்றால் பிரிட்டன் ஐரோப்பிய ஒன்றியத்திலிருந்து விலகியதை ஜிப்ரால்டரிலுள்ள மக்கள் ஆதரிக்கவில்லை. ஐரோப்பிய ஒன்றியத்தோடு இணைந்திருக்க விரும்புவதாகவே ஜிப்ரால்டரைச் சேர்ந்த 96 சதவீத மக்கள் வாக்களித்திருந்தார்கள். கடல் எல்லை தொடர்பான பிரச்சினைகளும் பிரிட்டனுக்கும் ஸ்பெயினுக்கும் ஏற்பட்டு வருகின்றன. ஜிப்ரால்டர் கடல் எல்லைப் பகுதிக்குள் நுழையும் ஸ்பெயினின் மீன்பிடிப் படகுகளைப் பிரிட்டன் கடற்படையினர் பிடித்து வைப்பது அடிக்கடி அங்கு நடைபெற்று வருகின்றது.

இப்போது பிரிட்டன் ஐரோப்பிய ஒன்றியத்திலிருந்து விலகிக் கொள்ள, தான் ஏனைய நாடுகளில் இவ்வாறு கையகப்படுத்தி வைத்திருக்கின்ற நிலப்பரப்புக்களை இழக்கும் வாய்ப்பு இருக்கின்றது. அதாவது பெரிய பிரித்தானியா இனிச் சிறுக்கத்தான் போகின்றது...!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# குரல் 9

## "தந்தனத்தோம் என்று சொல்லியே..."

வேலணையூர் தாஸ்

"தந்தனத்தோம் என்று சொல்லியே வில்லிசை பாட..." என்று இன்றைக்கு யாராவது பாடக்கேட்கும்போது எங்கள் மனது அந்த நிலாக்காலத் திருவிழாக்களுக்குச் சென்று விடுகிறது.

முன்பெல்லாம் எங்கள் ஊர்களில் ஆலயத் திருவிழா என்றால் வில்லிசை நிகழ்ச்சி நிச்சயமாக இருக்கும்.கோவில்களில் முன் வீதியில் அமைக்கப்பட்ட மேடையில் சுற்றிவர சிறுவர், பெரியோர், இளைஞர் எனப் பலர் கூடியிருப்பர். அனைத்துத் தரப்பினரையும் கவரும் நிகழ்வாக அது இருந்தது. காலமாற்றத்தால் அருகிவரும் தொன்மக் கலை வடிவங்களில் ஒன்றாக இன்று இதுவும் ஆகி விடுமோ...? என எண்ணத்தோன்றுகிறது.

வில்லுப்பாட்டு தமிழர் பாரம்பரிய கலை வடிவங்களில் ஒன்றாகும். வில்லின் துணைகொண்டு பாடப்படுவதால் இது வில்லுப்பாட்டு எனப் பெயர் பெற்றது. இதில் இசைக்கப்படும் இசைக்கருவிகளில் வில்லே முதன்மை பெறுகிறது. துணைக்கருவிகளாக உடுக்கை, குடம், தாளம், கட்டை என்பன பயன்படுத்தப்படுகின்றன.

பனையின் வைரம் பாய்ந்த பகுதியினின்றும் செதுக்கி உருவாக்கப் படும். வில் பகுதியின் உடற்பகுதி கயிற்றால் வரிந்து சுற்றப் பெறும். மணிகளைக் கோர்க்கத் தேவைப்படும் வளையங்கள் உரிய இடைவெளிவிட்டு, கதிரில் பொருத்தப்பட்டிருக்கும்.

கதிரின் நடுப்பாகம் குடத்துடன் சேர்த்துக்கட்டப்படும். குடம் மண் குடமாதலால் கதிரின் நடுப்பகுதி துணியால் சுற்றப்பட்டிருக்கும். கதிரின் மேற்பகுதியில் வெண்கலக்குப்பிகள் பொருத்தப்பட்டி ருக்கும். இருமுனைகளும் இணைக்கும் நாண் மூலம் இழுத்துக் கட்டப்படும். கதிரில் தொங்கவிடப்படும் மணிகள் வெவ்வேறு ஒலியமைப்பைக் கொண்டவையாகும். மணிகள் கதிரின் ஒருபக்கம் ஆறும், மறு பக்கம் ஐந்தும் எனப் பதினொன்றாக அமைக்கப்பட்டிருக்கும். இவ்வாறு உருவாக்கப்பட்ட வில்லிலே வீசுகோல் எனும் அலங்க ரிக்கப்பட்ட தடியால் தட்டிப்பாடப்படுவதே வில்லுப்பாட்டாகும்.

யாழ்ப்பாணக் கலை மரபிலே இந்தக் கலை வடிவம் கொண்டி ருக்கின்ற தொன்மையை யாரும் அழித்து விடமுடியாது.

ஆரம்பத்தில் "தந்தனத்தோம் என்று சொல்லியே..." என்ற தாளக் கட்டு டன்கடவுள் வணக்கத்தோடு வந்திருப்போருக்கு வணக்கம் சொல்லிஅவையடக்கத்துடன் வில்லிசை ஆரம்பமாகும். இன் றைய இலக்கிய அரங்குகளில் தன்னை விட்டால் வேறு யாரும் அறிவாளி இல்லை என்கின்ற நினைப்பில் பேசுவோர் இந்த அவையடக்கச் செய்தியில்இருந்து தமிழர் கலைப் பண் பாடொன்றைக் கற்றுக்கொள்ளலாம்.

அடுத்து, கதை சொல்பவர் தான் தால்லவந்த கதையை நாட்டு வளம், தலைவன் புகழ் என்பவற்றோடு சொல்லி இறுதியில் மங்கலம் கூறி நிறைவு செய்வார்.

சின்னமணி, லடீஸ்வீரமணி போன்றோர் இலங்கையில் பிரபல்ய மான வில்லிசைக் கலைஞர்களாய் இருந்தனர்.

வள்ளி திருமணம் போன்ற புராணக்கதைகளும் கோவலன்–கண்ணகி போன்ற காப்பியக் கதைகளுமே வில்லிசையில் அதிகம் பாடப்பட்டன.

கவிஞர் உருத்திரமூர்த்தி (மகாகவி) தனது கண்மணியாள் காதையெனும் வில்லுப்பாட்டில் சாதாரண மனிதனின் கதையைப் பாடினார். தாழ்த்தப்பட்ட மக்கள் தங்கள் விடுதலைக்காகத் தாங்களே போராட வேண்டும். என்பதைக் கதைக்களமாகக் கொண்டு உரு வாக்கப்பட்டது அது. லடீஸ்வீரமணி அதை வில்லிசையாகப் பாடினார். இது பெரும் வரவேற்பைப் பெற்றது. அன்னைபதிப்பகம் இதை புத்தகமாக வெளியிட்டது. இதிலிருந்து மக்கள் தமது பிரச்சினைகளை, உணர்வுகளைச் சொல்லக்கூடிய கலை வடிவ மாக வில்லிசையைக் கண்டு கொண்டனர். பாடசாலை விழாக்க ளில் மாணவர்கள் வில்லிசையின் மூலம் தங்கள் கல்விசார் பிரச்சினைகளை நகைச்சுவையோடு பாடினர்.

இயல், இசை, நாடகம் என்ற முத்தமிழும் சேர்ந்ததாகவிருப்பது இதன் சிறப்பெனலாம். இசையோடு பாடி, இடையிடையே நகைச் சுவை உரையாடல்களோடு மிகச்சிறந்த முக பாவனைகளுடன் வில்லிசைக் குழுவினர் நடித்துக் காட்டும் பாங்கு பார்வையாளரைக் கவரும் வண்ணம் அமைந்திருக்கும். தற்காலத்தில் இந்தக் கலை வடிவத்தை அளிக்கை செய்வோர் மிகக்குறைவு இலத்திரனியல் ஊடகங்களின் வருகை, வருடக் கணக்காய் நீளுகின்ற தொலைக் காட்சி நாடகங்கள், இசை, நடனப் போட்டிகள் என்பவற்றின் ஆதிக் கத்தால் தமிழரின் மரபார்ந்தக் கலையான இது போன்ற கலை வடி வங்களின் அளிக்கைகள் அருகி வருகின்றன. தமிழின்பால் விருப்புடையோர் குறிப்பாக இளைய தலைமுறையினர் மரபுக் கலைகளை அழியாது காக்கவேண்டும். எமது விழாக்களில் வில்லிசையை மீண்டும் ஒலிக்க வழிசெய்ய வேண்டும்.



# வேண்டாமே மண முறிவு

எஸ்.மல்லிகா

கலா தனது அருமைத் திருமகன் பிரவீனுக்காகவே அந்தக் கீதத்தைத் தேடுகின்றாள். அவன் மகிழ்ச்சியாக வாழவேண்டும் என்பதற்காகவே அவள் அதைத் தேடுகின்றாள். ஆனால், அந்தக் கீதம் அவள் வாசலில் ஒலிக்க மறுக்கின்றது. அவள் செவிகளில் நிறைய வெறுக்கின்றது.

இதற்குக் காரணம் அருள் (பெயர் மாற்றப்பட்டுள்ளது). தனது காதல் வலையில் கலாவை வீழ்த்திய அவன், அவள் அழகு அத்தனையையும் பருகினான். அவளுடன் சில நாட்கள் சல்லாபித்திருந்த அவன், அவள் வயிற்றில் கருவை விதைத்துவிட்டு விலகிவிட்டான். 'எனக்கும் பிள்ளைக்கும் சமூகத்தில் அவப்பெயர் ஏற்படும், என்னை முறைப்படி மனைவி ஆக்குங்கள்' என்று கலா கெஞ்சியும் அவன் கேட்கவில்லை. தான் கெட்டாலும் தன் பிள்ளை தந்தை பெயர் தெரியாமல் வளரக்கூடாது என நினைத்த கலா, பல போராட் டங்க ளின் பின்னர் பிள்ளைக்குப் பிறப்புப் பத்திரம் (அருள் ஒப்பத்துடன்) எடுத்துவிட்டாள். அத் துடன் விடவில்லை. நீதிமன்றில் வழக்குத் தொடர்ந்து, அவனிடமிருந்து பிள்ளைக்குத் தாபரிப்புப் பணமும் பெற்றுக்கொண்டிருக்கின்றாள்.

கலா ஏழ்மைக் குடும்பத்தில் பிறந்த பெண். பெற்றோர்கள் வயதானவர்கள். அதேநேரம், நோயாளரும் கூட. அருள் வசதியான குடும்பத்தில் பிறந்தவன். ஆடம்பர வாழ்க்கை வாழ் பவன். அத்துடன், அரச பணி புரிபவன். 'பிச்சைக்காரியான உன்னை மணமுடித்தால், என் அந்தஸ்தும் கௌரவமும் என்னாவது?' என்று அவள் முகத்துக்கு நேரே கூறி அவ ளைக் கை கழுவியவன், அவள் வயிற்றில் விதைத்த பிள்ளைக்கு வங்கியில் பணம் (தாபரிப்புப் பணம்) வைப்பிலிட்டுக் கொண்டிருக்கின்றான். பதினைந்து வருடங்களாக இது தொடர்கின்றது. அவனுடன் சேர்ந்து வாழ்வதற்குக்கலா எடுத்த அத்தனை முயற்சி களும் தோற்றுவிட்டன. அவளைப் போலவே அருளும் வேறு திருமணம் செய்யாமல் வாழ்கின் றான். பிடிவாதத்துடன் வாழ்கின்றான். வாழ்க்கையை வாழத் தெரியாமல் வாழ்கின்றான். அவனிடம் தன்னைப் பறிகொடுத்த கலா, வாழ்க்கையின் போக்கில் வாழ்கின்றாள்.

காலச் சூறாவளி கொண்டு சென்று சேர்த்த திசையில் வாழ்கின்றாள். இந்த இருவர் நினைப் பையும்மனதில்சுமந்து, பிரவீன் வாழ்கின்றான். தன் பெற் றோர்கள் இணையமாட்டார் களா? என்ற எதிர்பார்ப்புடன் வாழ்கின்றான். ஏக்கத்துடன் வாழ்கின்றான். அங்கு பல்ல வியும் இங்கு சரணமும் என அவர்கள் வாழ்க்கை ஓடிக் கொண்டிருக்கின்றது. அந்த ஓட்டத்தில் தினந்தினம், 'பொருத் தமற்ற இணைகள் இணைவ தால்தான், அவர்கள் வாழ்க்கை பாதியிலேயே முடிந்து விடு கின்றதோ?' என்ற தத்துவ வரிகளை மனதுக்குள் மீட்டிக் கொண்டிருக்கின்றாள் கலா.



## சிரிப்பு



பொண்ணுக்கு செல்பி மோகம் அதிகமா...? எப்படிச் சொல்லுறீங்க?

கல்யாணப் பத்திரிகையில் 'திருநிறை செல்பி'ன்னு அடிச்சிருக்காங்களே அதுதான்!' ...!!!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# பெண்ணியம் 7

பலநூறு ஆண்டுகளாக அடிமைப்படுத்தப்பட்டுவந்த பெண்கள் இன்று கல்வி கற்று முன்னிலைக்கு வந்தாலும், சில கிராமப்புறங்களில் தாம் அடிமையாக இருப்பதைக்கூட உணராமல் அவர்கள் வாழ்ந்துகொண்டிருக்கின்றனர். இத்தகைய பெண்களைச் சமூகம் அங்கீகரித்து, அவர்களுக்கான உரிமையையும் சுதந்திரத்தையும் பெற்றுக்கொடுப்பதற்குப் பெண்ணியம் முனைப்புக் காட்டுகிறது.

பொதுவெளியில் குடும்பம் என்ற நிறுவனம், பெண்களுக்குப் பல்வேறுபட்ட இன்னல்களை அளித்துக்கொண்டிருக்கிறது. கல்வி கற்ற பெண்கள், கல்வி அறிவு இல்லாத பெண்கள் என்ற பாகுபாடில்லாமல் அனைவரையும் ஒரு கட்டுக்குள் கொண்டுவந்து அடிமை வாழ்க்கையைத் திணிக்கிறது. மணம் முடித்த, மணம் முடிக்காத பெண்கள் என இருசாராரும் வேலைக்குச் சென்று வரும் காலகட்டம் இது. ஆனாலும், வீட்டு வேலைகளையும் அவர்களே செய்ய வேண்டும் என்ற கட்டாயமும் உள்ளது.

மேலும், திருமண வாழ்க்கையிலும் பெண்கள் பல்வேறுபட்ட பிரச்சினைகளை எதிர்கொள்கின்றனர். குழந்தைப்பேறு இல்லையென்றால், மலடி என்ற பட்டம் சுமத்துவது முதல் இன்னொரு ஆணுடன் (ஆண் நண்பன்) கதைத்தால், வேசி என்ற பட்டம் அணிவிப்பது வரை அவளுக்கு ஆயிரம் கொடுமைகள். இல்வாழ்க்கை கசந்து விவாகரத்துப் பெறுவது என்றாலும், ஆணுக்கு முன்னுரிமை. பெண்ணுக்கு மனநலம் குன்றினால், ஆணுக்குப் பிறிதொரு மணவாழ்க்கை. இதே நிலை ஆணுக்கு ஏற்பட்டால், அவனே கண்கண்ட தெய்வம் எனப்பெண் பேணிக்காக்க வேண்டும் என்ற பண்பாட்டுப் போர்வை. இவ்வாறு குடும்பம் என்ற இருட்திரைக்குள் பெண்கள் அனுபவிக்கும் கொடுமைகள் சொல்லி மாளா. இவற்றை அனுபவிக்க வேண்டும் என்றோ அல்லது சகித்துப்போக வேண்டும் என்றோ இயற்கை பெண்ணுக்கு வரமளிக்க வில்லை. இதனை ஆண்கள் புரிந்துகொள்ள வேண்டும். குறிப்பாக, படித்த ஆண்கள் புரிந்துகொள்ள வேண்டும். தனது உரிமைகளைப் பெண் கேட்காமலே கையளிக்க ஆண்கள் முன்வரவேண்டும்.

## சில புரிதல்கள்



# பெண்களை சக மனிதர்களாகப் பார்க்கும் ஆண்களின் மனநுட்பமே இன்றைய தேவை

தற்போதைய நவீன அலைபேசி வளர்ச்சியால் முகநூல் பயன்படுத்துவோரின் எண்ணிக்கையும் அதிகரித்துள்ளது. முகநூலிலும், ஒளிப்படம் வெளியிடுவது, கருத்துக்களைப் பதிவிடுவது, வீடியோக்களைத் தரவிறக்கம் செய்வது எனப் பல பொழுதுபோக்கு அம்சங்கள் நிறைந்து காணப்படுகிறபோதிலும் இதனால் பல தீமைகளைப் பெண்களே அநேகமாக எதிர்கொள்ள வேண்டி நேரிடுகின்றது. ஓர் பெண், ஆணைப் பழிவாங்கும் எண்ணத்தோடு, அவருக்கே தெரியாமல் அதை சமூக வலைதளத்தில் பதிவேற்றுகின்றார். அது வெகு விரைவில் லட்சக்கணக்கில் பகிரப்படுகின்றது. தன் உடல் இப்படிப் பலரின் பார்வைக்கு வைக்கப்பட்டதை எண்ணி, மனமுடைந்து அந்த ஆண் தற்கொலை செய்து கொள்கின்றார். இப்படி ஒரு செய்தியை எவரும் எழுதியதுமில்லை, படித்ததுமில்லை. அதேசமயம் இது போன்ற நிகழ்வில் பெண்கள் பாதிக்கப்படுவது, உயிர் இழப்பது என்பது உலகம் முழுக்க தினமும் நடந்து கொண்டே இருக்கின்றன. இதைத் தடுக்கும் முயற்சியாய், முதற்படியை எடுத்துவைத்திருக்கின்றது முகநூல்.

ஆங்கிலத்தில் இதை 'ரெவெஞ்ச் போர்ன்' (Revenge Porn) என்று சொல்கின்றார்கள். அதாவது, ஒருவருக்குத் தெரியாமல் அவர் இடம்பெற்றிருக்கும் உடல் நெருக்கக் காட்சிகளை பொதுப் பார்வைக்கு, சமூக வலைத்தளங்களின் மூலம் வைக்கப்படுவது. இது இன்றைய இணைய உலகின், இளைய சமுதாயத்தின் ஆகப் பெரும் பிரச்சினையாக இருக்கின்றது. பெண்களுக்கு இது பெரும்பாலும் சாவுத் தண்டனையாக கூட மாறியிருக்கின்றது. இதுபோன்ற பிறரின் அந்தரங்கக் காட்சிகளை மீள் பதிவு (Re Post) செய்வதையும், பகிர்வதையும் (Share) தடுக்க உலகம் முழுக்க இயங்கும் 150 பெண்கள் பாதுகாப்பு இயக்கங்களோடு இணைந்து சில முயற்சிகளை முன்னெடுத்துள்ளது முகநூல்.

ஒருவருக்குத் தெரியாமல் அவர் குறித்த ஆபாசக் காட்சி பதிவேற்றப்பட்டால், அதை அதில் இடம்பெற்றிருக்கும் நபரோ, வேறொருவரோ முகநூலில் 'ரிப்போர்ட் ரூல்' (Report Tool) மூலம் முறைப்பாடு செய்யலாம். இந்த முறைப்பாடுகளின் அடிப்படையில் அந்தப் படத்தையோ, காட்சியையோ பரிசீலிக்க தனி நிபுணர் குழு ஒன்றை அமைத்துள்ளது முகநூல்.

அவர்கள் அதைப் பரிசீலித்து, அது தவறானதாக இருப்பின், ஒளிப்பட கண்டறிதல் மென்பொருளை (Photo Recognition Software) கொண்டு அது மீள் பதிவு செய்யப்படுவது மற்றும் பகிரப்படுவதைத் தடுக்கிறார்கள். மேலும், எந்த முகநூல் பக்கத்திலிருந்து அது பதிவேற்றப்பட்டதோ, அந்த முகநூல் பக்கம் உடனடியாக முடக்கப்படும் என்றும் முகநூல் அறிவித்துள்ளது.

இதன் மூலம், முகநூலில் பெண்களுக்கான குறைந்தபட்ச பாதுகாப்பு இருக்கக்கூடும் என்று சொல்லப்படுகிறது. அதே சமயம், இது முழுமையான பாதுகாப்பும் கிடையாது. பதிவேற்றப்படும் படம் முகநூல் அல்லாத வேறு சமூக வலைத்தளங்களில் பகிரப்பட்டால் அதைத் தடுக்க முடியாது. இருந்தாலும், பெண்களுக்கு எதிரான இணையப் பாலியல் வன்முறைகளை தடுக்கும் முதற்படியாக இது இருக்கும். ஏற்கனவே, சமூக வலைத்தளத்தில் குழந்தைகளை ஈடுபடுத்தியிருக்கும் பாலியல் காட்சிகளைத் தடுக்க இதுபோன்ற முறையே பயன்படுத்தப்படுகின்றது. இருந்தும், இந்தத் தொழில்நுட்பங்கள் அனைத்துமே மீள் பதிவுகளையும், பகிர்தலையும் மட்டுமே தடுக்கின்றதே அன்றி பதிவேற்றம் செய்வதைத் தடுக்கும் தொழில்நுட்பம் இன்னும் வரவில்லை.

அது செயல்பாட்டுக்கு வந்தால் மட்டுமே இணையத்தில் பெண்களின் பாதுகாப்பு முழுமையடையும். அது இல்லாமலும் கூட, இப்போதே இணையத்தில் பெண்களுக்கு முழுப் பாதுகாப்பு வழங்கிட முடியும். அதற்குத் தேவை புதியதோர் தொழில்நுட்பம் அல்ல... பெண்களைச் சக மனிதர்களாகப் பார்க்கும், அவர்களை மதிக்கும், ஆண்களின் மனநுட்பம் மட்டுமே...




# முயன்றால் முடியும் முடிவினில் விடியும்

எதையும் நம்மால் சாதிக்க முடியும்" என்ற எண்ணம் இருப்பவர்களுக்கு, வாசலில் ஆயிரமாயிரமாய் வெற்றிகள் வந்து குவியும். மனதினில் ஆயிரம் மலர்கள் விரியும். அந்த எண்ணங்கள் நல்லவையாக இருக்கவேண்டும். உயர்வானவையாக இருக்கவேண்டும். இதனையே,

"உள்ளுவ தெல்லாம் உயர்வுள்ளல் மற்றது
தள்ளினுந் தள்ளாமை நீர்த்து" என்று வள்ளுவர் கூறியுள்ளார். அதாவது, நினைப்பதெல்லாம் உயர்வான நினைப்பாகவே இருக்கவேண்டும். அது கைகூடாவிட்டாலும், அந்த நினைப்பைக் கைவிடக்கூடாது என்கிறார் வள்ளுவர். இந்த நினைப்புடன் முயற்சியும் சேர்ந்து கொண்டால், வாழ்க்கையில் வந்திடும் விடியல். ஆனால், பெரும்பாலான பெண்கள் இந்த விடியலைத் தொலைத்துவிட்டு இருள்மைக்குள் நடக்கின்றனர். அவர்கள் மனதில் சின்னதாய் ஒரு வலி. முள் தைத்தாலும் சோர்ந்து விடுகின்றனர். வாழ்க்கையை வெறுத்து விடுகின்றனர். காலம் முழுதும் அந்தக் காயத்தையே நினைத்து நினைத்துக் கதறி அழுகின்றனர். அழுவதற்கானது அல்ல இந்த வாழ்க்கை. துன்பமோ வலியோ, அதற்கு நாம் துன்பம் கொடுக்கப் பழக வேண்டும். அப்போதுதான் அது நமக்குத் துன்பம் தராது. அதனை விரட்ட முயலவேண்டும். அப்போதுதான் மகிழ்ச்சி விலகி விடாது. தொடர் துன்பத்துள் உழன்றோம் என்றால், ஈற்றில் மனநலம் குன்றி நம் உடலை நோய்; வாழும் கூடாக்கிவிடுவோம். பைத்தியக்காரப் பட்டம் சுமந்து, பழிச்சொல்லுக்கு ஆளாகிவிடுவோம். வலிகளை மறக்க, பயணங்கள் மேற்கொள்வோம்.

சாதனைப் பெண்களின், வரலாற்றைப் படிப்போம். இந்த இரண்டும் தரும் அனுபவத்தை மனதுக்குள் விதைத்து, சாதிக்க முயல்வோம்.

பெண்ணே! உன்னை மென்மையாக இயற்கை படைத்துவிடவில்லை. நீ வல்லமை உடையவள். உனக்குள் அளப்பரிய ஆற்றல் உண்டு. வலிமை உண்டு. வலிகளை அடியோடு விரட்டிடு. வழிகளை உனக்காக வளர்த்திடு. எண்ணங்கள் நிறைவேற முயன்றிடு. முடிவினில் விடியலை அடைந்திடு. நீ அழவல்ல, ஆளப் பிறந்தவள் என்பதைத் தினம் தினம் நினைத்திடு.



Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org



# சூழலை மாசுபடுத்தாத சக்தி முதல்கள் தேவை

வாணன்

உலகில் அதிகளவில் பயன்படுத்தப்படும் சக்தி முதல் பெற்றோலிய உற்பத்திகள் ஆகும். அவற்றின் அதிகரித்த பயன்பாட்டால் இரண்டு பெரிய பிரச்சினைகள் எழுந்துள்ளன. ஒன்று அதிகரித்து வரும் அவற்றின் தேவையாலும், குறையும் அவற்றின் அளவாலும் இன்னும் 50 ஆண்டுகளில் அவை இல்லாமல் போய்விடும். அடுத்தது அது ஏற்ப டுத்தும் பெருமளவான சூழல் மாசுபாடு. இந்நிலையில் தான் உலகில் பெட்ரோலிய எண்ணெய் வளக் கையி ருப்பு இன்னும் எவ்வளவு காலத்துக்குப் பயன்படும், அது தீர்ந்த பிறகு அதற்குப் பதிலான சக்தி மூலமாக எவற்றையெல்லாம் பயன்படுத்தலாம் என்ற விவாதங் கள் தீவிரமடையத் தொடங்கியுள்ளன. அத்தோடு புதி தாகக் கண்டுபிடிக்கப்படும் சக்தி முதல்கள் சூழலுக்குப் பாதிப்பு ஏற்படுத்தாதவையாக இருக்க வேண்டும் என் பதிலும் கவனம் செலுத்தப்படுகின்றது.

### பெற்றோலியத் தட்டுப்பாடு

2014இல் பிரித்தானியப் பெற்றோலிய நிறுவனம், உலகில் எஞ்சியிருக்கின்ற பெற்றோலியத்தின் அளவை 1,687.9 பில்லியன் பீப்பாய்கள் என மதிப்பிட்டது. (ஒரு பில்லியன் என்பது 100 கோடி) இன்றைய நுகர்வு வேகத்தில் அது இன்னும் 50 ஆண்டுகளில் முழுமை யாகத் தீர்ந்து போகும் என்றும் அந்த நிறுவனம் எச்ச ரித்துள்ளது.

அமெரிக்காவின் எண்ணெய் ஆய்வ கத்தில் உள்ள இயந்திரப் பொறியா ளர் கழகம் ஒன்றும் பூமியின் முக்கிய மான தாகக் கருதப்படும் எண்ணெய் வயல்களின் அடியில் 1.3 டிரில்லியன் பீப்பாய்கள் என்ற அளவில்தான் எண்ணெய் இருப்பதாக உறுதி செய் துள்ளது. இன்று நுகரப்படும் போக்கில் அதைப் பயன்படுத்திக்கொண்டே போனால், இன்னும் 40 ஆண்டுகளில் அது முடிந்து விடும் என்றும் கூறு கின் றது.

ஆனால் இந்தப் பெற்றோலியம் பயன் டுத்தப்படுவதைப்போல அதன் தேவையைப் பூர்த்தி செய்யும், வேறு ஆற்றல் மூலங்கள் கண்டுபிடிக்கப்பட் டால் 2040 ஆம் ஆண்டளவில் பெற் றோலிய உற்பத்தியை குறைக்கலாம் அத்துடன் அப்போது பெற்றோலியத் துக்கு ஏற்படும் தட்டுப்பாட்டையும் சமாளித்துக் கொள்ளலாம்.

### மட்டுப்படும் நிலையில் பெற்றோலியம்

காலம் செல்லச் செல்ல பெற் றோலியத்தின் தேவை கூடிக் கொண்டிருக்க அதன் அளவு குறைந்து கொண்டிருக்கின்றது. அதன் விலையோ மாறாக உயர்ந்துகொண்டிருக்கின்றது. இதனால் மாற்றுச் சக்தி வளங்களைக் கண்டுபிடிப்பதில் கவனம் செலுத்தவேண்டி யது கட்டாயமாகியுள்ளது.

தற்போது மிச்சமுள்ள எண்ணெய் வளத்தில் மிகப் பெரும் பகுதி சவுதி அரேபியாவில் உள்ளது. அங்கு 261.8 பில்லியன் பீப்பாய்களும், இராக்கில் 112.5 பில்லியன் பீப்பாய்களு மாக எண்ணெய் வளம் புதைந்து கிடக்கின்றது.

ஐக்கிய அரபு அமீரகத்தில் 97.8 பில்லியன் பீப்பாய்களும், குவைத்தில் 96.5 பில்லியன் பீப்பாய்களும், ஈரானில் 89.7 பில்லியன் பீப்பாய்களு மாக நிலத்தடி எண்ணெய் இருப்பு மதிப்பிடப்பட்டுள்ளது.

வட கடல் பகுதியில் 4.9 பில்லியன் பீப்பாய்கள் எண்ணெய் இருக்கின்றது. சமீபத்தில் பிரேசில் நாட்டில் ஐந்து முதல் எட்டு பில்லியன் பீப்பாய்கள் வரை எண்ணெய் இருப்புஉள்ளதாக மதிப்பிடக் கூடிய எண்ணெய் வயல்கள் கண்டுபிடிக்கப்பட் டுள்ளன. ஆனால், அவையெல்லாம் நீண்ட காலத்துக்கு எண்ணெய் கொடுக்க முடியாதவை. அத்துடன் இவற்றுடன் உலகின் எண்ணை வளம் முடிந்துவிடும். ஆகையால் மாற்று முதல்களைக் கண்டுபிடித்தல் அவசரமானதாயுள்ளது.

### மாசுபடுத்தாத சக்தி முதல்கள்

2040களில் உலகின் மக்கள்தொகை இன்று இருப்பதைப் போல இரு மடங்காகி விடும். தொழில் நுட்ப, இயந்திரத் துறையும் மேலும் விரிவடையும் வாய்ப்புள்ளதால், அப் போது சக்தி முதல்களின் தேவையும் அதி கரிக்கும். ஆகையால் இன்றே ஆற்றல் மூலங்கள், அவற்றின் உற்பத்தி, சுற்றுச் சூழல் தாக்கம் ஆகியவற்றைப் பற்றிச் மனித சமூகம் முழுமையாக உணர்ந்து செயற்பட வேண்டும். இன்று சூழலை மாசுபடுத்துவ தில் முன்னிலை வகிக்கும் எண்ணை வளத் துக்கு மாற்றீடாகக் காற்றாலைகள் மூலம் மின்உற்பத்தி, சூரியஒளி மூலம் மின்உற்பத்தி போன்றவை பயன் பாட்டுக்கு வந்ததும் அதில் குறிப்பிடத்தக்க முன்னேற்றமே. ஆனால் இன்றுவரையும் சுற்றுச் சூழலுக்கு ஏற்பட் டுள்ள பாதிப்புக் கவலையை உண்டாக்கு கின்றது.

புதைபடிவ எரிபொருள்களை எரிப்பதால், ஆண்டுதோறும் 21.3 பில்லியன் தொன் எடை யுள்ள கரியமில வாயு உற்பத்தியாகின்றது. அதில் கிட்டத்தட்ட அரைவாசியைத்தான் தாவரங்களும் கடலும் உட்கவர்கின்றன. மீதமுள்ள கரியமில வாயு, உலகளாவில் வெப்ப நிலையை உயர்த்துகின்றது. இவ் வாறே போனால் பூமி சூடாகிப் பாலைவன மாகிவிடும். எனவே இனியாவது சூழ லைப் பாதிக்காத சக்தி மூலகங்களைக் கண்டுபிடித்துப் பயன்பாட்டுக்குக் கொண்டு வருவது மனிதகுலத்துக்கு கட்டாயமாகவுள்ளது.

> 2040களில் உலகின் மக்கள்தொகை இன்று இருப்பதைப்போல மடங்காகி விடும். தொழில்நுட்ப, இயந்திரத் துறையும் மேலும் விரிவடையும் வாய்ப்புள்ளதால், அப் போது சக்தி முதல்களின் தேவையும் அதிக ரிக்கும். ஆகையால் இன்றே ஆற்றல் மூலங்கள், அவற்றின் உற்பத்தி, சுற்றுச் சூழல் தாக்கம் ஆகியவற்றைப் பற்றிச் மனித சமூகம் முழுமையாக உணர்ந்து செயற்பட வேண்டும்.





# ஒரு நாள் சிரிப்பு

உச்சிக் கொப்பில்
உயர்ந்து மலர்ந்தும்
தாழ்நிலத்தில்
தரையில் மலர்ந்தும்
புன்னகைக்கின்றன
•
தென்றல் மெல்ல
மென்மையாய் வருடினும்
புயல் புரண்டு
வீரியமாய் வீசினும்
புன்னகைக்கின்றன
•
இறந்தவருடலில் இறுதி
மாலை
இறைவனடியில் அடியார்
காணிக்கையாய்
புன்னகைக்கின்றன
•
கார்கூந்தலில் தலை
நிமிர்ந்தும்
குத்துவிளக்கின் முடியில்
தலை கவிழ்ந்தும்
புன்னகைக்கின்றன
•
வண்டுகள் விருந்துக்கு
வரினும்
பூசகர் கொய்ய
வரினும்
புன்னகைக்கின்றன
•
மொட்டவிழ்ந்து காலையில்
மலர்கையிலும்
இதழிளகி மாலையில்
உதிர்கையிலும்
புன்னகைக்கின்றன
•
பிள்ளைகள் மகிழ்ந்திடும்
பூங்காவில் மலர்ந்தும்
கல்லறைச் சுவரின்
இடுக்கினில் மலர்ந்தும்
புன்னகைக்கின்றன
•
ஒரு நாள் வாழ்க்கையில்
இனிதாய்ச் சிரித்து மடிகின்றன
இதுவோர் இரகசியம்
புரிந்தவர்கள் வாழ்ந்திடுங்கள்
புன்னகைக்கும் பூக்களாக.

கந்தர்மடம் அ.அஜந்தன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தென்கிழக்குத் திசையிலிருந்து...!

அனார்கலி



## வரவேற்கத்தக்க சுமந்திரனின் கருத்து

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பேச்சாளரும் நாடாளுமன்ற உறுப்பினருமான எம்.ஏ.சுமந்திரன் முஸ்லிம்களுக்குப் பாதகமளிக்கக் கூடிய வில்பத்து வனப் பிரகடனம் தொடர்பில் கடந்தவாரம் அரச தொலைக்காட்சி நிகழ்ச்சி ஒன்றில் தெரிவித்திருந்த கருத்து தென்கிழக்கு முஸ்லிம் மக்களிடம் பெரும் வரவேற்பைப் பெற்றிருந்தது.
சிறுபான்மையினரின் வலிகளை உணர்ந்தவர்கள் நாமென்றும் வடக்கு, கிழக்கு மாகாணங்களில் வாழும் தமிழ் பேசும் சமூகங்களின் ஜனநாயக உரிமைகளுக்காகத் தமிழ்த்தேசியக் கூட்டமைப்பு குரல் கொடுத்து வருகின்றது என்றும் கருத்து வெளியிட்ட நாடாளுமன்ற உறுப்பினர் சுமந்திரன், வில்பத்தில் முஸ்லிம்கள் வனப் பிரகடனம் காரணமாக எதிர்கொள்ளும் நெருக்கடிகளைத் தீர்க்க அமைச்சர் ரிசாத் மேற்கொள்ளும் முயற்சிகளுக்குக் கூட்டமைப்பு முழு ஆதரவு வழங்குமென்றும் மேற்படி தொலைக்காட்சி நிகழ்ச்சியில் கருத்து வெளியிட்டிருந்தார். இது தென்கிழக்கு முஸ்லிம் பிரதேசங்களிலுள்ள மக்களிடம் மட்டுமன்றி முஸ்லிம் புத்திஜீவிகள், சமூக ஆர்வலர்கள் மத்தியில் பெரும் வரவேற்புடனும் பேசப்பட்டது. இத்தகைய கருத்துக்கள் எதிர்கால தமிழ் முஸ்லிம் உறவுகளுக்கு ஒளிக்கீற்றாகவே அமையும்!

## நான் போராளி

காரைதீவு விபுலானந்தா சதுக்கத்தில் அறவழிப் போராட்டத்தில் ஈடுபட்டிருக்கும் அம்பாறை மாவட்ட வேலையற்ற பட்டதாரிகளை நேரில் வந்து சந்தித்த அமைச்சர் மனோ கணேசன் தமது வருகையின் நோக்கத்தை உணர்வுபூர்வமாக வெளிப்படுத்தினார்.
"நான் உல்லாசப் பயணியாக வரவில்லை. அரசுக்குள்ளிருக்கும் ஒரு போராளி நான். அந்த அடிப்படையில் உங்கள் போராட்டத்தின் நியாயத்துக்காக அமைச்சரவையிலும் அரசுக்குள்ளும் குரல் கொடுப்பேன்" என உறுதியளித்தார். சொன்னதைச் செயலிலும் காட்டியுள்ளார். மனோவுக்கு ஒரு சபாஷ்!





## நாமத்தை அழிக்க...

முஸ்லிம் காங்கிரஸைத் தோற்றுவித்து இலங்கை முஸ்லிம்களுக்கு முகவரி பெற்றுத் தந்த பெருந்தலைவர் மர்{ஹூம் எம்.எச்.எம்.அஷ்ரபின் மகிமையை மறைத்து அவர் நாமத்தை அழிக்க முஸ்லிம் காங்கிரசுக்கு உள்ளும் வெளியும் சதிகள் முன்னெடுக்கப்படுவதாக முஸ்லிம் காங்கிரஸின் முன்னாள் செயலாளர் நாயகம் எம்.ரி.ஹஸனலி குற்றஞ் சாட்டியுள்ளார்.
தலைவர் அஷ்ரபுக்கும் அவரது மகத்துவத்துக்கும் நிகராகக் கிஞ்சித்தும் நிற்க முடியாதவர்கள் இன்று முதன்மைப்படுத்தப்படும் நிலையுள்ளது எனவும் அவர் கவலை வெளியிட்டுள்ளார்.



## பட்டதாரிகள் வைராக்கியம்

அம்பாறை மாவட்டத்தில் வேலையற்ற பட்டதாரிகள் மேற்கொண்டு வரும் வைராக்கியம் பொருந்திய அறவழிப் போராட்டம் இன்றுடன் நாற்பதாவது நாளைக் கடக்கின்றது.
இந்த நிலையில் இந்த வேலையற்ற பட்டதாரிகளை அரசின் பிரதிநிதிகளாக நேரில் வருகை தந்த நாடாளுமன்ற உறுப்பினர்களான பேராசிரியர் அசூமாரசிங்க, அசோக பிரியந்த ஆகியோர் சந்தித்து கலந்துரையாடிச் சென்றனர். மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் கவீந்திரன் கோடீஸ்வரன் சகிதம் இவர்கள் வருகை தந்தனர்.
காரைதீவு விபுலாநந்தா சதுக்கத்தில் முகாமிட்டு அறவழிப் போராட்டத்தில் ஈடுபட்டுவரும் இந்தப்பட்டதாரிகளைத் திடீரென நேரில் வருகை தந்த தேசிய நல்லிணக்க கலந்துரையாடல் அரச மொழிகள் நடைமுறைப்படுத்தல் அமைச்சர் மனோ கணேசனும் சந்தித்துக் கலந்துரையாடி அவர்களது பிரச்சினைகள் மன ஆதங்கங்களைக் கேட்டறிந்து ஆறுதல் கூறினார்.
நாடாளுமன்ற உறுப்பினர்கள் அமைச்சர்களுக்குச் சொகுசுக்கார்களை இறக்குமதி செய்யவும் சம்பளம் அதிகரிக்கவும் நிதியுள்ளது. எமக்கு நியமனம் வழங்கத்தான் அரசிடம் நிதி இல்லையா? என்பன போன்ற கேள்விக் கணைகளை இந்த முக்கியஸ்தர்களிடம் கேட்பதற்குப் போராட்டக்களப் பட்டதாரிகள் தயங்கவில்லை.

## தோட்டக்காரனும் வேட்டைக்காரனும்!

முஸ்லிம் காங்கிரசுக்குள் உள்வீட்டுப் பிரச்சினைகள் பூதாகரமாகிக் கொண்டு வரும் நிலையில் அதனை அடியொற்றிய துண்டுப் பிரசுரங்களுக்கு தென்கிழக்கு முஸ்லிம் பிரதேசங்களில் குறைவே இல்லை!
இறுதியாக 'ஒரு தோட்டக்காரனும் ஒரு வேட்டைக்காரனும்' என்ற தலைப்பில் துண்டுப்பிரசுரமொன்று வெளியாகியுள்ளது.
அஷ்ரப் எனும் தோட்டக்கர்ரன் வளர்த்த மரத்தை அந்த(?) வேட்டைக்காரனுக்கு வைத்திருக்கக் கொடுத்தது தான் நாங்கள் செய்த பிழை. அந்த வரலாற்றுப் பிழையால் தான் நாங்கள் இன்றும் வருந்திக் கொண்டிருக்கின்றோம். எங்கள் தோட்டத்தில் பிழை எதுவுமில்லை நாங்கள் நியமித்த தோட்டக்காரனில் தான் பிழையிருக்கின்றது.
ஒரு காலத்தில் அந்த மரத்தின் நிழலுக்குக் கீழே நாம் நிம்மதியாகத் உறங்கினோம். இன்று வேரே இல்லாத விருட்சமாய் அது விறைத்து வெறிச் சோடிக் கிடக்கின்றது. என்றெல்லாம் விவ ரிக்கின்றது அந்தத் துண்டுப் பிரசுரம்!

## அதிர்ச்சித் தகவல்

தென்கிழக்குப் பல்கலைக்கழகத்தில் உபவேந்தர் பதவியைப் பொறுப்பேற்றதிலிருந்து இதுவரை தன்னையும் தனது குடும்பத்தையும் கொலை செய்வோமென அச்சுறுத்தி நர்ன்கு அநாமேதய கடிதங்கள் தனது வீட்டுக்கு அனுப்பப்பட்டுள்ளதாக அந்தப் பல்கலைக்கழக உபவேந்தர் பேராசிரியர் எம்.எம்.நாஜிம் அதிர்ச்சித் தகவலொன்றை வெளியிட்டுள்ளார்.
தென்கிழக்குப் பல்கலைக்கழக ஊழியர் சங்கத்தின் 19ஆவது வருட ஒன்று கூடலில் முதன்மை அதிதியாகக் கலந்து கொண்டு உரையாற்றுகையிலேயே அவர் இந்தத் தகவலைத் தெரிவித்துள்ளார்.
இந்த நாட்டில் நீதி நேர்மைக்கு கிடைக்கும் பரிசு இத்தகையது தானோ?

## ஓய்வூதியர் விடுதி

அம்பாறை மாவட்டத்தைச் சேர்ந்த ஓய்வூதியர்களின் நலன்கருதி சம்மாந்துறையில் ஓய்வூதியர் விடுதி ஒன்று நிர்மாணிக்கப்பட வேண்டுமெனக் கோரிக்கை விடுக்கப்பட்டிருந்தது.
அரச சேவை ஓய்வூதியர் நம்பிக்கை நிதியத்தின் சம்மாந்துறைப் பிரதேச செயலகப் பிரிவுச் சங்கத்தின் 16ஆவது வருடாந்தப் பொதுக் கூட்டம் சங்கத்தலைவர் ஏ.எல்.எம். யாசீன் தலைமையில் நடைபெற்ற போது மேற்படி தீர்மானம் ஏகமனதாக நிறைவேற்றப்பட்டது.

## உருவெடுப்பு

'கிழக்கு மக்கள் அவையம்' எனும் பெயரில் கட்சி சார்பற்றதெனக் கூறிக்கொள்ளும் அமைப்பொன்று கிழக்கில் உருவாகியுள்ளது.
இனப்பிரச்சினைக்கான தீர்வு, புதிய அரசமைப்பு, அதிகாரப் பகிர்வு, தேர்தல் முறை மாற்றம் தொடர்பில் முஸ்லிம்களின் ஒருமித்த கருத்துக்களை முன்வைக்கவும், சூழ்ச்சிகளுக்குள் சிக்கவிருக்கும் கிழக்கு முஸ்லிம்கள் தொடர்பில் சிறப்பாகக் கவனம் கொண்டும் இந்த அமைப்பு செயற்படவுள்ளது. அக்கரைப்பற்றில் இந்த அமைப்பு தொடர்பான அங்குரார்ப்பணக் கூட்டம் இடம்பெற்றுள்ளது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சிறையிலும் சிக்கல்

ஸூடோ ஸ்வாமி

கடந்த மார்ச் மாதம் முதலாம் திகதி கேகாலை புனித மரியாள் கல்லூரியின் 150ஆவது ஆண்டு நிறைவு விழாவில் பங்குபற்றிய அரச தலைவர் மைத்திரிபால சிறிசேன அங்கு நிகழ்த்திய உரையில், சிறைச்சாலை ஒன்றின் திறப்பு விழாவுக்குத் தமக்கு விடுக்கப்பட்ட அழைப்பை தாம் நிராகரித்துவிட்டதாகத் தெரிவித்திருந்தார்.
சிறைச்சாலைகளைத் திறப்பதைவிட இனிவரும் சந்ததியினரை நல்லவர்களாக உருவாக்கும் பாடசாலை ஒன்றைத் திறப்பது சிறைச்சாலைகளின் தேவையைக் குறைக்கும் என்று அங்கு குறிப்பிட்ட அவர், பாடசாலைகளைத் திறந்து சிறைச்சாலைகளை மூடி நல்லதொரு சமுகத்தை உருவாக்கவேண்டும் என்றும் வேண்டுகோள் விடுத்திருந்தார்.
அம்பாந்தோட்டை மாவட்டத்தில் அகுனுகொலபெலஸ்ஸ பிரதேசத்தில் 3 பில்லியன் ரூபாய் செலவில் 54 ஏக்கர் நிலப்பரப்பில் நிர்மாணிக்கப்பட்டுள்ள சிறைச்சாலைக் கட்டடத்தொகுதியைத் திறந்து வைக்குமாறு விடுக்கப்பட்ட அழைப்பையே தாம் நிராகரித்திருந்ததாக அரச தலைவர் குறிப்பிட்டிருந்தார்.

**சாவடித்தால் இடப் பிரச்சினை தீரும்**
நாட்டின் தலைவர் சிறைச்சாலையைத் திறந்து வைப்பதற்குப் பின்னடித்த விடயம் இவ்வாறிருக்க, கடந்த செவ்வாய்க் கிழமை நாடாளுமன்றில் சமர்ப்பிக்கப்பட்ட அறிக்கை ஒன்று, நாட்டில் சிறைச்சாலைகளில் ஏற்பட்டுள்ள இடநெருக்கடியைத் தீர்ப்பதற்கு சாவுத்தண்டனையை நடைமுறைப்படுத்துவதை அதற்கான ஒரு தீர்வு நடவடிக்கையாக குறிப்பிட்டிருக்கின்றது.
சிறைச்சாலைகளில் நிலவும் இடநெருக்கடிகளை ஆராய்ந்து, கண்டறிந்து அதனை நிவர்த்தி செய்யும் வகையிலும், நீதித்துறை மற்றும் சட்டப் பரிகார நடவடிக்கைகளை முன்மொழிவதற்குமென அமைச்சரவையால் நியமிக்கப்பட்ட சிறப்பு செயலணியே இவ்வாறு சாவுத்தண்டனையை நடைமுறைக்குக் கொண்டு வருவதை தமது தீர்வு யோசனைகளில் ஒன்றாகச் சுட்டிக்காட்டியிருக்கின்றது.
குறித்த செயலணியின் அறிக்கை நாடாளுமன்ற விவகாரங்கள் மற்றும் வெகுசன ஊடகத்துறை அமைச்சர் கயந்த கருணாதிலக்கவால் கடந்த செவ்வாய்க் கிழமை நாடாளுமன்றில் சமர்ப்பிக்கப்பட்டபோதே இந்த விடயம் அனைவரதும் கவனத்துக்குக் கொண்டுவரப்பட்டிருக்கின்றது.
தற்போது இலங்கையிலுள்ள சிறைச்சாலைகளில் சாவுத்தண்டனை விதிக்கப்பட்ட சுமார் 1,082 கைதிகள் இருக்கின்றார்கள். இதில் 726 பேர் தமது தண்டனை குறித்து மேன்முறையீடு செய்திருக்கின்றார்கள். ஆயுள் தண்டனை பெற்ற கைதிகள் 555பேர் இருக்கின்றார்கள். இவர்களிலும் 463பேர் மேன்முறையீடு செய்திருக்கின்றார்கள்.

**சாவுத் தண்டனைத் தீர்ப்புக்கள்!**
1976ஆம் ஆண்டு ஜுன் 23ஆம் திகதிக்குப் பின்னர் இருந்து இலங்கையில் இன்று வரை சாவுத்தண்டனை நிறைவேற்றப்படவில்லை. ஆனால் சாவுத்தண்டனைத் தீர்ப்புக்கள் மேல் நீதிமன்றம் மற்றும் உச்சநீதிமன்றங்களால் வழங்கப்பட்டுக் கொண்டே இருக்கின்றன. கடந்த மார்ச் மாதம் 30ஆம் திகதிகூட யாழ்ப்பாணம் மேல் நீதிமன்றத்தால் அச்சுவேலி முக்கொலை வழக்குக் குற்றவாளியான தனஞ்செயனுக்குமூன்றுசாவுத்தண்டனை வழங்கித் தீர்ப்பளிக்கப்பட்டிருந்தது...!

**சிறையில் இடநெருக்கடிகளுக்கான காரணிகள்**
நாட்டில் உள்ள சிறைச்சாலைகளில் இடநெருக்கடி ஒரு பொதுவான பிரச்சினையாகக் காணப்படுவதுடன் நாட்டின் சனத்தொகை அதிகரிப்புடன் இந்தக் கைதிகளின் எண்ணிக்கை உயர்வதும் அவதானிக்கப்பட்டு வருகின்றது. கைதிகளுக்குத் தேவையான உறங்கல் வசதிகள், சுகாதார மற்றும் குளியல் வசதிகள், மருத்துவ மற்றும் பொழுதுபோக்கு வசதிகளை ஏற்படுத்திக் கொடுப்பதில் சிக்கல்கள் எதிர்கொள்ளப்படுவது கண்டறியப்பட்டிருக்கின்றது. வெலிக்கடைச் சிறைச்சாலைக்குள் உள்ள சிறைச்சாலை வைத்தியசாலையில் வெறுமனே 3 தாதிகளே பணிபுரிவதாகவும் அண்மையில் கிடைத்த செய்தி ஒன்று தெரிவிக்கின்றது.
குற்றவாளிகளை விசாரணைக்குக் கொண்டுவருதலில் நிலவும் தாமதம், கடுமையான பிணை நிபந்தனைகள் மற்றும் பிணை நிபந்தனை ஏற்பாடுகளை பின்பற்றாமை, தண்டப்பணம் செலுத்த முடியாமையால் சிறைத்தண்டனை பெறுவோர், போதைப்பொருள் குற்றவாளிகளின் அதிகரிப்பு, மற்றும் புதிய தொழில்நுட்பங்களின் பிரயோகம் காரணமாக இலகுபடுத்தப்பட்டுள்ள குற்றவாளிகளை இனங்காணும் முறைகள் என்பனவே இன்று அதிகரித்திருக்கும் சிறைவாசிகளின் அதிகரித்த எண்ணிக்கைக்குப் பின்னால் உள்ள காரணிகளாகக் கூறப்படுகின்றன.
இதில் குறிப்பாகத் தண்டப்பணம் செலுத்த முடியாமையால் சிறைத்தண்டனை அனுபவிக்கும் கைதிகளின் எண்ணிக்கையே சிறைச்சாலைக்குள் கைதிகளை அதிகரிக்க வைத்திருப்பதில் கணிசமான பங்களிப்பை வழங்குகின்றது.
2015ஆம் ஆண்டுக்கான சிறைச்சாலைத் திணைக்களப் புள்ளிவிவரங்களின்படி, 10,525 குற்றவாளிகள் தண்டப்பணம் செலுத்த முடியாமல் சிறைத்தண்டனைக்கு உள்ளாகியிருக்கின்றனர்.
தண்டப்பணம் செலுத்தாது சிறைக்குள்ளாகும் குற்றவாளிகளால் அரசுக்கு ஏற்படும் பராமரிப்புச் செலவீனம், குற்றவாளி செலுத்த வேண்டிய தண்டப்பணத்தை விட பல மடங்கு அதிகமானது என்று சுட்டிக்காட்டப்படுகின்றது.
கொழும்பு பல்கலைக்கழகத்தால் முன்னெடுக்கப்பட்ட ஆய்வு ஒன்றின்படி சிறையடைக்கப்படும் கைதிகளில் 90சதவீதமானோர் இரண்டு ஆண்டுகளுக்கும் குறைவான குறுகிய கால சிறைத்தண்டனைக் காலத்துக்கே தண்டனைக்குள்ளாக்கப்படுகின்றனர். அத்துடன் அங்கு இவர்கள் வாழ்க்கைத்திறன் சார்ந்த அல்லது தொழில்முறை சார்ந்த பயிற்சியைப் பெற்றுக்கொள்வதற்குப் போதிய நேரம் பெற்றுக்கொடுக்கப்படுவதில்லை போன்றன வெளிப்படுகின்றன.




**ஏனைய பரிந்துரைகள்**
சமுதாய அடிப்படை திருத்த முயற்சிகள், தவணை முறையிலான தண்டனைப் பணச் செலுத்தல் மற்றும் காவல்துறை பிணை முறைமையைப் பயன்படுத்துதல் என்பனவும் சிறையில் இடநெருக்கடிகளைத் தவிர்ப்பதற்கான பரிந்துரைகளாகக் கூறப்பட்டிருக்கின்றன.
அரசதலைவரின் பொதுமன்னிப்பின் கீழ் புனர்வாழ்வளிக்கப்பட்ட, சமூகத்துடன் ஒன்றிணைக்கப்படக்கூடிய நீண்டகாலச் சிறைக்கைதிகளை விடுவிக்கவும் குறித்த செயலணி வலியுறுத்தியிருக்கின்றது.
சிறை நெருக்கிடைகளுக்குள் சிக்கித் தவிக்கும் தமிழ் அரசியல் கைதிகள் தொடர்பில் கவனமெடுத்து அவர்களைச் சட்ட நடைமுறையூடாக விடுவிக்க வேண்டும் எனும் கோரிக்கை நீண்டகாலமாக விடுக்கப்பட்டு வருகின்றபோதிலும் இன்னமும் கணிசமான தமிழ் அரசியல் கைதிகள் சிறையிலேயே முடக்கப்பட்டிருக்கின்றார்கள். அவர்கள் இந்தச் சந்தர்ப்பத்திலாவது கருத்தில் கொள்ளப்பட்டு விடுவிக்கப்பட வேண்டும்.
சிறைச்சாலைகளை மூடிப் பள்ளிக்கூடங்களைத் திறந்து நாட்டில் நல்லதொரு சமூகத்தைக் கட்டியெழுப்புவது அவசியமானதே ஆனால் அதற்கு முதற்படியாக, கைதிகளுக்குப் புனர்வாழ்வளித்து அவர்களைத் திருத்திச் சமூகத்துடன் ஒன்றிக்க வைப்பதென்பது கட்டாயமானது.
இதைக்கருத்தில்கொண்டுசிறைக்குள்ளாகும் கைதிகளுக்குப் போட்டியின்றிய சிறைச்சூழல் கிடைப்பதை அரசு உறுதிப்படுத்த வேண்டும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



## சாவின் விளிம்பைத் தொட்ட ஹக்கீமின் ஹெலிப் பயணம்

ஒரு தேசியக் கட்சியின் தலைவன் என்ற அடிப்படையிலும் தான் அதிகமாகக் களத்தில் குதித்தால்தான் அந்தக் கட்சியைக் காப்பாற்ற முடியும் என்ற யதார்த்தத்தின் அடிப்படையிலும் கடந்த நாடாளுமன்றத் தேர்தலின்போது முஸ்லிம் காங்கிரஸ் தலைவர் ரவூப் ஹக்கீம் எடுத்துக்கொண்ட முயற்சிகள் அபாரமானவை, ஆபத்தானவை...

கட்சி பல இடங்களில் பலவீனமடைந்து காணப்பட்டதால் அதைக் காப்பாற்றுவதற்காக அவர் எதிர்கொண்ட ஆபத்தான நிகழ்வுகளில் ஒன்று இது. கட்சி பலவீனமடைந்து காணப்பட்ட பல இடங்களுக்கும் அதிகம் செல்ல வேண்டிய கட்டாயம் அவருக்கு ஏற்பட்டது. அவர் கால் வைத்த இடங்களில் எல்லாம் ரிசாத் பதியுதீனும் கால் வைத்ததால் அந்த இடங்களில் எப்படியாவது வெல்லவேண்டும் என்ற கட்டாயம் அவருக்கு.

தேர்தலுக்கான காலமும் குறுகியே காணப்பட்டதால் அனைத்து இடங்களுக்கும் விரைவாகச் சென்று வருவதற்கு அவர் பயன்படுத்தியது சிறிய ரக ஹெலிகொப்டரையே. அந்தப் பயணங்கள் அவருக்கு வசதியாக இருக்கவில்லை என்பது அந்தப் பயணத்தின்போது அவருடன் இருந்தவர்களுக்கு மாத்திரம்தான் தெரியும்.

புத்தளத்தில் இடம்பெற்ற ஐக்கிய தேசியக் கட்சியின் தேர்தல் பரப்புரைக் கூட்டத்தில் கலந்துகொள்வதற்காக ஹக்கீம் நண்பகல் 12மணிக்குக் கொழும்பில் இருந்து புத்தளத்துக்குக் ஹெலி மூலம் புறப்பட்டுச் சென்றார்.

அதேநேரம், அந்தக் கூட்டத்தில் கலந்துகொள்வதற்காகத் தலைமை அமைச்சர் ரணில் விக்ரமசிங்கவும் வேறு ஒரு ஹெலியில் சென்றார். ஹக்கீம் சென்ற ஹெலியின் சமிக்ஞையில் கோளாறு ஏற்படத் தொடங்கியது.

அதன் சமிக்ஞை கட்டுநாயக்க பன்னாட்டு விமான நிலையத்தில் உள்ள கட்டுப்பாட்டறைக்குக் கிடைக்கவில்லை .இதனால்,ஹெலி திசை மாறத் தொடங்கியது. 2000 அடி உயரத்தில் பறக்க வேண்டிய ஹெலி 5000 அடி வரை மேலே எழுந்து தடுமாறத் தொடங்கியது. கட்டுப்பாட்டை இழக்கத் தொடங்கியது. விமானி அதைக் கீழே இறக்குவதற்குப் போராடினார்.

அப்போது அந்த ஹெலியிலிருந்த எல்லோரும் சாவின் விளிம்பைத் தொட்டுக் கொண்டிருந்தனர். உள்ளே இருந்தவர்களின் மனநிலை எப்படி இருந்திருக்கும்...?

பலத்த போராட்டத்தின் பிறகு ஒருவாறு ஹெலி கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வரப்பட்டு உரிய இடத்தில் இறக்கப்பட்டது.

புத்தளத்தின் பாடசாலை மைதானம் ஒன்றில் ஹெலி இறங்கிய பின்னர்தான் வானில் நடந்த அந்தப் போராட்டம் மக்களுக்குத் தெரியவந்தது.



■ எம்.ஐ.முபாறக்




# அரசியலில இதெல்லாம் சாதாரணமப்பா!



## மேக்கப் போடவில்லையாம்...!

முன்னாள் அரச தலைவர் மகிந்த ராஜபக்சவின் பாரியார் சிராந்தி ராஜபக்ச நடத்தும் பாலர் பாடசாலை ஒன்று கொழும்பு மாளிகாவத்தையில் அமைந்துள்ளது. சிராந்தி திடீர் திடீரென அங்கு வருவார்.

மகிந்தவின் ஆட்சி கவிழ்ந்ததன் பின் ஒரு நாள் அவர் அங்கு வந்தார். அந்தப் பகுதியில் நின்ற இரண்டு ஊடகவியலாளர்கள் அதைக் கண்டனர்.

வேறு விடயமாக அந்தப் பகுதிக்குச் சென்ற அந்த ஊடகவியலாளர்களுக்கு சிராந்தியைக் கண்டதும்அவரைப் பேட்டியெடுக்க வேண்டும் என்று தோன்றியது. மகிந்தவின் தோல்வியின் பின் அவரின் மனைவி பேட்டி ஒன்றை வழங்கினால் அது பத்திரிகைக்கு நல்லதாக அமையும் என நினைத்த அவர்கள் அந்தப் பாடசாலைக்குள் சென்று பாதுகாவலர்களிடம் தங்களை அறிமுகப்படுத்திக்கொண்டு பேட்டியெடுப்பதற்கான அனுமதியைப் பெற்றுத் தருமாறு கோரினர்.

பாதுகாவலர்கள் விடயத்தை சிரந்தியிடம் எத்தி வைக்க அனுமதியும் கிடைத்தது. ஊடகவியலாளர்கள் அவரைச் சந்தித்து உரையாடத் தொடங்கினர். அப்போது அவர்களுள் ஒருவர் அம்மணியைப் போட்டோ எடுக்க முற்பட்டபோது அதற்கு அவர் மறுத்துவிட்டார். ஏன் என்று ஊடகவியலாளர்கள் கேட்டதும் "நான் இன்று மேக்கப் போடவில்லை. நாளை போட்டுக்கொண்டு வருகிறேன். நாளை வந்து படமெடுங்கள். இன்று பேட்டியை மட்டும் எடுத்துக் கொண்டு செல்லுங்கள்" என்றார். சிரிப்பை அடக்கிக்கொண்டு வெளியேறினர் அந்த ஊடக வியலாளர்கள்.



## மீசை வச்ச ஆம்பிளை நான்

ஐந்து வருடங்களுக்கு முன்னர் நடந்த நகைச்சுவையான சம்பவம் இது.

அக்கரைப்பற்றில் இடம்பெற்ற இப்தார் நிகழ்வில் கலந்துகொண்டு தமிழில் உரையாற்றினார் முன்னாள் அரச தலைவர் மகிந்த. அவர் தனது உரையில் "நான் மீச வச்ச ஆம்பிள. என்னை நீங்கள் நம்பலாம்" என்று கூறினார்.

அவ்வாறு கூறிவிட்டு அவருக்கு அருகில் மீசை இன்றி அமர்ந்திருந்த முன்னாள் அமைச்சர் அதாவுல்லாவை ஒரு பார்வை பார்த்தார்.

அவ்வளவுதான். அர்த்தத்தை விளங்கிக் கொண்ட மக்கள் விழுந்து விழுந்து சிரிக்கத் தொடங்கினர். அதாவுல்லா அசடு வழியத் திக்குமுக்காடிப் போனார்.




## அயர்லாந்தில் அனுரவுக்கு வீடா?

சரியான தகவல்களைக் கைகளில் வைத்துக் கொண்டு களத்தில் இறங்குபவர்கள்தான் ஜே.வி.பியினர். அவர்கள் ஒரு குற்றச்சாட்டை முன்வைத்தால் அதை எவராலும் மறுக்கமுடியாது. ஆதாரம் பலமாக இருக்கும். அப்படிப்பட்ட ஜே.வி.பிக்கே ஒரு தரப்பு தண்ணி காட்ட முற்பட்டு மூக்குடைபட்ட சம்பவம் ஒன்று நடந்தது.

ஜே.வி.பியின் தலைவர் அனுரகுமார திஸாநாயக்கவுக்குச் சொந்தமான வீடு ஒன்று அயர்லாந்தில் இருப்பதாக ஓர் ஊடகம் செய்தி வெளியிட்டிருந்தது. அந்தச் செய்தி பரபரப்பை அடைவதற்கு முன்பே ஆதாரத்தோடு அதற்கு முற்றுப் புள்ளி வைத்தது ஜே.வி.பி. அவர்கள் முற்றுப்புள்ளி வைத்த 'ஸ்ரைலே' தனி அழகு.

இலக்கம் 28,சிட்னி அவனியூ,பிளாக்ரோ ,அயர்லாந்து என்ற முகவரியில்தான் அந்த வீடு அமைந்திருப்பதாக அந்தச் செய்தி வெளிவந்தது. அயர்லாந்தில் உள்ள ஜே.வி.பி உறுப்பினர் ஒருவர் உடனடியாக அந்த இல்லத்துக்கு அனுப்பப்பட்டு புலனாய்வு தொடங்கப்பட்டது. அந்த முகவரியில் வீடு ஒன்று இருப்பது கண்டறியப்பட்டது. ஆனால், அதன் உரிமையாளர் ப்ரௌன் மெட்டி என்ற அயர்லாந்து நாட்டுக்காரர். அந்த வீட்டு உறுதிப் பத்திரத்தின் பிரதி ஒன்றை எடுத்து அதை அந்த நட்டு நகர சபை சட்டத்தரணி ஒருவரால் உறுதிப்படுத்திய அங்கு சென்ற நாடாளுமன்ற உறுப்பினர் விஜித ஹேரத்துக்கு அனுப்பி வைத்தார் அந்த உறுப்பினர். அவ்வளவுதான். அந்த ஆவணத்தை வெளியிட்டதும் ஆடிப் போனார்கள் சம்பந்தப்பட்டவர்கள் யாரோ ஒருவரின் வீட்டை அனுரவின் வீடாகச் சித்தரித்து மூக்குடைபட்டதுதான் மிச்சம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




# எருமை மாட்டில் பெய்யும் மழை

சந்திரசேகரஆசாத்

மழை எவ்வளவுதான் பெய்தாலும் எருமை மாடுகள் தங்கள் வழமையான செயல்களில் எவ்வித மாற்றங்களையும் ஏற்படுத்துவதில்லை. படுத்திருக்கும் எருமைமாடு மழை பெய்யும்போது எழுந்து ஓடுவதில்லை. மேய்ந்து கொண்டிருந்தால், தனது மேய்ச்சலை நிறுத்தி விடுவதில்லை. நடந்து கொண்டிருந்தால், அது மழைக்கு ஒதுங்கிடம் தேடித் தனது நடையை மாற்றிக் கொள்வதில்லை. என்ன செய்துகொண்டாலும் அது தன்பாட்டில் அதையே செய்யும். இதுதான் எருமை மாட்டின் குணாம்சம்.
அதன் காரணமாகவே எது நிகழ்ந்தாலும் சூடு, சொரணையில்லாமல் நடக்கும் மனிதனைப் பார்த்து அவனின் நடத்தையை 'எருமை மாட்டில் மழைபெய்வது போல்' எனக் கிண்டல் செய்வதுண்டு. தற்சமயம் இலங்கையின் ஆட்சியாளர்களைப் பொறுத்தவரையில் அவர்களின் நடவடிக்கைகளும் மழையைப் பொருட்படுத்தாது நடந்து கொண்டிருக்கும் எருமை மாடுகளைப் போன்றுள்ளன என்பதை ஆச்சரியப்பட வைக்காமல் வெளிக்காட்டுகின்றன.

### தமிழர்களின் பரந்துபட்ட போராட்டங்கள்

காணாமல் ஆக்கப்பட்டோர் தொடர்பான போராட்டங்கள் ஒருமாத காலத்தையும் தாண்டிக் கிளிநொச்சி, வவுனியா, மருதங்கேணி, திருகோணமலை, மட்டக்களப்பு உட்படப் பல பகுதிகளிலும் தொடர்ந்து இடம்பெறுகின்றன. அதேபோன்று தமது சொந்தக் காணிகளை விடுவிக்கும்படி கோரியும் தாங்கள் குடியிருக்கும் காணிகளுக்குக் காணி உரிமை வழங்கக் கோரியும் தமது பாரம்பரியக் காணிகள் அபகரிக்கப்படுவதை எதிர்த்தும் கேப்பாப்புலவு, பன்னங்கட்டி, முள்ளிக்குளம் உட்படப் பல பகுதிகளிலும் மக்கள் அறப்போராட்டங்களை நடத்தி வருகின்றனர் .அதேபோன்று தனியார் மருத்துவக்கல்லூரியான சைட்டம் அமைக்கப்படுவதை எதிர்த்துப் பல்கலைக் கழக மாணவர்கள், மருத்துவர்கள் ஆகியோர் பல்வேறு போராட்டங்களை நடத்தி வருகின்றனர். அத்துடன் வேலையற்ற பட்டதாரிகள் தமக்கு வேலை வழங்கும்படி கோரிப் பல போராட்டங்களை மேற்கொண்டு வருகின்றனர். அவை கவனஈர்ப்புப் போராட்டங்கள், சுழற்சி முறையிலான உணவு தவிர்ப்புக்கள், ஆர்ப்பாட்டப் பேரணிகள், ஊர்வலங்கள், வேலைநிறுத்த அறிவித்தல்கள் எனப் பல்வேறு வடிவங்களில் தொடர்ந்து கொண்டிருக்கின்றன.
பொதுமக்கள், மாணவர்கள், மருத்துவர்கள் எனப் பலதரப்பினரும் பல இடையூறுகளையும், துன்ப துயரங்களையும் எதிர்கொண்டு போராட்டத்தில் ஈடுபட்டபோதும் அரசைப் பொறுத்தவரையில் அவையனைத்தும் எருமை மாட்டில் பெய்த மழையாகவே உள்ளன.

### தலைமைகள் கண்டுகொள்ளாமல் இருக்கும் நிலை

போராடும் மக்களுக்காகச் சில அரசியல் வாதிகள் குரல்கொடுத்தாலும் அரசதலைவரோ, தலைமை அமைச்சரோ அவற்றைப் பற்றி அலட்டிக் கொள்வதேயில்லை. அரசியல்வாதிகளும் போராடும் மக்கள் முன்பும் ஊடகவியலாளர்களிடமும் காட்டும் வீரத்தை அரசதலைவரிடமோ தலைமைஅமைச்சரிடமோ காட்டுவதாக இல்லை. அரசுக்கு அழுத்தம் கொடுக்கும் வகையிலான எவ்வித செயற்பாடுகளையும்கூட அவர்கள் மேற்கொள்வதில்லை. ஆனால் சில அமைச்சர்கள் வாக்குறுதிகளை வழங்கி வருகின்றனர். அமைச்சர் சுவாமிநாதன், வெகு விரைவில், அதாவது கேப்பாபுலவு காணிகள் ஏப்ரல்மாதம்முடியமுன்பே விடுவிக்கப்படுமெனவும் அமைச்சர் ராஜிதசேனாரத்ன, ஒரு மாத காலத்தில் காணாமலாக்கப்பட்டோர் தொடர்பாகத் தன்னால் விவரங்களைப் பெற்றுத்தர முடியுமெனவும் வாக்குறுதிகளை வழங்கியுள்ளனர். அதேவேளையில் உயர் கல்வி அமைச்சர் சைட்டம் கல்லூரியை நிறுத்துவது நீதிமன்றத்துக்கு எதிரானதெனவும் அது சாத்தியமில்லையெனவும் தெரிவித்தார். அதே போன்று முள்ளிக்குளத்தில் மக்களின் காணிகள் எதுவும் ஆக்கிரமிக்கப்படவில்லையென அரசதலைவரின் செயலாளர் தெரிவித்துள்ளார்.
இவ்வாறு அமைச்சர்கள் உட்பட அரசதரப்பினால் வழங்கப்படும் வாக்குறுதிகளும், கருத்துக்களும்கூடப் போராடும் மக்களுக்கு எருமை மாட்டில் பெய்தமழையாகவே இருக்கின்றன. மக்கள் எந்த வாக்குறுதிகளையும் கருத்துக்களையும் பொருட்படுத்தாமல் தமது போராட்டங்களைத் தொடர்கின்றார்கள் ஏற்கனவே வாக்குறுதிகளை நம்பி ஏமாந்த அனுபவம் மக்களை இப்போது யாரையும் நம்ப முடியாத நிலைக்கு இட்டுச் சென்றுள்ளது. அது மட்டுமன்றி அரசதரப்பால் தொடர்ந்தும் அலட்சியப் படுத்தப்பட்டால் போராட்டம் அடுத்த கட்டத்தை நோக்கி நகருமென மக்கள் எச்சரிக்கைவிடுத்துள்ளனர்.

### கடும்தொனியில் மன்னிப்புச்சபைச் செயலாளர்

மக்களின் போராட்டங்கள் தொடர்பாக அரசு காட்டும் அலட்சியம் ஒருபுறமும் அரச தரப்பின் வாக்குறுதிகளை மக்கள் பொருட்படுத்தாத நிலைமை மறுபுறமுமாக இருப்பதால் அரசு முற்றாகவே மக்களிடம் நம்பிக்கை இழப்பது தவிர்க்கப்பட முடியததாகி விடுகின்றது. உள்ளூரில் நிலைமை இப்படியிருக்கும்போது பன்னாட்டு அளவிலும்கூட அரசு மீதான நம்பிக்கையிழக்கும் நிலை உருவாகியுள்ளது.
இதனால்தான் அண்மையில் வடபகுதிக்குப் பய



ணம் செய்த பன்னாட்டு மன்னிப்புச் சபையின் பொதுச் செயலர் சலிசெற்றி வெளியிட்ட சில கருத்துக்கள் கடுமையான தொனியில் அமைந்துள்ளதை அவதானிக்க முடிந்தது. அதாவது அபகரிக்கப்பட்ட மக்களின் காணிகள் விடுவிக்கப்பட வேண்டுமெனவும் காணாமல் ஆக்கப்பட்டோர் தொடர்பாகத் தாங்கள் அரசுக்கு அழுத்தம்கொடுக்கப் போவதாகவும் பன்னாட்டு அளவிலும் நடவடிக்கைகளை மேற்கொள்ளப் போவதாகவும் அவர் தெரிவித்துள்ளார். அவரின் இந்தக் கருத்தை மக்களின் போராட்டங்களை ஊதாசீனம் செய்வதுபோல் அரசு சாதாரணமாக எடுத்துவிட முடியாது.
மக்களின் வெறுப்பையும் பொருட்படுத்தாமல் மக்கள் தொடர்பான அலட்சியப் போக்குக்குக் காரணம் தான் என்ன? ஒன்று இனவாதமயப்படுத்தப்பட்ட இராணுவமும் அதன் மேலதிக்கப் போக்கும். அடுத்தது உலக நிதி வழங்கும் நிறுவனங்களைத் திருப்திப்படுத்தும் வகையில் தனியார் மயமாக்குதலுக்கு வழங்கப்படும் முக்கியத்துவம் ஏனைய சகல விடயங்களும் இந்த இந்த இரு நோக்கங்களையும் செயற்படுத்தும் அடிப்படையிலேயே அணுகப்படுகின்றன. இலங்கையின் தயாபத்தியம், பொருளாதார அபிவிருத்தி என்பனவெல்லாமே இந்த எல்லைகளுக்குள்ளேயே வகுக்கப்படுகின்றன.

### சமூகச் சீரழிவுகளுக்கான அடித்தளம்

ஒரு மனிதனோ ஒரு குடும்பமோ தனது பாரம்பரிய இடத்தைவிட்டு வெளியேறி வேறு இடங்களில் வாழும்போது அவர்கள் தங்கள்

> காணி விவகாரம், காணாமல் ஆக்கப்பட்டோர் விவகாரம், போர்க் குற்றங்கள் மற்றும் மனித உரிமை மீறல் போன்ற சகல விடயங்களும் இராணுவத்தின் நலன்கள் சார்ந்தே நோக்கப்படுகின்றன. அதாவது இராணுவத்துக்காக அரசா? அரசுக்காக இராணுவமா? என்ற கேள்வி எழும்போது மக்கள் நலன்கள் புறந்தள்ளப்பட்டு இராணுவத்துக்காக அரசு என்ற நிலையே மேலோங்கி நிற்கின்றது.

45

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




புதுவருடத்தை முன்னிட்டு பெண்களுக்கான பஞ்சாபிகள் வித்தியாசமான வடிவங்களில் வருகின்றன. அந்த வகையில் தற்போது குடவெட்டுடன், சோளிகிற் முறையிலாகவும் பஞ்சாபிகள் தற்போது சந்தைக்கு வந்துள்ளன. இவை 5 ஆயிரத்து 500 ரூபாவில் இருந்து விற்பனை செய்யப்படுகின்றன. இந்த வகை பஞ்சாபிகளை ஒன்லைன் மூலமாகவும் பெற்றுக் கொள்ளலாம்.

# வீட்டுமனை பாதுகாப்பில் கவனிக்க வேண்டிய அம்சங்கள்

வாங்கிய வீட்டு மனை நமது பெயரில் இருந்தாலும், தற்போது குடியிருக்கும்வீட்டுக்கு தொலைவில் இருக்கும்பட்சத்தில்வீட்டு மனை பாதுகாப்பில் தனிப்பட்ட கவனம் செலுத்த வேண்டும்.

**கட்டுமான வேலை:**
வீடு கட்டும் வேலையை பத்திரப்பதிவு முடிந்தவுடன் உடனே தொடங்கிவிட இயலாது. பல்வேறு விதமான அடிப்படை தேவைகளை முடித்த பிறகு, வீடு கட்டும் பணிகளை தொடங்க 3 மாதத்திலிருந்து 6 மாத கால அவகாசம் தேவைப்படலாம். அந்த இடைப்பட்ட காலகட்டத்தில்கூட மனை பாதுகாப்புக்கு உரிய நடவடிக்கைகளை எடுக்கவேண்டும்.

**ஆதாரங்கள்:**
வாங்கப்பட்ட வீட்டுமனையின் பழைய ஆவணங்கள், மனை நமக்குசொந்தம்என்பதற்குஆதாரமாக உள்ள, தற்போதுபதிவு செய்யப்பட்டபத்திரத்தின்நகல்கள்ஆகியவற்றின்அடிப்படையில் பெயர் மாற்ற விண்ணப்பம் செய்து, அதற்கான பற்றுச்சீட்டும் பெற்றுக்கொள்ள வேண்டும்.

**பாதுகாப்பு:**
வாங்கப்பட்ட வீட்டு மனையின் பெயர் மாற்றம் செய்யப்பட்ட உறுதி கைக்கு கிடைத்ததும் சில நடவடிக்கைகளை அவசியம் செய்தாக வேண்டும்.

**கம்பி வேலி:**
மனை பாதுகாப்பில் உடனடியாக செய்ய வேண்டியது கம்பி வேலி அமைப்பதுதான். இடத்தின் நான்குஎல்லைகளைகச்சிதமாககவனித்துகம்பிவேலிஅல்லதுமதில்அமைப்பதுபாதுகாப்பானது.

**அருகில் இருப்பவர்கள்**
நேரம் கிடைக்கும்போது மனையை நேரில் சென்று பார்த்துவிட்டு வருவதும், மனைக்கு அக்கம்பக்கம் இருப்பவர்கள் வீடு கட்டி வசித்து வந்தால், அவர்களுடன் நல்ல உறவை வைத்துக் கொள்வதும் மனையின் பாதுகாப்புக்கு வழிகளாக கொள்ளலாம்.

**நாளை**

**பங்குனி-28**
திங்கட்கிழமை -10.04.2017
திதி: சதுர்த்தசி மு.ப.10.39
நட்சத்திரம்: அத்தம் பி.இ.03.37
சுபநேரம்:12.06-01.36 வரை
ராகுகாலம்:07.36-09.06 வரை
பூரணை விரதம்

# வெயில் காலத்தில் வரும் பொடுகு பிரச்சினைக்கு உடனடி தீர்வு

ஆண்கள், பெண்கள், குழந்தைகள் என, அனைவரும் பொடுகு தொல்லையால் அவதிப்படுகின்றனர். பொடுகைபோக்க இயற்கை வைத்திய முறையை பின்பற்றினால் நிரந்தர தீர்வு கிடைக்கும்.

எத்தனை நவீன மருத்துவம் வந்தாலும் தலையில் வரும் பொடுகுக்குத் தீர்வு கிடைப்ப தில்லை. ஆண்கள், பெண்கள், குழந்தைகள் என, அனைவரும் பொடுகு தொல்லையால் அவதிப்படுகின்றனர்.

பொடுகை போக்க இயற்கை வைத்திய முறையை தவிர வேறு வழியில்லை.

சின்ன வெங்காயம் கொஞ்சம் எடுத்து அரைத்து தலையில் தேய்த்த பின்னர், 15 நிமிடம் கழித்து குளிக்கலாம். பாலுடன் மிளகு பவுடரை சேர்த்து தலையில் தேய்த்து, 15 நிமிடம் கழித்து குளித்தால் சில நாள்களில் பொடுகு தொல்லையில் இருந்து விடுபடலாம்.

தலை வறட்சி ஏற்பட்டால், வாரம் ஒருமுறை நல்லெண்ணை தேய்த்து குளிப்பது நல்லது.

பசலை கீரையை அரைத்து தலையில் அரப்பு போல் தேய்த்து குளித்தால் பொடுகைக் கட்டுப்படுத்தலாம்.

பொடுகு வர உடல் சூடு முக்கிய காரணமாக இருக்கிறது. அதனால், சூடு தணிக்கும் வெந்தய பவுடரை தலையில் தேய்த்து முழுகினால், பொடுகு தொல்லையும் தீரும் உஷ்ணமும் குறையும்.

அருகம்புல் சாறு எடுத்து தேங்காய் எண்ணெயுடன் சேர்த்து நன்றாக காய்ச்சி ஆறவைத்து தினசரி தலையில் தேய்த்தால் பொடுகு மறையும்.

வேப்பிலை சாறும் துளசி சாறும் கலந்தும் தலையில் தேய்க்கலாம். வசம்பு பவுடரை தேங்காய் எண்ணெயில் ஊறவைத்து தேய்க்கலாம்.

(தொடரும்)





# கழுத்துப்பட்டி தலை அலங்காரம்

முடியை நன்றாக சீவிய பின் கன்னப்பக்கத்தில் இருந்து கொஞ்ச முடியை பிரித்து எடுக்கவும்.

பிரித்த எடுத்த முடியை வூல் பான்ட் போடவும்.

வூல்பான்ட் போட்டு முழுதாக முடியை எடுக்காமல் படத்தில் காட்டியவாறு கொஞ்சம் முடியை விட்டு போடவும்.

படத்தில் காட்டியவாறு வூல்பான்ட் போட்ட விட்ட முடியை இரண்டாகப் பிரித்து கிளிப் குத்துக. அப்போது கழுத்துப்பட்டி `போ"வடிவத்துக்கு வரும்.

அதன் பின் கீழ் முடியை எடுத்து அதனை சுற்றி கிளிப் குத்துக.

வித்தியாசமான முறையில் தலை அலங்காரம் தயார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Facebook : UTHAYAN.PRINT
Twitter : UTHAYANPRINT



# 64 ஆவது இந்திய தேசிய விருதுகள்

இந்திய சினிமாத்துறையில் 64 ஆவது தேசிய விருதுகள் அறிவிக்கப்பட்டுள்ளன. இதில் மொழிவாரியாகச் சிறந்த தமிழ் படமாக ஜோக்கர் தெரிவு செய்யப்பட்டுள்ளது. ராஜு முருகன் இயக்கத்தில், குருசோம சுந்தரம் நடிப்பில் வெளியான இந்தப்படம்ஏற்கனவேபல்வேறுபன்னாட்டுத்திரைப்படவிழாக்களில்பங்குப்பெற்று விருது பெற்றமை குறிப்பிடத்தக்கது.

சீனுராமசாமி இயக்கத்தில், விஜய்சேதுபதி நடிப்பில் வெளியான தர்மதுரை படத்தில் இடம்பெற்ற எந்தப்பக்கம்... பாடலுக்காக பாடலாசிரியர் வைரமுத்துவுக்கு தேசிய விருது அறிவிக்கப்பட்டுள்ளது. இதன்மூலம்வை ரமுத்து பெறும் 7ஆவதுதேசியவிருது இதுவாகும்.

விக்ரம்குமார்இயக்கத்தில்சூர்யாமூன்று வேடங்களில்நடித்த24படத்துக்குசிறந்த ஒளிப்பதிவு மற்றும் சிறந்த தயாரிப்பு நிர்வாகத்துக்கான இரண்டு தேசிய விருதுகள் கிடைத்துள்ளன.

புலி முருகன், ஜனதா கேரஜ் மற்றும் முந்திரி வல்லிகள் தளிர்க்கும் போல ஆகிய படங்களில் நடித்த மோகன்லாலுக்கு தெரிவுக்குழுவின்சிறப்புவிருது அறிவிக்கப்பட்டுள்ளது.

தமிழுக்கு ஆறு தேசிய விருதுகள்

சிறந்தபடம், சிறந்தபாடகர்என ஜோக்கர் படத்துக்கு 2விருதும், சிறந்த ஒளிப்பதிவு மற்றும் தயாரிப்பு நிறுவனத்துக்காக 24 இற்கு 2 விருதும், சிறந்த பாடலாசிரியர் வைரமுத்து மற்றும் சினிமா அல்லாத கதைக்காக தனஞ்செயனுக்கு தேசிய விருது உட்பட மொத்தம் தமிழ் சினிமாவுக்கு6தேசியவிருதுகள்கிடைத்துள்ளன.

*விருதுகள் விபரம் வருமாறு...*


சிறந்த நடிகர்: அக்ஷய் குமார் (ருஷ்டம்)
சிறந்த நடிகை : சுரபி லக்ஷ்மி(மின்னாமின்னுங்கு, மலையாளம்)
சிறந்த இயக்குநர் : ராஜேஷ் மபூஸ்கர்(படம் வென்ட்டிலேட்டர்)
சிறந்த துணை நடிகை : சையிரா வாசீம்(துங்கல்)
சிறந்த சமூகப்படம்: பிங்க்(ஹிந்தி)
சிறந்த இசையமைப்பாளர்: பாபுபத்மநாபன்(கன்னடம்)
சிறந்த காட்சியமைப்பு: சிவாய்
சிறந்த திரைக்கதை(குரமான) : சியாம் புஷ்கரண்(மகிஷிண்டே பிரதிகாரம்)
சிறந்த திரைக்கதை(தழுவல்) சஞ்சய் கிருஷ்ணாஜி(தேஷ்கிரியா)
சிறந்த ஸ்டண்ட் மாஸ்டர் : பீட்டர் ஹெய்ன்(புலி முருகன் மலையாளம்)
சிறந்த படத்தொகுப்பு : ராமேஷ்வர்(வென்ட்டிலேட்டர்)
சிறந்த ஒளிப்பதிவு திரு(24)
சிறந்த பின்னணிப் பாடகர் : சுந்தர் ஐயர்(ஜோக்கர்)
சிறந்த பின்னணிப் பாடகி : இமான் சக்ரவர்த்தி
சிறந்தகுழந்தைகள்படம்: தனக்(ஹிந்தி)
சிறந்த குழந்தைகள் நட்சத்திரம்: ஆதீஷ் பிரவீன்(குஞ்சு தெய்வம்), சாஜ்(நூர் இஸ்லாம்), மனோகரா(ரயில்வே சில்ரன்)
சிறந்த சுற்றுச்சூழல் படம் : தி டைகர் கூ கிராஸ்டு தி லைன்

*மொழிவாரியாகசிறந்தபடங்கள்...*

தமிழ்: ஜோக்கர்
ஹிந்தி: நீர்ஜா
மலையாளம்: மகிஷிண்டே பிரதிகாரம்
தெலுங்கு: பெல்லி சூப்புலு
கன்னடம்: ரிசர்வேஷன்
மராத்தி: தேஷ்கிரியா
குஜராத்தி: ராங் சைடு ராஜு
பெங்காலி: பிசர்ஜன்



அடிபட்டவர்: ஏண்டா மோதினே?
இடித்தவர்: பிரேக் பிடிக்கல சார்!
அடிபட்டவர்: பார்க்க புது வண்டியா இருக்கு பிரேக் பிடிக்கலேன்னு பொய் சொல்றியே!
இடித்தவர் : நான் பிரேக் பிடிக்கல சார்...




திடீர்னு ஒருத்தர் முகநூலில் வரவில்லை என்றால் அவர் திருந்திவிட்டார் என்று நினைக்க கூடாது...



அவருக்கு வலையமைப்பு (நெட்வேக்) போட காசில்லாம கூட இருக்கலாம்...

ஆடி போய் ஆவணி வந்தால் முன்னுக்கு வந்துடுவான் அது அந்த காலம்



அலைபேசியைப் புடிங்கி அடுப்பில போட்டா முன்னுக்கு வந்துடுவான் அது இந்த காலம்...

## சுடோக்கு எண் விளையாட்டு

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| | | | | | 3 | 2 | | 1 |
| | 9 | | | 2 | | | | |
| | 7 | | 4 | 5 | | | | |
| | 4 | | | | | 5 | | 7 |
| | | 8 | 5 | | 6 | 9 | | |
| 6 | | 9 | | | | | 8 | |
| | | | | 6 | 5 | | 1 | |
| | | | | 4 | | | 2 | |
| 5 | | 3 | 1 | | | | | |

### நேற்றைய சுடோக்கின் விடை

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| 2 | 1 | 8 | 3 | 5 | 9 | 7 | 4 | 6 |
| 7 | 5 | 4 | 1 | 6 | 2 | 8 | 3 | 9 |
| 3 | 9 | 6 | 8 | 7 | 4 | 2 | 1 | 5 |
| 8 | 4 | 5 | 2 | 1 | 6 | 9 | 7 | 3 |
| 1 | 7 | 9 | 5 | 4 | 3 | 6 | 8 | 2 |
| 6 | 2 | 3 | 9 | 8 | 7 | 4 | 5 | 1 |
| 9 | 6 | 1 | 4 | 3 | 8 | 5 | 2 | 7 |
| 4 | 3 | 2 | 7 | 9 | 5 | 1 | 6 | 8 |
| 5 | 8 | 7 | 6 | 2 | 1 | 3 | 9 | 4 |

சுடோக்கு ஒரு எண் விளையாட்டு. தர்க்க ரீதியான ஒழுங்கு படுத்தல் தான் இதன் அடிப்படை. 1-9 வரையான எண்களை ஒழுங்கு படுத்தி ஒரே கோலத்தை ஏற்படுத்த வேண்டும். இந்தப் பெட்டி 9 நிரல்களையும் 9 நிரைகளையும் கொண்டது. 3X3ஆக உள்ளேயும் 3 நிரல்களையும் 3 நிரைகளையும் கொண்டிருக்கிறது. (உள்ளே இருப்ப வற்றை பெட்டிகள், கட்டங்கள், பகுதிகள், உப சதுரங்கள் என்றும் அழைக்கிறார்கள்). இந்த ஒவ்வொரு நிரையிலும், நிரலிலும் 1-9 வரையான எண்கள், இரண்டு தடவைகள் (மீண்டும் மீண்டும்) வராது நிரப்பப்பட வேண்டும். அவ் வாறு நிரப்பப்படுகையில் உள் பெட்டி களுக்குள்ளும் அவ் வாறே 1-9 இலக்கங்கள் இரட்டைப் படாமல் வர வேண்டும். சில கட்டங்கள் ஏற்கனவே நிரப்பப்பட்டிருக்கும். தர்க்க ரீதியில் ஏனைய வற்றை நிரப்ப வேண்டியதே வேலை. சுடோக்கு என்பது ஜப்பானியச் சொல். அதன் பொருள் தனி எண் என்பதாகும். 1986இல் ஜப்பானிய [illegible] இதனை அறிமுகப்படுத்தி வெற்றிகரமாகப் பரவலாக்கியது. 2005இல் இது உலக அளவில் பிரபல்யமானது.



## இன்றைய நாள் உங்களுக்கு எப்படி?

தருபவர்: வித்யா



**மேடம்:** உடல்நலனில் அக்கறை கொள்வது நல்லது. நண்பரால் உதவி கிடைக்கும். தொழில், வியாபாரத்தில் லாபம் சுமாராக இருக்கும். பணியாளர்கள் பணிச்சுமைக்கு ஆளாவர்.

**இடபம்:** உறவினரால்நன்மைபெறுவீர்கள். குடும்பத்தினரின் ஒத்துழைப்பு கிடைக்கும். தொழில்,வியாபாரத்தில்எதிர்பார்த்தஆதாயம் கிடைக்கும். பெண்களுக்கு நீண்டநாள் விருப்பம்நிறைவேறும்.

**மிதுனம்:** நற்செயலில் ஈடுபட்டு புகழ் பெறுவீர்கள். தொழில், வியாபாரம் வளர்ச்சி பெற சுறுசுறுப்பாகப் பணிபுரிவீர்கள். நிலுவைப் பணம் வசூலாகும். வாகனப் பயணம் இனிதாக அமையும்.

**கடகம்:** நண்பர்களிடம் எதிர்பார்த்த உதவி கிடைக்கும். தொழில், வியாபாரத்தில் ஆதாயம் அதிகரிக்கும். பணியாளர்கள் சலுகை பெறுவர். பெண்கள் ஆடை, ஆபரணம் வாங்குவர்.

**சிங்கம்:** உங்களைச் சிலர் குறை சொல்லக் காத்திருப்பர். தொழில், வியாபாரத்தில் எதிர்பார்த்த வருமானம் ஓரளவு கிடைக்கும். பணியாளர்கள், பணி விடயமாக வெளியூர் செல்வர்.

**கன்னி:** நண்பரிடம் எதிர்பார்த்த உதவி கிடைக்கும். திட்டமிட்டபடி செயல் நிறைவேறும். தொழில், வியாபாரத்தில் புதிய சாதனை உருவாகும். பணியாளர்களுக்குச் சலுகை கிடைக்கும்.

**துலாம்:** பகைவரும் நெருங்கி வந்து நட்புப் பாராட்டுவர். பெருந்தன்மையுடன் பிறருக்கு உதவி செய்வீர்கள். தொழில், வியாபாரத்தில் இருக்கிற குறுக்கீடு விலகும். லாபம் படிப்படியாக உயரும்.

**விருச்சிகம்:** எதிர்காலம் குறித்த எண்ணம் மேலோங்கும். தொழில், வியாபாரத்தில்எதிர்பார்த்த வருமானம் கிடைக்கும். பெண்கள், கௌரவத்துக்காகச் செலவு செய்ய நேரிடும். பெற்றோரின் அன்பும், ஆசியும் உண்டாகும்.

**தனுசு:** தர்மசங்கடமான சூழ்நிலையை எதிர்கொள்ள நேரிடலாம். தொழில், வியாபாரத்தில் வேலைப்பளு அதிகரிக்கும். பணியாளர்கள் விண்ணப்பித்த கடனுதவி கிடைக்கப் பெறுவர்.

**மகரம்:** நல்லவர்களின் நட்பால், மனதில் உற்சாகம் அதிகரிக்கும். தொழில், வியாபாரத்தில் சேமிக்கும் விதத்தில் வருமானம் வரும். மனைவியின் ஆலோசனை வளர்ச்சிக்கு வழிவகுக்கும்.

**கும்பம்:** உங்களின் நற்செயலைச் சிலர் பரிகாசம் செய்வர். தொழில், வியாபாரத்தில் வளர்ச்சி பணி நிறைவேற தாமதமாகும். பெண்கள், தகுதிக்கு மீறிய வாக்குறுதி தருவதைத் தவிர்க்கவும்.

**மீனம்:** எதிர்பார்ப்பு இனிதே நிறைவேறும். அக்கம்பக்கத்தினர் அன்பு பாராட்டுவர். தொழில், வியாபார வளர்ச்சியால் வருமானம் உயரும். குடும்பத்தேவை பூர்த்தியாகும். புத்திரர்களின்செயல்பாடு பெருமையளிக்கும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வடமாகாண சுற்றுலாத்துறை ...

(19 ஆம் பக்கத் தொடர்ச்சி....)

குடாநாட்டிலே புராதன இராசதானிகளில் ஒன்றாக விளங்கிய நல்லூரை மையமாகக் கொண்டு, அதன் நாலாபுறமும் காணப்படுகின்ற வீரமாகாளி அம்மன் கோவில், கைலாய பிள்ளையார் கோவில், தலங்காவற் பிள்ளையார் கோவில், சட்டநாதர் சிவன் ஆலயம் போன்ற கலாசார மையங்களையும், சங்கிலியன் தோப்பு, மந்திரிமனை என்பவற்றையும் இணைத்து வரலாற்று வலயமாகப் பிரகடனம் செய்தல் அவசியமாகும். அவற்றின் வரலாறுகளை விவரிக்கும் காட்சிப்படுத்தல்கள் எதுவுமே அவ்வப் பகுதிகளில் காணப்படாமை பெரும் குறைபாடாகவுள்ளது. எனவே பொறுப்புள்ள தரப்புக்கள் இவற்றின் வரலாறுகளை இணைப்பிடை செய்து காட்சிப்படுத்துவதற்கேற்ற நடவடிக்கைகளை முன்னெடுத்தல் அவசியமாகும்.

மன்னார், கிளிநொச்சி போன்ற மாவட்டங்களில் முறையே மாந்தை கண்டல் பகுதிகள், கௌதாரிமுனை ஈரநிலப்பிரதேசம் போன்றவை காணப்படுகின்றன. இவ்விடங்களில் அதிகமான உயிர்ப்பல்வகைமைகள் உள்ளன. ஆனால் அவற்றை அடிப்படையாகக் கொண்டு கரையோரச்சூழலியல் சார் சுற்றுலாவை முன்னெடுப்பதற்கு ஏற்றவகையில் இதுவரை எவ்விதமான நடவடிக்கைகளும் முன்னெடுக்கப்படவில்லை. சூழலியற்தொகுதியில் எவ்வித மாற்றங்களையும் ஏற்படுத்தாது, அதனுள் உல்லாசப் படகுச் சேவை, நுண்ணுயிர்கள் தொடர்பான ஆய்வுகளை மேற்கொள்வதற்கேற்ற வசதி ஏற்படுத்தப்படல் வேண்டும்.

பருவகால வேறுபாடுகள் காரணமாக குறிப்பிட்ட சில காலங்களில் சுற்றுலாப்பயணிகளது வருகை பாதிப்படைகின்றது. இதனால் அந்தக் காலகட்டங்களில் இத்துறையுடன் நேரடியாகவும், மறைமுகமாகவும் தொடர்புடையவர்களது தொழில் வருமானங்களும் பாதிப்பு அடைகின்றன.

**சுற்றுலா மையங்களுக்கு வெளியே பொழுதுபோக்கும் வசதியின்மையும் ஒரு பின்னடைவே**

சுற்றுலா மையங்களுக்கு வெளியே சென்று பொழுதுபோக்குவதற்கு ஏற்ற வகையில் இசை அரங்கங்கள், கடைத்தொகுதிகள் போன்றவை வடமாகாணத்தில் ஒப்பீட்டளவில் மிகக்குறைவாகக் காணப்படுகின்றன. இதனால் உல்லாசப் பயணிகளை ஈர்ப்பதிலும், அப்பயணிகளைத் தக்கவைத்துக் கொள்வதிலும் பாதிப்புக்கள் ஏற்படுகின்றன. இதனால் வடமாகாணத்தின் கிராமியக் கலைகளான கும்மி, கோலாட்டம், நாட்டுக்கூத்து போன்ற நிகழ்வுகளை சுற்றுலா மையங்களைச் சார்ந்து சுற்றுலா விடுதிகளில் அவ்வப்போது ஏற்பாடு செய்வதன் மூலம் அவற்றை அனைத்து சமூகத்தினரும் அறியக்கூடிய வாய்ப்பையும் ஏற்படுத்திக் கொடுக்கலாம்.

வடமாகாண அரசு மற்றும் மத்திய அரசுகளுக்கு இடையே நிலவிவருகின்ற உறவின் பலவீனத்தன்மையால் இந்தத் துறையை அபிவிருத்தி அடையச் செய்வதில் அக்கறையீனம் தொடர்ந்து நிலவி வருகின்றது. அத்துடன் பெரும்பான்மை இனவாத, மதவாத சக்திகளிடையே வடமாகாணம் தொடர்பான சந்தேக நிலை மற்றும் பாதுகாப்புத் தொடர்பான அச்சநிலை என்பவை காரணமாக வெளிநாட்டு மற்றும் தனியார் நிறுவனங்கள் உல்லாசப் பயணத்துறையில் முதலீடு செய்யத் தயக்கம் காட்டுகின்றன.

வடமாகாணத்தில் உள்ள சகல உல்லாசப்பயண மையங்களும், தம்மகத்தே பல்வேறுபட்ட உள்ளார்ந்த வளங்களைக் கொண்டிருந்தாலும், அவையாவும் இதுவரை அடையாளப்படுத்தப்படாததால் முக்கியத்துவம் இழந்து காணப்படுகின்றன.

சுற்றுலாவியல் தொடர்பான கற்கைநெறிகள் பல்கலைக்கழகமட்டத்திலோஅல்லதுதனியார்கல்விநிறுவனங்களாலோ முறையாகப் போதிக்கப்படாமை, மற்றும் சில பயிற்சிக் கல்லூரிகள் இத்தகைய பாடநெறிகளை நடத்தினாலும் அவை வகுப்பறைக் கற்றலுடன் மட்டும் நின்றுவிடுவதனாலும், சுற்றுலாவியல் கல்வி முக்கியத்துவம் இழந்து காணப்படுகிறது.

வடமாகாணத்துக்கு வருகின்ற உல்லாசப் பயணிகளுக்கு என பயணப்பொதிகள் எதுவுமில்லாமையினால் மாகாணத்திலுள்ள அனைத்து உல்லாசப் பயண மையங்களையும் அவர்கள் பார்வையிடமுடியாத நிலைமை ஏற்படுகிறது. எனவே சகல வசதிகளையும் உள்ளடக்கிய வகையில் சுற்றுலாப்பொதிகளை அறிமுகம் செய்தல் வேண்டும்.

இங்குள்ள அதிகமான உயர்ரக விடுதிகள், சாதாரணதர விடுதிகள் போன்றவை சூழலுக்கு நட்புறவானதாக அமைக்கப்படவில்லை. ஏனெனில் இங்குள்ள விடுதிகள் சீமெந்து, பிளாஸ்ரிக், கண்ணாடி, அலுமினியம், சீற் போன்ற மூலப் பொருள்களைப் பயன்படுத்தி ஆடம்பரமாக வடிவமைக்கப்பட்டு வெளிப்புற காட்சிக்கு அழகாக உள்ளனவே தவிர, அவற்றின் உட்புறங்களில் தங்குமிட அறைகளின் தூய்மைக் குறைபாடு போன்ற இன்னோரன்ன பிரச்சினைகள் காணப்படுகின்றன.

எனவே தான் அத்தகைய அமைப்புக்கள் அனைத்தும் கரையோர, கலாசார வரலாற்று ரீதியாக தற்பொழுது அடையாளப்படுத்தப்பட்டுள்ள உள்ளார்ந்த வளங்களை அடிப்படையாகக் கொண்டு படிமுறைரீதியாக நிலைத்து நிற்கும் வகையில் அபிவிருத்தித் திட்டங்களை முன்னெடுத்தல் வேண்டும். இவற்றின் வாயிலாகவே வடமாகாணத்தின் ஐந்து மாவட்டங்களிலும் சுற்றுலாத்துறையை ஓரளவிலேனும் விருத்தி அடையச்செய்ய முடியும்.

---

## சொற்சிலம்பம் போட்டி இல: 466

| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| 1 | | 2 | 3 | | | ■ | 4 |
| | ■ | 5 | | ■ | ■ | 6 | |
| 7 | 8 | | ■ | 9 | 10 | | ■ |
| 11 | | ■ | ■ | 12 | | ■ | 13 |
| | ■ | 14 | 15 | | ■ | 16 | |
| ■ | 17 | | | ■ | 18 | | |
| 19 | ■ | 20 | | | ■ | 21 | |
| 22 | | | | ■ | 23 | | |

அனுப்புபவர் பெயர்:..............................................

முழுமையான தபால் விலாசம்: ...............................

..........................................................................

கையொப்பம்:.........................................................

**இடமிருந்து வலம்**

1. மாற்றுத் திறனுடையோர்
5. சூழ்ச்சி
6. கழிந்து கொள்
7. தர்க்கம் செய்
9. புஷ்பங்களால் தொடுத்தது
11. ஊன்
12. ஒன்றன்பின் ஒன்றாக ஒரு ஒழுங்கில் செல்லல்
14. பூக்களை பெரும் அளவில் தூவுதல்
16. ஐந்தாம் வேற்றுமை உருபு
17. கிட்டத்தட்ட
18. விலகிப்போ
20. உடல்
21. ஆகாயத்தில் மித
22. நித்திரையில் இருந்து எழு
23. பாம்பு

**மேலிருந்து கீழ்**

1. பழிச் சொல்
2. ஐயம்
3. தெரு
4. இல்லம்
6. வீதி
8. திக்கு
9. கோயிலிற் பூசை செய்பவர்
10. மழைக் காலம்
13. வலோற்காரமாக பாலியல் உறவு கொள்ளுதல்
14. பூமித்தாய்
15. தமிழ் மாதங்களில் இறுதியானது
16. இம்மை, மறுமை சார்ந்த
19. ஒரே

வாசகர்கள் மத்தியில் குறிப்பாக மாணவ, மாணவியர் மத்தியில் பொது உளச்சார்பு மற்றும் மொழி அறிவை வளர்த்து விடத் தூண்டுவதே இப்போட்டி நடத்தப்படுவதன் முக்கிய குறிக்கோள். ஒவ்வொரு போட்டியிலும் ஏராளமான வாசகர்கள் ஆர்வத்துடன் கலந்துகொள்வதுடன், அவர்களில் பெரும்பாலானோர் முற்றிலும் சரியான விடைகளை அனுப்பி வருவதால் பரிசுக்கும் பாராட்டுக்கும் உரிய அதிர்ஷ்ட சாலிகள் குலுக்கல் முறைமூலம் தேர்ந்தெடுக்கப்படுகின்றனர்.

சொற்சிலம்பம் போட்டி இலக்கம்: 464 இற்கான சரியான விடைகள் வருமாறு:

**இடமிருந்து வலம்**

(1) கதாபாத்திரம் (6) போசனை (7) ரசி (9) தின் (10)புட்கரன் (11) நாட்டின் (12) புகட்டி வை (15) கட (16) கடமை (17)மனம் (19)கனா (20)தும் (21)நண்பன்

**மேலிருந்து கீழ்**

(1) கபோதி (2) தாசன் (3) பானை (4) திரட்டி வை (5)ரசிகன் (8)கன்னி (10) புட்டி (11)நாட்டம் (13)ககனம்(14) பாட்கன் (17)மது (18) கண்

சொற்சிலம்பம் போட்டி தொடர்பான வாசகர்களது ஆலோசனைகளும் கருத்தில் எடுக்கப்படும்.

## போட்டி விதிகள்

1. வாசகர் எவரும் சொற்சிலம்பம் போட்டியில் கலந்து கொள்ளலாம்.
2. ஒருவர் எத்தனை கூப்பன்களையும் நிரப்பி அனுப்பலாம்
3. உதயனில் பிரசுரமாகும் கூப்பன்களே போட்டிக்கு ஏற்கப்படும்.
4. போட்டி தொடர்பாக ஆசிரியரின் தீர்ப்பே முடிவானதாகும்.
5. வெற்றி பெறும் முதல் ஐந்து அதிர்ஷ்டசாலிகளுக்கு முறையே ரூபா 300/=, ரூபா 250/=, ரூபா 200=, ரூபா 150/= ரூபா 100/= பணப் பரிசில்கள் வழங்கப்படும். அத்துடன் பாராட்டுப் பெறும் மூன்று அதிர்ஷ்டசாலிகளது பெயர் விவரங்களும் உதயனில் பிரசுரிக்கப்படும்.

சொற்சிலம்பம் போட்டி
இல.466
பூர்த்தி செய்யப்பட்ட கூப்பன்கள்
நியூ உதயன் பப்ளிக்கேஷன் (பிறைவேற்)லிமிட்டெட்,
இலக்கம் 361, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.
என்னும் முகவரிக்கு
எதிர்வரும் புதன்கிழமைக்கு அடுத்து வரும்
புதன்கிழமைக்கு முன்னர்,
(19.04.2017 ஆம் திகதிக்கு முன்னர்) கிடைக்கத்
தக்கதாகத் தபாலட்டையில் ஒட்டி அனுப்பி
வைக்கப்படவேண்டும்.

சொற்சிலம்பம் போட்டி இலக்கம்: 464 இற்கான சரியான விடைகளை எழுதி அனுப்பியவர்களில் குலுக்கல் முறை மூலம் தேர்ந்தெடுக்கப்பட்ட முதல் ஐந்து அதிர்ஷ்டசாலிகளது பெயர் விவரங்கள் வருமாறு:

**1 ஆம் பரிசு**

பொ.கதிரேசு,
அம்பிகாவத்தை வீதி,
சங்கானை.

**2 ஆம் பரிசு**

செல்வராசா மிதுனன்,
கரப்புக்குத்தி,
கனகராயன் குளம்.

**3 ஆம் பரிசு**

திருமதி மாலா ஜுட்,
சில்லாலை,
பண்டத்தரிப்பு.

**4 ஆம் பரிசு**

நா.மோகனேஸ்வரன்,
இல.8/1, தாளையடி ஒழுங்கை,
திருநெல்வேலி தெற்கு,
யாழ்ப்பாணம்

**5 ஆம் பரிசு**

ம.பிரான்சிஸ்கா,
இல.16/1, மருதடி வீதி,
யாழ்ப்பாணம்.

**பாராட்டுப் பெறுவோர்**

இரா.சந்திரசேகரன்,
மாசியப்புலம் வீதி,
ஏழாலை வடக்கு, ஏழாலை.

செல்வி போ.கோபிசாளினி,
இல.82/1, ஸ்ரான்லி வீதி,
யாழ்ப்பாணம்.

ஆ.அகிலா,
இல.61 பாரதி வீதி, கச்சேரி,
யாழ்ப்பாணம்.

சொற்சிலம்பம் போட்டி இல.466இல் வெற்றி பெறுவோர்களது விவரம் 23.04.2017 ஞாயிறு உதயனில் பிரசுரிக்கப்படும்.

சொற்சிலம்பம் போட்டியில் கலந்து கொண்டு வெற்றியீட்டுவோருக்கான பரிசுக் காசோலைகள் வெற்றி பெற்றோரால் கொடுக்கப்படும் விலாசத்துக்கே அனுப்பி வைக்கப்படும். சரியான தபால் விலாசம் கொடுக்கப்படாமையால் சில சமயம் காசோலைகள் உரிய வெற்றியாளரைச் சென்றடையாமை அவதானிக்கப்பட்டுள்ளது. போட்டியில் கலந்து கொள்வோர் தத்தமது சரியான, முழுமையான தபால் விலாசத்தையும் குறிப்பிடுமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறீர்கள்.

**சொற்சிலம்பம் போட்டி 464 இல் பரிசு பெற்றோருக்கான கொடுப்பனவுக் காசோலைகள் காலக்கிரமத்தில் அவரவர்களது விலாசத்துக்கு அனுப்பி வைக்கப்படும்.**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இந்த வாரம்

**09.04.2017 முதல் 15.04.2017 வரை**

உங்களுக்கு எப்படி?

## மேடம்

சுக்கிரன், கேது, சந்திரனால் நன்மை உண்டாகும். எதிலும் முன்யோசனையுடன் செயற்படுவது நல்லது. உடன்பிறந்தவர்கள் அன்பைக் கண்டு மனம் நெகிழ்வீர்கள். வாகனத்தில் அளவாக வேகத்தைப் பின்பற்றுவது நல்லது. பிள்ளைகள் விரும்பிய பொருள் கேட்டு பிடிவாதம் செய்வர். உடல்நலனில் அக்கறை தேவை. கடன் பிரச்சினையால் சிரமத்துக்கு ஆளாகலாம். மனைவியின் ஆலோசனையை ஏற்பது நன்மையளிக்கும்.தொழில், வியாபாரத்தில் வருமானம் கூடுதலாக இருக்கும். தொழில் ரீதியாக திடீர்ப் பயணம் செல்ல நேரிடும். பணியாளர்கள், பணிச்சுமைக்கு ஆளாகலாம். பெண்கள், பிறருக்காகப் பணப்பொறுப்பு ஏற்க வேண்டாம்.

## இடபம்

சூரியன், சுக்கிரன், குரு அனுகூல அமர்வால் வளர்ச்சி உண்டாகும். நீண்டநாள் எதிர்பார்ப்பு நிறைவேறும். புதிய வீடு, வாகனம் வாங்கத் திட்டமிடுவீர்கள். புத்திரர் கல்வி, வேலைவாய்ப்பில் சிறந்து விளங்குவர். விரும்பிய உணவு வகைகளை உண்டு மகிழ்வீர்கள். வழக்கு, விவகாரத்தில் சுமுகத் தீர்வு கிடைக்கும். மனைவி வழி உறவினர்களால் நன்மை உண்டாகும். திட்டமிட்ட பயணத்தில் திடீர் மாற்றம் உண்டாகும். தொழில், வியாபாரத்தில் ஆதாயம் படிப்படியாக அதிகரிக்கும். பணியாளர்கள், கூடுதல் உழைப்பால் வருமானத்தைப் பெருக்குவர். பெண்கள், சிக்கனத்தை கடைபிடித்து சேமிப்பர்.

## மிதுனம்

பெரும்பான்மை கிரகங்கள் நன்மை தரக் காத்திருக்கின்றன. மனதில் உற்சாகம் நிறைந்திருக்கும். பணிகளை ஆர்வமுடன் நிறைவேற்றுவீர்கள். விலகிய உறவினரும் விருப்பத்துடன் நெருங்குவர். புத்திரரின் செயல் குறையை இதமாகச் சரி செய்வது நல்லது. உடல்நலம் சீராக இருக்கும். மனைவி விரும்பிய பொருள் வாங்கித் தருவீர்கள். குடும்பத்தில் ஒற்றுமை நிலைக்கும். தொழில், வியாபார வளர்ச்சியால் வருமானம் பன்மடங்கு உயரும். அரச வகையில் எதிர்பார்த்த நன்மை கிடைக்கும். பணியாளர்கள், குறித்த காலத்தில் பணியிலக்கை நிறைவேற்றுவர். மாணவர்கள், நண்பரின் உதவியால் படிப்பில் முன்னேறுவர்.

## கடகம்

புதன், சுக்கிரன், சந்திரனால் நன்மை உண்டாகும். வளர்ச்சிக்கான புதிய வாய்ப்பு கிடைக்கப் பெறுவீர்கள். திட்டமிட்டபடி பணிகள் நிறைவேறும். உறவினர் வகையில் செலவு ஏற்படலாம். வாகனப் பயணம் இனிய அனுபவம் தரும். புத்திரர் படிப்பு, வேலைவாய்ப்பில் சிறந்து விளங்குவர். குடும்பத்தில் நிம்மதி நிலைத்திருக்கும். கடனில் ஒரு பகுதி அடைபடும். மனைவியின் சொல்லும், செயலும் வளர்ச்சிக்குத் துணை நிற்கும். தொழில், வியாபார வளர்ச்சியால் வருமானம் அதிகரிக்கும். பணியாளர்கள், சுதந்திர மனப்பான்மையுடன் பணியாற்றுவர். பெண்கள், பிள்ளைகளின் நலனில் அக்கறை கொள்வர். மாணவர்கள், கோடை காலப் பயிற்சி வகுப்பில் பங்கேற்பர்.

## சிங்கம்

சுக்கிரன், குரு, சந்திரனால் நன்மை உண்டாகும். கடந்த கால உழைப்பின் பலன் கிடைக்கப் பெறும். உடன்பிறந்தவர்களிடம் எதிர்பார்த்த உதவி கிடைக்கும். வாகனத்தில் அளவாக வேகத்தைப் பின்பற்றவும். பிள்ளைகள் விருப்பம் அறிந்து நிறைவேற்றுவீர்கள். விருந்து, விழாவில் அடிக்கடி பங்கேற்பீர்கள். ஆரோக்கியம் பலம் பெறும். மனைவியின் ஆலோசனை வளர்ச்சிக்குத் துணைநிற்கும். தொழில், வியாபார வளர்ச்சியால் இலாபம் பன்மடங்கு உயரும். பணியாளர்கள், நிர்வாகத்தின் நன்மதிப்பைப் பெற்று மகிழ்வர். மாணவர்கள், கல்வியில் முன்னணி வகிப்பர்.

## கன்னி

கேது, புதன், சனீஸ்வரரால் நன்மை அதிகரிக்கும். எதிர்பார்ப்பு ஒவ்வொன்றாக நிறைவேறும். புதிய வீடு, வாகனம் வாங்க யோகம் உண்டாகும். சமூகப்பணிகளில் ஆர்வமுடன் ஈடுபடுவீர்கள். புத்திரர் விரும்பிக் கேட்ட பொருள் வாங்கித் தருவீர்கள். உடல்நலம் சீராக இருக்கும். விருந்து, விழாவில் கலந்து கொள்வீர்கள். மனைவியின் உறவினர்களிடம் குடும்ப விவகாரம் பேச வேண்டாம். தொழில் வியாபாரத்தில் மூலதனம் அதிகம் தேவைப்படும். பணவரவு சீராக இருக்கும். பணியாளர்கள், சிறப்பாக பணிபுரிந்து நிர்வாகத்தின் பரிசு, பாராட்டு பெறுவர். பெண்கள், வீட்டு உபயோகப் பொருள்கள் வாங்குவர். மாணவர்கள், பெற்றோரின் அன்பைப் பெற்று மகிழ்வர்.

## துலாம்

சூரியன், ராகு, சந்திரன் நற்பலனை வாரி வழங்குவர். உறவினர்களின் அன்பும், ஆதரவும் கிடைக்கும். உடன்பிறந்தவர் நலனில் அக்கறை கொள்வீர்கள். பிள்ளைகள் கல்வி, வேலைவாய்ப்பில் முன்னேற்றம் காண்பர். கடனாகக் கொடுத்த பணம் கிடைக்கும். மனைவியின் செயற்பாட்டால் குடும்ப ஒற்றுமை சிறக்கும். தொழில், வியாபாரத்தில் எதிர்பார்த்த வருமானம் கிடைக்கும். பணியாளர்கள், பொறுப்புணர்வுடன் பணியாற்றி நற்பெயர் எடுப்பர். பெண்கள், ஆடை, ஆபரணம் வாங்கி மகிழ்வர். மாணவர்கள், ஞாபகத்திறன் வளர்த்து படிப்பில் முன்னேறுவர்.

## தனுசு

கேது, சுக்கிரன், சந்திரன் நற்பலன் வழங்குவர். பொது விடயத்தில் ஆர்வம் உண்டாகும். யாருக்கும் தகுதி மீறி வாக்குறுதி தர வேண்டாம். வாகன வகையில் திடீர்ச் செலவு ஏற்படும். பிள்ளைகளின் உடல்நலத்துக்காக சிகிச்சை தேவைப்படலாம். வழக்கு விவகார முடிவு சாதகமாக இருக்கும். மனைவியின் அன்பைக் கண்டு மனம் நெகிழ்வீர்கள். தொழில், வியாபாரத்தில் மறைமுகப் போட்டி குறுக்கிட்டாலும் இலாபம் குறையாது. பணியாளர்கள், சக ஊழியர்களால் பணிச்சுமைக்கு ஆளாவர். பெண்கள், நகை, பணம் இரவல் கொடுக்க வாங்க கூடாது. மாணவர்கள், பெற்றோரின் வழிகாட்டுதலை ஏற்பது நல்லது.

## விருச்சிகம்

செவ்வாய், புதன், குரு, சுக்கிரனால் நன்மை அதிகரிக்கும். பணிகளில் ஆர்வமுடன் ஈடுபடுவீர்கள். நண்பர்களிடம் எதிர்பார்த்த உதவி கிடைக்கும். அறிமுகமில்லாதவருக்கு இடம் தர வேண்டாம். பிள்ளைகள் கல்வி, வேலைவாய்ப்பில் சிறந்து விளங்குவர். பூர்வீக சொத்தில் வீடு, வாகனத்தில் வருமானம் கிடைக்க வாய்ப்புண்டு. மனைவியின் செயற்பாடு வளர்ச்சிக்குத் துணைநிற்கும். அடிக்கடி விருந்து, விழாவில் பங்கேற்பீர்கள். வெளியூர்ப் பயணத்தால் இனிய அனுபவம் உண்டாகும். எதிர்பார்த்த சுபசெய்தி வந்து சேரும். தொழில் வியாபாரத்தில் இடையூறுகளை முறியடித்து வளர்ச்சி காண்பீர்கள்.

## மகரம்

பெரும்பான்மைக் கிரகங்களால் நன்மை உண்டாகும். குடும்பத்தினரின் அன்பும், ஆதரவும் கிடைக்கும். நற்செயலில் ஈடுபட்டு புகழ் பெறுவீர்கள். வீடு, வாகன வகையில் அதிக செலவுகள் ஏற்படலாம். பிள்ளைகளின் விருப்பம் அறிந்து நிறைவேற்றுவீர்கள். ஆரோக்கியம் மேம்படும். கடமையில் ஆர்வமுடன் ஈடுபடுவீர்கள். மனைவியின் கருத்துக்கு மதிப்பு அளிப்பீர்கள். தொழில், வியாபார வளர்ச்சி சீராக இருக்கும். ஆதாயம் படிப்படியாக உயரும். பணியாளர்கள், விரும்பிய சலுகை கிடைக்கப் பெறுவர். மாணவர்கள், நண்பர்களுடன் பொழுது போக்கில் ஈடுபடாது அக்கறை கொள்ள வேண்டும்..

## மீனம்

சுக்கிரன், ராகு, குரு நற்பலன் தர காத்திருக்கின்றனர். முன்யோசனையுடன் செயல்படுவது நல்லது. மற்றவர்களிடம் குடும்ப விடயத்தைப் பேச வேண்டாம். உடன்பிறந்தவர்களின் அன்பும், ஆதரவும் கிடைக்கும். வாகனத்தில் அளவாக வேகத்தைப் பின்பற்றவும். பிள்ளைகள் பிடிவாத குணத்துடன் செயல்படுவர். கடன் பிரச்சினை ஓரளவு குறையும். மனைவி வழி உறவினர்களால் உதவி கிடைக்கும். தொழில், வியாபாரத்தில் கூடுதல் மூலதனம் தேவைப்படும். லாபம் சீராக இருக்கும். பணியாளர்கள், நிர்வாகத்தின் பரிசு, பாராட்டைப் பெறுவர். பெண்கள், ஆன்மிக நிகழ்ச்சிகளில் அடிக்கடி பங்கேற்பர். மாணவர்கள், கோடை கால வகுப்பில் ஆர்வமுடன் பங்கேற்பர்.

## கும்பம்

சுக்கிரன், செவ்வாயின் அனுகூல அமர்வால் நன்மை உண்டாகும். சமூக அந்தஸ்துடன் திகழ்வீர்கள். உறவினர் வருகையால் மகிழ்ச்சி அதிகரிக்கும். சகோதர வகையில் சுபநிகழ்ச்சி நடத்தும் சூழ்நிலை உருவாகும். பிள்ளைகள் கல்வி, வேலைவாய்ப்பில் முன்னேற்றம் காண்பர். பூர்வீகச் சொத்து மூலம் வருமானம் உயரும். நண்பர்களிடம் கடனாகக் கொடுத்த பணம் கிடைக்கும். மனைவியின் ஆலோசனை வளர்ச்சிக்கு வழிவகுக்கும். பயணத்தின் மூலம் இனிய அனுபவம் காண்பீர்கள். தொழில், வியாபாரத்தில் எதிர்பார்த்த இலாபம் கிடைக்கும். பணியாளர்களுக்கு, விரும்பிய இடமாற்றம் கிடைக்கும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# எருமை மாட்டில் பெய்யும்...

(40ஆம் பக்கம் தொடர்ச்சி)

பூர்வீக மண், பரம்பரைத் தொழில், அவர்களின் சொந்த பந்தங்கள், தங்கள் கலாசார வழமைகள், கிராம – மண் இயல்புகள் என அனைத்தையும் இழக்கின்றனர். அதாவது அவர்களின் பாரம்பரியத் தொழில், இன, மத அடிப்படைகள் சீர்குலைகின்றன. எனவே அவர்கள் தங்கள் இன தனித்துவங்களைக்கூட இழந்து ஊதாரிகளாக மாற்றப்படுகின்றனர். இன்று இடம்பெறும் வாள்வெட்டுக்கள் அதீத மதுப்பழக்கம் பாலியல் ஒழுக்கக்கேடுகள் ஈன இரக்கமற்ற கொலைகள் என்பனவற்றுக்கான மூலம் இந்தக் கட்டுப்பாடற்ற உதிர வாழ்வு முறையிலிருந்தே உருவாகின்றது. சொந்தபந்தங்கள் அயலட்டை, ஊர் போன்ற தொடர்புகள் பல வீனமடையும்போது பொதுவான சமூகக் கண்காணிப்பும் அதிலிருந்து பிறப்பெடுக்கும் கண்ணுக்குத் தெரியாத கட்டுப்பாடும் காணாமல் போய் விடுகின்றன.

காணாமலாக்கப்பட்டோரின் உறவுகளின் போராட்டங்கள் வடக்கு கிழக்கில் மாத எல்லையைத் தாண்டித் தொடர்கின்றன. குறைந்த பட்சம் பெற்றோராலோ அல்லது மனைவியாலோ இராணுவத்தினரிடம் ஒப்படைக்கப்பட்டவர்கள் பற்றிக்கூட அரச தரப்போ இராணுவத்தரப்போ பதில் சொல்லத் தயாரில்லை. இதில் முக்கியம் இராணுவத்திடம் ஒப்படைக்கப்பட்டவர்களுக்கு என்ன நடந்தது என்பதற்கு இராணுவமே பதில் சொல்லியாக வேண்டும். அவர்களைக் கொன்றிருந்தால் இராணுவம் குற்ற வாளிக் கூண்டில் ஏற வேண்டிவரும். உயிருடன் இருந்து அவர்கள் இரகசிய முகாம் களில் தடுத்து வதைக்கப்பட்டிருந்தால், அந்த விடயம் அம்பலமாகிவிடும் அதன் காரணமாக இரா ணுவத்தின் போர்க்குற்றங்கள், மனித உரிமை மீறல்கள் பன்னாட்டு அரங் குக்குக் கொண்டு வரப்பட்டுவிடும். எனவே காணாமலாக்கப்பட்டோர் தொடர்பான குற்றங் களை மேற்கொண்ட படை அதிகாரிகளும் அவர்களுக்குக் கட்டளையிட்ட அதிகாரிகளும் தண்டிக்கப்பட வேண்டிவரும்.

காணி விவகாரம், காணாமல் ஆக்கப்பட்டோர் விவகாரம், போர்க்குற்றங்கள் மற்றும் மனித உரிமைமீறல்கள்போன்ற சகல விடயங்களும் இராணுவத்தின் நலன்கள் சார்ந்தே நோக்கப்படுகின்றன. அதாவது இராணுவத்துக்காக அரசா? அரசுக்காக இராணுவமா? என்ற கேள்வி எழும் போது மக்கள் நலன்கள் புறந்தள்ளப்பட்டு இராணுவத்துக்காக அரசு என்ற நிலையே மேலோங்கி நிற்கின்றது. எனவே தான் அரசைப் பொறுத்தவரை மக்கள் போராட்டங்கள் எருமை மாட்டில் பெய்யும் மழை தான் அப்படிப் பெய்யும் மழை தன் மீது விழுவதில் எருமை மாட்டுக்கு சொரணை இல்லாமல் போகலாம். மழைதொடர்ந்து பெய்யும் போது ஏற்படும் வெள் ளம் எருமை மாட்டையே அள்ளிக் கொண்டு போய்விடும் என்பதை அந்த எருமைமாடு உணராமலிருப்பது தான் இங்கு பரிதாபம்.

## கண்ணீர் அஞ்சலி



எமது பாடசாலை ஆசிரியரான
**திருமதி வ.கஜேந்திரன்**
அவர்களின் அன்பு மாமியார்
**திருமதி அருந்ததிநாயகி பஞ்சலிங்கம்**
அவர்களின் பிரிவால் துயருறும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதுடன் அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

**ஆசிரியர் நலன்புரிக்கழகம்,**
**கிளி/ திருவையாறு மகா வித்தியாலயம்.**

## கண்ணீர் அஞ்சலி



எமது வித்தியாலய முன்னாள் அதிபர் **அருட்சகோதரி மரியமலர்** A/C அவர்களின் அன்புத் தாயார்
**திருமதி அக்னெஸ் ஜோசவ்**
அவர்களின் மறைவையிட்டு அன்னாரின் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக் கொள்வதோடு அவரின் ஆத்மசாந்திக்காக இரக்கத்தின் ஆண்டவனைப் பிரார்த்திக்கின்றோம்.

**அதிபர், ஆசிரியர்கள்,**
**பாடசாலை அபிவிருத்திச் சங்கம், யா/ சென்.பெனடிக்ற் வித்தியாலயம்**

## வேலையாள்கள் தேவை

மோட்டார் உதிரிப்பாக, ரயர் விற்பனையாளர்கள்
வயது- 18-30
கல்வித்தகைமை தேவையில்லை
சம்பளம் பேசித்தீர்மானிக்கப்படும்.
1. வான் விற்பனை உதவியாளர்
2. கடை விற்பனை உதவியாளர்கள்
யாழ் நகரை அண்டிய பிரதேசமாகவும் மானிப்பாயை அண்டிய பிரதேசமாக உள்ளவர்கள் மட்டும் தொடர்பு கொள்ளவும்.

**075 641 4476**

## வேலையாள்கள் தேவை

அழகுசாதன நிலையம் ஒன்றுக்கு அனுபவமுள்ள பெண் விற்பனையாளர் (Beautician) தேவை. கவர்ச்சிகரமான சம்பளம் வழங்கப்படும்.

**தொடர்பு: 077 248 7772**

## கடையுடன் வீடு வாடகைக்கு

திக்கம், அல்வாய் மேற்கு, நெல்லியடி வீதி, சித்திவிநாயகர் பாடசாலையடி/கடையுடன் வீடு வாடகைக்கு (தனியாகவோ/ இரண்டும் ஒன்றாகவோ) திக்கம், நெல்லியடி பிரதான வீதியில் எவ்வித தொழிலுக்கும் ஏற்றது. முற்பணம், வாடகை, பார்வை நேர விவரங்களுக்கு

**சேகர்/ கயன்/ மது:**
**077 327 7491**

## மர அரிவு ஆலை விற்பனைக்கு உண்டு

மிருசுவிலில் உள்ள மர அரிவு ஆலை விற்பனைக்கு உண்டு.

**077 255 7761**

## மணமகன் தேவை

யாழ் இந்து கௌரவ குடும்பத்தைச் சேர்ந்த 1985 இல் பிறந்த அச்சுவினி நட்சத்திரம் கிரகபாவம் 52, சூரியன், செவ்வாய் உடைய பட்டதாரி மணமகளுக்கு அழகிய படித்த உள்நாடு அல்லது வெளிநாடு மணமகன் தேவை.

**076 547 3382**

## மரண அறிவித்தல்



### நல்லையா ஏரம்பமூர்த்தி

(ஏரம்பு கடை உரிமையாளர்)

சுழிபுரம்மத்தியைப்பிறப்பிடமாகவும்வசிப்பிடமாகவும் கொண்ட நல்லையா ஏரம்பமூர்த்தி 08.04.2017 சனிக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான நல்லையா - பத்தினிப்பிள்ளை தம்பதியரின் அன்பு மகனும், பூமாதேவியின் பாசமிகு கணவனும், காலஞ்சென்றவர்களான கந்தையா - இரத்தினம் தம்பதியரின் மரு மகனும், காலஞ்சென்றவர்களான சுப்பிரமணியம், சின்னையா, நடராஜா, முத்துப்பிள்ளை, இராஜேஸ்வரி மற்றும் சோமசுந்தரம், சோதிமுத்து ஆகியோரின் சகோதரரும், நந்தினி, தயாளினி ஆகியோரின் அன்புத் தந்தையும், மனோகரன் (ஆசிரியர் - யா/ சுழிபுரம் ஐக்கிய சங்க சைவவித்தியாசாலை), ஹரிதாசன் ஆகியோரின் பாசமிகு மாமனும், டிசானன், உசாங்கன், ஹேபிதன், வதுரா, ஆரிசன் ஆகியோரின் அன்புப்பேரனும், தவமணி, காலஞ்சென்றவர்களான கனகசபாபதி, சிவலிங்கம்மற்றும் மங்கயற்கரசி ஆகியோரின் மைத்துனனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (09.04.2017) ஞாயிற்றுக் கிழமை மு.ப.11.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக திருவடிநிலை இந்து மயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுகொள்ளவும்.

**சுழிபுரம் மத்தி**

**தகவல்**
**குடும்பத்தினர்**

## வேலைவாய்ப்பு

**CERTIS LANKA HOME NURSING & SWIFT CARE (PVT) LTD.**

சர்டிஸ் லங்கா நிறுவனம் சிங்கப்பூரிலுள்ள சர்டிஸ் இன்டர்நஷனல் பிரைவட் லிமிடட்டின் கூட்டு நிறுவனமாகும். இழப்பு தடுப்பு, பாதுகாப்பான சேவைகள் மற்றும் பராமரிப்பு சேவைகளை தனியார் மற்றும் நிறுவன வாடிக்கையாளர்களுக்கு வழங்குவதில் நாம் முன்னணியில் உள்ளோம்.

எமது நிறுவனத்தின் விரைவான விரிவாக்கம் காரணமாக, எமது யாழ்ப்பாணத்திலுள்ள கிளைக்கு, கீழுள்ள வெற்றிடத்திற்கு பொருத்தமானவர்கள் விண்ணப்பிக்கலாம்

### VISITING SISTER - JAFFNA

- 25-45 வயதுக்கு இடைப்பட்ட, 3 வருடங்கள் பயிற்சிபெறும் தாதியராக பணியாற்றிய அனுபவம் உள்ளவர்கள் இதற்கு விண்ணப்பிக்கலாம்.
- விண்ணப்பதாரர்கள் தனியார் மருத்துவ கல்வி நிறுனத்தில் 3 வருடங்கள் முழுமையாக தாதியக் கல்வியினை கற்றிருத்தல் வேண்டும். தமிழ் மொழியில் கைதேர்ந்தவராக இருப்பதுடன், சிங்களம் மற்றும் ஆங்கிலத்தில் உரையாடக்கூடியவர்கள், குறித்த பகுதியில் வசிக்கும் மற்றும் உந்துருளி, சாரதி அனுமதி பத்திரம் உள்ள விண்ணப்பதாரர்களுக்கு முன்னுரிமை வழங்கப்படும்.
- தெரிவுசெய்யப்படும் விண்ணப்பதாரர்களுக்கு கவர்ச்சிகரமான ஊதியம், ஏனைய கொடுப்பனவுகள் மற்றும் மருத்துவக் காப்பீடும் வழங்கப்படும்.

தகுதியுடைய விண்ணப்பதாரர்கள் உறவுமுறையற்ற இரு மத்தியஸ்தர்களின் பெயர் மற்றும் விலாசத்தினை குறிப்பிட்டு தங்களது சுயவிபரக் கோவையினை **hnschr@certislanka.com** மின்னஞ்சலுக்கு அல்லது கீழுள்ள விலாசத்திற்கு தபால் மூலம் விளம்பரப்படுத்திய நாளிலிருந்து 07 நாட்களுக்குள் அனுப்பிவைக்கவும்.

skillsads


**பொது முகாமையாளர்**
**சர்டிஸ் லங்கா ஹோம் நர்ஸிங் என்ட் ஸ்விப்ட் கெயார் (பிரைவட்) லிமிடட்**
**இல. 01, விக்டோரியா வீதி,**
**யாழ்ப்பாணம்.**
**தொடர்புகள்: 021 2221922, 0773 746448**

39 Years of Excellence
securing your world

certis lanka
"A member of the Certis Group (Singapore)"
Securing Your World

## மரண அறிவித்தல்

| தோற்றம் | மறைவு |
|---|---|
| 03 | 06 |
| 08 | 04 |
| 1935 | 2017 |



### வைரமுத்து வேலாயுதபிள்ளை

(ஓய்வுபெற்ற அதிபர்)

யாழ். நாயன்மார்கட்டைப் பிறப்பிடமாகவும் கொழும்பை வசிப்பிடமாகவும் கொண்ட வைரமுத்து வேலாயுதபிள்ளை அவர்கள் 06.04.2017 வியாழக்கிழமையன்று இறைபதம் அடைந்தார். அன்னார் பரமேஸ்வரியின் அன்புக் கணவரும் காலஞ்சென்றவர்களான வைரமுத்து சின்னாச்சி தம்பதிகளின் கனிஷ்ட புதல்வரும் காலஞ்சென்றவர்களான கிருஷ்ணர், சோதி தம்பதிகளின் அன்பு மருமகனும் உமாசங்கர் (ஆசிரியர்) சந்திரிக்கா (நோர்வே), லோகதாஸ் (லண்டன்), காலஞ்சென்ற ஶ்ரீதரின் பாசமிகு தந்தையும் காலஞ்சென்றவர்களான நடராசா, தங்கச்சியம்மா, இராசபூரணம் ஆகியோரின் பாசமிகு இளைய சகோதரரும் கெங்கேஸ்வரி, சர்வேஸ்வரி (பிரான்ஸ்), ஞானகுருநாதன் (பிரான்ஸ்) சண்முகநாதன் (பிரான்ஸ்) குகேஸ்வரி (கனடா), குகநாதன் (லண்டன்), சிவநாதன், காலஞ்சென்ற ரகுநாதன் ஆகியோரின் மைத்துனரும் சாந்தகுமார் (நோர்வே) கௌசலா, வித்தியாரூபி (லண்டன்) ஆகியோரின் அன்பு மாமனாரும் மைவிழி (நோர்வே), ஈழ நிலா (நோர்வே) நிதிலா (லண்டன்), சாம்பவி (பிஷப் கல்லூரி), அபிலாசா (பிஷப் கல்லூரி) அருண் (நோர்வே), நிவிதா (லண்டன்), கணியன் (லண்டன்) ஆகியோரின் பாசமிகு பேரனும் ஆவார். அன்னாரின் பூதவுடல் இல.07, பெயர்லைன் (Fairlinc) வீதி, தெகிவளை இல்லத்தில் 08.04.2017 முதல் அஞ்சலிக்காக வைக்கப்பட்டு, இறுதிக்கிரிகைகள் 10.04.2017 திங்கட்கிழமை காலை 1.00 மணிக்கு நடைபெற்று பின் தகனக்கிரிகைக்காக கல்கிசை இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இத்தகவலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளுமாறு கேட்டுக் கொள்ளப்படுகின்றர்கள்.

**தகவல்: வே. உமாசங்கர் (மகன்)**
**இல. 07, பெயர்லைன் வீதி, தெகிவளை.**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆக்கிரமிக்கும் அந்நியத் தாவரங்கள்

III

ராஜி ஞானேஸ்வரன்

யாழ்ப்பாணத்தில்கண்டல்என்றால், பொதுவாகத் தில்லை மரத்தைத் தான் மக்கள் அடையாளம் காட்டுவார்கள் , மேலும் அது நச்சுப் பால் மரம் என்று அதைப் பதுகாப்பதைத் தவிர்த்தாலும், அதை விறகுக்கு வெட்டுவதற்கு ஏனோ தயங்குவதில்லை. தில்லை எனும் இந்தக் கண்டல் மரம் பால் போன்ற நச்சுத் திரவத்தை வெளிவிடுவது உண்மையாயினும் மருத்துவ குணாங்கள் நிறைந்த அதன் பயன்கள் ஏராளம். யாழ்ப்பாணம் சரசாலையில் தில்லை அம்பலக் கோவிலைச் சுற்றிக் காணப்படுகின்ற இந்த மரங்களைத் தூத்துமகொத்தான் விட்டுவைக்கவில்லை.




காடுகளின் முக்கியத்துவம் பற்றிய விழிப்புணர்வு, நீர்ப்பாதுகாப்புக்கும் வளி மாசடைதலைத் தடுப்பதற்கும் மிக அவசியம். அதற்கு எமது இயற்கையிலுள்ள இயற்கை எதிரிகளைப் பற்றி நாம் அறிந்திருக்க வேண்டும்.



40 வருடங்களுக்கு முன்னர் இந்தக் கொடியை நம்மூர் தொடரூந்து நிலையங்களில் மாத்திரம் காணக்கூடியதாயிருந்தது. ஆனால் இன்று இது அதிக நிலங்களில் பரவிவிட்டது . அதற்குக் காரணம் அன்று மக்கள் நிலங்களை வெறுமையாக வைத்திருக்கவில்லை. போர் , இடப்பெயர்வு போன்றவற்றால் நிலங்களைக் கைவிட்டதால், எமது இயற்கைச் சூழல் நிலைகுலைய இது வேகமாகப் பரவிச் சகல இடங்களையும் ஆக்கிரமித்துவிட்டது. இப்போது பாதீனியம் களையை விட இதன் பரம்பல் தான் இங்கு அதிகமாயுள்ளது. பல இடங்களில் பனைமர உச்சிவரைக்கும்கூட இது வளர்ந்துள்ளது ஆனால் இது நேரடியான நச்சுத்தன்மை, நோய் போன்ற பாதிப்புக்களை மனிதருக்குத் தருவதில்லை. ஆனால் ஒருவித மூலிகை என்று இதனைச் சொல்லலாம். பலநாடுகளில் இதன் இலை மற்றும் தண்டுப்பகுதியும் வேர்க்கிழங்குகளும் உணவாகப் பயன்படுத்தப்பட்டு வருகின்றன. என்றாலும் கூட நம்மூரில் இதைக் கணக்கெடுப்பதில்லை.

ஆனால், இது எமக்கு மறைமுகமாக உருவாக்கும் பிரச்சினைகள் அதிகம். வேகமான வளர்ச்சியால் தரையை முற்றாக மூடி விடுவதால் ஏனைய தாவரப்பரம்பல் முற்றாகத் தடைப்படுகின்றது. இவை வித்துக்களாலும் , வேர்க்கிழங்குகளாலும் இனப்பெருக்கமடைவதாலும், வித்துக்கள் மிதக்கும் தன்மை கொண்டு நீரால் பரவக் கூடியவையாதலாலும் நிலங்களில் அதிகம் பரவுகின்றது.

ஒரு தரம் உங்கள் வேலியில் இதைப்பார்த்தால் அதை முற்றாக அகற்ற குறைந்தது இரண்டு வருடங்கள் ஆகலாம். இது தவிர, தேனீகள் எல்லாம் இந்தப் பூக்களை நாடிச் சென்று தமது உணவுத்தேவையைப் பூர்த்தி செய்வதால், எமது தோட்டத்தில் உள்ள காய்கறிச் செடிகள், பழமரங்கள் - குறிப்பாக மாமரங்களின் மகரந்தச் சேர்க்கை போதியளவு இல்லாமல் அவற்றின் விளைச்சல் குறையும். வடமாகாணத்தில் இதன் பரம்பல் மிக அதிகமாகக் காணப்படுகின்றது.





## கொடிரோஜா

இதன் பூர்வீகம் மெக்சிக்கோ என்றாலும் இன்று உலகின் எல்லாப் பகுதிகளிலும் பரவிக் காணப்பட்டு பல இடங்களில் அந்தந்தச் சூழலுடன் ஒன்றிப்போய் விட்ட ஓர் பூக்கும் கொடித் தாவரம், இது வேகமாக வளர்ந்து அழகிய இளஞ்சிவப்பு மற்றும் வெள்ளை நிறப் பூக்களைப் பூத்திருக்கும் .இது 1870ஆம் ஆண்டளவில் தாவரவியல் பூங்காவூடாக எமது நாட்டுக்குள் புகுந்திருந்தாலும், இது அழகுத்தாவரமாக இருந்தது அதன் பரம்பலுக்கு காரணமாகியிருந்தது.

## நாயுண்ணி

எல்லோருக்கும் பரிட்சயமானது. எங்கும் காணப்படுகின்றது. இதுகூட அந்நிய இனம்தான். மத்திய மற்றும் தென் அமெரிக்க நாடுகளை பூர்விகமாகக் கொண்ட இவை 1826ஆம் ஆண்டளவில் இங்கு வந்து இப்போது நாடு பூராகவும் பரந்துள்ளன . வறண்ட வலயத்தில் செழித்து வளர்ந்து அழகான பூக்களுடன் காணப்படும் இதனால் என்ன ஆபத்து என்கிறீர்களா? இதில் நச்சுத் தன்மை இல்லை. சமயத்துக்கு விறகாகவும் பயன்படுத்தலாம். ஆனால் இது வேகமாகப் பரவுவதும் உடனடியாக நிலங்களை அக்கிரமிப்பதுவும்தான் மிகப் பெரிய ஆபத்து.

அது எமது சுற்றாடலுக்கும் அதன் மூலம் எமக்கும். எமது தரைச்சூழல் உள்நாட்டு தாவரவகைகளுக்கானது, அவை அடைக்கலம் கொடுக்கும் விலங்கினங்களுக்கானது. ஆக்கிரமிக்கும் நாயுண்ணி போன்ற தாவரங்களால் தரைக்கு மேற்படரும் விதான அடுக்கில் காணப்படக்கூடிய இந்தச் செடிகளால் பற்றைகள், உயர வளரும் மரங்களின் இளம் செடிகள் என்பன வளரவோ நிலை கொள்ளவோ முடியாமலோ போய்விடும். காலப்போக்கில், பெரிய மரங்கள் இல்லாது நாயுண்ணிப் பற்றைகளே காணப்படும்.



அப்போது விலங்கினங்கள் தமது வாழிடம் அற்றுப்போவதால் இடம்பெயரும் அல்லது அழிந்து போகும். உடவளவ தேசிய வனப்பூங்காவில் யானைகளின் வாழிடம் இவ்வாறு பறிக்கப்பட்டதால் தான் அவை மக்கள் குடியிருப்புக்களை நோக்கிச் சென்று மக்களுக்குப் பிரச்சினையாகின. ஒருவகையில் இதனால் விலங்குகள் அநியாயமாகக் கொல்லப்படுகின்றன. இப்பொழுது கூறுங்கள் இந்தச் செடி ஆபத்தானதா ? இல்லையா ?

இவ்வாறு இன்னும் பல தாவர இனங்கள் அந்நியனாக உட்புகுந்து எமது அசன்டையீனத்தால் எமது நிலங்களை ஆக்கிரமித்து உள்நாட்டு உயிர்ப்பல்வகைமைக்குப் பாதிப்பை ஏற்படுத்தி அவற்றின் இருப்பையே கேள்விகுறியாக்கி விட்டிருக்கின்றன. இவற்றில் இருந்து எமது நாட்டையும் எம்மையும் காப்பாற்ற வேண்டுமானால் இது பற்றிய அறிவு அனைவருக்கும் இருக்கவேண்டியது அவசியம்.


இது போன்ற அந்நியத் தாவரங்களையும் அதன் பாதிப்புக்களையும் பாடசாலைகளிலும் பல்கலைக்கழகங்களிலும் கற்றுக் கொடுத்தால் மட்டும் போதாது ஏனென்றால் பெரும்பாலான மாணவர்கள் அதிகூடிய புள்ளிகளைப் பெறக்கூடிய இலகுமுறை எதுவென்றே யோசிக்கின்றர்கள் . பெற்றோர்களும் அவ்வாறே. அவர்கள் கனவு மருத்துவ, பொறியியல் பீட நுழைவுகள் என்பது மாத்திரமாகவே அமைந்திருக்கின்றது. பிள்ளைகள் வேறு கனவுகளைக் காணவும் பெற்றோர் அனுமதிப்பதில்லை. உலகத்தில் என்ன நடக்கின்றது என்பதைக்கூட பொது அறிவுப் பாடத்தில் புள்ளி எடுக்க வேண்டும் என்பதற்காகவே அவர்கள் படித்துப் பின்னர் மறப்பதே பெரும்பாலும் நடக்கின்றது. இயற்கை பற்றிய புரிதல் அவர்களுக்கு இருப்பதில்லை. மாணவர்கள், பெற்றோர்கள், ஆசிரியர்கள், சாதாரண மக்கள் என நம் அனைவரும் இத்தகைய இயற்கை பற்றிய அறிவை நம்முள் வளர்த்துக்கொள்ள வேண்டும்.

மருத்துவர், பொறியியலாளர், கணக்காளர், வங்கி முகாமையாளர் என எல்லோரும் இந்தச் சுற்றடலின் ஓர் அங்கமே என்பதை நாம் அனைவரும் சிந்திக்க வேண்டும். நாம் வாழும் சூழலைப்பற்றி நாம் அனைவரும் அறிந்திருக்க வேண்டும். அந்நியத் தாவர, விலங்கினங்களைப் பற்றிய எனது இந்தச் சிறிய தொடரின் மூலம், எமக்கு முன்னே விரிந்திருக்கும் ஓர் பொரிய பிரச்சினையைப் பத்திரிகை வாயிலாக உங்கள் வீடுவரை வந்து விழிப்புணர்வூட்டும் ஓர் ஆரம்பமாகவே கொடுத்திருக்கின்றேன். இதைப்பற்றி உங்கள் அயலவர்களுக்கும் உறவுகளுக்கும் நண்பர்களுக்கும் தெளிவுபடுத்தி எமது சூழலைப் பாதுகாப்பது எமது அனைவரதும் கடமை எனக் கொள்வோம்.

*கட்டுரையாளர்*
*முதுநிலை விரிவுரையாளர்,*
*விலங்கியல் துறை, யாழ் . பல்கலைக்கழகம்.*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பாகிஸ்தானின் தடுப்புச் சுவர் இனி இல்லை




பன்னாட்டுகிரிக்கெட் அரங்கில் இருந்து விடைபெறுகிறார்பாகிஸ்தான்கிரிக்கெட்டில் முடிசூடா மன்னனாக விளங்கிய மிஸ்பா உல் ஹக்.
பாகிஸ்தான் அணி மேற்கிந்தியத் தீவுகளுக்குச் சுற்றுப் பயணம் செய்துள்ளது. இந்த இரு அணிகளுக்கும் இடையிலான மூன்று ஆட்டங்களைக்கொண்ட டெஸ்ட்தொடர் எதிர்வரும்21ஆம்திகதிஆரம்பித்துஅடுத்தமாதம்14ஆம்திகதிமுடிவடையவுள்ளது. இந்தத் தொடரே மிஸ்பாவின் இறுதி டெஸ்ட் தொடராகும்.
மிஸ்பா, கடந்த இரு வருடங்களின் முன்னரேயே ஓய்வுபெறத் திட்டமிட்டார். ஆனால் அனுபவவீரர்கள் இல்லாமல்திணறிக்கொண்டிருந்தபாகிஸ்தான்அணியைவழிநடத்திச் செல்ல தகுதியான வீரரொருவர் இல்லாத காரணத்தால் மிஸ்பாவை அணியில் தொடரு மாறு பாகிஸ்தான் கிரிக்கெட் சபை கேட்டுக் கொண்டது. பாகிஸ்தான் கிரிக்கெட் சபையின் தலைவர் சகாரியர் கான் தனிப்பட்ட ரீதியில் வைத்த கோரிக்கைகளை அடுத்து அணியில் தொடர முடிவெடுத்தார் மிஸ்பா. 2009 ஆம் ஆண்டு இலங்கை அணிமீது பாகிஸ்தானில் நடத்தப்பட்ட தாக்குதலின் பின்னர் வேறெந்த அணியும் அங்கு சுற்றுப்பயணம் செய்வதில்லை. இதனால்தனது அத்தனை ஆட்டங்களையும்சொந்தமண்ணுக்குவெளி யாலேயே பாகிஸ்தான் எதிர்கொண்டு வருகிறது. சொந்த மண் பலமின்றி பாகிஸ்தான் கிரிக்கெட் அணியைபன்னாட்டுத்தரப்படுத்தலில் முதலிடத்துக்கு இட்டுச்சென்றபெருமை மிஸ்பாவையே சாரும்.
பாகிஸ்தான்அணிபலமுறைதோல்வியின்பிடியில்சிக்கித்தவித்தபோதிலும்ஓர்முனையில் தனியாளாக நின்று அணியை மீட்டெடுப்பதில் மிஸ்பா வல்லவராக இருந்தார். இதனால் பாகிஸ்தான் கிரிக்கெட்டின் தடுப்புச் சுவர் என்று அவரை அழைத்தனர். அவ்வாறான ஓர் ஜாம்பவான் தனது ஓய்வு முடிவை அறிவித்தி ருப்பது பாகிஸ்தான் கிரிக்கெட்டுக்கு மட்டுமல்லாமல் உலகக்கிரிக்கெட்டுக்கும்பெரும் இழப்பே. மிஸ்பாவின் ஓய்வை அடுத்து. சர்பராஸ்அகமட்டெஸ்ட்அணியின்தலைவராகஅதிகவாய்ப்புள்ளதுஎன்றுகருதப்படுகிறது.

பிரகாஸ்






## கோக்லியுடன் பகையில்லை

கோக்லியுடன் பகையில்லை நாங்கள் இன்னும் நண்பர்கள்தான் என்று ஹைதராபாத் அணிக்குதலைமைதாங்கிவழிநடத்தும்வோர்ணர்தெரிவித்தார். ஆஸ்திரேலியா அணி இந்தியாவுக்குச் சுற்றுப்பயணம் மேற்கொண்டு 4 ஆட்டங்கள் கொண்ட டெஸ்ட் தொடரில் விளையாடியது. 2:1 என்ற கணக்கில் இந்தியா வென்றது. வழக்கம் போல இரு அணிகளுக்குள்ளேயும் ஏகப்பட்ட வார்த்தை மோதல்கள் ஏற்பட்டன. இதனால் தொடர் முடிந்த பிற்பாடு உரையாற்றுகையில் ஆஸ்திரேலிய வீரர்கள் நண்பர்கள் இல்லை. அவர்களைஎனதுநட்புப்பட்டியலில்இருந்துநீக்கியுள்ளேன்என்றுகோக்லிதெரிவித்தார். இதுபெரும்அதிர்வலைகளை ஏற்படுத்தியது. நிலைமை இவ்வாறிருக்க கோக்லியும் தானும் இன்னும் நல்ல நண்பர்களே என்று வோர்ணர் தெரிவித்தார். நடப்பு வருட ஐ.பி.எல். தொடரின் முதலாவது ஆட்டத்தில் பெங்களூர் ஹைதராபாத் அணிகள் மோதின. இந்த ஆட்டத்துக்கு முன்னர் சில நிமிடங்கள் வோர்ணரும் கோக்லியும் உரையாடியுள்ளனர். இந்த உரையாடல் மிகவும் ஆரோக்கிய மானதாக இருந்தது என்றும் வோர் ணர் சுட்டிக்காட்டினார்.

## தொடரும் அதிரடி

அடுத்த ஆட்டங்களிலும் அதிரடி தொடரும் என்றுஹைதராபாத்அணியின்நட்சத்திர வீரர் யுவராஜ்தெரிவித்தார்.
நடப்பு வருட ஐ.பி.எல். தொடரில் கடந்த 5 ஆம் திகதிபுதன்கிழமைநடைபெற்றமுதலாவது ஆட் டத்தில்பெங்களூரைவீழ்த்தியதுஹைதராபாத். இந்த ஆட்டத்தில் ஹைதராபாத் வீரர் யுவராஜ் அரைச்சதம் கடந்தார். 27 பந்துகளில் 3 சிக்சர்க ளுடன் 67 ஓட்டங்கள் குவித்த அவர் ஆட்டநாயக னாகவும் தெரிவானார். இனிவரும் ஆட்டங்களி லும்அதிரடிதொடரும்என்றுஅவர்தெரிவித்துள்ளார். இன்றுமாலை 4 மணிக்கு இடம்பெறும்ஆட்டத்தில் குஜராத்தைஎதிர்க்கிறதுஹைதராபாத். பார்க்கலாம் யுவராஜ் என்னவெல்லாம் செய்யப்போகிறார் என்று.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org





இலங்கைவங்கி ஊர்காவற்றுறைக் கிளையில் 2ஆம் மாடியில் புதிதாக அமைக்கப்பட்ட சீபாங் றெஸ்ட் விடுமுறை விடுதி இலங்கை வங்கி வடமாகாண உதவிப்பொது முகாமையாளர் எம்.ஜே.பிரபாகரனால் அண்மையில் வைபவரீதியாகத் திறந்து வைக்கப்பட்டது. (ஐ)







வட்டுக்கோட்டை தெக்கணப்பாய் அருள்மிகு கண்ணலிங்கேஸ்வரர் மற்றும் கண்ணகியம்மன் ஆலயங்களின் மகா சிவராத்திரி விழாவின் போது ஆலய அறநெறிப் பாடசாலை மாணவர்களின் கலை நிகழ்வுகளின் சில காட்சிகள்.







விலங்குகள் நலன்புரி நம்பிக்கை நிதியத்தின் தலைவி திருமதி ஜராங்கனி டிசில்வா யாழ்ப்பாணத்துக்கு வருகை தந்திருந்த போது தொண்டமனாறு சந்நிதியான் ஆச்சிரமத்துக்கச் சென்றிருந்தார். ஆச்சிரமத்தில் கரவெட்டி பிரதேசசபை ஆயுள்வேத வைத்திய அதிகாரி திருமதி கமலரஞ்சினி அவருக்கு மாலை சூடி வரவேற்றார். ஆச்சிரம பொறுப்பாளர் செ. மோகனதாஸ் சுவாமிகளுடன் தொழிநுட்பப் பயிற்சி நிலையங்களின் தலைமையகப் பணிப்பாளர் கலாநிதி ந.யோகராசா, சைவப்புலவர் திருமதி சசிரேகா ஆகியோரும் அவரை வரவேற்றனர். (ஐ-173)




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org





பளை இயக்கச்சி மல்வில் கிருஷ்ணன் ஆலயத்தில் மகா சிவராத்திரி தின அறநெறிச் சமூக விழா அண்மையில் இடம்பெற்றது. பளை வேம்பொடுகேணி சீ.சீ.த.க.பாடசாலை அதிபர் க.சண்முகதாஸ் தலைமையில் நடைபெற்ற நிகழ்வில் அறநெறிப் பாடசாலைகளுக்கிடையிலான போட்டிகளில் கூடிய புள்ளிகள் பெற்ற பாடசாலைகளுக்கு சிறப்பு விருதுகள் வழங்கப்பட்டன. போட்டிகளில் வெற்றி பெற்ற மாணவர்களுக்கு பரிசில்களும் சான்றிதழ்களும் வழங்கப்பட்டதுடன்,மரக்கன்றுகளும் வழங்கி வைக்கப்பட்டன. அத்துடன் ஆலயத்துக்குச் சேவையாற்றியவர்களும் கௌரவிக்கப்பட்டனர். (ஜ9)





புன்னாலைக்கட்டுவன், ஈவினை அ.த.க பாடசாலையின் இல்ல மெய்வன்மைப் போட்டி அண்மையில் பாடசாலை அதிபர் தலைமையில் பாடசாலை மைதானத்தில் இடம்பெற்றது. நிகழ்வின் முதன்மை விருந்தினராக வடமாகாண சபை உறுப்பினர் பா.கஜதீபன் கலந்து கொண்டு வெற்றிபெற்ற மாணவர்களுக்கு பரிசில்களை வழங்கி வைத்தார். (ஜ)



வடக்கு மாகாண கல்வி அமைச்சின் மாகாண குறித்தொதுக்கப்பட்ட 60 இலட்ச ரூபா நிதியில் அமைக்கப்பட்ட வேலணை செட்டிபுலம் அரசினர் தமிழ்க் கலவன் பாடசாலையின் கட்டடத்தொகுதியை வடக்கு மாகாண சபை உறுப்பினர் விந்தன் கனகரத்தினம் அண்மையில் திறந்து வைத்தார். (ஜ)







வவுனியா தமிழ் மத்திய மகாவித்தியாலயத்தின் ஆரம்பப்பிரிவு மாணவர்களின் விளையாட்டு நிகழ்வு அதிபர் த. அமிர்தலிங்கம் தலைமையில் அண்மையில் இடம் பெற்றது. இந்த நிகழ்வில் பிரதம விருந்தினராக வவுனியா தெற்கு கல்வி வலய பொறியியலாளர் எஸ். மயூரன், மற்றும் ஆரம்பப்பிரிவு பாடசாலையின் அதிபர். எஸ்.ஸ்ரீறங்கநாதன் ஆகியோர் கலந்து கொண்டதுடன் ஆரம்பப்பிரிவு மாணவர்களின் விளையாட்டு செயற்பாடுகள் இடம்பெற்றதுடன் மாணவர்களுக்கு சான்றிதழ்களும் வழங்கி வைக்கப்பட்டன. (ஜ)

ஒட்டுசுட்டான் பிரதேச செயலர் பிரிவுக்கு உட்பட்ட பெரியஇத்திமடு கிராமத்து மக்களின் கோரிக்கைக்கு அமைய பெரிய இத்திமடு அ.த.க பாடசாலைக் குரிய நிரந்தரக் கட்டடம் அமைக்கப்பட்டது. வன்னி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் திருமதி சாந்தி சிறிஸ்கந்தராசா முதன்மை விருந்தினராக கலந்து கொண்டு புதிய பாடசாலைக் கட்டடத்தை வைபவ ரீதியாக திறந்து வைத்தார். (ஜ)





கொக்குவில் ஸ்தான சி.சி.த.க. பாடசாலையின் செயற்பட்டு மகிழ்வோம் திறனாய்வுப் போட்டிகள் பாடசாலையின் அதிபர் திருமதி புஸ்பராஜா தலைமையில் பரிசுத்த திருத்துவ தேவாலய மைதானத்தில் அண்மையில் இடம்பெற்றது. இதில் முதன்மை விருந்தினராக வடக்கு மாகாண சபை உறுப்பினர் விந்தன் கனகரத்தினமும், சிறப்பு விருந்தினராக நல்லூர் கோட்டக்கல்விப் பணிப்பாளர் எப்.எக்ஸ் அன்ரனும், கௌரவ விருந்தினராக யாழ் வலய ஆரம்பக் கல்வி விளையாட்டு செயற்றிட்ட இணைப்பாளர் சி.சிவகாந்தியும் கலந்து கொண்டனர். (ஜ)



மன்னார் மாவட்டத்தில் வறிய மாணவர்களின் கல்விச் செயற்பாடுகளை ஊக்குவிக்கும் செயற்றிட்டத்தின் அடிப்படையில் நான்கு பேருக்கான சைக்கிள்களை அமைச்சர் பா.டெனிஸ்வரன் தனது 2016 ஆம் ஆண்டுக்கான பிரமாண அடிப்படையிலான மூலதன நன்கொடை நிதியிலிருந்து வழங்கி வைத்தார். (ஜ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




# மீன்கள்...!

## பல வண்ணங்கள் சூடிய அழகியலின் அழகுராணிகள்

பூக்களின் உலகம் அழகானது. பட்டாம் பூச்சிகளின் அழகு விந்தையானது. பறவைகளும் கவர்ச்சியானவை. இந்த வரிசையில் மீன்களின் உலகமும் அலாதியானது. பவளப்புற்றுப் பகுதி களில் கடற்பாசிகள் அழகு கூட்டுகின்றன. பலவண்ண மீன்கள் அணியணியாய் பவளப்புற்றுகளினூடே துடுப்பசைத்து நீந்திச் செல்கையில் உலகின் வனப்புமிகுந்த ரோஜாத் தோட்டம் நகர்வது போன்ற உணர்வை ஏற்படுத்துகின்றன. கடலின் சூழமைவு என்பதும் அற்புதமானது. மீன்களின் உலகத்தில் சிறுபயணம் போதல் என்பதும் அழகானது. போகலாம் வாருங்கள்.



பரிணாமத்தின்போது இயற்கையும்முறையாவது இறக்கைகளை பிறப்பித்திருக்கிறது. பூச்சிகள் முதன்முதலில் இறக்கையுடன் பறக்கத் துவங்கின. பல லட்சம் வருடங்களுக்குப் பிறகுதான் பறவைகள் தோன்றின. இறகுகள் பறவைகளுக்கே உரியவை.

அந்தவகையிலே மீன்களின் துடுப்பும் பறவைகளின் இறக்கையும் மனிதனின் கைகளும் அடிப்படையில் ஒரே மாதிரியானவை. இயற்கைச் சிற்பி வடிவமைத்த அற்புத உறுப்புகள்! மீன்களின் உடலை மூடிப் பொதித்து பாதுகாக்கச் செதில்கள் உள்ளன. மீன் என்றால் என்ன? அடிப்ப டையில் மீன் நீர்வாழ் உயிரினம். உயிரியல் அடிப்படையில் வரையறுத்துச் சொல்வதானால் செதில்களால் மூடப்பெற்று செளவ்வுகளால் மூச்சுவிடக்கூடிய துடுப்புக்கொண்ட, நீர்வாழ் குளிர் இரத்த முதுகெலும்பி.

வணிக நோக்கில் நீர்நிலைகளிலிருந்து கிடைக்கப்பெறும் எல்லா விலங்கு உயிரினங்களையும் மீன் என்கிறார்கள். இறால், நண்டு போன்றவை கணுக்காலிகள். கணவாய் மெல்லுடலி கடல் அட்டை முட்தோலி ஆமைகள் ஊர்வன. டொல்பின், திமிங்கிலம் போன்றவை பாலூட்டிகள் (குட்டிகளை ஈன்று தரும்). நுரையீரலால் காற்றைச் சுவா சிப்பவை. எத்தனை ஆழத்தில் நீந்தினாலும் உயிர்க்காற்றைப் பெற நீர்ப் பரப்புக்கு மேல் அவ்வப்போது தலைகாட்டியாக வேண்டும்...!

மீன்கள் பல நூறுவகைப்பட்டவை. வடிவிலும் அளவிலும் உணவு முறையிலும் மாறுபட்டவை. லாம்ப்ரே போன்ற மீன்கள் தாடையில்லாதவை. உணவைக் கவ்விக் கடித்து மென்று அரைத்து உண்ணத் தாடையும் பற்களும் தேவை. வேட்டையாடும் விலங்குகளைப் பொறுத்தவரை தாடைகள் என்பவை அசையும் சொத்து.

சுறா, திருக்கை இனங்கள் குருத்தெலும்பிகள். சில மீன்கள் செதிலற்றவை. உலகில் 29 ஆயிரத்து 400 மீனினங்கள் இது வரையாக அடையாளம் காணப்பட்டுள்ளன. ஏராளம் மீன்களை இனித்தான் அடையாளப்படுத்த வேண்டும். உலகின் மொத்த நீர்ப்ப ரப்பில் 0.01 வீதம்தான் (ஆயிரத்தில் ஒருபகுதி) நன்னீர். ஆனால் மீனினங்களில் 40 வீதம் இங்குதான் வாழ்கின்றன.

குறிப்பாக இந்தியாவில் வாழும் 2ஆயிரத்து 500 மீனினங்களில் 930 இனங்கள் நதிகள், ஏரி, குளங்களில் வாழ்பவை. இவற்றில் 350 இனங்கள் வணிக முக்கி யத்துவம் வாய்ந்தவை என தெரியவருகிறது.

சாதாரண மீன்கள் ஒலி எழுப்புவதில்லை. சையானிடே குடும்பத்தைச் சார்ந்த மத்தள மீன் ஒலி எழுப்பும். மீன்களின் கேள்வித் திறன் இனத்துக்கு இனம் மாறுபடுகிறது. நீச்சல்ப் பைகள் (காற்றுப் பைகள்) சில இனங்களில் கேள்விப் புலனுக்கு உதவுகின்றன. கடலின் ஆழத்தில் 700 மீற்ற ருக்கு கீழான பகுதி யில் வெளிச்சம் முற்றாக இல்லாது போகும். இங்கு வாழும் பெருமளவு மீன்களும் ஒலி உமிழும் சக்தியை கொண் டுள்ளன.







Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அருள்திரு ரூபன் மரியாம்பிள்ளை

# யாழ். ஆயரின் பயணத்தின் பின்னர் யாழ்ப்பாணப் பட்டினத்து புதுமை மாதாவால் புதுமை நடந்ததா?

கடந்த மூன்று வாரங்களாக உதயன் பத்திரிகையின் கத்தோலிக்க பகுதியில் வெளிவந்த புதுமை மாதா சொரூபத்தை கோவாவில் வைத்து யாழ்ப்பாணப் பட்டினத்து புதுமை மாதா என விழாக் கொண்டாடுகின்றனர் என்ற ஆக்கமும், புதுமைமாதா சொரூபம் கோவா நகரில் இருந்து யாழ். மறைமாவட்டத்துக்கு கொண்டு வரப்படுமா? என்ற ஆக்கமும், கோவா நகரில் புதுமை மழை பொழியும் புதுமை மாதா சொரூபத்தை யாழ். மறைமாவட்டத்துக்கு கொண்டு வாருங்கள் என்ற ஆக்கமும் அவற்றோடு இணைக்கப்பட்ட யாழ். ஆயர் மேதகு கலாநிதி ஜஸ்ரின் பேணாட் ஞானப்பிரகாசம் ஆண்டகை யாழ். புதுமைமாதா சொரூபத்தை அரவணைத்து எடுத்துக்கொண்ட படமும் யாழ். கத்தோலிக்க மக்களைத் தொடர்ந்து பரபரப்பாக்கியுள்ளன.

**புதுமை நடந்ததா?**

இந்த விடயம் தொடர்பாக யாழ். ஆயர் கலாநிதி ஜஸ்ரின் பேணாட் ஞாப்பிரகாசம் ஆண்டகையை நேரில் சந்தித்தபோது, அவர் தெரிவித்த விடயங்கள் வியப்பாக இருந்தன. ஆர்வமும் அதிசயமும் ஊட்டுவனவாகவும் இருந்தன.

இந்தியா நோக்கிய தனது பயணம் முக்கியமாகக் கோவா நகரில் புதுமை மழை பொழியும் புதுமைமாதா சொரூபம் பற்றி அறிவதற்கானதுதான் என்று அவர் தெரிவித்தார். அத்தோடுகூட இவ்வாண்டு புனித யோசவ்வாஸ் ஆண்டு என்கின்ற வகையில் அவர் பற்றிய விடயங்களைத் திரட்டுவதும் மற்றொரு நோக்கம் என்றார் அவர்.

உண்மையில் ஒருவர் விமானப் பயணச் சீட்டு எல்லாம் எடுத்துத் தந்து புதுமை மாதாவைப் போய்ப் பார்த்து வரும்படி வேண்டினார். அன்னையின் மீது மிகுந்த அன்பு கொண்ட நான் புறப்பட்டேன். கோவா உயர் மறைமாவட்ட பேராயர் பிலிப் நேரி, நான் இந்தியா புனே நகரில் குருத்துவக் கல்வி கற்றபோது அங்கு கற்று வந்தவர். அவரின் செயலர் இலோயலா அடிகளாரும் அங்கே சமகாலத்தில் கல்வி கற்றவர்தான். நான் அங்கே சென்று திருப்பலி ஒப்புக் கொடுத்த பின்னர் அங்கிருந்த குருவானவர், திருப்பலியின் முன்னர் காணவில்லை என்று தேடப்பட்ட புதுமை மாதா கூட்டுத் திறப்புக் கிடைத்ததாக மகிழ்ச்சியோடு கொண்டு வந்தார்.

நான் மிகுந்த மகிழ்ச்சிடன் கூட்டை திறந்து மாதாவை வெளியே எடுத்து அன்புடன் முத்தி செய்து கரங்களில் ஏந்திப் படம் எடுத்த பின்னர் மாதாவை உள்ளே வைத்துப் பூட்டியபோது பூட்ட முடியவில்லை. நானும் பின்னர் செயலர் இலோயலா அடிகளாரும் பேராயர் பிலிப் நேரி அவர்களும் 15 நிமிடங்களாக மாறி மாறி முயற்சித்தும் முடியவில்லை.

செயலர் இலோயலா அடிகளார், "மாதா உங்களுடன் வரப்போகிறா போல் தெரிகிறது" என்றார். "தாருங்கள் நான் மாதாவைக் கொண்டு செல்கிறேன்" என்றேன். "இதுவும் அன்னையின் ஒரு புதுமை. இது ஏதோ ஒரு விடயத்தை காட்டுகிறது என்றே எண்ணுகிறேன்" என்றார்.

**யாழ். கோட்டை வெற்றிமாதா ஆலயத்தில் இருந்த புதுமைமாதா சொரூபத்துக்கு நடந்தது என்ன?**

400 ஆண்டுகளுக்கு முனனர் யாழ்ப்பாணம், போர்த்துக்கீசரின் ஆட்சியில் இருந்த காலத்தில் யாழ். கோட்டை வெற்றி மாதா ஆலயத்தில் இருந்த புதுமை மாதா சொரூபம் ஒல்லாந்தர் யாழ்ப்பாணத்தை கைப்பற்றி கொடியேற்றிய பின்னர் போர்த்துக்கீசரிடமிருந்து 1661ஆம் ஆண்டு நவம்பர் மாதம் 16ஆம் திகதி இந்தியா கோவாவில் உள்ள தூய பிரான்சிஸ் அசிசியாரின் கன்னியர் மடத்துக்கு கொண்டு செல்லப்பட்டது.

இன்று கோவா மாநிலத்தில் உள்ள பநெலிம் என்ற நகரில் தூய பேதுருவானவர் ஆலயத்தில் வைக்கப்பட்டு யாழ்ப்பாணப் பட்டினத்து புதுமை மாதா என



கோவா மக்கள் சிறப்பாக வழிபட்டு ஒவ்வொரு ஆண்டும் மே மாதத்தில் வரும் முதல் ஞாயிற்றுக்கிழமையில் புதுமை மாதாவின் பெருவிழாவைக் கொண்டாடி வருகின்றார்கள். அன்னையின் புதுமை மழையில் பக்தர்கள் நனைகின்றனர். 9 நாள்கள் நவநாள் வைத்துக் கொண்டாடப்படும் ஆலயத்துக்கு அன்னையின் சொரூபம் தூய பேதுருவானவர் ஆலயத்தில் இருந்து ஒவ்வொர் நாளும் கொண்டு செல்லப்பட்டு ஒவ்வொர் நாளும் திரும்ப கொண்டு வரப்படுவதாக யாழ். ஆயர் ஜஸ்ரின் பேணாட் ஞாப்பிரகாசம் தெரிவிக்கிறார்.

**தொடர்பு கொண்ட பலர்**

கனடாவில் இருந்து அன்ரன் பிலிப் சின்னராசா அவர்களும், சுரேன் இராஜன் அவர்களும் திரும்பவும் தொடர்புகொண்டு பல புதிய ஆவணங்களை அனுப்பி வைத்துள்ளனர்.

மெசெஞ்சர் என்கின்ற கொழும்பு ஆங்கில கத்தோலிக்க பத்திரிகை தனது 2012ஆம் ஆண்டு மே 13ஆம் திகதிய பதிப்பில் பக்கம் 7 இல் இந்தப் புதுமையின் சொரூபம் எங்கே என்னும் தலைப்பில் ஒரு பக்க நீண்ட கட்டுரையை வெளியிட்டுள்ளது என்ற தகவலை அன்ரன் பிலிப் சின்னராசா கனடாவில் இருந்து அந்த பத்திரிகையுடன் அனுப்பி வைத்திருந்தார். கனடாவில் இருந்து சுரேன் இராஜனும் கோவிலில் இருந்த மணி பற்றிய தகவலைத் தந்திருந்தார். யாழ். ஆயர் அவர்களும் மணி தொடர்பான தகவலைத் தந்துள்ளார். அவை பற்றிப் பின்னர் நோக்குவோம்.



**புதுமை மாதாவை தரிசித்து வழிபட ஒரு குறிப்பிட்ட நாள்களுக்காவது எமது மண்ணிற்கு எடுத்து வரமாட்டார்களா?**

எமது நாட்டிலுள்ள தமிழ் கத்தோலிக்க கிறிஸ்தவ மக்களும் எமது நாட்டிலிருந்து புலம்பெயர்ந்து வெளிநாடுகளில் வாழும் தமிழ்க் கத்தோலிக்க கிறிஸ்தவ மக்களும் இன்று ஆவலுடன் எதிர்பார்த்திருப்பது. இந்தியாவின் கோவா மறைமாவட்டத்தில் கிட்டத்தட்ட நானூறு வருடங்களாக வைக்கப்பட்டிருக்கும் புதுமை மாதா சொரூபம் எப்போது எமது யாழ். மறைமாவட்டத்துக்கு எடுத்துவரப்படும்? என்பதேயாகும்.

> எமது நாட்டிலுள்ள தமிழ்க் கத்தோலிக்க கிறிஸ்தவ மக்களும் எமது நாட்டிலிருந்து புலம்பெயர்ந்து வெளிநாடுகளில் வாழும் தமிழ்க் கத்தோலிக்க கிறிஸ்தவ மக்களும் இன்று ஆவலுடன் எதிர்பார்த்திருப்பது, இந்தியாவின் கோவா மறைமாவட்டத்தில் நானூறு வருடங்களாக வைக்கப்பட்டிருக்கும் புதுமை மாதா சொரூபம் எப்போது எமது யாழ். மறைமாவட்டத்துக்கு எடுத்து வரப்படும்? என்பதேயாகும்.

இன்று எமது தமிழ்க் கத்தோலிக்க கிறிஸ்தவ மக்கள் கூறும் கருத்துப் பகிர்வை நோக்குகின்றபோது, எத்தனையோ புனிதர்களுடைய திருப்பண்டங்கள் உலக நாடுகளுக்கு எடுத்துச் செல்லப்பட்டு மக்கள் வழிபாட்டுக்கு வைக்கப்படுகின்றன. புனித அந்தோனியாரின் திருப்பண்டம்கூட எமது மறை மாவட்டத்துக்கு எடுத்துவரப்பட்டது. அதுபோன்று கோவாவிலுள்ள புதுமை மாதா சொரூபத்தை நாம் நிரந்தரமாக வைத்திருக்க அனுமதி தரா விட்டாலும், ஒரு குறிப்பிட்ட நாள்களுக்காவது நாம் அந்தப் புதுமை மாதாவைத் தரிசித்து வழிபட எமது மண்ணிற்கு புதுமை மாதா சொரூபத்தை எடுத்து வரமாட்டார்களா? என்ற ஏக்கமும் எதிர்பார்ப்பும் மேலோங்கியுள்ளது என்கிறார் குருநகர் அருட்தந்தை க.அருள்நேசன்.



குருநகர் பங்குத்தந்தை எம்.வி.இ.இரவிச்ந்திரன் அடிகளாரின் கருத்தை பெற்றுள்ளோம். அதைவிட குருநகர் 5ஆம் குறுக்குத் தெரு எசப்பியூஸ் டெஸ்மன் புதுமை மாதா கோவில் கிழக்கு வீதியைச் சேர்ந்த செ. மைக்கல் அஞ்சலோ போன்ற பலரின் மடல்களையும் கருத்துக்களையும் பெற்றுள்ளோம். தொடர்ந்து நோக்குவோம். வெள்ளப்பெருக்கு பற்றிய கடந்த வாரக் கட்டுரையின் தொடர்ச்சியை ஆவலுடன் பாருங்கள் அடுத்த வாரம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கூட்டு...

'ஐ.நா.வில் இரண்டு வருட கால அவகாசம் வழங்கிய ஓரிரு நாள்களுக்குள்ளேயே, இலங்கையில் போர்க்குற்றங்கள் நிகழவில்லையென்றும், போர்க்குற்ற விசாரணைக்குக் கலப்பு நீதிமன்றம் அமைக்கப்படாது எனவும், கூட்டு அரசு தெரிவித்துள்ளது. இதற்கு எதிராகக் கூட்டமைப்பு எப்படியான நடவடிக்கைகளை முன்னெடுக்கப் போகின்றது' என்று எழுப்பிய கேள்விக்குப் பதிலளித்த நாடாளுமன்ற உறுப்பினர்,

அரசு கூறும் கருத்துக்களால் அரசைக் கவிழ்த்துவிடத் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு முயற்சிக்காது. எமக்குப் பன்னாட்டுப் பலம் தேவை. மாற்றுப் பக்கத்தையும் பற்றிச் சிந்திக்க வேண்டும். கலப்பு நீதிமன்றத்தின் ஊடாக விசாரணைகள் முன்னெடுக்கப்படுவது பன்னாட்டுச் சமூகத்தின் பொறுப்பு. கலப்பு நீதிமன்றப் பொறிமுறையைத்தான் திரும்பத் திரும்பப் பன்னாட்டுச் சமூகம் வலியுறுத்தியுள்ளது.

இந்த விடயம் தொடர்பில் அரசின் கருத்துக்குத் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு தனித்து நின்று செயற்படுவதற்கான பலம் போதுமானதாக இல்லை. நாங்கள் பன்னாட்டுச் சமூகத்தின் பலத்தைப் பயன்படுத்தித்தான் இலங்கை அரசு மீது கடுமையான நடவடிக்கைகளை எடுக்க முடியும். இதற்கான பொறுப்பு ஐ.நா. விடம்தான் உள்ளது.

பன்னாட்டுச் சமூகத்தின் இராஜதந்திரத்திற்கு எதிராகச் செயற்பட கூட்டமைப்பு விரும்பவில்லை. பிரேரணையை முழுமையாக இலங்கை நிறைவேற்றாதபோது அல்லது பன்னாட்டுச் சமூகம் ஏமாற்றப்படுகின்றபோது, நாங்கள் அரசை எதிர்த்து நிற்கின்ற சந்தர்ப்பம் ஏற்படும். அப்போது மாற்றுத் திட்டங்களைப் பற்றிச் சிந்திக்கலாம் - என்றார். (த-5)

## 2016இல்...

தெரிவிக்கப்பட்டுள்ளது. வடக்கு மாகாணத்தின் ஒவ்வொரு மாவட்டங்களிலும், 2016 ஆம் ஆண்டு ஜனவரி மாதம் முதலாம் திகதி தொடக்கம், டிசெம்பர் மாதம் 31 ஆம் திகதி வரையிலான காலப் பகுதியில் பதிவு செய்யப்பட்ட பாலியல் துர்நடத்தை, குடும்ப வன்முறை, உளத் துர்நடத்தை, தற்கொலை, தற்கொலை முயற்சி, கடத்தல், காணாமற் போதல்கள், கைவிடப்பட்ட சிறுவர்கள் விவரங்களைத் தருமாறு வடக்கு மாகாண சிறுவர் நன்னடத்தைத் திணைக்களத்திடம், தகவல் அறியும் உரிமைச் சட்டத்தின் கீழ் கேள்வி எழுப்பப்பட்டிருந்தது.

அதற்குப் பதில் வழங்கியுள்ள திணைக்களத்தின் தகவல் வழங்கும் அதிகாரி திருமதி எஸ். இந்துமதி, வடக்கு மாகாணத்தில் 771 பேர் காணாமற் போயுள்ளனர்.

யாழ்ப்பாண மாவட்டத்தில் 90 பேரும், முல்லைத்தீவு மாவட்டத்தில் 229 பேரும், மன்னார் மாவட்டத்தில் 34 பேரும், வவுனியா மாவட்டத்தில் 94 பேரும், கிளிநொச்சி மாவட்டத்தில் 324 பேரும் காணாமற் போயுள்ளனர் எனப் பதிவு செய்யப்பட்டுள்ளதாகக் குறிப்பிடப்பட்டுள்ளது. (த-5)

## வெல்வோம்...

ஏற்பட்டால்தான் அதனைச் செய்யவேண்டும். வெற்றி பெறுவோம் என்று தெரிந்தால்தான் பொதுவாக்கெடுப்புக்குச் செல்ல வேண்டும்.

இவ்வாறு அமைச்சரவை இணைப் பேச்சாளரும், அமைச்சருமான ராஜித சேனாரத்ன தெரிவித்தார்.

தற்போதைய சூழலில் பொதுவாக்கெடுப்புக்குச் செல்ல முடியாது என்று சிறிலங்கா சுதந்திரக் கட்சி தெரிவித்துள்ளமை தொடர்பில் கேட்டபோதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

இன்னமும் அரசமைப்புத் தொடர்பிலான சட்டவரைவு கூடத் தயாரிக்கப்படவில்லை. கட்டாயமாக நாட்டில் புதிய அரசமைப்பொன்று கொண்டு வரப்படும். அதன் அடிப்படையிலேயே அரசு செயற்பட்டு வருகிறது.

சுமந்திரன் உள்ளிட்டவர்கள் பொது வாக்கெடுப்பொன்றுக்குச் செல்ல வேண்டும் என்று கூறிவருகின்றனர். பொது வாக்கெடுப்பொன்றுக்குக் கட்டாயம் செல்ல வேண்டிய சூழல் ஏற்பட்டால் செல்லத்தான் வேண்டும். அவ்வாறு பொது வாக்கெடுப்புக்குச் செல்வதென்றால் கட்டாயம் வெற்றிபெறும் வகையிலேயே செல்லவேண்டும்.

நாட்டில் வாழும் அனைத்து இனங்களின் உரிமைகளையும் அரசியல் அதிகாரங்களையும் பிரதிபலிக்கும் வகையில் அரசமைப்பு அமையும். வடக்குகிழக்குக்குச் சிறப்பு அதிகாரங்கள் பகிரப்படும். அதேபோன்று நாட்டின் அனைத்துப் பாகங்களுக்கும் அதிகாரம் பகிரப்படும் - என்றார். (த-5)

## மின்சாரம்...

பவனியாக எடுத்துச் செல்வதாக இருந்தது. இதனால் கணவன், மனைவி இருவரும் தமது வீட்டில் நேற்றுமுன்தினமிரவு அலங்காரப் பணியில் ஈடுபட்டிருந்தனர் என்றும் இதன்போதே இருவரும் மின்சாரத் தாக்குதலுக்கு உள்ளாகி உயிரிழந்திருக்கலாம் என்றும் சம்பவ இடத்தில் நின்றிருந்தவர்களால் கூறப்பட்டது. ஆரம்ப விசாரணையைக் கொண்டு பொலிஸாரும் இதனையே தெரிவித்தனர்.

மின்சாரம் தாக்கியபோது, வீட்டில் குறித்த கணவன், மனைவியுடன் அவர்களது இரு சிறு பிள்ளைகளும் இருந்துள்ளனர். நேற்றுக் காலை பிள்ளைகளான சிறார்கள், பெற்றோர் வீட்டில் விழுந்து கிடப்பது தொடர்பில் அயல் வீட்டுக்குச் சென்று கூறியுள்ளனர். அயலவர்கள் சென்று பார்த்தபோது கணவன், மனைவி இருவரும் சடலமாகக் கிடந்தமை கண்டறியப்பட்டதாகவும் சம்பவ இடத்தில் நின்றிருந்தவர்களால் கூறப்பட்டது.

சம்பவம் தொடர்பில் சுன்னாகம் பொலிஸாருக்குத் தகவல் பறந்தது. அங்கு சென்ற பொலிசார் விசாரணைகளை முன்னெடுத்தனர். சம்பவ இடத்துக்குச் சென்ற நீதிவான் உடல்களைப் பார்வையிட்டு விசாரணை நடத்தினார். சடலங்கள் யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலைக்குக் கொண்டு செல்லப்பட்டு உடற்கூற்றுப் பரிசோதனையின் பின்னர் உறவினர்களிடம் ஒப்படைக்கப்பட்டன. (த-4-101)

## இலங்கையின்...

என்று சீனாவின் உயர் அரசியல் ஆலோசகர் உறுதி யளித்துள்ளார்.

இலங்கைக்குப் பயணம் மேற்கொண்டுள்ள சீன மக்கள் அரசியல் ஆலோசனைச் சபைக்கான தேசிய குழுவின் தலைவர் யூ செங் செங் தமது குழுவினருடன், அரச தலைவர் மைத்திரிபால சிறிசேனவை நேற்று முன்தினம் சந்தித்துப் பேசியபோதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

இலங்கையுடன் உண்மையான உறவைத் தொடர்ந்து வலுப்படுத்துவதற்குச் சீனா தயாராக இருக்கிறது. இலங்கையில் முன்னெடுக்கப்படும் சீனாவின் எல்லா முதலீட்டு உடன்பாடுகள் மற்றும் அபிவிருத்தித் திட்டங்களும், இலங்கையின் அரசமைப்புக்கு உட்பட்டதாகவும், இலங்கையின் இறைமை மற்றும் சுதந்திரத்தைப் பாதுகாக்கும் வகையிலும் அமைந்திருக்கும்.

எந்தவொரு கட்டத்திலும், சீனாவும் சீன மக்களும் இலங்கை அரசுக்கு தமது முழுமையான ஆதரவை வழங்குவதற்கும், மைத்திரிபால சிறிசேனவின் தலைமைத்துவத்தின் கீழ் நட்புறவைப் பலப்படுத்திக்கொள்வதற்கும், அர்ப்பணிப்புடன் உள்ளனர், என்றும் தெரிவித்துள்ளார்.

இந்தச் சந்திப்பின்போது, இலங்கையில் தீவிரவாதத்தை அழிப்பதற்கு சீனா வழங்கிய உதவிகளுக்காகவும், இலங்கையின் அபிவிருத்திக்காக சீனா வழங்கி வரும் உதவிகளுக்காகவும் அரச தலைவர் மைத்திரி நன்றி தெரிவித்தார். (த-5)

## இந்தியக்...

எடுக்காதபோது இந்தியக் கலைஞர்களுக்காக இவ்வளவு பெருந் தொகையை மாகாண அமைச்சு செலவிட்டிருப்பது தமக்குக் கடும் விசனத்தையும் கோபத்தையும் ஏற்படுத்துவதாக உள்ளூர்க் கலைஞர்கள் 'உதயன்' பத்திரிகையிடம் தெரிவித்தனர்.

2011 ஆம் ஆண்டு முதல் 2016 ஆம் ஆண்டு வரையில் ஒவ்வொரு ஆண்டும் இந்தியக் கலைஞர்களை அழைத்து வந்து நிகழ்ச்சிகள் வடக்கு மாகாணத்தில் நடத்தப்பட்டன. இந்தியத் துணைத் தூதரகத்தின் ஆதரவுடன் இந்த நிகழ்ச்சிகள் நடத்தப்படுவதாக அறிவிக்கப்பட்டன. ஆனால், இந்தியக் கலைஞர்களை அழைத்து வருவதற்கான வானூர்திப் பயணச் சீட்டுக்கான செலவுகளைச் சிலவேளைகளில் வழங்குவதைத் தவிர இந்தியத் தூதரகத்தின் நிதிப் பங்களிப்பு எந்த வகையிலும் இதில் இருக்கவில்லை என்று தெரிவிக்கப்படுகிறது.

இந்தியக் கலைஞர்களைக் கொழும்பிலிருந்து அழைத்து வருவது முதற்கொண்டு அவர்கள் திரும்பிச் செல்வதற்காக வானூர்தியில் ஏறுவது வரையில் அனைத்துச் செலவுகளையும் வடக்கு மாகாண கல்வி, பண்பாட்டு மற்றும் விளையாட்டுத்துறை அமைச்சே செய்து வந்திருக்கிறது. இது குறித்து உள்ளூர்க் கலைஞர்களிடம் நீண்ட காலமாகவே அதிருப்தியும் விசனமும் நிலவி வந்தது. உள்ளூர்க் கலைஞர்களையோ உள்ளூரில் உள்ள கலை அமைப்புகளையோ ஊக்குவிப்பதற்குச் சில ஆயிரம் ரூபாவைக்கூடச் செலவிட மறுக்கும் அமைச்சர் க.குருகுலராசா இந்தியக் கலைஞர்களின் நிகழ்ச்சிகள் என்றால் மட்டும் காசை வாரி இறைக்கிறார் என்று அவர்கள் குற்றஞ்சாட்டினர்.

இதனால் தகவல் அறியும் உரிமைச் சட்டத்தின் கீழ் இது தொடர்பான விவரங்களை 'உதயன்' பத்திரிகை அமைச்சிடம் கேட்டது. தரப்பட்டிருக்கும் விவரங்களின் அடிப்படையில் 6 வருடங்களில் இந்தியக் கலைஞர்களுக்காகச் செலவிடப்பட்ட மொத்தத் தொகை 71 லட்சத்து 30 ஆயிரத்து 993 ரூபா என்று தெரிவிக்கப்பட்டிருக்கிறது.

2011ஆம் ஆண்டு இசை வித்தகர் ரி.எம். கிருஸ்ணாவின் இசை நிகழ்ச்சிக்கு 9 லட்சத்து 62 ஆயிரத்து 709 ரூபாவும் 2012ஆம் ஆண்டு நடன விற்பனர் திருமதி அலமேலுவல்லி மற்றும் பாடகர் உன்னிக் கிருஸ்ணன் ஆகியோரை அழைத்து வந்து விழா நடத்துவதற்கு 16 லட்சத்து 20 ஆயிரத்து 564 ரூபாவும், 2013ஆம் ஆண்டு பாடகர்கள் சுதா இரகுநாதன் மற்றும் ரி.எம்.கிருஸ்ணா, செல்வி லீலா சாம்சன் ஆகியோரின் இசை நிகழ்வுக்காக 10 லட்சத்து 86 ஆயிரம் ரூபாவும், 2014 ஆம் ஆண்டு நடன வல்லுனர் செல்வி லாவண்யா மற்றும் பாடகர் ராம் பிரசாத் ஆகியோரின் நிகழ்வுக்காக 12 லட்சத்து 65 ஆயிரத்து 238 ரூபாவும், 2015ஆம் ஆண்டு திருமதி ரேவதி கிருஸ்ணாவின் வீணை இசைக்கு 8 லட்சத்து 63 ஆயிரத்து 815 ரூபாவும், 2016ஆம் ஆண்டில் திருமதி ராதிகா சூராஜித் மற்றும் அவரது குழுவினரின் நடன அளிக்கைக்கு 13 லட்சத்து 32 ஆயிரத்து 666 ரூபாவும் செலவிடப்பட்டிருப்பதாக அமைச்சின் பதிலில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்த அனைத்து நிகழ்ச்சிகளும் யாழ்ப்பாணத்தில் உள்ள இந்தியத் துணைத் தூதரகத்தின் அனுசரணையுடன்தான் நடத்தப்பட்டதாக அறிவிக்கப்பட்டிருந்தது. ஆனாலும் நிகழ்ச்சிகளுக்காகத் தூதரகம் எந்தவித நிதி அனுசரணையையும் வழங்கவில்லை. கடந்த ஆண்டு சித்திரை மாதம் நல்லூர் கிட்டுப் பூங்காவில் நடைபெற்ற பட்டிமன்ற நிகழ்ச்சி மட்டும்மே துணைத் தூதரகத்தின் முழுப் பங்களிப்புடன் மேற்கொள்ளப்பட்டுள்ளது. (உ-5)

## மணல்...

இடத்தில் மணல் அகழ்வு மேற்கொண்டு, அபிவிருத்திப் பணிகளைத் தொடர்ந்து மேற்கொள்ள முடிவு செய்யப்பட்டுள்ளது' என்று மாவட்டச் செயலர் நா.வேதநாயகன் தெரிவித்தார்.

யாழ்ப்பாணத்தில் ஏற்பட்டுள்ள மணல் தட்டுப்பாட்டை நிவர்த்தி செய்ய மேற்கொண்டுள்ள நடவடிக்கைகள் தொடர்பில் மாவட்டச் செயலர் ந.வேதநாயகன் தெரிவித்ததாவது:

யாழ்ப்பாண மாவட்டத்திற்குத் தேவையான மணல், இதுவரை காலமும் வடமராட்சி கிழக்குப் பிரதேச செயலர் பிரிவின் ஜே/423, ஜே/424, ஜே/425 ஆகிய கிராம சேவகர் பிரிவுகளிலேயே அகழப்பட்டு வந்தது. இந்தப் பகுதிகள் தமது கட்டுப்பாட்டுப் பிரதேசம் என்று வனஜீவராசிகள் திணைக்களம் உரிமை கோரியுள்ளது. மணல் அள்ளுவதற்கு அவர்கள் தடை விதித்துள்ளனர்.

இந்தத் தடை காரணமாக, யாழ்ப்பாணத்தில் மேற்கொள்ளப்பட்டு வருகின்ற வீடுகள் அமைக்கும் பணி உள்ளிட்ட அபிவிருத்தி நடவடிக்கைகள் பெரும் பாதிப்பைச் சந்தித்துள்ளன. இதற்கு மாற்று ஒழுங்கு மேற்கொள்வது தொடர்பில் உடனடியாகக் கவனம் செலுத்தப்பட்டுள்ளது.

வனஜீவராசிகள் திணைக்களம் உரிமை கோரும் பகுதி தொடர்பில், கடந்த காலங்களில் குறித்த திணைக்களத்துடனும், அமைச்சுடனும் நாம் பேச்சு நடத்தியிருந்தோம். அந்த இடத்தை மணல் அகழ்வுக்கு விடுவிக்குமாறு கேட்டுக் கொண்டதற்கு இணங்க அதனை எமக்கு வழங்கியவர்கள், தற்போது மீளவும் உரிமை கோரியுள்ளனர். வனஜீவராசிகள் திணைக்களத்தின் கொழும்பு அலுவலகத்தில் நேற்று முன்தினம் சந்திப்பு நடைபெற்றது. அமைச்சின் செயலர், யாழ்ப்பாண மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் எம்.ஏ.சுமந்திரன், வடமராட்சி கிழக்குப் பிரதேச செயலர் ஆகியோர் கலந்து கொண்டனர். வனஜீவராசிகள் திணைக்களம் தற்போது உரிமை கோரியுள்ள பகுதியை எமக்கு விடுவிப்பது தொடர்பில் பேசப்பட்டது.

தற்காலிகமாக வேறு இடத்தில் மணல் அகழ்வு மேற்கொள்ள முடிவு செய்யப்பட்டுள்ளது. நாளை திங்கட்கிழமை தொடக்கம் வழமையான நடைமுறையின் ஊடாக மணல் பெற்றுக்கொள்ள முடியும் - என்றார். (த-5,101)

## வடக்கு...

ஆரம்பிப்பது தொடர்பிலும் பதில் வழங்குமாறு வடக்கு மாகாண முதலமைச்சர் சி.வி.விக்னேஸ்வரனுக்குக் கடிதம் அனுப்பி நீண்ட காலமாகியும் இன்றுவரை அவர் பதில் அனுப்பவில்லை என்று வணிக கைத்தொழில் அமைச்சர் ரிசாத் பதியுதீன் குற்றம் சாட்டினார். முன்னாள் போராளிகளில் 90 வீதமானோர் இன்னும் அவல வாழ்வு தான் வாழ்ந்து வருகிறார்கள் என்றும் அவர் கூறினார்.

யாழ்ப்பாண வர்த்தகக் கைத்தொழிற்துறை மன்றத்தின் ஏற்பாட்டில் விருது வழங்கும் நிகழ்வு யாழ்ப்பாண நகர் விருந்தினர் விடுதியில் நேற்று மாலை இடம்பெற்றது. இதில் விருந்தினராகக் கலந்து கொண்டு உரையாற்றும்போதே அமைச்சர் ரிசாத் இதனைத் தெரிவித்தார்.

அங்கு மேலும் தெரிவித்ததாவது:

வடக்கு மாகாணம் போர் காரணமாக பல இழப்புக்களைச் சந்தித்தது. வடக்கு மாகாணத்தில் இயங்கி வந்த கைத்தொழிற்சாலைகள் போரினால் சிதைவடைந்து இன்றுவரை சீராக இயங்க முடியாத நிலமை காணப்படுகின்றது. நான் கைத்தொழில் அமைச்சராகப் பதவி ஏற்ற பின்னர் கைத்தொழில்துறையில் சில அபிவிருத்தி திட்டங்களை மேற்கொண்டிருக்கின்றேன். வடக்கு மாகாணத்தில் உள்ள கைத்தொழிற்சாலைகளைச் சீரமைத்து மீள இயக்குவதற்கும் புதிதாகக் கைத்தொழிற்சாலைகளை அமைப்பதற்கும் இணைந்து செயற்படுவது தொடர்பாக வடக்கு மாகாண முதல்வருக்கு நீண்ட காலத்துக்கு முன்னரே கடிதம் ஒன்றை அனுப்பி இருந்தேன். இன்றுவரை அவர் எனது அமைச்சுக்குப் பதில் அளிக்கவில்லை.

உள்நாட்டுப் போர் முடிவடைந்த பின்னர் விடுதலைப் புலிகள் அமைப்பில் இருந்த ஏராளமானோர் தடுப்பு முகாம்களில் இருந்து விடுவிக்கப்பட்டனர். புனர்வாழ்வு அளிக்கப்பட்டே அவர்கள் விடுதலை செய்யப்பட்டனர். அவ்வாறு விடுதலை செய்யப்பட்டவர்களில் 10 வீதமான முன்னாள் போராளிகளே ஓரளவுக்கு வாழ்க்கையை நடத்தக் கூடிய நிலையில் இருக்கின்றனர். மிகுதி முன்னாள் போராளிகள் அனைவரும் கைவிடப்பட்ட நிலையில் தான் இருக்கின்றனர். இவ்வாறான நிலையில் வடக்கு மாகாணத்தில் புதிதாகத் தொழிற்சாலைகளை அமைத்து வேலை வாய்ப்புக்களை வழங்குவதற்கு முயன்றால் வடக்கு மாகாண முதல்வர் இன்றுவரை பதில் அனுப்பாமல் இருக்கின்றார். அப்படியாயின் வடக்கை எவ்வாறு அபிவிருத்தி செய்வது? - என்றார். (த-4-8)

## தகவல்...

உரிமைச் சட்டத்தில் இவற்றைப் பகிரங்கமாகக் காட்சிப்படுத்தவேண்டும் என்று சொல்லப்பட்டுள்ளபோதும், சட்டம் நடைமுறைக்கு வந்து இரண்டு மாதங்களாகியும் அதனைச் செயற்படுத்தாத நிலையிலேயே அரச திணைக்களங்கள் வடக்கில் காணப்படுகின்றன.

தகவலுக்கான உரிமைச் சட்டம் கடந்த பெப்ரவரி மாதம் 3ஆம் திகதியிலிருந்து நடைமுறைக்கு வந்தது. இந்தச் சட்டத்தின் 26ஆம் அத்தியாயத்தில், ஒவ்வொரு பகிரங்க அதிகார சபையும் தங்கள் அலுவலக வளவினுள் மக்கள் பார்க்கக் கூடிய பகிரங்க இடத்தில் விவரங்கள் காட்சிப்படுத்தவேண்டும் என்று சொல்லப்பட்டுள்ளது. தகவல் அலுவலரின் விவரம், குறித்தளிக்கப்பட்ட அலுவலர் விவரம், தகவல் ஆணைக் குழுவையும் அதன் உறுப்பினர்களையும் தொடர்பு கொள்வதற்கான விவரங்கள் என்பன அதில் காட்சிப்படுத்தப்பட்டிருக்கவேண்டும் என்று சட்டத்தில் கூறப்பட்டுள்ளது.

வடக்கில் உள்ள அரச திணைக்களங்கள் இன்னமும் இதனை நடைமுறைப்படுத்தவில்லை. ஆகக் குறைந்தது தகவல் அலுவலரின் பெயர் விவரங்களைக் கூடப் பகிரங்க இடத்தில் மக்கள் இலகுவாக அறிந்து கொள்ளக்கூடிய விதத்தில் காட்சிப்படுத்தவில்லை என்பதும் குறிப்பிடத்தக்கது. (த-5)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வீடு விற்பனைக்கு

இராஜபாதை வீதியில் U.N.H.R ஸ்ரோஸ்க்கு அண்மையில் 4 1/4 பரப்பு வீடும் வளவும் விற்பனைக்குண்டு.

தொடர்பு: 077 729 9031

## பசுக்கன்றுகள் விற்பனைக்கு

நல்ல இன பசுக்கன்றுகள் விற்பனைக்குண்டு.

தொடர்பு: 077 129 8159

## தேவை

புத்தளம் மாவட்டத்திலுள்ள தொழிற்சாலை ஒன்றிற்கு ஆண். பெண் வேலையாள்கள் தேவை. உணவு. தங்குமிடம் இலவசம். நாள் ஒன்றிற்கு 1000 ரூபா. வேலைகள் ஆரம்பம் 18.04.2017

077 104 2510/ 071 865 2510/ 071 865 2505

## வேலை வாய்ப்பு

யூஸ் பைக்கற்றுக்களை பொதி செய்வதற்கு பெண் பிள்ளைகள் தேவை. தகுந்த சம்பளம்.

அம்மா யூஸ்
28, வேம்படி வீதி, யாழ்ப்பாணம்.
077 758 7079/ 021 222 1155

## வீடு விற்பனைக்கு

யாழ் மத்தியூஸ் வீதியில் ஒரு பரப்புக் காணி 04 அறை வீடு கிணற்றுடன் விற்பனைக்கு உண்டு.

தொடர்பு: 076 725 9429

## Vacancy

Graphic Desingers and Web Developers / Designers அனுபவம் உள்ளவர்கள் விரும்பத தக்கது. சுயவிவரக் கோவையை கீழ்வரும் மின்னஞ்சல் முகவரிக்கு அனுப்பவும்.

email - ibainfo2005@ gmail.com.
T.P.No : M: 078 586 9825

## மணமகள் தேவை

பிரான்ஸை வதிவிடமாகக் கொண்ட இந்து கௌரவ குடும்பத்தைச் சேர்ந்த விவாகரத்துப் பெற்ற மண மகனுக்கு இந்து கௌரவ குடும்பத்தைச் சேர்ந்த நன்கு படித்த 35 - 40 வயதுக் குட்பட்ட மணமகள் தேவை. இலங்கை நேரப்படி கிழமை நாள்களில் 7.30 மணிக்குப் பின்பும். சனி. ஞாயிறு எந்த நேரமும் தொடர்பு கொள்ளலாம்.

தொடர்பு: ( மயில்வாகனம்)
0033 75106 9416
No.1 Souarede Toulon
95380 Loures, Fbanc - E

MAJESTIC CINEPLEX
A CEYLON THEATRES CINEMA Jaffna
கார்கில்ஸ் ஸ்குவெயர்
(யாழ் போதனா வைத்தியசாலை எதிரில்)
இப்பொழுது திரையில்




விசாரணை ☎ 021- 2227712
MajesticCineplexSL
www.ceylontheatres.lk

## நாகபூசணி திருமணசேவை

நீங்கள் விரும்பும் டாக்ரர், எஞ்சினியர், எக்கௌண்டன், சட்டத்தரணி, வங்கி உத்தியோகத்தர், ஆசிரியர், அரசஉத்தியோகத்தர், தனியார் துறையினர், உள்நாட்டு/வெளிநாட்டு மணமகன்கள், மணமகள்கள் எம்மிடம் ஏராளமாக உள்ளனர். பொருத்தமான ஜாதகங்கள் போட்டோக்களுடன் உடன் தெரிவு செய்து தரப்படும். ஏழு நாள்களும் திறந்திருக்கும்.

383/14B கோயில் வீதி, நல்லூர், யாழ்ப்பாணம்.
(நல்லூர் கோயில் வடக்குப் பக்கம்)
021 222 9306/ 077 138 7596
Email: nakapoosany@gmail.com


## இல்லற இணையேற்பு விழா

நாளை (10.04.2017) திங்கட்கிழமை
ஆறுதல் நிறுவனத்தில் கடமையாற்றுகின்ற
செல்வி குலசிங்கம் கோபிகா அவர்களும்
செல்வன் சிவநேசன் அவனிபாஜனன் அவர்களும்
இல.1001, கே.கே.எஸ். வீதியில் அமைந்துள்ள
"திவ்ய மஹால்" மண்டபத்தில்
நாளை (10.04.2017) திங்கட்கிழமை முற்பகல் 10.30 முதல் 13.30 மணிவரை உள்ள சுப நேரத்தில் திருமண பந்தத்தில் இணையவுள்ளனர். மணமக்களை நீடூழி காலம் சீரும் சிறப்புமாக வாழ மகிழ்வுடன் வாழ்த்துகின்றோம்.

வாழ்த்துவோர்: ஆறுதல் குடும்பத்தினர்
இல.51, வைமன் வீதி, நல்லூர், யாழ்ப்பாணம்.




## சிவன் ஜோதிடம்

இந்தியாவிலிருந்து வருகை தந்துள்ள
பண்டித் ஜெயதேவ் சுவாமிகள்
076 585 9977 , 077 835 7307

துல்லியமாக கணித்து சொல்லப்படும் விடயங்கள்

மெய்யன்பர்களே !

இந்தியாவின் புகழ் பெற்ற மாந்திரீக ஜோதிடர் இவர் தீர்த்து வைக்காத பிரச்சினைகளே இல்லை. கணவன் மனைவி சண்டை பிரிவு. காதல் திருமண தடை இதுவரை திருமணமே ஆகாதவர்கள் பிள்ளைகள். பெற்றோர் சொல் கேளாமல் திரிவது. வேலை தொழில் உத்தியோகம் இப்படி பல பிரச்சினைகளை தீர்த்து வைப்பார். பணம் பெறாமையால் தொழில் பாதிப்பு பலன் சொல்வதோடு பிரச்சினைகளை தீர்த்து வைப்பார். புத்திர பாக்கியம் இல்லாதவர்களுக்கு புத்திரபாக்கியம் பலன்களை சொல்வார். மேலும் உங்கள் வீட்டில் செல்வம் கொழிக்க உதவும் லட்சுமி பூசை செய்து தருவார்.
தமிழ் மொழிகளில் ஜோதிடம் சொல்லப்படும்.

100% உத்தரவாதம்

இல.394, 1/1 மணிக்கூட்டு வீதி,
(பெருமாள் கோயில் வீதி, லிங்கம் கிறீம் ஹவுஸ் அருகில்)
யாழ்ப்பாணம்.
நேரம்: காலை 8.00 மணி முதல் மாலை 7.00 மணிவரை


## அழைப்பு

சிறைச்சாலைகள் மறுசீரமைப்பு, புனர்வாழ்வளிப்பு, மீள்குடியேற்றம் மற்றும் இந்துமத அலுவல்கள் அமைச்சின் நிதி அனுசரணையுடன் பனை அபிவிருத்திச் சபையால் அமுல்படுத்தப்பட்ட விசேட வாழ்வாதார நிகழ்ச்சித் திட்டத்தின் கீழ் பனைசார் உற்பத்திப் பயனாளிகளிற்கான உபகரணங்கள் வழங்கல் மற்றும் புத்தக வெளியீடு

தலைமை:
வைத்தியகலாநிதி உயர்திரு. இ.சிவசங்கர்
(தலைவர்,பனை அபிவிருத்திச்சபை)

இடம் : யாழ் மத்திய கல்லூரி
காலம் : 12. 04. 2017
நேரம் : மு.ப.9.30 மணி

பிரதம விருந்தினர்
கௌரவ அமைச்சர் டி.எம். சுவாமிநாதன்
சிறைச்சாலைகள் மறுசீரமைப்பு, புனர்வாழ்வளிப்பு,
மீள்குடியேற்றம் மற்றும் இந்துமத
அலுவல்கள் அமைச்சு

கௌரவ விருந்தினர்
கௌரவ ஈ.சரவணபவன்
பாராளுமன்ற உறுப்பினர்
(உறுப்பினர் - அமைச்சின் மேற்பார்வைக்குழு)

சிறப்பு விருந்தினர்
உயர் திரு.நா.வேதநாயகன்
மாவட்ட செயலர், மாவட்டச் செயலகம்,
யாழ்ப்பாணம்

திரு.வே.கணேஸ்வரன்
இயக்குநர், சிவன் பவுண்டேசன்

திரு.நா.கணேசன்
தலைவர், வடமாகாண ப.தெ.வ.அ.கூ.
சங்கங்களின் சமாசம்

அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்
"பனைவளம் எமது வாழ்வையும் தேசத்தையும் வளப்படுத்தும்"

தலைவர்
பனை அபிவிருத்திச் சபை, இலங்கை.


NEW YEAR SALE
NEW ARRIVELS MEDICAL BOOKS
வெளிவந்துவிட்டது மருத்துவ நூல்கள்

All Books Available Here



15% - 75%
வரையான கழிவு

→ ELLIS
→ GRAY'S Anatomy
→ GRANT'S ATLAS, Ganong's Physiology
→ BD Chaurasi + as Vol. 1,2&3
→ NETTER
→ NELSON PAEDIATRICS Vol 1,2,&3
→ Kumar & Cleark, Robbin's Basic pathology
→ Talley & o Corner, Guyton's Physiology
→ Robin's Basic Pathology
→ Ten Teacher's by Obstetrics & Gynacology



BNF 69, 70, 71

"ஆல் சிலோன் டிஸ்ரிபியூட்டர்ஸ்"
212,214, கே.கே.எஸ். வீதி, யாழ்ப்பாணம்.
021 222 5542, 021 567 1527
acdil@ymail.com

## கடைகள் வாடகைக்குண்டு

A9 வீதியில் பரந்தன் சந்தியில் சகல வசதிகளுடன் புதிய இரு கடைகள் வாடகைக்குண்டு.

தொடர்புகளுக்கு 077 198 2690

## உலகப் புத்தக தினம் - ஏப்ரல் 23

மாபெரும் மலிவு விற்பனை
20% முதல் 60 % வரை கழிவு
ஏப்ரல் 23 வரை

"வாசிக்கத் தொடங்குங்கள் தோழர்களே! விடுதலையை உணர்வீர்கள்"

BOOK LAB புத்தகக் கூடம்
021 222 7290
077 128 5749
சேர் பொன் இராமநாதன் வீதி,
திருநெல்வேலி.


# VACANCY

## வேலையாள் தேவை

### 1. Assistant Project Leader

- க.பொ.த உயர்தரத்தில் மூன்று பாடங்கள் சித்தி.
- தமிழ், ஆங்கிலம் இரண்டு மொழிகளிலும் சரளமாக எழுத, வாசிக்க கூடிய தகைமை.
- சிறிய மற்றும் பெரிய வேலைத்திட்டங்களை (Project Proposal) தலைமை அதிகாரியுடன் கலந்துரையாடி தயாரிக்க கூடிய ஆற்றல் (வேண்டிய அறிவுசார் வளங்கள் வழங்கப்படும்).
- கணனியில் Ms-Office Package (Word, Excel, Outlook etc..) நிறைந்த த்கைமை.
- NGO களில் பணிபுரிந்த அனுபவம் மேலதிக தகைமையாக கொள்ளப்படும்.
- வயதெல்லை 25 - 40

### 2. Care Taker

- மனிதாபிமானத்துடன் சேவை புரிவதற்கான மனோநிலை.
- கல்வித்தகுதி தமிழில் எழுதவும் வாசிக்கவும், தொடர்ந்தும் உள்ளக கற்பித்தல் செயற்பாடுகளில் ஆர்வமுடன் பங்கெடுப்பவராக இருத்தல் வேண்டும்.
- சிறப்பான உடற்தகுதி.
- வயதெல்லை 25 - 35
- சமூகப்பணிகளில் ஈடுபடுபவர்களுக்கு முன்னுரிமை.

குறிப்பு: சம்பளம் நேரில் பேசித்தீர்மானிக்கப்படும்

SAVE act get back activities

தொடர்புகளுக்கு
CLOSING DATE:20.04.2017
+9424 7200504
Jegatheesan@save-act.com
No-115, Mill Road, Koomankulam, Vavuniya, Sri Lanka.

## VACANCIES
## Customer Care Assistants

Seeking suitable candidates for employment on a full time long term basis for a travel and tourism office in Jaffna operating on a 24/7 basis catering to international clients. Work entails direct world wide customers' contact through various modes of communication. No previous experience required. Any age will be considered: 18 to 60. Training will be initially provided in Colombo. Those who have passed GCE O/L with an A or B pass in English, preferred. Additional ability in European, Arabic, Indian languages is bonus. Starting monthly salary will be Rs. 24,000/- with increments based on performance, rising to above Rs.60,000/= plus bonuses. Should be willing to work on shifts including nights based on roster. Ladies : only.day shifts. Please email your detailed CV to : apply.jobs.jaffna@gmail.com not later than 17 April 2017. Shortlisted candidates only will be interviewes in Colombo, Vavuniya or Jaffna.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org








# விரட்டி வென்றது தீவுகள்

பாகிஸ்தானுக்கு எதிராக நேற்று முன்தினம் நள்ளிரவு (இலங்கை நேரப்படி) நடைபெற்ற முதலாவது ஒருநாள் ஆட்டத்தில் 4 இலக்குகளால் வெற்றிபெற்றது மேற்கிந்தியத் தீவுகள். இந்த இரு அணிகளுக்கும் இடையிலான மூன்று ஆட்டங்களைக் கொண்ட ஒருநாள் தொடர், மேற்கிந்தியத் தீவுகளில் தற்போது நடைபெற்று வருகிறது.

நாணயச் சுழற்சியில் வெற்றி பெற்ற தீவுகள் முதலில் களத்தடுப்பைத் தீர்மானித்தது. இதன்படி முதலில் துடுப்பெடுத்தாடிய பாகிஸ்தான் 5 இலக்குகள் இழப்புக்கு 308 ஓட்டங்களைக் குவித்தது. அதிகபட்சமாக கபீஸ் 88 ஓட்டங்களையும், செசாட் 67 ஓட்டங்களையும், மலிக் 53 ஓட்டங்களையும் பெற்றனர். பந்துவீச்சில் நேஸ் 4 இலக்குகளையும், கோல்டர் ஓர் இலக்கையும் கைப்பற்றினர்.

பதிலுக்குக் களமிறங்கிய மேற்கிந்தியத் தீவுகள் ஓர் பந்துப்பரிமாற்றம் மீதமிருக்க 6 இலக்குகள் இழப்புக்கு இலக்கை அடைந்தது. மொகமட் பெற்ற 91 ஓட்டங்களே அதிகபட்சம், பவல் 61 ஓட்டங்களையும், லூயிஸ் 47 ஓட்டங்களையும் பெற்றனர். (ம)



# டிப்போர்டிவோவை வீழ்த்தியது மட்ரிட்




லா லிகா தொடரில் நேற்றுமுன்தினம் நள்ளிரவு (இலங்கை நேரப்படி) நடைபெற்ற ஆட்டத்தில் கிளப் டிப்போர்டிவோவை வென்றது ரியல் மட்ரிட்.

ஸ்பெயினின் புகழ்பெற்ற கால்பந்தாட்டக் கழகங்களுக்கு இடையே நடைபெற்றுவரும் லா லிகா தொடர் மிகவும் பழமையானது. நேற்றுமுன்தினம் இடம்பெற்ற ஆட்டத்தில் டிப்போர்டிவோவை எதிர்த்து மட்ரிட் மோதியது.

ஆட்டத்தின் 15 ஆவது நிமிடத்தில் ரொட்றிக்காஸ் மட்ரிட்டின் முதல் கோலைப் பதிவுசெய்தார். அல்வாரோ 18 ஆவது மற்றும் 23 ஆவது நிமிடங்களில் அடுத்தடுத்து கோல்களைப் பதிவுசெய்ய 3:0 என்று ஆதிக்கம் செலுத்தியது மட்ரிட். திடீர் எழுச்சி கண்டது டிப்போர்டிவோ. கபிரியேல் 32 ஆவது நிமிடத்திலும், லூசியானோ 34 ஆவது நிமிடத்திலும் கோல்களைப் பதிவுசெய்ய முதல்பாதியின் முடிவில் 3:2 என்ற கோல் கணக்கில் ஆதிக்கம் செலுத்தியது மட்ரிட். 49 ஆவது நிமிடத்தில் அல்வாரோ மட்ரிட்டின் நான்காவது கோலைப் பதிவுசெய்தார். வேறெந்த மாற்றங்களும் நிகழவில்லை. முடிவில் 4:2 என்ற கோல் கணக்கில் வெற்றிபெற்றது ரியல் மட்ரிட். (ம)

# கெபிக்குத் தண்டம்



ஆஸ்திரேலிய அணியின் சுழல்பந்து வீச்சாளரான கெபி, மதுபோதையில் தகாத வார்த்தைகளை வீசியமைக்காக 15 ஆயிரம் டொலர்கள் தண்டம் விதிக்கப்பட்டது.

முன்னதாக இவர் இதுபோன்ற சிக்கல் ஒன்றில் மாட்டிக் கொண்டதால் அவருக்கு ஓர் உள்ளூர் ஆட்டத்தில் விளையாடத் தடையும் விதித்து தீர்ப்பிட்டது ஆஸ்திரேலிய கிரிக்கெட் சபை. (ம)

# பஞ்சாப் வெற்றி

நடப்பு வருட ஐ.பி.எல். தொடரில் நேற்று மாலை நடைபெற்ற ஆட்டத்தில் புனேயை வீழ்த்தியது பஞ்சாப். நாணயச் சுழற்சியில் வெற்றிபெற்ற பஞ்சாப் முதலில் களத்தடுப்பைத் தெரிவுசெய்தது. இதன்படி முதலில் துடுப்பெடுத்தாடிய புனே 6 இலக்குகள் இழப்புக்கு 163 ஓட்டங்களைக் குவித்தது. அதிகபட்சமாக ஸ்ரோக்ஸ் 50 ஓட்டங்களையும், மனோஜ்திவாரி 40 ஓட்டங்களையும், சிமித் 26 ஓட்டங்களையும் பெற்றனர்.




பந்துவீச்சில் சன்டீப் 2 இலக்குகளையும், நடராஜன், அக்சர் பட்டேல், ஸ்ரொய்னிஸ், ஸ்வப்நில் நால்வரும் தலா ஓர் இலக்கையும் வீழ்த்தினர்.

பதிலுக்குக் களமிறங்கிய பஞ்சாப் ஒரு பந்துப்பரிமாற்றம் மீதமிருக்க 4 இலக்குகள் இழப்புக்கு இலக்கை அடைந்து 6 இலக்குகளால் வெற்றிபெற்றது. அணித் தலைவர் மக்ஸ்வெல் 44 ஓட்டங்களையும், மில்லர் 30 ஓட்டங்களையும் ஆட்டமிழக்காது பெற்றனர்.

பந்துவீச்சில் தாகிர் 2 இலக்குகளையும் டின்டா, சாகர் இருவரும் தலா ஓர் இலக்கையும் கைப்பற்றினர். ஆட்டநாயகனாக மக்ஸ்வெல் தெரிவானார். (ம)

# ஊக்கமருந்தால் பதக்கத்தை இழந்தார் ஜெமிமா

பிரேசிலின் ரியோ டி ஜெனிரோ நகரில் கடந்த வருடம் நடைபெற்ற ஒலிம்பிக் தொடரில் பெண்களுக்கான மரதன் ஓட்டத்தில் தங்கப் பதக்கம் வென்ற கென்ய வீராங்கனை ஜெமிமாவின் பதக்கம் திரும்பப் பெறப்பட்டது. ஊக்கமருந்துச் சோதனையில் அவர் சிக்கியதன் எதிரொலியாகவே இந்த நடவடிக்கை எடுக்கப்பட்டது.

வழக்கமான சோதனைகள் இல்லாமல் திடீரென நடத்தப்பட்ட சோதனையொன்றிலேயே ஜெமிமாவின் ஊக்கமருந்து பயன்பாடு அம்பலமாகியது. தொடர்ந்து விசாரணைகள் முன்னெடுக்கப்படவுள்ளன. இவற்றில் அவர் எந்த வகையிலான ஊக்கமருந்தைப் பயன்படுத்தினார், அதன் வீரியத்தன்மை, அந்த மருந்தின் தாக்கம் ஜெமிமாவின் உடலில் எவ்வளவு காலம் நிலைத்திருக்கும் என்பவற்றின் அடிப்படையில் அவரது தடைக்காலம் தீர்மானிக்கப்படும் என்று தெரிகிறது. (ம)




Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org



## அரியாலை கரப்பந்தாட்ட இறுதியாட்டங்கள் இன்று

யாழ்ப்பாணம், ஏப். 9
அரியாலையின் 98ஆவது சுதேசிய திருநாள் கொண்டாட்டத்தை முன்னிட்டு யாழ்ப்பாணம் மாவட்ட ரீதியாக ஏ, பி என இரு பிரிவாக நடத்தப்படும் கரப்பந்தாட்டத் தொடர்களின் இறுதியாட்டங்கள் இன்று நடைபெறவுள்ளன.

அரியாலை திருமகள் சனசமூக நிலைய மைதானத்தில் இன்று இரவு 7 மணிக்கு இடம்பெறும் 'பி' பிரிவினருக்கான இறதியாட்டத்தில் யாழ்ப்பாணம் பல்கலைக்கழகத்தை எதிர்த்து சண்டிலிப்பாய் இந்து இளைஞர் அணி மோதவுள்ளது.

தொடர்ந்து இரவு 8 மணிக்கு இடம்பெறும் 'ஏ' பிரிவினருக்கான இறுதியாட்டத்தில் ஆவரங்கால் மத்திய விளையாட்டுக் கழகத்தை எதிர்த்து புத்தூர் கலைமதி விளையாட்டுக் கழகம் மோதவுள்ளது. (ம-23-422-108)

## பளை மத்திய கல்லூரி மீண்டும் சம்பியனானது

கிளிநொச்சி, ஏப். 9
கிளிநொச்சி வலயப் பாடசாலைகளுக்கு இடையிலான மென்பந்துத் துடுப்பாட்டத் தொடரில் பளை மத்திய கல்லூரி அணி கிண்ணம் வென்றது.

கிளிநொச்சி மத்திய மகா வித்தியாலய மைதானத்தில் நேற்றுமுன்தினம் மாலை இடம்பெற்ற இறுதி ஆட்டத்தில் பளை மத்திய கல்லூரியை எதிர்த்து முட்கொம்பன் மகா வித்தியாலயம் மோதியது.

முதலில் துடுப்பெடுத்தாடிய பளை மத்திய கல்லூரி 6 பந்துப் பரிமாற்றங்களில் சகல இலக்குகளையும் இழந்து 48 ஓட்டங்களைப் பெற்றது. அணித்தலைவர் சஜீபன் 9 பந்துகளில் 4 சிக்கர்கள் ஒரு பவுண்டரி உள்ளடங்களாக 30 ஓட்டங்களை பெற்றுக் கொடுத்தார். பந்து வீச்சில் முட்கொம்பன் மகா வித்தியாலயம் சார்பாக லக்சன் 4 இலக்குகளை வீழ்த்தினார்.

49 ஓட்டங்களை வெற்றியிலக்காகக் கொண்டு களமிறங்கிய முட்கொம்பன் மகா வித்தியாலயம் 6 பந்து பரிமாற்றங்கள் நிறைவில் 34 ஓட்டங்களைப் பெற்று 14 ஓட்டங்களால் தோல்வியடைந்தது.

கடந்த வருடமும் வலயச் சம்பியனாகிய பளை மத்திய கல்லூரி அந்த அந்தஸ்தை மீண்டும் தக்க வைத்தது. (ம-6)

## இன்றைய மோதல்கள்

யாழ்ப்பாணம், ஏப். 9

**அரியாலையின் துடுப்பாட்டம்**

அரியாலையின் 98ஆவது சுதேசிய திருநாள் கொண்டாட்டத்தை முன்னிட்டு இரு பிரிவாக நடத்தப்பட்டு வரும் மென்பந்துத் துடுப்பாட்டத் தொடரின் இறுதியாட்டங்கள் அராலி சனசமூக நிலைய மைதானத்தில் இன்று இடம்பெறவுள்ளன. பிற்பகல் 3.30 மணிக்கு இடம்பெறும் வெளியூர் அணிகளுக்கு இடையிலான இறுதியாட்டத்தில் கொக்குவில் இந்திரா விளையாட்டுக் கழக அணியை எதிர்த்து சங்கானை கிங்ஸ் விளையாட்டுக் கழக அணி மோதவுள்ளது.

தொடர்ந்து இடம்பெறும் உள்ளூர் அணிகளுக்கு இடையிலான இறுதியாட்டத்தில் அரியாலை சனசமூநிலைய 'ஏ' அணியை எதிர்த்து அரியாலை சனசமூநிலைய 'பி' அணி மோதவுள்ளது.

**கே.ஸி.ஸி.ஸியின் துடுப்பாட்டம்**

கே.ஸி.ஸி.ஸி. விளையாட்டுக் கழகம் நடத்தும் துடுப்பாட்டத் தொடரின் ஆட்டங்கள் கொக்குவில் இந்துக் கல்லூரி மைதானத்தில் இடம்பெற்று வருகின்றன.

இந்தத் தொடரில் இன்று காலை 8.30 மணிக்கு இடம்பெறும் ஆட்டத்தில் றிபேக் ஸ்ரார் விளையாட்டுக் கழக அணியை எதிர்த்து ஸ்ரான்லி விளையாட்டுக் கழக அணி மோதவுள்ளது. பிற்பகல் .ஒரு மணிக்கு இடம்பெறும் ஆட்டத்தில் ஸ்கந்தா ஸ்ரார் விளையாட்டுக் கழக அணியை எதிர்த்து ஓல்ட் கோல்ஸ் விளையாட்டுக் கழக அணி மோதவுள்ளது. (ம-23)

## பயிற்சி நிலைய திறப்பு விழா

யாழ்ப்பாணம், ஏப்.9
கால்பந்தாட்ட ஆசான் அமரர் இரத்தினசிங்கம் ஞாபகார்த்த விளையாட்டு பயிற்சி நிலையத் திறப்பு விழாவும் கால்பந்தாட்ட வீரர்கள் விருது வழங்கும் நிகழ்வும் வதிரி டயமன்ஸ் வி. கழக மைதானத்தில் இன்று ஞாயிற்றுக்கிழமை மாலை 4 மணிக்கு நடைபெறவுள்ளது.

வதிரி தமிழ் மன்றத் தலைவர் சி.பத்மராஜன் தலைமையில் நடைபெறும் இந்த நிகழ்வுக்கு முதன்மை விருந்தினராக சிறுவர், மகளிர் விவகார இராஜாங்க அமைச்சர் விஜயகலா மகேஸ்வரன், சிறப்பு விருந்தினர்களாக வடமாகாண சபை உறுப்பினர் வே. சிவயோகன், கரவெட்டி பிரதேச செயலர் ச.சிவஸ்சிறி ஆகியோர் கலந்து கொள்ளவுள்ளனர். (ம-422)



இலங்கை கால்பந்தாட்டச் சம்மேளனம் 23 வயதுக்குட்பட்ட தேசிய அணிக்கான அணித்தெரிவுப் பயிற்சி முகாம்களை இலங்கையின் பல பாகங்களிலும் குறிப்பாக ஒவ்வொரு கால்பந்தாட்ட லீக்குகளிலும் நடத்தி வருகிறது. மன்னார், வவுனியா மாவட்டங்களில் உள்ள வீரர்களுக்கான அணித்தெரிவு முகாம் மன்னார் பொது விளையாட்டு மைதானத்தில் நேற்றுமுன்தினம் நடைபெற்றது. (ம-23)

## சென். ஜேம்ஸ் அபார ஆட்டம்

யாழ்ப்பாணம், ஏப். 9
யாழ்ப்பாணம் கல்விவலயப் பாடசாலைகளுக்கு இடையிலான கால்பந்தாட்டத் தொடரில் 20 வயதுப் பெண்கள் பிரிவில் குருநகர் சென். ஜேம்ஸ் மகளிர் பாடசாலை கிண்ணம் வென்றது.

கனகரத்தினம் மத்திய மகா வித்தியாலய மைதானத்தில் நேற்று இடம்பெற்ற இறுதியாட்டத்தில் குருநகர் சென். ஜேம்ஸ் மகளிர் பாடசாலை அணியை எதிர்த்து திருநெல்வேலி முத்துத்தம்பி மகா வித்தியாலய அணி மோதியது. இந்த ஆட்டத்தில் சென். ஜேம்ஸ் மகளிர் பாடசாலை அணி 2:0 கோல் கணக்கில் வெற்றிபெற்றது. (ம-23)



## கிண்ணம் வென்றது மத்தி.

யாழ்ப்பாணம், ஏப். 9
யாழ்ப்பாணம் கல்விவலயப் பாடசாலைகளுக்கு இடையிலான கால்பந்தாட்டத் தொடரில் 20 வயது ஆண்கள் பிரிவில் யாழ்ப்பாணம் மத்திய கல்லூரி அணி கிண்ணம் வென்றது. அரியாலை கால்பந்தாட்ட பயிற்சி நிலைய மைதானத்தில் நேற்றுக் காலை இடம்பெற்ற இறுதியாட்டத்தில் யாழ்ப்பாணம் மத்திய கல்லூரி அணியை எதிர்த்து சென். பற்றிக்ஸ் கல்லூரி அணி மோதியது. கோல்கள் இல்லாமல் முடிவுக்கு வந்தது முதல் பாதி. இரண்டாம் பாதியிலும் மாற்றங்கள் ஏற்படவில்லை. நிர்ணயிக்கப்பட்ட நிமிடங்களின் நிறைவில் இரு அணிகளும் கோலெதையும் பதிவுசெய்யாததை அடுத்து சமநிலைத் தவிர்ப்பு உதைகளில் வெற்றியைத் தீர்மானிக்க வேண்டிய நிலை ஏற்பட்டது. 3:1என்ற கோல் கணக்கில் வெற்றி பெற்று யாழ்ப்பாணம் மத்திய கல்லூரி அணி கிண்ணம் வென்றது. (ம-23)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உலகின் சிறந்த தலைவர் எம்.எஸ். டோனி மட்டுமே

## ரகானே புகழாரம்

உலகின் சிறந்த தலைவர் இந்திய அணியின் முன்னாள் தலைவர் டோனியே என்று சக வீரர் ரகானே பாராட்டியுள்ளார்.

நடைபெற்றுவரும் ஐ.பி.எல். தொடரில் இந்த இருவரும் புனே அணிக்காக விளையாடுகின்றனர். டோனி, சிமித் இருவரில் எவரின் தலைமைத்துவம் சிறந்தது என்ற கேள்விக்குப்பதில் வழங்குகையிலேயே ரகானே இவ்வாறு தெரிவித்தார்.

டோனி, சிமித் இருவரினதும் தலைமைத்துவத்தை ஒப்பிட்டு தற்போது பதில் வழங்குவது மிகவும் கடினம். ஏனெனில் சிமித்தின் தலைமையில் நான் ஆடிய முதல் ஆட்டம் இதுதான் (மும்பைக்கு எதிரான ஆட்டம்). அதே சமயம் டோனியின் தலைமையில் நிறைய ஆட்டங்களில் விளையாடியுள்ளேன். டோனி, உலகத்தரம் வாய்ந்த தலைவர் என்பதை நாம் எல்லோரும் அறிவோம். டோனி, சுமித் ஆகியோரின் தலைமைத்துவத்தை மக்கள் ஒப்பிட்டு பேசக்கூடாது. இருவரும் முற்றிலும் தனித்தன்மை கொண்டவர்கள். டோனியிடம் இருந்து பல விடயங்களை சிமித் கற்றுவருகிறார். இந்த ஆட்டத்தில் டோனியிடம் அவர் ஆலோசனை கேட்டுப் பெற்றதைப் பார்க்க முடிந்தது. எனவே அடுத்து வரும் ஆட்டங்களிலும் அவர் இதே போன்று டோனியிடம் ஆலோசனைகளை பெற விரும்புவார் என ரகானே மேலும் தெரிவித்தார்.

(ம)

# பி.வி. சிந்து இரண்டாமிடம்

பன்னாட்டுப் பூப்பந்தாட்டத் தரப்படுத்தலில் இந்திய வீராங்கனை பி.வி. சிந்து இரண்டாவது இடம்பிடித்தார்.

கடந்த வருடம் நடைபெற்ற ரியோ ஒலிம்பிக் தொடரில் தங்கப்பதக்கம் வென்ற கரோலினா மரின் தொடர்ந்தும் முதலிடத்திலேயே உள்ளார். இந்தத் தொடரில் சிந்து வெள்ளிப் பதக்கம் வென்றாலும் அவர் தரப்படுத்தலில் 6 ஆவது இடத்திலேயே இருந்தார். அண்மையில் நடைபெற்ற இந்தியப் பூப்பந்தாட்டத் தொடரில் கிண்ணம் வென்றதை அடுத்தே சிந்துவுக்கு இந்த முன்னேற்றம் கிட்டியது.

நடைபெற்றுவரும் மலேசியத் தொடரில் சிந்து முதல் சுற்றுடன் வெளியேற்றப்பட்டுள்ளார். இதனால் அடுத்தடுத்த தரப்படுத்தலில் அவர் பின்னடைவைச் சந்திக்கலாம் என்று கருதப்படுகிறது.

(ம)


## வேலை வாய்ப்பு

web offset இயந்திர இயக்குநர் மற்றும் பழக விரும்புபவர்கள் தேவை.



ஆர்வமுள்ளவர்கள் 10.04.2017 திங்கட்கிழமை காலை 10.00மணி தொடக்கம் 2.00 மணிவரை நேரில் சமுகம் தரவும்.

குறிப்பு:- வெளிமாவட்டத்தவர்களுக்கு தங்குமிட வசதி செய்து கொடுக்கப்படும்.

361, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்

## தொழில் வாய்ப்பு

யாழ் மாவட்டத்தில் இயங்கும் பிரபல தனியார் வைத்தியசாலைக்கு

1. Assistant Accountant
2. Accounts Executive
3. விலைப்பட்டியல் உத்தியோகத்தர் (Billing staff)
4. காசாளர் (Cashier)

போன்ற பதவிகளுக்கு தகுதியானவர்களிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன. இப் பதவிகளுக்கு விண்ணப்பிப்போர் பின்வரும் தகைமைகளைக் கொண்டிருக்க வேண்டும்.

**Assistant Accountant & Accounts Executive**

1. பட்டயக்கணக்கீட்டு நிறுவன (ICASL), ACMA நிறுவன பகுதி சித்தி (Partly Qualified), B.Com, BBA, HNDA, AAT சித்தி
2. இரண்டு வருட துறைசார் அனுபவம்.
3. வயதெல்லை 21 தொடக்கம் 35 வரை

**விலைப்பட்டியல் உத்தியோகத்தர் (Billing staff) மற்றும் காசாளர் (Cashier)**

1. க.பொ (உ.த) (A/L) இல் வர்த்தகப் பிரிவில் 03 பாடம் சித்தி அடைந்திருத்தல் வேண்டும்.
2. இரண்டு வருட துறைசார் அனுபவம்.
3. கணினி பற்றிய அறிவு.
4. வயதெல்லை 21 தொடக்கம் 30 வரை

சம்பளம் பேசித்தீர்மானிக்கப்படும்.

விண்ணப்பங்களை 19.04.2017 க்கு முன்னர் தபால் மூலமோ அல்லது மின்னஞ்சல் மூலமோ அல்லது நேரில் வரவேற்பாளர்களிடம் கையளிக்க முடியும்.

மனிதவள முகாமையாளர்.
நொதேர்ன் சென்றல் வைத்தியசாலை
No. 342, பலாலி வீதி, திருநெல்வேலி, யாழ்ப்பாணம்.
Tel No- 021 221 9988 Extension No- 324
Mobile No- 077 773 2892
Email- nchjaffna@gmail.com

## வேலை வாய்ப்பு

யாழ் S-lon விநியோக நிலையத்திற்கு பின்வரும் வேலையாள்கள் தேவை.

- கணினி இயக்குநர் (GCE O/L OR G.C.E A/L)
- சாரதி
- பாதுகாப்பு உத்தியோகத்தர்

நேர்முகத்தேர்வு :- ஏப்ரல் 10 ஆம், 11 ஆம் திகதி காலை 10 am- 1 pm

S-Lon விநியோக நிலையம்
23/1, 4 ஆம் ஒழுங்கை, பிறவுண் வீதி, யாழ்ப்பாணம். ☎ 021 222 7167

## அழகியல் டிப்ளோமா

BCBL @KU



பிரிட்டிஷ் கொலேஜிடமிருந்து
அழையுங்கள் : 021-3208342

**Diploma in Beauty Culture**

மணப்பெண் அலங்காரம்,பல்வகையான விசேட முக அலங்கார்ம்,சாறி அலங்காரம்,நகம் மற்றும் தோல் பராமரிப்பு, மெகந்தி,விசேட சிகை அலங்கார முறைகள் என சுமார் 25 வகையான அலங்காரங்களையும் அவற்றில் பல உட்பிரிவுகளையும் உள்ளடக்கிய டிப்ளோமா பயிற்சி நெறி

**British College of Business and Languages**
No 788/4,செம்மணி வீதி,நல்லூர் (கிட்டுப்பூங்கா எதிரில்)

## FLC FRENCH LANGUAGE CENTRE

பிரெஞ்சு மொழி வகுப்பு

Embassy ஆல் அங்கீகரிக்கப்பட்ட International Diploma in French
இலகுவாக எழுத, வாசிக்க, சரியான உச்சரிப்புடன் கதைக்க...

2006 முதல் இன்றுவரை 1246 மாணவர்கள்

இல. 40, பலாலி வீதி, (ஆரியகுளம்) 15.04.2017 சனி 10am 0779 789 456 021 221 7781

No.181, 1st Floor, பிரதான வீதி, நெல்லியடி, 17.04.2017 பி.ப. 4.00 021 320 2973

IELTS Life Skills A1, B1 வகுப்புக்களும்....

(இலுப்பையடி சந்திக்கு அண்மையில் கராஜ் முன்பாக)

## Career Opportunities/ Daily Food City

Are you a good Team Player?

Do you have
- Good communication skills?
- Good interpersonal skills?
- Excellent customer services?

*Then why you wait?*

**Become a part of our Team**



தகைமைகள்
- O/L ஆறு பாடங்களில் சித்தி (Mathematics, English உட்பட).
- வயதெல்லை 18-28.
- இருபாலாரும் விண்ணப்பிக்கலாம்.

அண்மையில் எடுத்த புகைப்படத்துடன் சுயவிபரக்கோவையினை விளம்பரத்திகதியிலிருந்து 07 நாட்களுக்குள் பின்வரும் மின்னஞ்சல் முகவரிக்கு அனுப்பி வைக்கப்பட வேண்டும்.

career@dailyfoodcity.com

இல,26, ஆடியபாதம் வீதி,
கொக்குவில் கிழக்கு,
கொக்குவில்.

தொ.பே: 021 4927 869

## வாகனம் விற்பனைக்கு

LX -XXXX இலக்கமுடைய 20அடி லொறி விற்பனைக்கு
077 760 0005

## மொழிவகுப்புகள்

German,Nederland,Ostrio , Swiss நாடுகளுக்கான மொழிவகுப்புக்கள் தமிழ்மொழி பெயர்ப்புடன்.
10,Palaly road ,Jaffna
T.p 077 160 4823,mrs.p.kajenthini

## சித்திரைப் புத்தாண்டை முன்னிட்டு 09.04.2017 முதல்..

சுந்தர்சன் ஸ்தாபனத்தின் விசேட விலைக் கழிவு மின்சாரப்பொருள்கள், pvc பைப் வகைகள், மின் மோட்டார் பம்புகள், TV , குளிர்சாதனப்பெட்டி, சலவை இயந்திரம், தளபாடங்கள் மேலும் பல....
அனைத்து பொருள்களும் உத்தரவாதத்துடன்.
யாழ் வீதி, மானிப்பாய்
தொ.பேசி. 021 225 5136

## வீடு வாடகைக்குண்டு

யாழ் நகரச் சுற்று வட்டாரத்தினுள் மிக அண்மையாக அமைந்துள்ள கன்னாதிட்டிப் பகுதியில் அனைத்து வசதிகளையும் உள்ளடக்கிய சுற்று மதிலுடன் கூடிய வீடு வாடகைக்குண்டு.
021 205 9661/ 076 631 8579

## பிரத்தியேக மற்றும் குழு வகுப்புக்கள்

English Medium And Tamil Medium

- Grade 6 to O/L
  - Maths
  - Science
  - ICT
- Advanced Level (A/L)
  - ICT
  - Science for TEC
  - Engineering Technology

Contact :- 077 205 5224


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேற்) லிமிடெற் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361 ஆம் இலக்கத்தில் உள்ள அவர்களது பணிமனையில் 09.04.2017 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.

# பனைசார் உற்பத்திப் பயனாளிகளுக்கு உபகரணங்கள் கையளிப்பு

பனைசார் உற்பத்திப் பயனாளிகளுக்கான வாழ்வாதார உபகரணங்கள் கையளிப்பும் நூல் வெளியீட்டு விழாவும் எதிர்வரும் 12ஆம் திகதி புதன் கிழமை மு.ப 9.30 மணிக்கு யாழ் மத்திய கல்லூரியில் நடைபெறவுள்ளது.

இந்த நிகழ்வில் முதன்மைவிருந்தினராகச் சிறைச்சாலைகள் மறுசீரமைப்பு, புனர்வாழ் வளிப்பு, மீள்குடி யேற்றம் மற்றும் இந்து மத அலுவல்கள் அமைச்சர் டி.எம். சுவாமிநாதனும், மதிப்புறு விருந்தினராக நாடாளுமன்ற உறுப்பினர் ஈ.சரவணபவனும், சிறப்பு விருந்தினர்களாக யாழ். அரசஅதிபர் நா.வேதநாயகன், சிவன் பவுண்டேசன் இயக்குநர்வே.கணேஸ்வரன் மற்றும் வடக்கு மாகாண ப.தெ.வ.கூ சங்கங்களின் சமாசத் தலைவர் நா.கணேசனும் கலந்து கொள்வர். (த)

**வீடு வாடகைக்கு உண்டு**

சகலவசதிகளுடன்கூடியவீடுவாடகைக்கு உண்டு.
47, மாட்டின்லேன் யாழ்ப்பாணம்.
தொடர்பு 0772288987

**வேலையாள்கள் தேவை**

கடையில் வேலை செய்யக்கூடிய அனுபவமுள்ள பழத்த ஆண், பெண் இருபாலாரும் தேவை.
(வயது 17-25)
077 159 5826

## விநியோகஸ்தர் தேவை
## DISTRIBUTOR

துரித கதியில் வளர்ந்து வரும் நிறுவனமான Hedanship Asia (Pvt)Ltd உள்நாட்டு தயாரிப்புக்கள் உள்ளடங்களாக நாடு பூராகவும் மின் உபகரணங்களை (Electrical Accessories) விநியோகித்து வருகிறது.

மேலும் தனது வியாபாரத்தை விஸ்தரிக்கும் நோக்கில் வட மாகாணத்திற்கான விநியோகஸ்தர்களை நியமனம் செய்ய விரும்புகின்றது.

தேவை :
- வங்கி உத்தரவாதம் / பண உத்தரவாதம்
- களஞ்சியசாலை
- வாகன வசதி

தொடர்புகளுக்கு : 077 505 6092

*15 நாட்களுக்குள் விரும்புவோர் மட்டும் விண்ணப்பிக்க வேண்டுகிறோம்.*

HEDANSHIP ASIA PVT LTD
No.55, Rajawatte Terrace, Kotugoda, Ekala, Ja-Ela.
HEDANS® Quality, Safety, Reliability
FLEX Graphic

**Study, Work & Settle**

க.பொ.த(சா/த),(உ/ த) பரீட்சையின் பின் வெளிநாட்டில் உயர்கல்வியை தொடர்வது உங்கள் கனவா???

UK & NewZealand

- பல்கலைக்கழக அனுமதி
- ஆங்கில பரீட்சைக்கான பதிவுகள்
- விசா விண்ணப்பம்
- வெளிநாட்டு கல்விக்கடன் வசதிகள்
- விமான நிலையபோக்குவரத்து சேவை

ஆடி/ புரட்டாசி அனுமதிகள்
தொடர்புகளுக்கு 0766995072
HYELINK GLOBAL EDUCATION CONSULTANTS
406,Majestic City, Col - 04

**உடல் எடை குறைய வேண்டுமா ?**

- ★ உடல் எடை குறைக்க வேண்டுமா ?
- ★ ஊளைச் சதையா ?
- ★ வயிறு மார்பு குறைக்க வேண்டுமா ?
- ★ எடை கூடி பல்வேறு நோய்களால் அவதிப்படுகிறீர்களா ?
- ★ 100%பக்க விளைவற்ற ஆயுள்வேத ஔதடம் (டொனிக்,குளிசை,கிறீம்)

ஆச்சரியம் 10 நாளிகளில் வயிறு மார்பு குறைக்கும் கிறீம் எம்மிடம் உண்டு.
விலை 3500/= ,5500/= ,9000/=
இதனைப் பாவித்து 10 நாளிகளில் அபரிதமான மாற்றத்தை உணர்வீர்கள்
பதிவு இல. 1668 221, நாவலர் றோட்,யாழ்ப்பாணம். 077 210 6855

**SUPER BALL** சுப்பர் போல்

உத்தியோகபூர்வ முடிவுகள்
சீட்டிழுப்பு வாரம் 638
சீட்டிழுப்பு திகதி 08.04.2017 சனிக்கிழமை
வெற்றி இலக்கங்கள் 14 61 65 67 E
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ. 41, 895, 928/=
தொ.பே: 011 4062002 / 0114062062 Web: www.dlb.lk
SMS: DLB space LOT space SB என டைப் செய்து 1919 இற்கு அனுப்பவும். அல்லது துரித அழைப்பு 1919

**சனிக்கிழமை அதிர்ஷ்டம்**

வெற்றி வாரம்: 2864 திகதி: 08.04.2017
வெற்றி எண்கள் மற்றும் ஆங்கில எழுத்து 10 27 42 65 P
போனஸ் இல. 40
திங்கட்கிழமை ஜக்பொட் ரூ. 56,113,062/-
தொ.பே: 011 4062002 / 0114062062 Web: www.dlb.lk
SMS: DLB space LOT space SF என டைப் செய்து 1919 இற்கு அனுப்பவும். அல்லது துரித அழைப்பு 1919
நீல நிற டிக்கட்டுக்கள் 10 ஆம் திகதி திங்கட்கிழமை சீட்டிழுப்புக்கு செல்லுபடியாகும்.
வெற்றிபெறும் டிக்கட்டுக்கள் 6 மாதங்களுக்கு செல்லுபடியாகும்.

**உத்தியோகபூர்வ முடிவுகள்**

Development Fortune அபிவிருத்தி அதிர்ஷ்டம்
சீட்டிழுப்பு வாரம் ▶ 32
சீட்டிழுப்பு திகதி ▶08.04.2017 சனிக்கிழமை
வெற்றி இலக்கங்கள் 20 21 34 36
சுப்பர் இலக்கம் 05
அதிர்ஷ்ட மாதம் ஓகஸ்ட்

| அடுத்த மிகப்பெரிய ஜக்பொட் | அடுத்த சுப்பர் ஜக்பொட் | அடுத்த ஜக்பொட் |
|---|---|---|
| 10. 023. 906/= | 2. 516. 258/= | 2. 188. 462/= |

20.04.2017 திகதி வியாழக்கிழமை நீல நிற டிக்கட்டுகள் சீட்டிழுப்புக்கு செல்லுபடியாகும்.
வெற்றி பெறும் டிக்கட்டுகள் 6 மாதங்களுக்கு செல்லுபடியாகும்.
அபிவிருத்தி லொத்தர் சபை
356, கலாநிதி கொல்வின் ஆர்.டி சில்வா மாவத்தை, யூனியன் பிளேஸ், கொழும்பு 02.
தொலைபேசி: 011 333 546-47 துரித அழைப்பு 0114 824 824 www.dlb.lk

**பணிப்பெண் தேவை**

வைத்திய குடும்பம் ஒன்றிற்கு வீட்டில் தங்கி இருந்து பணி புரிவதற்கு பணிப்பெண் ஒருவர் தேவை. தொடர்புகளுக்கு
0766367091,0772626944

**தோட்டக்காணி விற்பனைக்கு உண்டு**

ஈவினை புன்னாலைக்கட்டுவனில் செம்பாட்டு மண் கொண்ட நல்ல நிலையில் உள்ள 21 பரப்பு தோட்டக்காணி விற்பனைக்கு உண்டு. விலை பேசித்தீர்க்கலாம். தொ.பேசி.0767251458

**விற்பனைக்கு**

நகை கடைக்குரிய கண்ணாடி சோக்கேஸ் மற்றும் தளபாடங்கள் விற்பனைக்குண்டு.
077 470 2219

## திறப்பு விழா அழைப்பு

ஏஞ்சல்ஸ் அழகு நிலையத்தின் 3 ஆவது கிளை இன்று (09.04.2017)ஞாயிற்றுக்கிழமை முதல் மருதனார்மடத்தில் "நியூ ஏஞ்சல்ஸ் அழகு நிலையம் ,பயிற்சியகம்" (துண்கலைப் பீடம் அருகில், RDB வங்கிமேல்) என்னும் பெயரில் ஆரம்பமாகின்றது.

- அழகுக்கலை
- கேக் ஐசிங்
- தையல்கலை வகுப்புக்கள் நடைபெற்று சர்வதேச தரம் வாய்ந்த சான்றிதழ் வழங்கப்படும்.
- மணப்பெண் அலங்காரம் சிறந்த முறையில் மேற்கொள்ளப்படும்.
- புதுவருடத்தினை முன்னிட்டு எமது நிலையங்களில் ஏப்ரல் 01 முதல் 30 வரை விசேட கட்டணக்கழிவில் சேவைகள் வழக்கப்படும்.

K.K.S வீதி, மருதனார்மடம். (ஆஞ்சநேயர் கோவில் முன்)
தலைமையகம் :94,கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.
கிளை : 37/2, 3 ஆம் ஒழுங்கை, மின்சார நிலைய வீதி, யாழ்ப்பாணம்.
தொ.பேசி : - 077 627 7332

**காணி விற்பனைக்கு**

கோப்பாய் ஆசிரியர் கலாசாலை வீதி.இராச வீதி ஆகிய இருபுறமும் பாதையுள்ள 4 பரப்புக்காணி விற்பகைக்குண்டு. ஆசிரியர் கலாசாலைக்கு பின்புறத்தில்.தொடர்பு.0759448892

**பிரத்தியேக வகுப்புக்கள்**

பொருளியல்A/L, வணிகக்கல்விA/L, O/L
குடியியல்கல்வி O/L
தனியாகவும் , குழுவாகவும் வீட்டிற்கு வந்து கற்பிக்கப்படும். தொடர்பு.
0779007597,0779064595


**கணினி பக்க வடிவமைப்பாளர் உடன்தேவை**

புதிய நிர்வாகத்துடன் இயங்கிவரும் SSR Printers க்கு (MS Office/ Type setting/ Coreldraw/ Photoshop) அனுபவமுள்ளவேலையாள்தேவை.
(கவர்ச்சிகரமான சம்பளம் வழங்கப்படும்)
தொடர்புகளுக்கு - 0767687664

**காணிவிற்பனைக்கு**

தெல்லிப்பழை துர்க்கை அம்மன் ஆலயத்திற்கு அருகில் 3 1/2 பரப்பு காணியுடன் வீடு விற்பனைக்கு உண்டு. தொடர்புகளுக்கு.
0776658613,0766219864

## இணுவில் கந்தசுவாமி கோயில் வடக்கு குபேரவாசல் (வைரவர் சந்நிதானம்)நூதன இராஜகோபுர பிரதிஷ்ட மஹாகும்பாபிஷேகப் பெருவிழா



துர்முகி வருடம் பங்குனி மாதம் 27 ஆம்நாள் (09.04.2017) ஞாயிற்றுக்கிழமை உத்தர நட்சத்திரமும் கூடிய புண்ணிய சுபதினத்தில் காலை 8.17 மணிக்கு இடபலக்கின சுப முகூர்த்தத்தில் இராஜ கோபுர மகாகும்பாபிஷேகம் நடைபெறும் முருகப்பெருமானும் வைரவப்பொருமானும் வீதியுலா வந்து கோபுர தரிசனம் செய்வார்.

இக் கோபுரம் **திரு. குணரத்தினம் மனோகரன் (லண்டன்)** குடும்பத்தினரால் நன்கொடையாக அமைத்துக்கொடுப்பட்டுள்ளது.

கோபுர கட்டட நிர்மாணம்
**சிவலிங்கம் - சிவகஜன்**
**KajoLanka** (கஜோலங்கா) லிமிட்டெற். இணுவில்.

**கோபுர தரிசனம் கோடி புண்ணியம்**
**தர்மகர்த்தா சபையினர்.**
**இணுவில் கந்தசாமி கோயில்.**

## மரண அறிவித்தல்

### நாகராசா உதயசூரியன்

*(அல்லைப்பிட்டி- ஜேர்மனி)*



அல்லைப்பிட்டியைப் பிறப்பிடமாகவும் ஜேர்மனியை வசிப்பிடமாகவும் கொண்ட நாகராசா உதயசூரியன் நேற்று (08.04.2017)சனிக்கிழமை ஜேர்மனியில் காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான நாகராசா விஜயலட்சுமி தம்பதியரின் அன்பு மகனும் ராதாவின் (ஜேர்மனி) அன்புக் கணவரும் காலஞ்சென்ற சோமசுந்தரம்மற்றும்செல்ல பாக்கியம் (கம்பர்மலை) தம்பதியரின் அன்பு மருமகனும் அபிரா(ஜேர்மனி), அனுஸ்கா(ஜேர்மனி) ஆகியோரின் பாசமிகு தந்தையும் உதயசந்திரிகா(உதயா-ஜேர்மனி), உதயசாந்தி (சாந்தி-கொழும்பு) உதயசந்திரன் (சந்திரன்-ஜேர்மனி), உஷாந்தினி(சாந்தா-ஜேர்மனி), உமாபாலினி (உமா-கனடா), தர்சினி (தர்சி-கனடா), தயாளன்(தயா-கனடா) ஆகியோரின் அன்புச்சகோதரனும் முருகதாஸ் (ஜேர்மனி), ரவிச்சந்திரன் (கட்டார்), கேமலதா (ஜெனா-ஜேர்மனி), சுஜீவன் (ஜேர்மனி), ஜெயதாசன் (கனடா), கீதா (ஜேர்மனி), ரவிதாஸ் (ஜேர்மனி), லதா (கம்பர்மலை)ஆகியோரின்அன்புமைத்துனரும்ஆவார்.


அன்னாரின் இறுதிக்கிரியைகள் பற்றிய விவரம் பின்னர் அறிவிக்கப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

60-5/1,மேபில் றோட்,
கொட்டாஞ்சேனை,
கொழும்பு - 13

தகவல்
குடும்பத்தினர்
ர. சாந்தி 077 770 3346

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மரண அறிவித்தல்கள்



### இளையதம்பி பஞ்சநாதன்

*(பஞ்சநாதன் மாஸ்ரர்)*

உடுப்பிட்டியைப் பிறப்பிடமாகவும் வெள்ளவத்தையை வதிவிடமாகவும் கொண்ட இளையதம்பி பஞ்சநாதன் (முன்னாள் ஆசிரியர்-உடுப்பிட்டி அமெரிக்கன் மிஷன் கல்லூரி, ஹட்டன் ஹைலான்ட் கல்லூரி, முன்னாள் பிரதி அதிபர்-தெல்லிப்பளை மகாஜனா கல்லூரி) கடந்த (06.04.2017) வியாழக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற செல்வமணியின் அன்புக் கணவரும் சந்திரவதனி ராஜரத்தினத்தின் பாசமிகு தந்தையும் சிவலிங்கம்(உடுப்பிட்டி), ஈஸ்வரலிங்கம்(Fred rica Road,வெள்ளவத்தை) ஆகியோரின் அன்புச் சகோதரரும் C.N. ராஜரத்தினத்தின் அன்பு மாமனும் தினேஷ், றுமேஷ், மயூரேஷ், அமரேஷ், அகிலேஷ், கபிலேஷ் ஆகியோரின் பேரனும் ஆவார்.


அன்னாரின் பூதவுடல் 28, Moor Road, Wellawatte இல்லத்தில் சனிக்கிழமை காலை முதல் அஞ்சலிக்காக வைக்கப்பட்டு இறுதிக்கிரியைகள் திங்கட்கிழமை பிற்பகல் 2.00 மணியளவில் நடைபெற்று பொரளை கனத்தை இந்துப்பிரிவில் பி.ப. 4.00 மணியளவில் தகனம் செய்யப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**தகவல்**
**திருமதி சந்திரவதனி ராஜரத்தினம்**
**011 250 2804**

### சரா தாமோதரம்

*(ஓய்வுநிலை ஆசிரியர், பரி. யோவான் கல்லூரி, யாழ்ப்பாணம்.)*

*(தர்மகர்த்தா, சப்பச்சிமாவடிப் பிள்ளையார் கோயில், சாவகச்சேரி)*



சாவகச்சேரி தாமோதரம்பிள்ளை வீதியைப் பிறப்பிடமாகவும் வதிவிடமாகவும் கொண்ட சரா தாமோதரம்நேற்று(08.04.2017)சனிக்கிழமை காலமானார்.

அன்னார்காலஞ்சென்றவர்களானவைத்திய கலாநிதி T.P.தாமோதரம் நாகரத்தினம் தம்பதியினரின்அன்புமகனும்காலஞ்சென்றவர்களான செல்வநாயகம் - சின்னம்மா தம்பதியினரின் அன்பு மருமகனும் காலஞ்சென்ற அபிராம சுந்தரியின் அன்புக்கணவரும் காலஞ்சென்றவர்களான கமலா மண்டலேஸ்வரன் பத்மா அமரசிங்கம் மற்றும் வைத்தியகலாநிதி மீனா மகேந்திரன் ஆகியோரின் அன்புச் சகோதரரும் சுரேஷினி, விஸ்வன் ஆகியோரின் பாசமிகு தந்தையும் சிறிகுமாரின் அன்பு மாமனாரும் யதீஸா - சந்தியா , சாயிசுப்பிரியா அகிலேஸ் ஆகியோரின் அன்புப் பேரனும் காலஞ் சென்றவர்களான மண்டலேஸ்வரன் வைத்திய கலாநிதி அமரசிங்கம் மற்றும் வைத்தியகலாநிதி மகேந்திரா சோமா-Nash திலகம் - சிறிகாந்தா காலஞ்சென்றதிருச்செல்வம்ஆகியோரின்அன்பு மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் பற்றிய விவரம் பின்னர் அறிவிக்கப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**தாமோதரம்பிள்ளை வீதி.**
**சாவகச்சேரி.**

**தகவல்:**
**குடும்பத்தினர்.**

## மரண அறிவித்தல்கள்

### திருமதி பூபதி பொன்னையா



யாழ்ப்பாணம், ஆனை கோட்டையை பிறப்பிடமாகவும் பெரியபளை, பளையை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி பூபதி பொன்னையா (07.04.2017) வெள்ளிக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற வேலாயுதம் செல்லம்மா தம்பதிகளின் அன்பு மகளும் காலஞ்சென்ற பொன்னையாவின் அன்பு மனைவியும் நாகபூசனி, நாகராணி, புஷ்பராணி, லோகேஸ்வரன், பிறேமேஸ்வரன் காலஞ்சென்ற அன்பரசன் ஆகியோரின் அன்புத் தாயாரும், பாலசுந்தரம் காலஞ்சென்ற தவராசா மற்றும் பூபாலசிங்கம், விமலாதேவி, மகாலட்சுமி ஆகியோரின் அன்பு மாமியாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (09.04.2017) ஞாயிற்றுக்கிழமை அவரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகன க்கிரியைக்காக மு.ப 10.00 மணியளவில் மலயன் காடு இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும் . இந்த அறிவித்தலை உற்றார் , உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

**பெரிய பளை, பளை.**
**077 847 0638**

**தகவல்:**
**குடும்பத்தினர்.**

### வினாசித்தம்பி பரமேஸ்வரன்



கொக்குவில் கிழக்கு, நந்தாவில் அம்மன் கோயிலடியைப் பிறப்பிடமாகவும், ஞான வைரவர் வீதி, உரும்பிராய் கிழக்கை வசிப்பிடமாகவும்,கொண்ட வினாசித்தம்பி பரமேஸ்வரன் (07.04.2017) வெள்ளிக்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான வினாசித் தம்பி - இரத்தினம்மா தம்பதியரின் கனிஸ்ர புத்திரனும் காலஞ்சென்றவர்களான முத்தையா - தெய்வானைப்பிள்ளை தம்பதியரின் அன்பு மருமகனும் சிவமலரின் அன்புக்கணவரும் சிவகுமார் (இலங்கை மின்சாரசபை- சாவகச்சேரி), பமீலா (ஆசிரியர் -யா/ வயா விளான் மத்திய கல்லூரி), வரதராஜன் (அபிவிருத்தி உத்தியோகத்தர் நெடுந்தீவு, பிரதேச செயலகம்), சுஜிவன் (நில அளவையாளர், ஓமான் ) ஆகியோரின் பாசமிகு தந்தையும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (09.04.2017) ஞாயிற்றுக் கிழமை மு.ப. 10 மணியளவில் அவரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் இளங்காடு இந்து மயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

**தம்பபிட்டி வீதி,**
**உரும்பிராய்.**

**தகவல்: குடும்பத்தினர்**
**077 9216782, 077 911 7939**

### எட்வேட் அன்னாள் அன்னபூரணி

**( ஓய்வு பெற்ற மருத்துவமாது)**



நெடுந்தீவு கிழக்கைப் பிறப்பிடமாகவும், வசிப்பிடமாகவும் கொண்ட எட்வேட் அன்னாள் அன்னபூரணி (பூரணக்கா) 08.04.2017 சனிக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான மனுவேற் பிள்ளை எட்வேட் (பொன்னுத்துரை) யின் பாசமிகு மனைவியும் காலஞ்சென்றவர்களான ஆர்.டீ. நாகலிங்கம் - பொன்னம்மா தம்பதியரின் பாசமிகு மகளும் காலஞ் சென்றவர்களான மனுவேற் பிள்ளை - விக் ரோறியா தம்பதியரின் அன்பு மரு மகளும் டோறா லோகினி, சத்தியசீலன், ஜெயசீலி, கமல்தினி, அருந்தவசீலன் ஆகியோரின் பாசமிகு தாயும் காலஞ்சென்றவர்களான வைத்திலிங்கம், தம்பியையா, தங்கப்பிள்ளை, தருமலிங்கம் ஆகியோரின் சகோதரியும் மேரிப்பிள்ளையின் மைத்துனியும் காலஞ்சென்ற ஜெகநாதன் மற்றும் கிருஷாந்தி, லோகநாதன் ஆகியோரின் மாமியும் சுதர்சினி, ஜனகன், கஜன், ரவிபாகினி, சுபதாஹினி, தர்மினி, டியூனா, தர்சன், சர்மிளா, பிரசாத், டிலக்ஷி ஆகியோரின் பேர்த்தியும் அனன்யா, நனன்யா, மிருதுளன், அன்றூ, பிரவீனா, ருக்ஷாலினி, அரன்யா, ஹம்சத் ஆகியோரின் பூட்டியும் ஆவார்.

அன்னாரின் நல்லடக்க ஆராதனை நாளை (10.04.2017) திங்கட் கிழமை மு.ப. 10 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று கட்டிறாஞ்சல்லி நல்லடக்கத்தளத்தில் அடக்கம் செய்யப்படும் இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**13 ஆம் வட்டாரம் நெடுந்தீவு.**
**தொ.பே: 021 221 5240**
**077 711 1162, 077 6624 121,**
**077 018 7850**

**தகவல்:**
**குடும்பத்தினர்**

## நெடுந்தீவுக் கடலில் இரு இந்தியர் கைது

யாழ்ப்பாணம், ஏப். 9

நெடுந்தீவுக் கடற்பரப்பில் வைத்து இந்தியாவைச் சேர்ந்த 2 பேரைச் சிறு படகுடன் நேற்று மாலை கைது செய்ததாகப் பொலிஸார் தெரிவித்தனர்.

சந்தேகத்துக்கிடமான அந்தப் படகில் மீன்பிடிப்பதற்கான எவ் வித உபகரணங்களும் இருக்கவில்லை எனவும், அவர்கள் அத்துமீறி இலங்கைக் கடற்பரப்பினுள் நுழைந்த குற்றச் சாட்டில் கைது செய்யப்பட்டனர் எனவும் கூறப்பட்டது.

அவர்களது செயற்பாடு சந்தேகத்தை ஏற்படுத்தியுள்ளது எனவும், அவர்கள் தற்போது ஊர்காவற்றுறைப் பொலிஸ் நிலையத்தில் விசாரணையில் உள்ளனர் என்றும் பொலிஸார் மேலும் தெரிவித்தனர். (த-4-101)

## மரண அறிவித்தல்கள்




### ஸ்ரீமதி சாரதாம்பாள் தியாகராஜ குருக்கள்

இந்தியாவைப் பிறப்பிடமாகவும் கல்வயலை வசிப்பிடமாகவும் கொண்டவரும் காலஞ்சென்ற சிவஸ்ரீ தியாகராஜ குருக்களின் பாரியாருமான ஸ்ரீமதி சாரதாம்பாள் நேற்று (08.04.2017) சனிக்கிழமை மாலை இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் சுப்ரமணியக்குருக்கள் (சங்கத்தானை கந்தசாமிகோயில்), நடராஜக்குருக்கள் (விடத்தல் பளை, விநாயகர் ஆலயம்) காலஞ்சென்ற சுவாமிநாதக்குருக்கள்,பர்வதவர்த்தினிஅம்பாள்காலஞ்சென்ற இராசலட்சுமி, கிருஷ்ணமூர்த்திக்குருக்கள் (விடத்தல் பளை,கமலாசினிவித்தியாலயஆசிரியர்),சிதம்பரநாத சர்மா ஆகியோரின் அன்புத் தாயாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (09.04.2017) ஞாயிற்றுக்கிழமை பி.ப. 2.00 மணிக்கு அவரது கல்வயல், 1 ஆம் கட்டை ஒழுங்கை இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக வேம்பிராய் இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

**தகவல்**
**பிள்ளைகள், மருமக்கள், பேரப்பிள்ளைகள்.**
**077 325 2442, 077 483 2866**



### ஞானப்பிரகாசம் ஞானானந்தம்

ஏழாலையைப் பிறப்பிடமாகவும், நீர்வேலி மத்தி, நீர்வேலியை வசிப்பிடமாகவும் கொண்ட ஞானப்பிரகாசம் ஞானானந்தம் (ஞானம்) நேற்று (08.04.2017) சனிக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற ஞானானந்தம் புவனேஸ்வரியின் அன்புக்கணவரும் ஞானபிரசாத் (வலி கிழக்கு வாழைக்குலை உற்பத்தி விற்பனைசங்கம், நீர்வேலி), ஞானரூபி (இந்தியா) ஆகியோரின் அன்புத்தந்தையும் விஜோ, பிரபாகினி ஆகியோரின் மாமனும் கிஷாணிகா, ஜஸ்மிலன், பிரஜின் ஆகியோரின் பேரனும் ஆவார்

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (09.04.2017) ஞாயிற்றுக்கிழமை அவரது இல்லத்தில் நடைபெற்று நண்பகல் 12 மணியளவில் நீர்வேலி சீவியாக்காடு இந்து மயானத்தில் தகனம் செய்யப்படும் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**தகவல்: ஞானபிரசாத் (மகன்)**
**077 9346 543**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## தலைமுடி நீளமாக வளர வேண்டுமா?

தலைமுடி நீளமாக வளர வேண்டுமா?
இள நரையா? முடிகொட்டுகிறதா?
தலையிடியா? பேன். பொடுகு தொல்லையா?

பொன்னாங்காணி. வல்லாரை. இலாமிச்சைவேர், மருதாணி, கருசலாங்கண்ணி.
கருவேப்பிலை சேர்த்துக் காய்ச்சிய ஆயுள் வேத எண்ணை 100 % இயற்கை மூலிகைகளால்
ஆன இவ்வெண்ணையைப் பாவித்து
2 வாரங்களில் பலனை உணர்வீர்கள்

பதிவு இல: 16168
077 263 9037 221, நாவலர் றோட், யாழ்ப்பாணம்.

"சங்கீத பூசணம்"
அமரர் சி. ஆறுமுகம்பிள்ளை

## ஞாபகார்த்த இசைமாலை



காலம் : 10.04.2017 பி.ப 2.30 மணி
இடம் : கொக்குவில் வளர்மதி முன்னேற்ற கழக வேலாயுதபிள்ளை மண்டபம்

தலைவர்
**திரு. செ. யோசப்பாலா**
(உளசமூகசீராளன்)

பிரதம விருந்தினர்
**திரு. நா. வேதநாயகன்**
(அரசாங்க அதிபர். யாழ். மாவட்டம்)

சிறப்பு விருந்தினர்கள்
**திரு. மு. கோபாலகிருஷ்ணன்**
(கண்ணன் மாஸ்டர். இசையமைப்பாளர்)
**திரு. வி. சிவஞானசேகரம்**
(ஓய்வுநிலை இசை ஆசிரியர். யாழ். பரியோவான் கல்லூரி)

சங்கீத இசைக்கச்சேரி இடம்பெறும்

குடும்பத்தினர்

### வேலைஆள்கள் தேவை

திருநெல்வேலி. நல்லூர் பகுதியில் உள்ள தேநீர் கடைக்கு வேலை ஆள்கள் தேவை.
தொடர்புகளுக்கு.078 3394815

### வாடகைக்கு

நல்லூரில் இருவர்மட்டும் தங்கக்கூடிய வீட்டின் பகுதி தனிப்பாதையுடன் வாடகைக்குண்டு. முற்பணம் 50000/=, வாடகை 8000/=
தொடர்புகளுக்கு.021 221 5286

## காணி விற்பனைக்கு

மானிப்பாய் ஆலடிச் சந்திக்கருகில் 2 1/2 பரப்பு காணி விற்பனைக்கு உண்டு.
**தொடர்பு: 0774 611 205**

### மணமகள் தேவை

1979 கௌரவகுடும்பம் மணமகனுக்கு வெளிநாடு (PR) உள்ள மணமகள் தேவை. (கணவரை இழந்தோர் விரும்பத்தக்கது) தொடர்பு. சசி திருமண சேவை. யாழ்ப்பாணம். T.p-Viber-0770443589

## மணமகன் தேவை

யாழ் இந்து வேளாளர் குடும்பத்தைச் சேர்ந்த ஆஸ்திரேலியாவில் தொழில் புரியும் 28 வயதான பட்டதாரிப் பெண்ணுக்கு தகுந்த வரனை பெற்றோர் எதிர்ப்பார்க்கின்றனர் நட்சத்திரம் - பூரட்டாதி. ராசி - கும்பம். கிரக பாவம் - 57 செவ்வாய் தோஷம் இல்லை ஆஸ்திரேலியா, கனடா, இலங்கை மணமகன் விரும்பப்படுகின்றனர்.

தொடர்பு எண்
**0715 657 179, 0016472436431**

### NURSING ASSISTANT CERTIFICAT COURE (6-9 months)
### HOLY CROSS SCHOOL OF HEALTH SCIENCE

க.பொ.த சாதாரண தரம் கற்றவர்கள் தங்களது சுயவிவரக்கோவையுடன் எதிர்வரும் 30.04.2017 இற்கு முன்னதாக இல 767/4 கடற்கரை வீதி, யாழ்ப்பாணம் என்னும் முகவரியில் அமைந்துள்ள திருச்சிலுவை தாதியர் பாடசாலைக்கு நேரில் சமுகம் தரவும்.

பணிப்பாளர்
தொ.பேசி. 0213001102, 0771159391

### மரண அறிவித்தல்

## திருமதி சந்திராதேவி ஆறுமுகநாதன்



சுன்னாகம் தெற்கைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி சந்திரா தேவி ஆறுமுகநாதன் கடந்த (06.04.2017) வியாழக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான பொன்னுத்துரை தங்கம்மா தம்பதியரின் அருமை மகளும் மகேந்திரன் (வட்டக் கச்சி). காலஞ்சென்ற யோகேந்திரநாதன் (கிராமசேவகர். திருவையாறு) மற்றும் புவனேந்திரன்(ஜேர்மனி). இராசேந்திரன் (வெள்ளை ஜேர்மனி) ஆகியோரின் அன்புச் சகோதரியும் ஆறுமுகநாதனின் அன்பு மனைவியும் கோபிநாத்தின் (பிரான்ஸ்) பாசமிகு தாயும் யாழினியின் அன்பு மாமியும் வினியா(பிரான்ஸ்). விசால் (பிரான்ஸ்). வினோயா (பிரான்ஸ்) ஆகியோரின் பாசமிகு பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று முற்பகல் 11.30 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக கொத்தியாலடி இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார். உறவினர். நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**முருகேசபண்டிதர் வீதி,**
**சுன்னாகம் தெற்கு.**

**தகவல்:**
**குடும்பத்தினர்**

### தேவை

றக்கா வீதி. பொஸ்கோ பாடசாலைக்கு அருகிலுள்ள Books/ Multishop இற்கு பொறுப்பாக நிற்கக்கூடிய பில் போடக்கூடிய A/L படித்த ஆண்/பெண் தேவை. சம்பளம் நேரில் பேசித்தீர்மானிக்கப்படும். சுயவிவரக்கோவையுடன் தொடர்பு கொள்ளவும். 0770476236,0779978332

### கடை & Rooms வாடகைக்கு

கார் பாக்கிங், பல்கனி உட்பட சகல வசதிகளும் கொண்ட இரு பெரிய அறைகளும், stocks, Fitting உடன் கடை ஒன்றும் நல்லூர், கல்வியங்காட்டில் வாடகைக்கு உண்டு. stocks இல்லாமலும் கொடுக்கப்படும்.
தொடர்புகளுக்கு. மயூ 0773296035.0773377452

## softlogic உடன்

BEST IN THE BUSINESS

## சித்திரைப்புத்தாண்டை கொண்டாடுங்கள்

உலகில் முதல் தரமான உயர்தரமான வீட்டுஇலத்திரனியல் பொருள்களை பெற்றுக்கொள்ள எமது Softlogic காட்சியறைக்கு உங்களை அழைக்கின்றோம்.

அனைவருக்கும் பரிசு



வட்டியற்ற இலகு கொடுப்பனவு திட்டங்கள்

உத்தரவாதம்

உடன் காசுக் கொள்வனவுகளுக்கு நம்பமுடியாத விலைக் கழிவு

20 மாதங்கள் வரை வட்டியற்ற திட்டம் + 40% வரை சேமிப்பு

**SAMSUNG 32"**



UA32FH4003ARLSG
ரூ.54,000/=
**ரூ.35,999/=**



**190 Litre**
RR 19H1413VJ/IG
* One Door
* Direct Cool
* 4Star Rating

ரூ.50,000/=
**ரூ.42, 999/=**


**acer E5-575 Ci3 7th Gen**



* Intel Core i3 7th Generation Processor
* 4GB RAM
* 1TB HDD
* 15.6"WXGA Screen
* Ubuntu *BT * Wifi * DVD RW

ரூ.80,000/=
**ரூ.67,999/=**

AirConditioner



ரூ.69,000/=
**ரூ.59, 999/=**

எமது ஏனைய சேவைகள்: WESTERN UNION WU moving money for better

*எமது காட்சியறைகளில் இப்போது உங்கள் கட்டணங்களை செலுத்தமுடியும்.

**Softlogic No. 63, Kannathiddy Road, Jaffna**
**T. P : 021 567 1108, 021 221 9224**

## Study in USA CANADA, UK, Ireland, Holland, Holland New Zealand, Australia, Switzerland, Sweden, China

**G.C.E. (O/L)** அடிப்படைத் தகுதியுடன் **Government Colleges / Universities** அனுமதியை பெற்றுக்கொள்ள குறைந்த செலவில் வெளிநாட்டில் உயர்கல்வி **VISA** கிடைத்த பின் **College** கட்டணம்
**10 Years banded or 02 or 03 times refused / rejected**
செய்து இருந்தாலும் செய்து தரப்படும்.

**No. 36 1/1 Station Road, Colombo - 06,**
**Phone : 011 255 2396, 077 354 7049**
**Website : www.lifetimencl.com, www.srilanka.eie-group.com**

## CANADA , USA
## study & work visa

**Minimum Qualification O/L**

- VISA Consulting and Online from filling.
- குறைந்த செலவில், விரைவில் பயணம்.
- Bank Balance 100%
- குறைந்த தகைமை O/L

**Swiss, France**
செல்ல வழிகாட்டல்

## Royal Visa Consultants & Education Service

No.128, Jampettah Street,
Colombo -13
Email: rvces_consultants@yahoo.com

Haarini : 0777 493 436
Sharmi : 0777 525 797
Office : 0113 020 892

## இதயத்தைப் பாதுகாத்துக் கொள்ளுங்கள்

### இதயநாடிகளில் நோய் அன்ஜைனா - மார்பு அடைப்பு

கொழுப்பு படிவதால் நாளங்கள் சுருங்கி சீரான இரத்த ஓட்டத்தைக் குறைக்கிறது. மேலும் இவை மார்புவலி மற்றும் இதயபாதிப்பு ஏற்படுத்தக் கூடியது.

**நெஞ்சடைப்புக்கான காரணிகள்**
புகைத்தல். உயர்இரத்தஅழுத்தம்.
அதிக கொழுப்புச்சத்து. நீரிழிவு

நெஞ்சுவலி, மார்படைப்பையும் பூரணமாகக் குணப்படுத்தும் எமது ஆயுர் வேதமருத்துவம் உன்னதமானது. நிரூபணமானது




**எங்களால் குணப்படுத்தப்படுகிறது**

- இருதயநோய்
- நோய் எதிர்ப்பு சக்தி
- புற்றுநோய் தணிப்பு
- ஈரல் பாதிப்புக்கள்
- மூட்டு வாதம்
- மூட்டுவலி / முதுகு வலி
- புரோஸ்டேற் பிரச்சினைகள்
- ஒற்றைத் தலைவலி
- புழையழற்சி
- மனஅழுத்தம்
- இருமல் / சளி
- படுக்கைப்புண்கள்
- நாட்பட்ட காயங்கள்
- நீரிழிவு நோய்கள்
- வைரஸ் தொற்றுக்கள்
- பாலியல் குறைபாடு
- மண்குஷ்டம்

FAIR PHARMA (PVT) LTD
**செலிங்கோ ஹவுஸ், 10ஆம் மாடி, கிழக்கு.**
**இல.69 ஜனாதிபதி மாவத்தை, கொழும்பு - 01**
Website : www.ayurveda.lk
E-mail : fairpharmasrilanka@yahoo.com

**Hotline: 077 755 5600 / 077770 8310/ 077 770 8330**
**Office: 011 438 8200 / 4 388 100/ 4 388 101 /4 388 102**

APPROVED BY DEPARTMENT OF AYURVEDA,
ஆயுர்வேத மருத்துவசபை, BIO & ISO 9001:2008
அத்தாட்சிப்படுத்தப்பட்ட நிறுவனம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## விளம்பரங்கள்



### கண்ணீர் அஞ்சலி



எமது நிறுவன உரிமையாளராகிய

**யூட்சன் அன்ரனி**

அவர்களின் பாசமிகு தங்கை

**Dr.மாக்கிறற் றோஸ் சுகந்தி கிறிஸ்ரியோசப்**

மைத்துனர்

**குணதாசன் கிறிஸ்ரியோசப் (அமலன்)**

ஆகியோர் கடந்த (07.04.2017) வெள்ளிக்கிழமை அகால மரணம் அடைந்ததையிட்டு எமது ஆழ்ந்த அனுதாபத்தை தெரிவித்து நிற்கின்றோம்.

அன்னார்களினுடைய ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்தித்து நிற்கின்றோம்.

**ஊழியர்கள்,**
**யூட்சன் பான்சி ஹவுஸ்.**
**யாழ்ப்பாணம்.**

## மரண அறிவித்தல்



### குணதாசன் கிறிஸ்ரிஜோசப் (அமலன்)

(பான்சி மொத்த விற்பனையாளர் யாழ்ப்பாணம்)

### வைத்தியர். மாக்கிறற்றோஸ் சுகந்தி கிறிஸ்ரிஜோசப்

(விரிவுரையாளர் லங்கா சித்த மருத்துவ கல்லூரி சுன்னாகம்)

கச்சாய் வீதி கொடிகாமத்தை பிறப்பிடமாகவும் சுன்னாகத்தை வசிப்பிடமாகவும் கொண்ட குணதாசன் கிறிஸ்ரி ஜோசப் (பான்சி மொத்த விற்பனையாளர் யாழ்ப்பாணம்) அவர்களும் அவரது மனைவியான சுன்னாகத்தைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட Dr.மாக்கிறற் றோஸ் சுகந்தி கிறிஸ்ரி ஜோசப் (விரிவுரையாளர் லங்கா சித்த மருத்துவ கல்லூரி சுன்னாகம்) அவர்களும் 07.04.2017 வெள்ளிக்கிழமை அகால மரணமடைந்தனர்.

இவர்கள் அக்னட் லித்வினா (தரம் 2 யா/உடுவில் மகளிர் கல்லூரி) அரிஸ்ரன் ஆகியோரின் பாசமிகு பெற்றோர் ஆவார்கள்.

கிறிஸ்ரி ஜோசப் அவர்கள் காலஞ்சென்றவர்களான குணதாசன் எலிசபெத் தம்பதியரின் அன்பு மகனும், இமெல்டா யோசேப்பின், பிளசில்டா யோசேப்பின், லிஸ்ரர் யோசேப் (உரிமையாளர் அக்னா பான்சி ஹவுஸ் சுன்னாகம்), கிறிஸ்ரில்டா யோசேப்பின் (ஆசிரியர், யா/அரியாலை ஸ்ரீ பார்வதி வித்தியாலயம்),ஜெயசில்டா யோசேப்பின் (ஆசிரியர், யா/சென் ஜேம்ஸ் மகா வித்தியாலயம்) ஆகியோரின் அருமைச் சகோதரனும், செல்வராஜன் ( A.S ரெக்ஸ் கொடிகாமம்), ஜெயரட்ணம் (புடைவை வியாபாரம் பளை), அனற் மேசி நிர்மலா (ஆசிரியர், யா/மகாஜனாக் கல்லூரி), சத்தியசீலன் (ஜெயகீதா ஸ்ரோர்ஸ் யாழ்ப்பாணம்), மரிய அன்ரனி (அன்ரனி ஜுவலர்றி, யாழ்ப்பாணம்) ஆகியோரின் மைத்துனரும் ஆவார்.

மாக்கிறற் றோஸ் சுகந்தி அவர்கள் காலஞ்சென்ற அருளப்பு மற்றும் மேரி அஞ்சலீனா தம்பதியரின் அருமை மகளும், அருட்பணி றொபின்சன் யோசப் (அதிபர், மு/புதுக்குடியிருப்பு றோ.க.வித்தியாலயம் ), யூட்சன் அன்ரனி (உரிமையாளர், யூட்சன் பான்சி ஹவுஸ் யாழ்ப்பாணம்), டொனல்டா வசந்தி, லொறன்டா ஜெயந்தி, கிளேரா மரியசாந்தி (ஆசிரியர், களு/களுத்துறை மகா வித்தியாலயம்) ஆகியோரின் அன்புச் சகோதரியும், பிரான்சிஸ்கா புஸ்பராணி, அன்ரனி ஜோர்ச் றாஜன் (பாதீட்டு முகாமையாளர் CIVIL AVIATION AUTHORITY-COLOMBO) யூட் அந்தனீஸ் (உரிமையாளர் BABY WORLD சுன்னாகம்), கரிகரன் (பிரதம COCO COLA விநியோகஸ்தர் மட்டக்களப்பு) ஆகியோரின் மைத்துனியும், அருட்சகோதரி விமலினியின் (அதிபர், புத்/ கேத்தாப்பளை றோ.க.த.க. புத்தளம்) ஒன்று விட்ட சகோதரியும் ஆவார்.

இவர்கள் ஆன்டனியா, ஆன்டிலக்ஷி,ஜேம்ஸ் டனிஸ்ரன், சரோன், ஜெரன்சி, லங்கினி, அரோன், மெரிஸ், ரிபாங்கனி, அருள்டா, ஜெனிபர் ஆகியோரின் மாமா மாமியும், அபிஷேகா, றொசிங்டன், டொறிஸ் அலோசியா ஆகியோரின் சித்தப்பா சித்தியும் ஆவர்.

இவர்களது பூதவுடல்கள் டாக்டர் சுப்பிரமணியம் வீதி, சுன்னாகத்திலுள்ள இல்லத்திலிருந்து 10.04.2017 திங்கட்கிழமை பிற்பகல் 1.30 மணிக்கு எடுத்துச் செல்லப்பட்டு சுன்னாகம் புனித அந்தோனியார் ஆலயத்தில் ஆன்ம இளைப்பாறுதல் திருப்பலி ஒப்புக் கொடுக்கப்பட்டு சுன்னாகம் புனித அந்தோனியார் சேமக்காலையில் நல்லடக்கம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்: **குடும்பத்தினர்**
021 224 3092
077 251 6560 / 0778244909/0779587208

## மரண அறிவித்தல்

### திருமதி யோசப் அக்னேஸ்
### (டொக்கம்மா)

**( அருட்சகோதரி மரியமலரின் அன்புத்தாய்)**



| பிறப்பு | இறப்பு |
|---|---|
| 15.07.1928 | 06.04.2017 |

புலோபப்பளை கிழக்கு, பளையைப் பிறப்பிடமாகவும், வசிப்பிடமாகவும் கொண்ட யோசவ் அக்னேஸ் (06.04.2017) வியாழக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான எலியாஸ் - பாவிலாள் தம்பதியரின் அன்புமகளும் காலஞ்சென்ற யோசப்பின் பாசமிகு மனைவியும் காலஞ்சென்ற செல்வரட்ணம் மற்றும் அருட்சகோதரி மரியமலர் (லூர்த்துமடம் கரவெட்டி), செல்வராசா (கனடா), சுவாம்பிள்ளை (கனடா), ஞானசேகரம் (கனடா), தேவராணி (கனடா), வசந்தி (கனடா), சாந்தி (கனடா) ஆகியோரின் அன்புத்தாயும் பிலோமினா, பற்றிமா, ஞானசீலி, வேதராணி, அருளானந்தம், மகேந்திரக்குமார், அன்ரன் ரவி (கனடா) ஆகியோரின் அன்புமாமியும் டெனிசியா, அன்ரு, அன்றிக்கா, அனோஜியா, சுரேன், சுமிதா, சுவாதி, சகானா, மிதுலா, நிரூபன், செந்தூரி, கஸ்தூரி, பைரவி, ஆரபி, மகிழன், அஞ்சலி, அரசன், அழகி (கனடா) ஆகியோரின் அன்புப்பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் ஆன்ம இளைப்பாற்றிற்காக (11.04.2017) செவ்வாய்க்கிழமை பி.ப. 3 மணிக்கு புனித பேதுருவானர் ஆலயத்தில் இரங்கல் திருப்பலி ஒப்புக்கொடுக்கப்பட்டு புலோப்பளை சேமக்காலையில் நல்லடக்கம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**தகவல்:**
**புலோப்பளை** **குடும்பத்தினர்**
**077 922 3192** **அருட்சகோதரி யோ . மரியமலர் ( மகள்)**

## மரண அறிவித்தல்

### திருமதி இராசம்மா (கிளாக்கர் அம்மா)
### பொன்னுத்துரை



வசாவிளானைப் பிறப்பிடமாகவும், 28/1, யாழ். வீதி யாழ்ப்பாணம் மற்றும் கனடா ஆகிய இடங்களை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி இராசம்மா பொன்னுத்துரை கடந்த (26.03.2017) கனடாவில் காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான இராமலிங்கம் - நாகம்மா தம்பதியரின் அன்புமகளும் காலஞ்சென்றவர்களான கணபதிப்பிள்ளை - பூரணம் தம்பதியரின் அன்புமருமகளும் காலஞ்சென்ற கணபதிப்பிள்ளை பொன்னுத்துரை (ஓய்வு பெற்ற முதலியார், சாவகச்சேரி நீதிமன்றம்) அவர்களின் அன்பு மனைவியும் காலஞ்சென்ற கந்தசாமியின் அன்புச்சகோதரியும் அகிலாண்டநாயகி, கணேசலிங்கம் (பபு - கனடா), கனகலிங்கம் (சக்கரை - ஆஸ்திரேலியா), குமரலிங்கம் (குமரன் - லண்டன்), தனநாயகி (தனம் - கனடா), கேசவலிங்கம் (கேசவன் - கனடா), குணலிங்கம் (குணம் - நோர்வே), சாந்தநாயகி (சாந்தா - கனடா) ஆகியோரின் அருமைத்தாயும் காலஞ்சென்ற சுப்பிரமணியம், புஷ்பராணி (கனடா), நாகரத்தினம் (ஆஸ்திரேலியா), பாஸ்கரதேவி (லண்டன்), சிவராமலிங்கம் (கனடா), சகுந்தலாதேவி (கனடா), நந்தினி (நோர்வே), சிறீகனகையா காலஞ்சென்ற சிவபாதம், திருநாவுக்கரசு (நடுவில்), அருள்தேவி ஆகியோரின் பாசமிகு மாமியும் தவலிங்கம் (நோர்வே), சிறீலிங்கம், தயாபரி, ஜனார்த்தன் (ஆஸ்திரேலியா), துஷ்யந்தன், நவரூபன், ரிஷபா, பிரதீபா, ஜனகன், தர்ஷினி, பிருந்தா, சுபாஷினி, ஞானதர்ஷன், பிரஷாந், பிரியங்கா, நிஷாந், மயூரா, ரஜீத், ராஜவி ஆகியோரின் அருமைப்பேர்த்தியும் வரப்பிரகன், அகித்யா, சுபீட்ஷன், ரேஷ்னி, றயன், ஆரூரன், ஆர்மான் ஆகியோரின் அன்புப்பூட்டியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (09.04.2017) ஞாயிற்றுக்கிழமை கனடிய நேரம் நண்பகல் 12 மணியளவில் நடைபெறும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**அகிலம்**
**28/1 யாழ். வீதி, யாழ்ப்பாணம்.** **தகவல்:**
**021 222 3852, 077 180 4813, 077 653 5784** **குடும்பத்தினர்**

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org